எவ்வளவு கஷ்டப்பட்டாலும், அதை வெளிக்காட்டாது கௌரவம் காத்தல்... உங்களிடமிருந்து நான் படித்த... கல்வெட்டாய் மனதில் செதுக்கிய, ஒரு உன்னதப் பாடம்!

நீங்கள் இறந்து விடுவீர்களோவென்ற பயத்தில்... உங்களுக்காக மட்டுமே... என் வாழ்க்கையில் நான் முதன் முதலில் சிந்திய... கடலளவு கண்ணீர்!

உங்களின் இறப்பு... எனக்குள் அறிமுகப்படுத்திய... முதல் கவிதைத் துளி!

உங்களுடைய ஞாபகங்கள் எனக்குள் ஆழ்கடலாய் புதைந்திருந்தாலும், ஒவ்வொரு முறை மூழ்கும்போதும்... ஒரு வித சிலிர்ப்பையும், கண்ணீரையுமே இன்றும் அறிமுகப்படுத்துகின்றன.

உங்கள் உயிருக்கு விலையாக, அன்று என்னிடம் ஒன்றுமேயில்லை.. இன்றே இறந்து விடலாமென்ற விரக்தி உணர்வைத் தவிர!

ஆனால், இன்று கேட்டிருந்தால் தந்திருப்பேன்... ஏகலைவனாய் என் எழுத்தை!


அன்று... எழுத்துலகில் நான் முதன் முதலில் பாதம் பதித்த இனிய வைகறைப் பொழுதில்... என்னுடன் கைகோர்க்க நீங்கள் இல்லாதது... பெரும் வெற்றிடம்!

இன்று... என் எழுத்தினால், நான் உங்களுக்கு செலுத்துகின்ற அஞ்சலியாய், இந்தப் புத்தகம்... உங்கள் பாதங்களுக்கு... என் சமர்ப்பணம்!

- உமா பாலகுமார்

# உயிர்க் காதலில் ஓர் கவிதை!

1



சூரியன், இருளைத் தோற்கடித்த கம்பீரத்துடன் உதயமாகி, பூமியில் தன் கதிர்களை மென்மையாகப் படர விட்டுக் கொண்டிருந்தான்.

தோட்டத்தில், மீண்டும் கிளைகளிடம் சேரும் பாக்கியத்தை இழந்து, தரையில் சிதறிக் கிடந்தன, பவளமல்லிப் பூக்கள்!

மெலிதாய் ஒளிரும் நட்சத்திரங்கள்... 'கீச் கீச்' என்று சத்தியபடி தாவி ஓடும் அணில்... சாலையில் போக்குவரத்து ஆரம்பித்து விட்டதை நாசிக்கு அறிவிக்கும், மெல்லிய பெட்ரோல் வாசனை... வீதியை வண்ணமயமாக்கி, வண்ணத்துப் பூச்சியாய் சிறகடித்து சலசலத்தபடி செல்லும் கல்லூரிப் பெண்கள்...!



அந்தக் காலை நேர அவசர யுகத்தை ஜன்னல் வழியே சுவாரசியத்துடன் கவனித்தபடி, இளம் கத்திரிப் பூ நிறச் சுரிதாரில் தயாராகிக் கொண்டிருந்தாள் ப்ரீத்திகா.

தான் இன்று பேட்டி எடுக்க வேண்டிய ஒரு தன்னம்பிக்கை பெண்மணியைப் பற்றி எண்ணியபடியே கிளம்பிக் கொண்டிருந்தவளை, அவளுடைய ரூம் மேட் சுகன்யாவின் குரல் கலைத்தது.

"ஜர்னலிஸ்ட் மேடம்! இன்னிக்கு யாரைப் பேட்டி எடுக்கப் போறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா? ஒரு நாள் என்னைப் பேட்டி எடுக்க மாட்டீங்களா?" கிண்டலாகக் கேட்டாள்.

"ம்... அடுத்த தடவை எங்க எடிட்டர், யாராவது 'சாட்டர் பாக்ஸை' பேட்டி எடுத்துட்டு வான்னு சொன்னா... அப்ப வரேன்... இந்த 'நான் ஸ்டாப்' சுகன்யா கிட்டே... ஓகேயா?"

ப்ரீத்திகாவின் குரலில் குறும்பு கசிந்தது.

"ஏய்.. என்னோட முதல் கேள்விக்கு நீ இன்னும் பதிலே சொல்லலை?" சுகன்யா செல்லக் கோபத்துடன் கேட்டாள்.

"ம்.. ஒரு சாதனைப் பெண்மணியைப் பேட்டி எடுக்கப் போறேன்... வளர்ச்சியில்லாத வலது கை... அதுலயும் ரெண்டே விரல்கள்... அந்த அற்புதப் பெண்மணி சாதிச்சிருக்கிற 'ஐ.ஏ.எஸ்.'ங்கிற பெரிய லட்சியம்... இதைப் பத்தித் தான் எழுதப் போறேன்... தமிழ்நாட்டுல தேர்ச்சி பெற்ற அஞ்சு பேரிலே அவங்களும் ஒருத்தர்... ஹாட்ஸ் ஆஃப் டு ஹர்! நினைச்சா ரொம்ப பிரமிப்பா இருக்கு..." வியப்புடன் பாராட்டினாள் ப்ரீத்திகா!



"ஆமாம் ப்ரீத்தி கேள்விப்பட்டேன்... எனக்கும் அவங்களை நேரிலே பார்த்து வாழ்த்துச் சொல்லணும் போலருக்கு!"

"ம்... அவங்களைப் பத்தி நினைக்கும்போது இன்னும் உத்வேகமா இருக்கு! கார்கில் போரிலேயும் காஷ்மீர் கலவரத்துலயும் துணிச்சலா ரிப்போர்ட்டிங் பண்ணின பர்கா தத் மாதிரி ஆகணும்னு மனசுல ஒரு உறுதி வருது. பெண்களாலே செய்ய முடியாதுன்னு நினைக்கிற கடினமான எல்லாப் பொறுப்புகளுக்குமே, இப்ப பெண்கள் வந்துட்டாங்க... நாம பெருமைப்பட வேண்டிய விஷயம் இது! சரி.. டைம் ஆயிடுச்சி நான் வரேன்..." கிளம்பினாள் ப்ரீத்திகா.

அந்த சாதனைப் பெண்மணியைப் பேட்டி எடுத்தபோது, உள்ளம் நெகிழ்ந்து போனது.

அவருடைய பெற்றோரின் ஒத்துழைப்பும், அவரின் தன்னம்பிக்கையும் பெரும் வியப்பையும் மரியாதையையும், மனதிற்குள் தந்தன.

"நம்ம லட்சியப் பாதை எவ்வளவு கரடு முரடா இருந்தாலும் அடையப் போற இலக்கை மட்டுமே குறி வைச்சு முன்னேறினா அந்த இலக்கை கண்டிப்பா அடைஞ்சிடலாம்... நம்பிக்கைக்கு சக்தி அதிகம்... நாம எதுவாக நினைக்கிறோமோ கட்டாயம் அதுவாகவே ஆவோம்" என்று அவர் கூறிய மந்திர வார்த்தைகள், மெய் சிலிர்க்க வைப்பதாய்!

* * *

ஒரு தன்னம்பிக்கை தேவதையை தரிசித்த திருப்தியுடன் பேட்டி முடிந்து திரும்பி வரும்போது, அவளுடைய செல் ஒலிக்க ஆரம்பித்தது.

ஸ்கூட்டியை ஓரமாக நிறுத்திவிட்டு எடுத்துப் பார்த்தால், அவளுடைய மாமா வீட்டிலிருந்துதான் அழைத்திருந்தார்கள்.

''ஹலோ... நான்தான் மாமி பேசறேன் ப்ரீத்தி... எனக்கு பயமா இருக்கு... நீ உடனே கிளம்பி வர முடியுமா?'' பதட்டத்துடன் கேட்டார் அவளுடைய மாமாவின் மனைவி கௌசல்யா.

''மாமி! என்னாச்சு? மாமா கூட ஊரிலே இல்லையே... ஏதாவது ப்ரச்னையா?''

''ஆமாண்டி! ஷீலாவை நம்ம பக்கத்து நர்ஸிங் ஹோமிலே சேத்திருக்கேன்.. நீ நேரில வாயேன்! விபரம் சொல்றேன்..'' மேலே பேச முடியாமல் உடைந்து போய் அழ ஆரம்பித்தார் அவர்.

''சரி... நான் உடனே வரேன் மாமி... வசந்த் நர்ஸிங் ஹோம் தானே?'' என்று கேட்டுவிட்டு அவசரமாகக் கிளம்பினாள்.

அங்கு சென்ற பிறகுதான் தெரிந்தது... ஷீலா தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற விபரம்!

அவளைக் கண்டதுமே அழ ஆரம்பித்த கௌசல்யா, விசும்பல்களுக்கிடையில் மெதுவாக விபரம் கூறினார்.

''பெரிய பணக்காரப் பையனாம்... யாரோ ஒருத்தனை இவ விரும்பி இருக்கா! அவனும் காதலிக்கிற மாதிரிப் பழகிட்டு திடீர்னு இவளைக் கல்யாணம் பண்ணிக்க மறுத்திட்டானாம்.. அதனால இந்தப் பாவிப் பொண்ணு இப்படி ஒரு முடிவெடுத்திருக்கா...''



அவர் முடித்த உடனே ப்ரீத்தியின் மனம் பதறிப் போனது. பதைப்புடன் வேகமாக ஷீலாவிடம் சென்றாள்.

''ஸ்டமக் வாஷ்'' செய்யப்பட்டு ஓய்ந்து போய் படுத்திருந்தாள் அவள்.

ஆதரவாக அவள் தலையைக் கோதியவள், ''ஷீலா... ஏன்டி இப்படி ஒரு மடத்தனமான முடிவெடுத்தே?'' தவிப்புடன் கேட்டாள்.

ஒரு விம்மலுடன் திரும்பி தலையணையில் முகம் புதைத்தவள், சமாதானமாக வெகு நேரமாகியது.

பிறகு, திக்கித் திணறி அவள் கூறிய கதை, பெரும் வேதனையைத் தந்தது.

''நான்... ஒருத்தரை... ஆறு மாசமா விரும்பறேன் ப்ரீத்தி... அவர் பெரிய பணக்காரர்! அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னுட்டாரு..!'' வேதனையுடன் கூறினாள்.

''அவரும் உன்னை விரும்பினாரா?''

ப்ரீத்தி கேட்டபோது, தயக்கத்துடன் தலை குனிந்தபடி தலையசைத்துவிட்டு உடனே விசும்ப ஆரம்பித்தாள் அவள்.

ஷீலாவின் விழிகளிலிருந்து வெள்ளமாய் வழிந்த கண்ணீரை, அவள் பரிவுடன் துடைத்து விட்டாள்.

''அழாதே ஷீலு... நடந்ததை எல்லாம் ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துடணும்... எனக்கு பெரிய வருத்தம் என்ன தெரியுமா? எப்பவுமே காலேஜ்ல நடக்கிற விஷயமெல்லாம் என்கிட்ட மறைக்காம ஷேர் பண்ணிப்பே! இவ்வளவு முக்கியமான விஷயத்தை எப்படிடி மறைச்சே! காதல் வந்தா எல்லாமே கண்ணை விட்டு மறைஞ்சிடுமா?



**''மனசு கட்டுப்பாடு இல்லாம எதை வேண்டுமானாலும் கேட்கும்.. அலை பாயும்!**

**''ஆனா அதை அடக்கக்கூடிய மாபெரும் சக்தி உன்னிடம் மட்டும்தான் இருக்கிறது. உன் புத்தியின் சக்தியை முதலில் அறிந்து கொள்!''**

''இது பரமஹம்ச யோகானந்தரோட பொன் மொழி! உன்னை.. உன் உணர்வுகளை முதல்லே அடக்கப் பழகிக்கோ!... ப்ளீஸ்...''

அதைக் கேட்ட ஷீலா மிரண்டு விழித்தாள்.

''என்னால முடியலைடி... உன்னை மாதிரி போல்டா, ஸ்போர்டிவ்வா என்னால இருக்க முடியாது...'' ஒரு பெருமூச்சுடன் முடித்தாள்.

''யாருடி அந்தப் பெரிய மனுஷன்? அதுதான், இந்தப் பணக்கார ஆளுங்களை எல்லாம் நம்பவே கூடாதுன்றது..! உனக்கு ஏன்டி இப்படி புத்தி போச்சு... அவருகிட்டே நான் வேணாப் பேசவா!'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

உடனே பதறிப் போய் எழுந்து அமர்ந்தாள் ஷீலா.

''வேணாம் ப்ரீத்தி!... எல்லாமே முடிஞ்சு போச்சு... அதை மறுபடி கிளற வேண்டாம்... விட்டுடுடி!'' கையெடுத்துக் கும்பிட்டபடி கண்ணீருடன் இறைஞ்சினாள்.

ப்ரீத்திக்கு, தாங்க முடியாத கோபமும் வெறுப்பும் வந்தன.

'உன் அலட்சியத்தாலும், புறக்கணிப்பாலும் ஒரு பெண் எப்படி உருக்குலைந்து போயிருக்கிறாள் பார்'



என்று, அந்தப் பணக்காரனின் சட்டையைப் பிடித்து உலுக்கி முகத்திலறைந்தாற்போல் கேட்க வேண்டும் போல்!

பிறகு ஷீலாவிடம் இது பற்றி அவள் ஒன்றுமே பேசவில்லை. மாமியிடம் விடைபெற்று அலுவலகத்திற்குச் சென்றாள்.

தான் எடுத்த பேட்டியையும், போட்டோவையும் எடிட்டரிடம் கொடுத்தபோதுதான், ஷீலாவைக் காதலித்தவன் யாரென்றே கேட்காமல், தான் வந்து விட்டது நினைவு வந்தது.

இன்றிரவு, அவளைப் பார்க்கச் செல்லும்போது, கட்டாயம் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

## 2



அன்று, பத்திரிகை அலுவலகத்தில் வேலைகள் இயல்பாக நடந்தன.

மாலையானதும், மருத்துவமனைக்கு ஷீலாவைப் பார்க்கச் சென்றபோது அவள் இயல்பாகி இருந்தாள்.

ராமலிங்கம் மாமா, ஊரிலிருந்து வந்திருந்தார்.

கவலையுடன் மௌனமாக அமர்ந்திருந்தவரின் முகம், பெரும் வேதனையிலிருக்க, ப்ரீத்திக்கு அதைப் பார்க்கத் தாங்கவில்லை.

மெதுவாக, தணிந்த குரலில் ஷீலாவிடம் விசாரித்தாள்.

"ஷீலா!... உன்னோட அந்த ஹீரோ.. சாரி.. சாரி.. அந்த வில்லன் பேரு என்னடி?"

"ம்... ஆகாஷ்... ஜே.பி. குரூப் ஆஃப் கம்பெனிஸ் சேர்.. சேர்மன்!" மென்று முழுங்கியபடி கூறினாள் அவள்.

ப்ரீத்தியின் புருவங்கள் உயர்ந்து நெற்றியைத் தொட்டன!

"தி ஃபேமஸ் ஜே.பி. குரூப் ஆஃப் கம்பெனிஸ் சேர்மன் ஆகாஷா? அவர் பெரிய பிக் ஷாட்டாச்சேடி... நீ எப்படி அவரை மீட் பண்ணினே?" யோசனையுடன் வினவினாள்.

"என் ஃப்ரெண்டோட பர்த் டே பார்ட்டிக்கு அவர் வந்திருந்தப்போ பார்த்தேன்.. அதுலதான் ஆரம்பமாச்சு... என் காதல்! வேண்டாம் ப்ரீத்தி... அதைப் பத்தி பேச வேணாம்.. விட்டுடலாமே..." பெருமூச்சுடன் முடித்தாள் அவள்.

பிறகு, அவளை மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டில் விட்டுவிட்டு ஹாஸ்டலுக்கு வரும்போது நேரமாகி விட்டது.

அவளுடைய இளமைக் காலமும், பழைய நினைவுகளும் மனதில் கரை புரண்டு வந்தன.

ப்ரீத்திகா தன் சிறு வயதிலேயே தாய் தந்தையை ஒரு விபத்தில் இழந்து விட்டதால் மாமாவின் ஆதரவிலேயே வளர்ந்தவள்.

முதலில் கௌசல்யா அவளை வளர்க்க மறுத்தாலும், சம்பளமில்லாத ஒரு வேலைக்காரியாய் அவள் கிடைத்தது, அவருக்கு பெரும் வசதியாய் போனது.



ப்ரீத்தியைவிட ஒரு வயதே சிறியவளான ஷீலா, ஒரு துரும்பைக் கூட நகர்த்தாமல் இருக்க, வீட்டிலுள்ள அனைத்து வேலைகளுமே ப்ரீத்தியின் தலையில்தான் விழும்.

தன் நிலைமையைப் புரிந்து கொண்டு, அவளும் அனுசரித்து நடந்து கொள்வாள்.

ஆனால், அவளுடைய படிப்பிற்கு மட்டும் கௌசல்யா தடை விதிக்காமல் பார்த்துக் கொண்டார் ராமலிங்கம்.

அவளுடைய பெயரில் பெற்றோரால் போடப்பட்டிருந்த வைப்புத் தொகையின் வட்டியும், வீட்டு வாடகையும், ப்ரீத்தியின் படிப்பிற்கு மிகவும் உதவின.

மாமா வீட்டிலேயே தங்கியிருந்து, ஜர்னலிசமும் படித்து முடித்து அவள் வேலைக்குச் சேர்ந்த பிறகுதான், ஒரு முடிவெடுத்து ராமலிங்கத்திடம் பேசினாள்.

அவர் ஒத்துக் கொள்ள விட்டாலும், இனியும் அவர்களுக்கு பாரமாக இருக்க அவள் விரும்பவில்லை.

வேலைக்குச் சேர்ந்த அந்த மாதமே, ஒரு வொர்க்கிங் விமன் ஹாஸ்டலில் சேர்ந்து விட்டாள்.

ஷீலாதான் அவள் பிரிவில் மிகவும் ஓய்ந்து போய் வருந்தினாள். ஒரு வருடமாகப் போகிறது... ப்ரீத்தி அந்தக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வந்து!

திருமண வயதில் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு இருக்கும்போது, அருகிலேயே தேவதை போல் ஒரு நாத்தனார் மகளும் இருப்பதை எண்ணி, கௌசல்யாவின் மனம் சஞ்சலத்துடனிருந்த நேரம் அது.

அந்த நேரத்தில் ப்ரீத்தி வீட்டை விட்டுக் கிளம்பிய போது, முதலில் வாழ்த்தி அனுப்பியதும் அவர்தான்!



ஷீலா ஒப்பனைகளோடு பார்த்தாலே சுமாராகத்தான் இருப்பாள்... ஆனால் ப்ரீத்தியோ எந்தவித அலங்காரமுமின்றி இருந்தாலும், எல்லோரா ஓவியம் போலிருப்பாள்.

எலுமிச்சை நிறத்தில், உயரமாக... கொடியிடையுடன், கவிதை பேசும் கண்கள் அந்த முகத்திற்கு அழகு சேர்க்க, குழியும் கன்னங்களுடன் துறுதுறுவென்று இருப்பவளைப் பார்த்தாலே கௌசல்யாவிற்கு அடி வயிற்றைக் கலக்கும்!

ஷீலாவைப் பெண் பார்க்க யாராவது வரும்போது, அவர்கள் கண்களில் ப்ரீத்தி பட்டு விட்டால் என்ன செய்வதென்ற பயம், அவரைப் பெரிதும் ஆட்டுவித்துக் கொண்டிருந்தது.

அதனாலேயே, உடனே அவளை லேடீஸ் ஹாஸ்டல் அனுப்ப சம்மதித்தார் அவர்.

"அவ வாரக் கடைசியில வீட்டுக்கு வரப் போறா... லோக்கல் கார்டியன் நீங்கதானே...? நாமளும் போய் அப்பப்ப பார்த்துட்டு வந்தாப் போவுது!" என்று கணவரையும் அமைதிப்படுத்தினார்.

ஷீலாவிற்குத்தான், இந்த ஏற்பாட்டில் வருத்தம்!

வார இறுதி நாட்களில், இல்லையென்றால் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை, ஞாயிறன்று மாமா வீட்டிற்கு ஓடி வந்து விடுவாள் அவள்.

சிறு வயதிலிருந்தே வளர்ந்த இடம் என்பதால் அந்த வீட்டிற்கு வந்ததும் ஒரு இதமும், பாதுகாப்புணர்வும், அவளை ஆக்கிரமிப்பதென்னவோ உண்மையாய்!

அத்துடன் ஷீலாவும் அவளுடைய வயதிற்கேற்ற நல்ல துணையாய் இருக்கவே, அந்த வார இறுதி நாட்



களுக்காகவே, மனம் ஏங்கிக் காத்திருக்கும். மனதிற்குள் சுகமான எண்ண அலைகள் கரை புரள, மெதுவாக உறங்க ஆரம்பித்தாள் ப்ரீத்திகா.

* * *

அந்த வாரத்தில், அவளுடைய பேட்டி அழகிய வண்ணக் கவிதையாய், பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

நாட்கள், இமைக்க நேரமின்றி சிறகு விரித்துச் சென்றன.

ஆனால், மனதோரம் அந்த ஆகாஷின் மேல் ஒருவித வன்மம் மட்டும் வளர்ந்துகொண்டே போனது.

ஒரு ஞாயிறன்று, அவள் ராமலிங்கத்தின் வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

அப்போதுதான், ஷீலாவை அன்று மாலை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டினர் வரப் போவதாக கௌசல்யா தெரிவித்தார்.

"உன் மாமா பொண்ணுக்கு கொஞ்சம் அட்வைஸ் பண்ணு ப்ரீத்தி! கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு ஒரே அடம்... மாப்பிள்ளை நமக்கு தூரத்துச் சொந்தம் தான்.. அமெரிக்காவுலே சாப்ட்வேர் இன்ஜினியரா இருக்காரு... அவங்களா விரும்பி வராங்க... அவளை புத்திசாலித்தனமா நடந்துக்கச் சொல்லு.."

கலங்கிய விழிகளுடன் அவர் கூற, உடனே மனம் இளகிப் போனது ப்ரீத்திக்கு!

அவருடைய கையைப் பிடித்து ஆதரவாக அழுத்தியவள், "எல்லாம் நான் பார்த்துக்கறேன் மாமி... நீங்க போங்க." தேறுதல் கூறி அனுப்பிவிட்டு, ஷீலாவின் அறைக்குச் சென்றாள்.

படுக்கையில் படுத்தபடி விட்டத்தை வெறித்திருந்தவளைப் பார்த்தபோது, பரிதாபமாய்... அந்த முகமறியா ஆகாஷின் மீது பெரும் சீற்றம் வந்தது.

சமீபத்தில் வந்த பாடல் வரிகள்தான் அப்போது நினைவிற்கு வந்தன!

**காதல்... நெருப்பின் நடனம்!**
**உயிரை உருக்கி தொடரும் பயணம்!**
**காதல்... தீயின் சலனம்... புயல்கள் உறங்கும்**
**கடலின் மௌனம்!**

காதலின் வித்தியாசமான ஒரு பரிணாமத்தை அப்பாடல் வரிகள் அறிமுகப்படுத்துவதுபோல்!

தலையை உலுக்கி நிமிர்ந்தவள், ''ஷீலு! என்னடி பண்ணிட்டிருக்கே?'' பரிவுடன் கேட்டபோது, ஆர்வத்துடன் எழுந்து அமர்ந்தாள் ஷீலா.

''வாடி.. வந்துட்டியா? என்னவோ மனசே சரியில்லை... எதிலயோ பெரிசா தோத்துப் போயிட்ட மாதிரி ஒரு உணர்வு! ம்...'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

''ஏன்.. என்ன தோத்துப் போயிட்டே...? இப்படி ஒரு அருமையான பொண்ணு கிடைக்க அந்த ஆகாஷுக்குத் தான் குடுத்து வைக்கலை! அதை விடு... மாமி அங்கே ஒரு குட் நியூஸ் சொன்னாங்க... நீ என்னடான்னா இங்கே அழுது வடிஞ்சிட்டிருக்கே!'' கேலியாக அவளையே நோக்கினாள்.

''ஆமாம்... பொண்ணு பாக்க வராங்களாம்.. எனக்குப் பிடிக்கலை.. என்னவோ ரொம்ப ரஷ் பண்ற மாதிரி இருக்கு... என் மனசு இன்னும் கல்யாணங்கற கமிட்மெண்ட்டுக்கே... ரெடியாகலைடி!''



''ம்.. பொய் சொல்லாதே.. கொஞ்ச நாள் முன்னாடி ரெடியாயிருந்த மாதிரி ஒரு ஞாபகம்! ஷீலு! காதல்ங்கிறதெல்லாம் லைஃப்லே ஒரு பாஸிங் கிளவுட் மாதிரித்தான்! எப்பவுமே நாம விரும்பறவங்களைவிட, நம்மை விரும்பி ஏத்துக்கறவங்களைக் கல்யாணம் செஞ்சுகிட்டா, வாழ்க்கை இன்னும் வண்ண மயமா இருக்கும்... மாமியும் பாவம்... ரொம்ப ஆசைகளும் எதிர்பார்ப்புமா இருக்காங்க... பழசை எல்லாம் மறந்திடுடி... புது வாழ்க்கைக்கு உன்னைத் தயார் பண்ணிக்க... ப்ளீஸ்..'' மெதுவாகக் கூறினாள்.

''இல்லைடி... இது என்னோட ஃபர்ஸ்ட் லவ்! உனக்கு சொன்னா புரியாது..''

''ப்ச்! எல்லாம் எனக்குப் புரியுது. முதல் காதல்தான் ஜெயிக்கணும்னா இந்த உலகத்துல பாதிப் பேர் பேச்சலரா அலைய வேண்டியதுதான்... புரிஞ்சுக்க ஷீலா... நீ சின்னக் குழந்தையில்லை! அப்பா, அம்மா நம்மைப் பெத்து வளர்த்தவங்க.. அவங்களுக்கு நம்ம மேல இல்லாத பாசமும் அக்கறையும், வேற யாருக்கும் வரப் போறதில்லை... அவங்க சந்தோஷத்துக்காக... நிம்மதிக்காக நீ இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கலாம் இல்லையா?'' கனிவுடன் கேட்டாள்.

திடீரென்று ராமலிங்கத்தின் குரல் இடைமறித்தது.

''அப்படிச் சொல்லும்மா! நீ தான் இவகிட்ட பேசணும்னு உன்னை வரச் சொல்லலாம்கிறதுக்காக, ஹாஸ்டலுக்குப் போன் பண்ணப் போனேன்... வீட்டில போன் சரியில்லை! அங்கே நீ கிளம்பிட்டதா சொன்னாங்க... இங்கேதான் வரதாவும் சொன்னாங்க...! அவளுக்கு உறைக்கிற மாதிரி சொல்லு... பெரியவங்க சொன்னா, எதுவுமே





தப்பாதான் தெரியும்... ஏத்துக்கத் தோணாது!'' கசப்புடன் கூறினார் அவர்.

''மாமா! அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை... அவ புரிஞ்சிப்பா... சாயந்தரம் அந்த மணிக்கு ரெடியா இருப்பா... பாருங்க... அதுக்கு நான் கேரண்டி!'' என்று புன்னகையுடன் அவரை அனுப்பி வைத்தாள்.

பிறகு அவளிடம் பேசினாள்.

''ஷீலா! அவனுக்காக தற்கொலை பண்ணிக்கற அளவுக்கு போன நீ, உண்மையிலேயே உன்னை நேசிச்சிருக்கியா? என்ன, தன்னை நேசிக்கிறவங்களுக்கு தற்கொலை எண்ணமே வராதாம்! தன்னை, தன் திறமைகளை உணர்ந்து செயல்படாத நீ இன்னொருத்தரோட நேசத்தால மட்டும் எப்படி முழுமையா அடைய முடியும்... காதல் தோல்வியில தற்கொலை செஞ்சுக்கணும்னு நினைச்சா இப்போ நாட்டுல இருக்கிறவங்கள்லே முக்கால் வாசிப்பேர் சூசைட் பண்ணிட்டுத்தான் சாகணும்...!

''காதல் மழை மாதிரி! வந்தா சந்தோஷம்... தினம் வரலைன்னாலும் பெரிய கஷ்டமில்லை! எப்பவுமே அதிலேயே நனைஞ்சிட்டிருக்கவும் முடியாது! வாழ்க்கையில காதல் ஒரு சின்ன பாட்... அழகான தூறல் மாதிரி! ஆனா அதுவே வாழ்க்கையாயிட முடியாது.

''முதல்லே பழசை எல்லாம் மறக்கக் கத்துக்கணும்... காதல் தோல்வி ஒரு மனுஷனோட வாழ்க்கையையும் தோல்வியாக்கிட நாம அனுமதிக்கக் கூடாது... காதல் சாம்பல்லேருந்து உயிர்த்தெழுந்து வருகிற ஃபீனிக்ஸ் பறவை மாதிரி புத்துணர்ச்சியோட எழணும்!

''நம்மளை புறக்கணிச்சவங்களுக்கு எதிரா சந்தோஷமான ஒரு லைஃபை வாழ்ந்து காட்டணும்.. அதுதான் நீ அவங்களுக்குத் தர்ற மரண அடி!



''நீ கிடைக்கலைன்னு நான் உடைஞ்சு போயிடலை பாரு... உனக்கும் மேல எனக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு.. சில கடமைகள் இருக்கு... அதில என் பாதையை செப்பனிட்டு வெற்றிக் கொடி நாட்ட எனக்கும் தெரியும்னு உன் எதிர் முகத்துல கரியைப் பூசணும்... புரியுதா?''

''ம்... ஆனா தன்மானம், சுய கௌரவம் எல்லாம் தொலைஞ்சு போனப்புறம், வாழணுமான்னு தோணுதே!''

''ஏண்டி.. இத்தனை வருஷமா வளர்த்த அம்மா, அப்பாவைவிட அவன் உனக்கு முக்கியமாயிட்டானா? அவங்க நிலைமையை நீ நினைச்சுக்கூடப் பாக்கலையே!''

''எவ்வளவு செல்ஃபிஷ்ஷா முடிவெடுத்திருக்கே? நீ இறந்திருந்தா அவங்களுக்கு எல்லாம் போயிருக்குமே? இருபது வருஷம் உனக்காகவே வாழ்ந்த அவங்க முக்கியமா? இருபது வாரம் கூடப் பழகாம உன்னை வெறுத்து ஒதுக்கின அவன் முக்கியமான்னு இப்போ நீ தீர்க்கமான முடிவெடுக்கணும் ஷீலா!

''ஆனா அது நல்ல முடிவா... அறிவு பூர்வமா... உணர்ச்சிகளுக்கு ஆட்படாததா... தெளிவா இருக்கணும்னு நான் எதிர்பார்க்கிறேன்... புரியுதா... நல்லா யோசி!''


கையைப் பற்றி ஆதரவாக அழுத்தியபடி முடித்தாள்.

ஷீலாவின் விழிகள், எங்கோ தூரப் பார்வை பார்த்தன.

அந்தப் புறக்கணிப்பும், நிராகரிப்பும் அவளைப் பேதலிக்கச் செய்திருப்பதை உணர்ந்தபோது, அந்த ஆகாஷை... அவனுடைய சுயரூபத்தை ஊருக்கே வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் போல் ஒரு வெறி வந்தது.

மெதுவாக அவளை அணைத்து சமாதானப்படுத்தியபடி, அவள் மனம் மாறும் வகையில் ஆதரவாகப் பேசிக் கொண்டிருந்தாள் ப்ரீத்திகா.

3



அன்று மாலைக்குள், பேசிப் பேசியே ப்ரீத்தி அவளை மாற்றி விட.. அரை மனதுடன் பெண் பார்க்கும் படலத்திற்கு ஒரு வழியாக சம்மதித்தாள் ஷீலா.

நான்கு மணியிலிருந்து கௌசல்யா டிபன் வேலைகளில் ஈடுபட, ப்ரீத்தி ஷீலாவை அலங்கரிக்கத் துவங்கினாள்.

ஐந்து மணிக்கு அவள் தயாரானவுடன் ஹாலுக்கு வந்தவள், "மாமா... அப்ப நான் கிளம்பறேன்" என்றாள்.

"என்னம்மா! எல்லா ஏற்பாடும் செஞ்சப்புறம், நீ போறேன்னா எப்படி? அதெல்லாம் முடியாது... நைட் நானே உன்னை ஸ்கூட்டர்லே கொண்டு வந்து விடறேன்" ராமலிங்கம் தீர்மானமாகக் கூறினார்.

"ஆமாம்... நீயும் இருந்தா எனக்கு தைரியமா இருக்கும் ப்ரீத்தி... ப்ளீஸ்..." ஷீலா கெஞ்சினாள்.

"ரெண்டு பேரும் புரியாமல் பேசறீங்க... அவளுக்கு ஏதோ வேலையிருக்குன்னு காலையிலே வந்தவுடனே என்கிட்டே சொன்னா! நான்தான் ஒரு நாலு மணி வரைக்குமாவது இருந்துட்டு ஷீலுவை ரெடி பண்ணிட்டுப் போடின்னு சொன்னேன்... பத்திரிகை வேலைன்னா சும்மாவா?"

கௌசல்யா கூற, ப்ரீத்திக்கு சிரிப்புதான் வந்தது... கூடவே அவருடைய பயமும் புரிந்தது.

"ஆமாம் ஷீலு... முக்கியமான ஒரு வேலை இருக்கு... போகணும்... நைட் நானே போன் பண்றேன்... மாமா... ப்ளீஸ்... புரிஞ்சிக்கங்க" என்றபடி அனைவரிடமும் விடை பெற்றாள்.



ஹாஸ்டலுக்கு வந்த உடனேயே ஒருவித வெறுமையும், ஏக்கமும் மனதை ஆக்கிரமித்தன.

இறையன்புவின் 'ஓடும் நதியின் ஓசை'யை எடுத்து வைத்து அமர்ந்தபோது, அவருடைய எழுத்தின் ஆட்படுத்தலில், இதயம் மற்ற விஷயங்களைத் தற்காலிகமாகத் தள்ளுபடி செய்தது.

**"மற்றவர்கள் நம்மை எப்படிப் புறக்கணிக்கலாம்! என்கிற நியாயமான கோபம் நெறிப்படுத்தப்பட்டதாலேயே, சிலர் மற்றவர்களுக்கு பாதை காட்டினார்கள்... மற்றவர்கள் நம்மைத் தாழ்வாக நினைக்கும்போது, அவர்கள் நிராகரிக்க முடியாதபடி நாம் வளர்ந்து கொண்டே இருப்பதுதான் ஒரே உத்தி!"** என்ற வரிகள் பெரும் உத்வேகத்தையும் பலத்தையும் தந்தன.

கூடவே வளவளக்க, இன்று சுகன்யாவும் இல்லை... ஊருக்குச் சென்றிருந்தாள்.

இரவு சாப்பிடும்போது, பெண் பார்க்கும் நிகழ்வு எப்படி நடந்திருக்குமோவென்ற எதிர்பார்ப்பு இழை கோர்க்க, ஷீலாவிடம் செல்லில் பேசினாள்.

அப்போதுதான் தனக்கு திருமணம் முடிவாகிவிட்ட நல்ல செய்தியை, அவள் தர்ம சங்கடத்துடன் கூறினாள்.

"ஏய்... என்னடி? நாளைக்கு எனக்கு எக்ஸாம் அப்படிங்கற மாதிரி இந்த விஷயத்தை ஒரு பயத்தோட சொல்றே!.. பீ சியர் புல் ஷீலு! நீ சந்தோஷமா இருந்தாத் தான் மாமாவும் மாமியும் நிம்மதியா இருப்பாங்க... ஆமாம்... மாப்பிள்ளை பேரென்ன...?" ஆர்வத்துடன் விசாரித்தாள்.

"ம்... பிரபு! இரு.. நீ அப்பா கிட்டயே பேசு" என்று அவரிடம் கொடுத்து விட்டாள், ஷீலா.



"என்ன மாமா! எல்லாம் நல்லபடி ஸ்மூத்தா முடிஞ்சுதா?"

"ம்.. ரொம்ப சந்தோஷமா இருக்கு ப்ரீத்தி... நீ இல்லாததுதான் எனக்குப் பெரிய வருத்தமே! அவங்களுக்கு ஷீலாவை ரொம்ப பிடிச்சிடுச்சு... மாப்பிள்ளைப் பையன் ரொம்ப நல்லாருக்கான்... ஒரு மாசத்துல அவன் திரும்பி ஸ்டேட்ஸ் போகணும்... அதனால அதுக்குள்ள கோவில்லே கல்யாணத்தை சிம்பிளா முடிச்சிட்டு அன்னிக்கு நைட் ஒரு ஹோட்டல்லே கிராண்டா ரிசப்ஷன் குடுத்திடலாம்னு நினைக்கறேன்... இரு உன் மாமி பேசணுமாம்!" என்று அவரிடம் கொடுத்தார்.

"ப்ரீத்தி... தேங்க்ஸ்டி! நீ புரிஞ்சுக்கிட்டு நடந்துகிட்டே! இனிமே தான் நிறைய வேலை இருக்கு... நகை துணி மணி எல்லாம் வாங்கணும்... தினமும், சாயந்திரம் வந்துட்டுப் போடி... நீ வந்தா எனக்குக் கொஞ்சம் தெம்பாயிருக்கும்..." என்றவரின் அலைப்புறுதலும், மகிழ்ச்சியும் புரிந்தன.

"நான் வரேன் மாமி... ஃப்ரீ டைம் கிடைக்கிறப்பல்லாம் கட்டாயம் வரேன்." என்று கூறிவிட்டு வைத்தாள்.


திடீரென்று அந்த முகம் தெரியாத ஆகாஷ், அவள் நினைவடுக்குகளில் பரவினான்.

'நீ ஏமாற்றி விட்டால் ஷீலு ஒடிந்து விடுவாளா? இதோ பார் அவள் திருமணம் முடிந்து வெளிநாடு செல்லப் போகிறாள்' என்று அவன் முன் நின்று அலட்சியமாகக் கூற வேண்டும் போல்!

அந்த முகமறியா மனிதன் மேல் விருட்சமாக எழுந்த வெறுப்புடன் அப்படியே சாய்ந்து உறக்கத்தைத் தழுவினாள் அவள்.



4



மறு வாரம் முழுவதும், நாட்கள் நிற்க நேரமின்றி கல்யாண வேலைகளில் சென்றன. ஷீலாவிற்கு நகை, புடவைகள், காஸ்மெடிக்ஸ் என்று வாங்கிவர, தினமும் ஷாப்பிங் செல்ல வேண்டியிருந்தது.

ஒரு நாள் சுகன்யா வாங்கி வந்திருந்த புத்தகத்திலிருந்த ஒரு புகைப்படம் அவள் கருத்தைக் கவர்ந்தது.

ஒரு பார்ட்டியில், 'ஜே.பி. குரூப்ஸ்' சேர்மன் ஆகாஷ் ஒரு இளம் நடிகை கன்னத்தில் முத்தமிட்டபோது, அந்தப் படம் எடுக்கப்பட்டிருந்தது.

கீழே, அந்த இளம் நடிகையையும் அவனையும் இணைத்து செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

மனதில் தீயின் ஊற்றாய் கோபம் பொங்கியெழுந்தது— இவன்தான் இவனுடைய தற்போதைய காதலியா... இவளால் தான் ஷீலாவை அவன் நிராகரித்தானா? பல கேள்விகள் மனதில்!

"என்னடி... அவ்வளவு வெறுப்பா அவங்க ரெண்டு பேரையும் முறைக்கிறே?" சுகு ஆவலுடன் எட்டிப் பார்த்தபடி கேட்டாள்.

"ம்! இவன்தான் ஷீலாவை ஏமாத்தினவன்... இவதான் அவனோட இப்போதையக் காதலி போலிருக்கு! ட்ரெஸ்ஸை மாத்தற மாதிரி காதலிகளை மாத்தற இவனுங்களை எல்லாம் நிக்க வச்சு சுடணும்!" படபடவெனப் பொரிந்தாள்.

"ஏய்... அவன்கிட்டப் பணம் இருக்கு... அதை வச்சு எதை வேணா செய்யலாம் தெரியுமா?"

"அதான்! அந்த தைரியம்தான்.. தான் ஒரு கோடீஸ்வரன்... தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாதுங்கிற திமிர்... எல்லாம் ஒரு நாள் அடங்கும்... நீ வேணாப் பாரு" பொருமிவிட்டு அந்தப் புத்தகத்தை மேலே படிக்க ஆரம்பித்தாள்.

* * *

ஒரு நாள், எடிட்டர் அவளை அழைப்பதாக ப்யூன் வந்து கூறினான்.

அடுத்த இஷ்யூவிற்கு ஒரு ஆர்ட்டிகிள் எழுதிக் கொண்டிருந்தவள், அதை அப்படியே வைத்துவிட்டுச் சென்று, அவருடைய அறைக் கதவைத் தட்டினாள்.

"மே ஐ கமின் சார்?"

"யெஸ் கமின் ப்ரீத்திகா! உனக்கு ஒரு வேலை தரப் போறேன்... ஒரு இளம் தொழிலதிபர்... அவரை நீ பேட்டி எடுக்கணும்... ஆனா, அவரு சுலபத்துல இண்டர்வியூ குடுக்க மாட்டாருன்னு எல்லாருக்கும் தெரியும்... நீ ட்ரை பண்ணிப் பாரேன்... நீ மட்டும் இத செஞ்சிட்டேன்னா நம்ம மேகசினோட சர்க்குலேஷன் எங்கயோ போயிடும்!" என்றார் யோசனையுடன்.

"ஓகே சார்... ஐ வில் ட்ரை மை பெஸ்ட்...!" சிறு முறுவலுடன் கூறியவள், "யார் சார் அந்த பிசினஸ் மேன்?" ஆவலுடன் கேட்டாள்.

அதற்கு அவர் கூறிய பதில், அவளைத் தூக்கி வாரிப் போடச் செய்வதாய்!

"மிஸ்டர் ஆகாஷ்... 'ஜேபி குரூப்' ஆஃப் கம்பெனிஸ் சேர்மன்! அவரோட அப்பா ஜெயப்பிரகாசம் ஆரம்பிச்ச



வச்ச பல பிசினஸை பல கோடி ரூபா வருமானம் வர்ற அளவுக்கு பெருக்கினவர்! நல்ல திறமை... உழைப்பு... இப்ப தமிழ்நாட்டுல நம்பர் ஒன் பிசினஸ் மேன்..."

பெருமையுடன் அவர் விவரித்தபோது சட்டென்று ஒருவித வெறுப்புணர்வும், கசப்பும் மனதில் பரவின.

அவனையா... அந்த ஏமாற்றுக்காரனையா பேட்டி காணப் போகிறோம் என்று நினைத்தாலே, மனம் எரிதழலாகியது.

மறுநாள் காலையில் அந்த ஆகாஷுடைய சாஃப்ட் வேர் நிறுவனத்திற்குச் சென்றபோதுதான் அவன் எவ்வளவு பெரிய கோடீஸ்வரனென்பது புரிந்தது.

ஆனால், மனதளவில் பெரும் ஏழையாய் மோசமானவனாய் இருக்கிறானே என்ற வெறுப்புடன் அவள் உள்ளே சென்றாள்.

காலை நேரப் பரபரப்பிலும், சுறுசுறுப்பிலும் அனைவரும் ஆழ்ந்திருக்க, ஒரு அலட்சியப் புன்னகையுடன் ரிசப்ஷனுக்குச் சென்றாள்.

மெழுகு பொம்மைபோல் செயற்கையாகச் சிரித்த அந்த வரவேற்புப் பெண்ணிடம் விபரம் கூறியபோது, "அப்பாயின்ட்மெண்ட் இருக்கிறதா?"வென்று கேட்டாள் அவள்.

'ஒரு அழகான பொண்ணு பேட்டி எடுக்க வந்திருக்கறது தெரிஞ்சா... உன் பாஸ்... அந்த சபலிஸ்ட் ஆகாஷ் இங்கேயே ஓடி வந்து விடுவான்' என்று கூற வேண்டும் போல!

தலையைக் குலுக்கி சிறு முறுவலுடன் தன் எண்ணங்களிலிருந்து விடுபட்டவள், "இல்லை... ஒரு ஃபைவ் மினிட்ஸ் ஸ்பேர் பண்ணினாப் போதும்...



அவரைப் பத்தின மத்த விஷயங்கள் எல்லாம் ஆஃபிஸிலே வாங்கிப்பேன்..." ஆவலுடன் கேட்டாள்.

"ஸாரி மேடம்! எங்களாலேயே முன் அனுமதி இல்லாம அவரை சந்திக்க முடியாது. உங்க மேகசின் மூலமா அப்பாயின்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணிட்டு வாங்க... ஸாரி..." திட்டவட்டமாக மறுத்தாள் அவள்.

திடீரென்று, அந்த இடமே பெரும் அமைதியில் ஆழ்ந்தது.

அந்த வித்தியாசமே அவளை சுற்றுவிடத் திரும்பிய போது, அனைவரும் பவ்யமாக எழுந்து நின்றனர்.

நான்கு ஆண்கள் லெட்டர் பேடுடன் தொடர, தணிந்த குரலில் டிக்டேட் செய்தபடி கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தான் ஆகாஷ்!

ஆழ்ந்த நிறத்தில் கோட் சூட் அணிந்து ஆறடிக்கும் மேல் உயரத்தில், கருமை கலந்த மாநிறமாக செதுக்கியது போன்ற கடுமையான முகத்துடன், கரும் கேசம் அலைபாய மிடுக்காக வந்தவனிடம், ஏனோ அவளறியாமலே ஒரு மரியாதை வந்தது.

ஒதுங்கி நின்றவள், அவன் அருகில் வந்ததும் "ஒன் மினிட் மிஸ்டர் ஆகாஷ்" என்று அவனை நிறுத்தியபோது, ஒரு பூ விழுந்தால்கூடக் கேட்குமளவு அந்த இடத்தில் ஒருவித அமைதி... உறைபனியாய்!

அலட்சியமாகத் திரும்பியவனின் முகம், எந்தவித மாற்றமுமின்றி அவளை நோக்க, விழிகள் கூர்மையுடன் ஊடுருவின.

"யெஸ்...?" என்றவனின் பார்வை உடனே விலகி, தன்னுடைய கைக்கடிகாரத்தில் பதிந்தது.



அவனுடைய குரல் ஆண்மையின் இலக்கணத்துடன் வசீகரமாய் மனதில் புகுந்து விட, "ஐயம் ரிப்போர்ட்டர் ப்ரீத்திகா ஃப்ரம் தி மேகசின் 'விடியல்'! நான் உங்களை ஒரு பேட்டி எடுக்கணும்...!" என்றாள், சிறு முறுவலுடன்!

அவள் முடிக்கும் முன்பே, அவன் முகம் கடும் சீற்றமானது.

உடனே தன் மேனேஜரிடம் திரும்பியவன், "வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்! என்ன இது பாஸ்கர்...? எனக்குத் தான் இந்த பேட்டி, பப்ளிசிட்டி இதெல்லாம் பிடிக்காதுன்னு உங்களுக்குத் தெரியுமில்லை? அப்புறமும் ஏன் இவங்களை இந்த கேம்பஸ்க்குள்ளே அலவ் பண்ணினீங்க..." பொரிந்துவிட்டு அவளிடம் திரும்பினான்.

விழிகள் சினத்துடன் பளபளக்க, "தமிழ் தெரியும் இல்லை? சொன்னது புரிஞ்சிருக்குமே... அப்புறம் ஏன் நிக்கறீங்க?... கெட் லாஸ்ட்" பற்களைக் கடித்தபடி அடிக்குரலில் சீறினான்.

சட்டென்று அவள் முகம் சுருங்கி இறுகியது.

அவனிடம் தெரிந்த அந்த அலட்சியம்... அகம்பாவம்... திமிர்... அனைத்தும் அவளை எரிமலையாக்கின.

அவனைப் பற்றியும், அவனுடைய காதல் லீலைகளைப் பற்றியும், உடனே எல்லோரிடமும் அம்பலப் படுத்த வேண்டுமென்று ஒரு வேகம் வந்தது.

ஆனால் ஷீலாவின் எதிர்காலம் அவளை அடக்க, ஒரு கோப மூச்சுடன் நிமிர்ந்தால், எதிரில் அவன் இல்லை.

"ப்ளீஸ்... அவர் சொன்னது காதிலே விழுந்தது இல்லை.. டோன்ட் டிஸ்டர்ப் அவர் ட்யூட்டி அவர்ஸ்" என்று எச்சரித்தான் அந்த மேனேஜர்.


"சே..." என்றபடி திரும்பியவள், "ஒரு நிமிஷம்.." என்று அவனை விரல் சொடுக்கி அழைத்தாள்.

"இண்டர்வியூ எடுக்க வந்த என்னை நல்லா இன்சல்ட் பண்ணி அனுப்பிட்டோமேன்னு ரொம்பப் பெருமைப்பட வேண்டாம்னு உங்க பாஸ்கிட்ட சொல்லுங்க... என் பேனா முனையோட பலத்தை ஒரு நாள் அவர் தெரிஞ்சுப் பாரு... அப்போ எப்படி ரியாக்ட் பண்றாருன்னு நானும் பாக்கறேன்... குட் பை" என்றபடி வெளியில் வந்தாள் அவள்.

அவனுடைய மனம் தீயாய் தகித்தது.. தன் அறிவிற்கும், புத்திசாலித்தனத்திற்கும், தன்மானத்திற்கும் விழுந்த அடியை, சுலபத்தில் மனம் மறக்காதென்பது புரிந்தது.

அவளைப் பற்றிய வெறுப்புச் சதவிகிதம் அவன் மனதில் உயர்ந்து கொண்டே போவதை ஆகாஷ் அறியவில்லை.

## 5



அலுவலகத்திற்கு வந்தவுடன், கோபத்துடன் ஒரு ஆர்ட்டிகிளை எழுதி எடிட்டோரியலுக்கு அனுப்பினாள் அவள்.

அதில் சில பணக்கார இளைஞர்கள் விளையாட்டுத் தனமாக மத்திய தரப் பெண்களின் வாழ்க்கையில் விளையாடுவதையும்... அவர்களை ஏமாற்றி விடுவதையும், அது பெண்களைத் தற்கொலை வரை தூண்டுவதையும் பொதுவாகக் கடிந்து எழுதியிருந்தாள்.



நெஞ்சம் ஓரளவு சமாதானமடைய, மாலையில் மாமாவின் வீட்டிற்குச் சென்றபோது, ஷீலாவிடம் எல்லாவற்றையும் கூறினாள்.

உடனே, அவள் முகம் பயத்தில் வெளுத்துப் போனது.

"ஏண்டி அப்படி எல்லாம் எழுதினே! இப்ப எனக்கு கல்யாணமாகப் போகுது... நானே பழசை எல்லாம் இப்ப தான் மெதுவா மறக்க ஆரம்பிச்சிருக்கேன்... வேண்டாம்.. இதை விட்டுடு...! அப்படியே அவரை மறுபடி பார்க்க நேர்ந்தாலும், மறந்து கூட என்னைப் பத்தி எதுவுமே அவர் கிட்டே நீ பேசக்கூடாது.. எனக்கு ப்ராமிஸ் பண்ணு" என்றாள் மிரட்சியுடன்.

தன்னுடைய எதிர்காலத் திருமண வாழ்க்கை பாதிக்கப் படுமோவென்று அவள் அஞ்சுவதை, ப்ரீத்தி புரிந்து கொண்டாள்.

ஒரு தைரியமான முறுவலுடன் அவளுடைய கைகளைப் பற்றியவள், "இனிமே இதை மறந்துடறேன்... ஓகேயா? அப்படியே அந்த ஆகாஷை பாக்கற சந்தர்ப்பம் வந்தாலும், நீ தான் என் கசின்னு மூச்சு விட மாட்டேன் போதுமா? அதுக்கு ஏண்டி இவ்வளவு பயப்படறே? முகத்தைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வச்சுகிட்டு, பிரபுவை நினைச்சி கொஞ்சமா வெட்கப்படு பார்ப்போம்" கேலி செய்து அவளைச் சீண்டினாள்.

பிறகுதான், அவளுடைய முகம் இயல்பு நிலைக்கே திரும்பியது. தொடர்ந்து வந்த நாட்களில் கல்யாண வேலைகள் இயல்பாக நடந்தன.

திருமண நாளும் வந்தது...

காலையில் கோவிலில் நடந்த திருமணத்தில், பெண் தோழியாக ப்ரீத்தி தான் ஷீலாவிற்குத் துணையிருந்தாள்.



மாலையில் வரவேற்பிலும், மேடையில் பரிசுப் பொருட்களை வாங்கி அடுக்கியபடி ஓரத்தில் நின்றிருந்தாள் அவள்.

மனதில் பெரும் நிம்மதியும், முகத்தில் புன்னகையுமாய் வலம் வந்து கொண்டிருந்தனர்... கௌசல்யாவும், ராமலிங்கமும்!

அந்தக் குடும்பத்தின் மகிழ்ச்சி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று ப்ரார்த்தனை செய்தபடி திரும்பியவளின் விழிகள், ஒரு கணம் இமைக்க முடியாமல் உறைய, கால்கள் பூமியில் புதைவது போல்!

ஒரு 'பொக்கே'யுடன், வாசல் ரிசப்ஷன் அருகே வந்து கொண்டிருந்தான் அந்த ஆகாஷ்!

மனம் பதைத்துப் போகத் திரும்பினால், ஷீலாவும் அவனை கவனித்து விட்டது, அவள் முகத்திலேயே தெரிந்தது.

முகம் ரத்தப் பசையின்றி வெளுத்துவிட, மிரட்சியுடன் நின்றிருந்தாள் அவள்.

அவளுடைய முகம், ப்ரீத்தியின் மனதில் பெரும் வேதனையை வரவழைப்பதாய்!

'இவன் எதற்கு இன்று வந்தான்... ஷீலாவுடைய நிம்மதியையும் சந்தோஷத்தையும் குலைப்பதற்கா?...' மனம் பெரும் உலைக் களமானது.

எப்படி இருந்தாலும், அவன் நல்லெண்ணத்துடன் இங்கு வருவது சாத்தியமில்லை என்பது புரிந்தது.

தன் எண்ணங்களிலிருந்து கலைந்து நிமிர்ந்தவள், மாப்பிள்ளை பிரபுவின் அப்பா அவனைக் கை குலுக்கி மகிழ்ச்சியுடன் வரவேற்பதைக் கண்டாள்.



உடனே பதறிப் போனவள், வேகமாக மேடையிலிருந்து இறங்கிச் சென்றாள்.

அவர்களருகில் வந்தவுடன், முகத்தில் ஒரு செயற்கையான புன்னகையைத் தேக்கியபடி அவனை வரவேற்ற போது, பிரபுவின் அப்பாவும் வியப்புடன் திரும்பினார்.

"உனக்கு மிஸ்டர் ஆகாஷைத் தெரியுமா ப்ரீத்தி?"

அவர் கேட்டபோது, "ஓ! தெரியும் அங்கிள்... நான் இவரை நல்லா கவனிச்சு அனுப்பறேன்... நீங்க மத்தவங்களைப் பாருங்க!" வறண்ட முறுவலுடன் அவரை அனுப்பினாள்.

"நல்லா கவனிச்சிக்கம்மா... மிஸ்டர் ஆகாஷ் ஒரு வி.ஐ.பி..! நம்ம குடும்பத்துக்கு ரொம்ப வேண்டப் பட்டவர்... அவரெல்லாம் நம்ம வீட்டுக் கல்யாணத்துக்கு வரது, நமக்குத்தான் பெருமை!" அவளிடம் அறிவுறுத்தி விட்டே அவர் அந்த இடத்தை விட்டு அகன்றார்.

விழிகளில் தீக்கனலும், அதற்குப் பொருந்தாமல் இதழ்களில் ஒட்டாத மென்னகையுடன் அவள் நிமிர்ந்த போது, அவன் விழிகளும் வைரங்களாய்ப் பளபளத்தன.

பார்வையில் விரோதத்துடனும், ஒருவிதத் தீவிரத் துடனும் அவளையே ஊடுருவினான் அவன்.

"இங்கே எதுக்கு வந்தீங்க? ஷீலாவோட வாழ்க்கையைப் பாழாக்கறதுக்கா? அவ நல்லா இருக்கறது உங்களுக்குப் பொறுக்கலையா?" ப்ரீத்தி தணிந்த குரலில் சீறினாள்.

அவன் சன்னமாக அதிர்வதும், கோபத்தில் விழியோரங்கள் சிவப்பதும், ஓரக் கண்களில் தெரிந்தன.

"ஏய்... என்ன உளர்றே...? வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்?... கல்யாணத்துக்கு வந்தவங்களை இப்படித்தான்

வரவேற்கறது உன் பழக்கமா?'' கடித்த பற்களிடையே அடிக் குரலில் சீறினாள்.

''ம்... ரிசப்ஷனுக்கு நல்ல எண்ணத்துடன் வாழ்த்த வந்திருந்தா வரவேற்கலாம்... கல்யாணப் பொண்ணோட நிம்மதியையும் சந்தோஷத்தையும் அழிக்க வந்தவங்களை இப்படித்தான் வரவேற்க முடியும்!''

''அப்படின்னு... உன்கிட்ட யார் சொன்னது?'' கூர்மையாகக் கேட்டான் அவன்.

''ம்... எனக்கும் புத்தியிருக்கு... நீங்க எதுக்கு வந்திருப்பீங்கன்னு எனக்குத் தெரியும்.''

வெளியே பார்ப்பதற்கு இயல்பாகப் பேசுவது போல் தெரியும்படி, இறுக்கப் பிடித்த இதழ்களில் ஒரு செயற்கை முறுவலுடனே சீறினாள்.

''சகிக்கலை... இந்த ஆர்ட்டிபிஷியல் சிரிப்பும்... அந்தப் பைத்தியக்காரத்தனமான நினைப்பும்...! ஆர் யு கிரேஸி?'' அவன் நக்கலாகக் கேட்டான்.

அந்தக் கேள்வியில் தன் ஐந்தரை அடி உயரத்திற்கும் நிமிர்ந்தவள், ''நோ! நீங்க ஷீலாவைப் பைத்தியமாக்கிடக் கூடாதுன்னுதான் இவ்வளவும்! அவ ரொம்பப் பாவம்... நீங்க அவளை ஏமாத்தினதே தப்பு! அதுக்கும் மேல இப்படி கல்யாணத்துக்கே வந்து குழப்பம் பண்ண நினைச்சா அப்புறம் நான் எப்படி மாறுவேன்னு எனக்கே தெரியாது! தான் புறக்கணிச்ச பெண்களோட திருமணத்துக்கு எல்லாம் வந்து வாழ்த்து சொல்றதுதான் உங்க பழக்கமா?'' அவளும் ஏளனமாகவே கேட்டாள்.

''ஏய்... என்ன உளர்றே...?'' முகத்தில் வெறுப்பும், கசப்பும் இணைந்து தெரிய இரைந்தான் அவன்.



ஆனால் மெதுவாக இரைந்தாலும் அவன் கோபம் கடும் புயலாய் வெளிப்பட்டு தீக்கங்குகளை விழியில் உமிழ்ந்தன.

''ம்... நான் உளறலை... நீங்க எதையும் உளறிட வேண்டாம்கறதுதான் என்னோட தாழ்மையான கோரிக்கை!''

சுழித்த உதடுகளுடன் அவள் அலட்சியமாகக் கூற, சட்டென்று அவனுடைய உடல் விறைத்துப் போனது.

''நீ வழிவிட்டா நான் பொக்கேயைக் குடுத்துட்டு போயிட்டிருந்திருப்பேன்... எனக்கு மாப்பிள்ளை பிரபு தான் ஃபேமிலி ஃப்ரெண்ட்! ஆனா இப்ப நீ சொன்ன வுடனேதான் தெரியுது... பொண்ணு இவதான்னு! அப்ப அந்த ஃப்ளாஷ் பேக்கை கட்டாயம் பிரபு கிட்டே சொல்லிட வேண்டியதுதான்...'' இறுகிய முகத்துடன் கூறினான்.

சட்டென்று அவள் மனம் குலுங்கியது... தன் செயல்களால், ஷீலாவின் வாழ்க்கை பாதித்து விடக் கூடாதென்ற பெரும் பதட்டம் வந்தது!

தணிந்த குரலில் ''சாரி சார்... ப்ளீஸ்... இது ஒரு பொண்ணோட வாழ்க்கை...'' அவள் பேசும்போதே பிரபுவின் தாய் வந்து விட்டார்.

''வாங்க தம்பி... வாங்க... அருந்ததியும் மனோஜும் எப்படி இருக்காங்க...'' ஒரு கவர்னரை வரவேற்பது போல், பரபரப்புடன் வரவேற்று அழைத்துச் சென்றார்.

தான் அவனை அளவுக்கதிகமாக வெறுப்பேற்றி விட்டோமோ... அதன் விளைவுகள் என்னாகுமோவென்ற பயத்துடனும் தவிப்புடனும், மெதுவாக மேடையருகில் சென்று நின்று கொண்டாள் ப்ரீத்தி.





இதயம் துள்ளும் மீனாய் படபடத்தது... விழிகள் அவனையே தொடர்ந்தன..!

பிரபுவின் தாய் அவனை மேடைக்கு அழைத்துச் சென்று, மகனுக்கும் மருமகளுக்கும் அறிமுகம் செய்தார்.

ஆகாஷ், பொக்கேயைக் கொடுத்துவிட்டு, பிரபுவின் காதருகில் குனிந்து ஏதோ ரகசியமாய் சொல்ல, அருகில் நின்றிருந்த ஷீலாவின் முகம் கசங்கிக் கறுப்பதை இங்கிருந்தே உணர்ந்து கொண்டாள் ப்ரீத்தி!

இதய ஓட்டம் சுரம் தப்ப, அவனையே மிரட்சியுடன் பார்த்தபடி உறைந்து நின்றிருந்தவளின் முன்னால் வந்து, திடீரென்று சொடக்குப் போட்டு அழைத்தான் அவன்.

''என்ன... அப்படியே ஃப்ரீஸ் ஆகி நின்னுட்டே! உன் ஃப்ரெண்டைப் பத்தி பிரபுகிட்டே எல்லாம் சொல்லியாச்சு... கிளைமண்ட் பண்ணினதுக்கு தேங்க்ஸ்'' அலட்சியமாகக் கூறிவிட்டு கீழே இறங்கிச் சென்றான்.

திக்கென்று அதிர்ந்தபடி திரும்பியவளின் பார்வை, அவசரமாக ஷீலாவை ஆராய்ந்தது.

அங்கு பிரபு, அவளிடம் குறும்புப் புன்னகையுடன் ஏதோ கூறுவது தெரிந்த பிறகுதான், இயல்பாகி இலகுவாக மூச்சு விடவே ஆரம்பித்தாள் அவள்.

பொய்க் கோபத்துடன் திரும்பியபோது, ஆகாஷும் அந்த நொடி யாருடனோ பேசியபடி அவளையே நோக்கிக் கொண்டிருந்தான்... அவன் புருவங்கள் ஒரு முறை ஏளனமாக உயர்ந்து தாழ்ந்தன.

மனம் குற்றக் குறுகுறுப்பில் படபடக்க, குனிந்து கொண்டாள் ப்ரீத்திகா.



பூகம்பத்தை ஆழ்கடலில் ஒளித்து வைத்தது போன்ற நடுக்கம் அவளிடம்!

பிறகு அவனுடன் பேசியவற்றை அசை போட்ட போது, தவறு செய்தவன் அவன்... நாம் ஏன் தலை குனிய வேண்டும் என்ற எண்ணம் உடனே வர, வீம்பாக நிமிர்ந்தாள்.

ஆனால் அவனை எங்குமே காணவில்லை... விழிகள் அவனைத் தேடி களைத்துத் திரும்ப, ஷீலா இப்போது இயல்பாகி பிரபுவிடம் பேசுவதைக் கண்டு உள்ளம் அமைதியடைந்தது.

எந்தவிதமான ப்ரச்னையும் இன்றி ரிசப்ஷன் முடிந்து விட, அப்போதுதான் அவளால் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது.

ஊழிக் காற்றாய் வந்து, தன்னுடைய நிம்மதியையும், ஷீலாவின் சந்தோஷத்தையும், சில நொடிகள் சிதற விட்டவனின் மீது கடும் வன்மமும், வெறுப்பும், வர எனக்கு மட்டும் உன்னைப் பழி வாங்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், அதை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வேன் என்று நெஞ்சம் குமுறியது.

## 6



மறு வாரமே, ஷீலா அமெரிக்காவிற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

இருவரும் தேனிலவிற்கென ஊட்டிக்குச் சென்றிருந்தனர்.

தேனிலவு முடிந்து வந்த பிறகு, ஒரு நாள் ப்ரீத்தியை அழைத்துப் பேசினான் அவன்.

இதயம் துள்ளும் மீனாய் படபடத்தது... விழிகள் அவனையே தொடர்ந்தன..!

பிரபுவின் தாய் அவனை மேடைக்கு அழைத்துச் சென்று, மணமக்களுக்கும் மருமகளுக்கும் அறிமுகம் செய்தார்.

ஆகாஷ், பொக்கேயைக் கொடுத்துவிட்டு, பிரபுவின் காதருகில் குனிந்து ஏதோ ரகசியமாய் சொல்ல, அருகில் நின்றிருந்த ஷீலாவின் முகம் கசங்கிக் கறுப்பதை இங்கிருந்தே உணர்ந்து கொண்டாள் ப்ரீத்தி!

இதய ஓட்டம் சரம் தப்ப, அவனையே மிரட்சியுடன் பார்த்தபடி உறைந்து நின்றிருந்தவளின் முன்னால் வந்து, திடீரென்று சொடக்குப் போட்டு அழைத்தான் அவன்.

"என்ன... அப்படியே ஃப்ரீஸ் ஆகி நின்னுட்டே! உன் ஃபிரண்டைப் பத்தி பிரபுகிட்டே எல்லாம் சொல்லியாச்சு... கிமைண்ட் பண்ணினதுக்கு தேங்க்ஸ்" அலட்சியமாகக் கூறிவிட்டு கீழே இறங்கிச் சென்றான்.

திக்கென்று அதிர்ந்தபடி திரும்பியவளின் பார்வை, அவசரமாக ஷீலாவை ஆராய்ந்தது.

அங்கு பிரபு, அவளிடம் குறும்புப் புன்னகையுடன் ஏதோ கூறுவது தெரிந்த பிறகுதான், இயல்பாகி இலகுவாக மூச்சு விடவே ஆரம்பித்தாள் அவள்.

பொய்க் கோபத்துடன் திரும்பியபோது, ஆகாஷும் அந்த நொடி யாருடனோ பேசியபடி அவளையே நோக்கிக் கொண்டிருந்தான்... அவன் புருவங்கள் ஒரு முறை ஏளனமாக உயர்ந்து தாழ்ந்தன.

மனம் குற்றக் குறுகுறுப்பில் படபடக்க, குனிந்து கொண்டாள் ப்ரீத்திகா.



பூகம்பத்தை ஆழ்கடலில் ஒளித்து வைத்தது போன்ற நடுக்கம் அவளிடம்!


பிறகு அவனுடன் பேசியவற்றை அசை போட்ட போது, தவறு செய்தவன் அவன்... நாம் ஏன் தலை குனிய வேண்டும் என்ற எண்ணம் உடனே வர, வீம்பாக நிமிர்ந்தாள்.

ஆனால் அவனை எங்குமே காணவில்லை... விழிகள் அவனைத் தேடி களைத்துத் திரும்ப, ஷீலா இப்போது இயல்பாகி பிரபுவிடம் பேசுவதைக் கண்டு உள்ளம் அமைதியடைந்தது.

எந்தவிதமான ப்ரச்னையும் இன்றி ரிசப்ஷன் முடிந்து விட, அப்போதுதான் அவளால் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது.

ஊழிக் காற்றாய் வந்து, தன்னுடைய நிம்மதியையும், ஷீலாவின் சந்தோஷத்தையும், சில நொடிகள் சிதற விட்டவனின் மீது கடும் வன்மமும், வெறுப்பும், வர எனக்கு மட்டும் உன்னைப் பழி வாங்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், அதை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வேன் என்று நெஞ்சம் குமுறியது.

## 6



மறு வாரமே, ஷீலா அமெரிக்காவிற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

இருவரும் தேனிலவிற்கென ஊட்டிக்குச் சென்றிருந்தனர்.

தேனிலவு முடிந்து வந்த பிறகு, ஒரு நாள் ப்ரீத்தியை அழைத்துப் பேசினாள் அவள்.



சங்கரின் பெற்றோர், நெஞ்சம் நெகிழ்ந்து கண்ணீருடனும், நன்றியுடனும் அவளைக் கையெடுத்துக் கும்பிட்டனர்.

மறு வாரமே, அந்தக் குழந்தைக்கான ஆபரேஷனுக்கு மருத்துவ மனையில் ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தனர்.

அப்படியும் சிகிச்சைக்குத் தேவையான பணத்தில் ஒரு லட்சம் போல் குறைவது தெரிந்தது.

அந்தக் குழந்தையை, தன் குழந்தையாக நினைத்து உதவியவர்களின் அன்பில் நனைந்து நெகிழ்ந்து போயிருந்தது, ப்ரீத்தியின் நெஞ்சம்!

பிறருக்காக உருகிக் கவலைப்பட்டு, அவர்களின் கஷ்டங்களைச் சுமந்து, வேதனைகளில் பங்கெடுத்து உதவ நினைக்கும் குணம், சிலருக்குத்தானே இருக்கிறது.

எத்தனை பேர் இப்படி இருக்கிறார்கள் என்று எண்ணும் போதே, இத்தனை நேசக் கரங்கள் நீட்டப்பட்டும், மேலும் பணம் தேவைப்படுவதால், என்ன செய்வதென்று ப்ரீத்தி யோசிக்க ஆரம்பித்தாள்.

அப்போதுதான் ஒரு யோசனை வந்தது அவளுக்கு...!

தனக்குள்ளேயே புன்னகைத்தவள், உடனே ஒரு கவர் ஸ்டோரியைத் தயார் செய்து, தங்கள் பத்திரிகையில் அடுத்த இஷ்யூவிலேயே வெளி வரும்படி செய்தாள்!

* * *

அன்று, அலுவலகத்தில் முக்கியமான ஒரு மீட்டிங்கில் இருந்தான் ஆகாஷ்.

அப்போது அவனுடைய செல்போன் விடாமல் அழைக்க, எரிச்சலும் அலட்சியமுமாய் பார்த்தால், ஏதோ புதிய எண்ணாக இருந்தது.



உடன செல்லை ஆஃப் செய்தவன், மீட்டிங் முடிந்து அதை 'ஆன்' செய்தபோது சிறிது நேரத்திலேயே மீண்டும் அழைப்பு வந்தது.

"ஹலோ... ஐ யம் ஆகாஷ் ஹியர்!" என்றவுடனே, ஒரு பெண் குரல் ஒலித்தது.

"ஹலோ சார்... நான் ரிப்போர்ட்டர் ப்ரீத்தி பேசறேன்... ஞாபகம் இருக்கா?" என்றது ஒரு குறும்புக் குரல்!

உடனே மனம் பழைய நினைவில் பாறையாக இறுகி விட, "ப்ச்... லுக் மிஸ் ப்ரீத்திகா... ஏன் என்னையே தூத்தறே...? உனக்கு வேற ஆள் யாருமே கிடைக்கலியா?... பணக்கார ஆண்களைச் சுத்தறதே, உங்களை மாதிரி ரிப்போர்ட்டர்ஸுக்கு வேலையா? எனக்கு இந்தப் பேட்டி.. பப்ளிசிட்டி எல்லாம் பிடிக்காதுன்னு முன்னாடியே சொல்லியிருக்கேன்... என்னைத் திரும்பித் திரும்பி தொந்தரவு செய்தா, அதோட பின் விளைவுகளை நீ சந்திக்க வேண்டியிருக்கும்... அண்டர்ஸ்டாண்ட்?" அடிக் குரலில் எச்சரித்தான்.

"சாரி சார்... நான் உங்க பேட்டிக்காக போன் பண்ணலை... இந்த வார விடியல் பத்திரிகை பாருங்க... இன்னும் கொஞ்ச நேரத்துல உங்க ஆபீஸுக்கே ஒரு பிரதி வரும்... பாத்துட்டு அப்புறம் சொல்லுங்க!"

"ஏய்... இந்த மாதிரி அடிக்கடி தொந்தரவு பண்ணினா, உடனே நான் பேட்டி குடுப்பேன்னு எண்ணமா... உன் மனசுல நீ என்னதான் நினைச்சிட்டிருக்கே!" கோபத்துடன் இரைந்தான்.

"நிச்சயமா உங்களை இல்லை சார்! மனித நேயத்தோட நீங்க செய்யப் போற ஒரு பெரிய உதவிக்கு நன்றி சொல்

வத்தான் போன் பண்ணினேன்... இந்த வார 'விடியல்'லே உங்களைப் பத்தி நான் எழுதியிருக்கிற ஒரு ஆர்ட்டிகிள், பிரமாதமா வந்திருக்கு... அதுவும் ஷீலாவோட கல் யாணத்துல நீங்க குடுத்திருந்த அந்த போஸ்லே, உங்க கலர்ஃபுல் போட்டோ அம்சமா இருக்கு... இந்த ப்ரீத்தியின் பேனாவோட பலத்தை, இன்னிக்கு எங்க பத்திரிகையைப் பாத்து தெரிஞ்சுக்கங்க... பை!" என்று வைத்தாள்.

ஒரு கணம் உறைந்து அமர்ந்திருந்தவனின் முகம் கடும் சீற்றமாகி, விழிகள் தீக்கங்குகளாய் பளபளத்தன.

உடனே தன் பி.ஏ.வை அழைத்து, போஸ்ட் ஏதாவது வந்திருக்கிறதா என்று கேட்டான்.

அப்போதுதான் வந்திருந்த தபால்களுடன் ப்யூன் வேலு உள்ளே வர, அவசரமாக அந்த இதழை வாங்கிப் பிரித்தான்.

அப்போதுதான் தெரிந்தது... அவனுடைய அனுமதியின் றியே அந்த ஏழைக் குழந்தையின் வைத்திய செலவுக்கு ரூபாய் ஒரு லட்சம் பணம் நன்கொடையை அவன் அளிப்பதாக அதில் எழுதியிருக்க, பக்கத்தில் இருந்தது அவனுடைய கலர் போட்டோ!

அவள் வெகு சாமர்த்தியமாகச் செயல்பட்டிருப்பதும், தன்னைத் திட்டம் போட்டு மாட்டி விட்டுப் பழி வாங்கி யிருப்பதையும் உணர்ந்தபோது, மனம் உலைக் களமாய்!

அப்போது, தொலைபேசி மீண்டும் ஒலிக்க ஆரம் பித்தது.

பெரும் கோபத்துடன் எடுத்தால், அவனுடைய அப்பா வின் பால்ய நண்பர், தொழிலதிபர் முருகேசன்தான் பேசினார்.



"ரொம்ப சந்தோஷம்ப்பா ஆகாஷ்! நீ செஞ்சிருக்கிற நல்ல காரியம் உங்க அப்பாவையும், அவரோட பெருந் தன்மையையும் அப்படியே எனக்கு நினைவு படுத்துது!... நானும் உன்னை என்னவோன்னு நினைச்சிட்டிருந் தேன்... நீ அவர் மகன்தான்றதை நிரூபிச்சிட்டேப்பா!" மனம் திறந்து பாராட்டிவிட்டு வைத்தார்.

சட்டென்று மனதில் மயிலிறகினால் யாரோ வருடுவது போல...!

தலையைக் கையில் தாங்கியபடி யோசனையுடன் அமர்ந்திருந்தபோது, அடுத்த கால் வந்தது.

"ஹலோ! நான் சைமன் பேசறேன் ஆகாஷ்... மே காட் ப்ளஸ் யூ மைல் சைல்ட்! இந்த வயசிலேயே உனக்கு வந்திருக்கிற மனித நேயமும், உதவி செய்யற குணமும் எனக்கு பிரமிப்பா இருக்கு... கீப் இட் அப் மை பாய்!" என்று வைத்தார்.

அதைத் தொடர்ந்து நிறைய அழைப்புகள்... அனைத் துமே அவனை மிகவும் பாராட்டின... வாழ்த்தின..! அவனை ஒரு ஹீரோவாய் உயர்த்தின.

ப்ரீத்தியின் மேல் எழுந்த கடும் சீற்றம், பெருமளவு குறைய அவை பெரிதும் காரணமாயிருந்தன.

அவள், தனக்கு ஏதோ ஒரு வகையில் பெரும் நன்மையே செய்திருப்பது ஆழ்மனதிற்கு புலப்பட்டாலும், அதை ஒத்துக் கொள்ளத்தான் அவனுக்கு மனம் வரவில்லை.

அவளுடைய துணிச்சலான அந்தச் செய்கை, அவ னுடைய மனதின் ஓரம் கூரிய முள்ளாய் உறுத்தி, அவனைப் புரட்டிப் போட்டதென்னவோ உண்மையாய்!



ஒரு பெண், தன்னைப் பழி வாங்குவது போல வலுக் கட்டாயமாக ஒரு கடமையில் தன்னை ஈடுபட வைத்து... தன் சுய விருப்பமின்றி ஒரு செயலைச் செய்யும்படி செய்து விட்டாளேவென்று, உள்ளம் கனன்றதில் கை முஷ்டிகள் இறுக்கத்துடன் இறுகின.

யாரோ வந்திருப்பதாக ப்யூன் வந்து கூற, அசுவாரசிய மாக உள்ளே வரச் சொன்னபோது, ஒரு ஆணும், பெண் ணும் உள்ளே வந்தனர்.

அவர்கள் யாரென்று யோசிக்கும்போதே, சற்று முன் அந்தப் பத்திரிகையில் இருவரின் புகைப்படத்தையும் பார்த்த நினைவு வந்தது அவனுக்கு!

வேகமாக அவனருகில் வந்த அந்தப் பெண், அவ னுடைய கால்களில் சட்டென்று விழுந்து விட்டாள்.

பதறி எழுந்தவனிடம் கை கூப்பியவள், "எங்க குழந்தைக்கு உயிரைக் குடுத்திருக்கீங்க.. இந்த சின்ன வயசுல உங்க பெரிய மனசு யாருக்கும் வராது... ரொம்ப நன்றிங்க. எங்க உயிர் இருக்கிற வரைக்கும் நாங்க உங்களை மறக்க மாட்டோம்... நீங்க எல்லா வளத் தோடயும் நல்லா இருக்கணும்" கண்ணீருடன் வாழ்த் தினாள்.

இதயத்திற்குள் சட்டென்று ஒரு பூ மலர்வது போல... இனம் புரியாத அமைதியும் நிம்மதியும் உள்ளே கை கோர்ப்பதாய்!

"ஐயா! நீங்க எவ்வளவு பெரிய காரியம் பண்ணியிருக் கீங்கன்னு உங்களுக்குத் தெரியுதோ என்னவோ... ஆனா இந்தத் தகப்பனோட மனசுக்கு நல்லாப் புரியுது... ஊரே உங்களைப் பாத்துப் பெருமைப்படுது... எங்க சந்ததிங்க



எல்லாம் உங்களை வாழ்த்தும்... உங்களுக்கு வாழ்க் கையில எந்தக் குறையும் வராது..." கண் கலங்க உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான் அந்த ஆண்!

மனதிற்குள் குற்றவுணர்ச்சி முள்ளாய் தைக்க, உடனே தன் செக் புக்கை எடுத்து ஒரு லட்ச ரூபாய் எழுதி, அவர்களிடம் கொடுத்தான் ஆகாஷ்.

அவர்கள் சென்ற பிறகு, உள்ளத்தில் ஏதோ ஒரு இனம் புரியாத நிறைவு சூழ்வதை புரிந்து கொள்ள முடிந்தது.

அவள், சுய விருப்பமின்றி அவனைப் பணம் கொடுக்கத் தூண்டியிருந்தாலும் அதன் பலன் எதிர் பாராததாய்... பெரிதும் நெகிழச் செய்வதாய்... மிகுந்த நன்மை நிறைந்த தாய்!

இதனால் அவள் மேல் எழுந்த கோபம் சிறிது குறைந் திருந்தாலும், மனதின் ஓரம் நீறு பூத்த நெருப்பாய் தகித்தது தான் நிஜம்!

அன்று முழுவதும் அவனுக்கு வந்த பாராட்டுக்களும் நன்றி நவிலலும், அவனைப் பெரிதும் நெகிழச் செய் திருந்தன.

அலுவலகத்திலும் அவனைப் பாராட்டி அன்று மாலை யில் ஊழியர்கள் சிறு தேநீர் விருந்து அளித்தபோது அவனுடைய கோபம் பாதியாகக் குறைந்து, நெஞ்சம் எடையற்று லேசானது.

கெடுதலிலும் ஒரு நன்மை என்பது போல, அவனை வெறுப்பேற்ற அவள் செய்த அந்தச் செயல் அவனுக்குப் பெரும் நன்மையையே அளித்திருப்பது புரிவதாய்!

வருமான வரிக் கழிவும் இருப்பதால், இதனால் தனக்கு பெரிய இழப்பும் ஏதுமில்லை என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான்.

அவன் இப்போது என்ன செய்து கொண்டிருப்பான்... கோபத்தின் உச்சியில் குதித்துக் கொண்டிருப்பானோ... தனக்குள் ரகசியமாகப் புன்னகைத்துக் கொண்டாள் அவள்.

அவன் கோபத்தை, நேரில் பார்த்து ரசிக்க வேண்டும் போல...!

"ஏய்... என்ன வேறு விதமாய் யோசிக்கிறாய்... இன்னும் நீ அவனை நிறைய வழிகளில் பழி வாங்க வேண்டும்" என்று செல்லமாய் தன்னையே கடித்து நினைவுறுத்திக் கொண்டது உள்ளுணர்வு!

பிறகு, நித்திரா தேவி மென்மையாக அவளை அணைத்துக் கொள்ள, தன்னை மறந்து உறங்க ஆரம்பித்தாள் அவள்.

* * *

அந்த வாரம் முழுவதும், மற்ற பத்திரிகைகள் எல்லாம் ஆகாஷைப் பலவிதமாகப் பாராட்டி எழுதின.

இப்போதெல்லாம் அலுவலகத்தில் அவனைச் சுற்றி பெரும் ஒளி வட்டம் சூழ்ந்திருப்பது போல் அனைவரும் ஒருவித மரியாதையுடன் நோக்கினர்.

ஒரு சிறு செயலுக்கு, மீடியாவினால் இவ்வளவு சக்தியா என்று முதன் முதலாக யோசிக்க ஆரம்பித்தது மனது.

அப்போதுதான் அவனுடைய செல்போன் கிணுகிணுத்தது.

"ஹலோ... ஆகாஷ் ஹியர்!" என்றபோது, "சார்... எப்படி இருக்கீங்க? இந்த வாரம் முழுக்க பாராட்டு மழையில நனைஞ்ச உங்களுக்கு கோல்ட் பிடிச்சிருக்குமே...



உங்களுக்குப் பின்னாடி ஒரு ஒளிவட்டம் தெரியற மாதிரி கூட ஒரு டிவைன் ஃபீலிங் வந்திருக்குமே... இதுக்கு காரணமான எனக்கு ஒரு 'தேங்க்ஸ்' கூடக் கிடையாதா?" அவனைச் சீண்டியது, ப்ரீத்தியின் குரல்.

அவனுள்ளே கனன்று கொண்டிருந்த சிறு தீத் துளியை விசிறிவிட, அது ஒன்றே போதுமானதாய்!

"புல் ஷிட்...!" என்றபடி போனை வைத்தான் அவன்.

மறு நிமிடமே, அவனுடைய அலுவலக போன் அழைத்தது.

எடுத்து காதில் வைத்ததுமே, அவளுடைய சிரிப்பு கிண்டலாகக் கசிந்தது.

"என்ன சார்... தேங்க்ஸ் கேட்டா என்னென்னவோ சொல்றீங்க! ஓ! தேங்க்ஸ்னா உங்க அகராதியில புல்ஷிட்டா? உங்க புத்திக்கேத்த மாதிரித்தானே பேச்சும் இருக்கும்கிறதை நான் மறந்திட்டேன்! இதையே நான் நன்றியா எடுத்துக்கறேன்... வெல்கம்..!" பட்டென்று ரிசீவரை வைத்து விட்டாள்.

அவமானத்தில் அவன் முகம் சிறுத்துப் போனது. எதிரிலிருந்த மேஜையை ஓங்கிக் குத்தி, தன் கோபத்தை வெளிப்படுத்தினான்.

* * *

மறு வாரத்தில் ஒரு நாள், ப்ரீத்தி தன் அலுவலக வேலையில் ஆழ்ந்திருந்தாள்.

நேற்று நடந்த ஒரு நிகழ்ச்சி அவள் மனதை மிகவும் பாதித்துவிட, அங்கு நேரிலேயே சென்று பேட்டி எடுத்து, அதைப் பற்றி கட்டுரை எழுத ஆரம்பித்திருந்தாள்.



நடந்து முடிந்த தேர்தலில் தன் கட்சி தோற்று விட்டது என்பதற்காக ஒருவர் அந்தக் கழகத்தின் அபிமானி, தீக்குளித்து உயிருக்குப் போராடி இறந்த செய்தி நெஞ்சை உலுக்கியது.

தலைவர்கள் யாரும் தொண்டர்களின் உயிரைக் கேட்கவில்லையே... அவர்களின் சேவையை... நற்பணிகளைத் தானே எதிர்பார்க்கிறார்கள். அது ஏன் தொண்டர்களுக்குப் புரியவில்லை. இதற்கான பின் விளைவுகள், தன் குடும்ப உறவுகளைத் தான் பாதிக்கும் என்று தெரிந்தும் எப்படி இப்படி ஒரு முடிவை அவரால் எடுக்க முடிந்ததென்ற வேதனைக் கேள்வி, ப்ரீத்திகாவிற்குள்!

அதிகப்படியான அன்பும், பற்றும், எதிர்மறை உணர்வுகளும் ஆக்கிரமிக்கும்போது, அது உயிரை விடுமளவுக்கு செல்கிறதென்பதை ஒரு வருத்தத்துடன் எழுதினாள்!

தன்னுடைய குடும்பம், குழந்தைகள், கடமை, பாசம் என்ற உணர்வுகள் சிறிதாவது தலை தூக்கியிருந்தால், அவர் தன் ஒப்பற்ற உயிரை மாய்த்துக் கொண்டிருக்க மாட்டாரோவென்ற தன் ஐயத்தை கேள்வியாக்கி, ஒரு ஆர்ட்டிகிள் எழுதிக் கொண்டிருந்தாள்.

மனதில் பெரும் பாரம் வந்திருந்தது.

நாம் வைக்கின்ற அதிகப்படியான பற்றும் பாசமும் வெறியாய் மாறி பல தவறான முடிவுகளுக்கு அடி கோலுகிறதென்பதை வருத்தத்துடன் உணர்ந்தது மனது!

அப்போது, அவளை எடிட்டர் அழைப்பதாக ப்யூன் வந்து கூறினான்.



அவருடைய அறைக்குச் சென்றாலோ, அங்கு அமர்க்களமாக ஆகாஷ் அமர்ந்திருந்தான்.

அவனைக் கண்டதும் காணாதது போல் எடிட்டரிடம் திரும்பியவள், "குட் மார்னிங் சார்... நீங்க கூப்பிட்டதா வேலு சொன்னாரு?" மெதுவாகக் கேட்டாள்.

"வாம்மா.. உக்காரு... இவரைத்தான் உனக்குத் தெரியுமே மிஸ்டர் ஆகாஷ்.. அவர் ஏதோ உன்னோட பேசணுமாம்... நான் இப்போ வந்திடறேன்..." என்றபடி அவசரமாக வெளியேறினார்.

அலட்சியமாகத் திரும்பியவளிடம், "அவுட்... கெட் அவுட் ஆஃப் திஸ் ப்ளேஸ்!... உடனே இந்த ஆஃபீஸை விட்டு நீ வெளியே போகணும்!... அதுதான் எனக்கு வேணும்..! பொய்யா ஒரு செய்தி போட்டு அதை உண்மையா மாத்துற ஒரு ரிப்போர்ட்டர், இந்தப் பத்திரிகைக்கு இனிமே வேண்டாம்!" கடித்த பற்களினூடே அடிக்குரலில் ரௌத்ரமாகச் சீறினான்.

"ஒரு நிமிஷம் சார்... அதை எங்க எடிட்டர் சொல்லணும்... நீங்க சொல்லி நான் கேக்க முடியாது!" சவாலாகவே கூறினாள் அவளும்!

"நீ எதுக்கும் துணிஞ்சவள்னு எனக்குத் தெரியும்... அதனாலதான் எல்லாத்தையும் சைலண்டா முடிச்சேன்..! உனக்கு இப்ப வேற வழியில்லை... இன்னிக்கு காலையிலேருந்து இந்தப் பத்திரிகைக்கு நான் தான் எடிட்டர்...! இப்ப உங்க எடிட்டர்... எடிட்டர் இன்சார்ஜ் தான்.... புரியுதா?" கை சொடுக்கிக் கேட்டான்.

சட்டென்று மனம் உலர்ந்து போனது... இதை சத்தியமாக அவள் எதிர்பார்த்திருக்கவில்லை!

"என்ன.. பதிலையே காணோம்..? கவலையா இருக்கா.. எதிர்காலத்தை நினைச்சா...? தூங்கிட்டிருந்த ஒரு மிருகத்தை எழுப்பி விட்டுட்டோமோன்னு பயம் வருதா? அதான்! எந்த ஒரு காரியத்தையும் பலமுறை யோசிச்சு தான் செய்யணும்... அதோட பின் விளைவுகள் சில சமயம் இப்படித்தான்... கொஞ்சம் நெகடிவ்வா கடுமையா இருக்கும்!" நக்கலாகச் சீண்டினான் அவன்.

அவன் மிருகம் என்றவுடனே, அவனைப் பற்றி ஒரு நாளிரவு தான் எண்ணியதை நினைத்து வறண்ட முறுவலுடன் திரும்பினாள் அவள்.

"சார்... தேங்க்யூ ஃபார் யுவர் அட்வைஸ்! ஆனா இந்த சென்னையிலே இருநூறு பத்திரிகை இருக்கு... எல்லாத்தையும் உங்களால விலைக்கு வாங்க முடியாது.." சுழித்த உதடுகளுடன் தெளிவாகவே கூறினாள்.

"ஏய்... இப்பவும் உனக்குத் திமிர் குறையவேயில்லை... இல்லை? ஆனா ஒரு சான்ஸ் தரேன்... என்கிட்ட சாரி கேளு... வேணா உன்னைத் திரும்பவும் வேலைக்கு சேர்த்துக்கறதைப் பத்தி யோசிக்கிறேன்..."

உள்ளம் உடனே நொந்த போதும், தன் முழு உயரத்துக்குமாக நிமிர்ந்தாள் அவள்.

"நோ...! நான் செஞ்ச காரியம் உங்களுக்கு கெடுதலா முடிஞ்சிருந்தா, ஒரு வேளை நான் சாரி கேட்டிருப்பேன்... என்னையறியாமலே நான் செஞ்ச காரியத்தாலே... என்னால உங்க புகழ் இன்னும் அதிகமாத்தான் ஆகியிருக்கு! அதுக்கு நீங்க செஞ்ச பதில் மரியாதை சூப்பர்ப்!

"ஆனா நீங்க ப்ளான் பண்ணி செஞ்ச இந்தக் காரியமும் ஒரு நன்மையா முடியும்னு எனக்குத் தோணுது... ஆனா



இந்த அளவு 'நேரோ மைண்டடா', சத்தியமா நான் உங்களை எதிர்பார்க்கலை சார்... குட் பை!... ஆனா உங்களை ரிப்போர்ட்டரா மீண்டும் சந்திப்பேன்..." கூறிவிட்டு விருட்டென்று வெளியேறினாள்.

கடும் சினமும், அவள் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கமுமாக, இறுகிப் போய் தொப்பென்று அமர்ந்தான் அவன்.

ப்ரீத்திகா, நேரே தன் அறைக்கு வந்தபோது, பழைய எடிட்டர் அங்கு அவளுக்காகக் காத்திருந்தார்.

"தப்பா நினைச்சிக்காதேம்மா... என்னால எதுவும் செய்ய முடியலை.. இப்ப அவருக்குதான் எல்லா விஷயத்திலயும் பவர்.. உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்.." தர்ம சங்கடத்துடன் கூறினார்.

"புரியுது சார்... எனிவே தேங்க் யூ ஃபார் எவ்ரி திங்..." என்றபடி தன் ஹேண்ட் பேகை எடுத்தபடி கிளம்பினாள் அவள்.

மனம், எதிர்காலத்தைப் பற்றிய எண்ணங்களில் குழம்பிய குட்டையாய், கலங்கியிருந்தது.

## 8



ஹாஸ்டலுக்கு, ஸ்கூட்டியில் போகும்போது, மனம் வாடியிருந்தது.

யாருக்காகவும் எதற்காகவும் பயப்படாதவள்... கவலைகளை துச்சமாகப் பந்தாடி தூரத்தில் நிறுத்தி வைத்திருப்பவள்... அவனுடைய வார்த்தை அம்புகளினால் பெரிதும் காயப்பட்டுப் போனாள்.



எதிரியின் எந்த வியூகத்தைத் தகர்த்தால், அவன் பலவீனமாவான் என்று புரிந்து தாக்குபவன் அவனென்பது புரிந்தது.

இல்லாவிட்டால், இந்தப் போட்டி யுகத்தில் இவ்வளவு பெரிய தொழிலதிபராக உயர்ந்து காலூன்றி அவனால் நிற்க முடிந்திராது என்று எண்ணும்போதே தன்னையறியாமல் தான் அவனை மெச்சுவதையும் உணர்ந்தாள் அவள்.

ஒரு வேகத்துடன் தலையைக் குலுக்கி அவன் நினைவுகளை விலக்கி நிறுத்தியவள், ஏனோ அறைக்கு வந்தும் அவனைப் பற்றியே யோசிக்க ஆரம்பித்தாள்.

மனதில், அவனுக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென்ற வேகம் வந்தது.

அன்று மதியம் அவனைப் பற்றி தான் எழுதிய செய்தியை திரும்ப எடுத்து வாசித்துப் பார்க்கும்போதே அலுப்பில் விழிகள் செருகின... அப்படியே சாய்ந்து உறங்க ஆரம்பித்தாள்.

அந்தப் புத்தகமும் அவளுடைய மார்பிலேயே தலை சாய்த்து... அவளின் மூச்சுக் காற்றிற்கேற்ப, ஒரு வித தாளலயத்துடன் மெலிதாய் அதிர்ந்தபடி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

கனவுகளில் அவன் வரவு தெரிய, அதிலும் அவனிடம் வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டியபோது, எதுவோ உசுப்பிக் கலைத்தது!

சட்டென்று விழித்தால், சகு அலுவலகத்திலிருந்து வந்து நைட்டிக்கு மாறிக் கொண்டிருந்தாள்.



"ஏய்... என்னடி கனவா? என்ன... ஆஃபீஸ் போகலை?" என்றபடி அருகில் வந்து அமர்ந்தாள்.

"ம்... வேலை போயிடுச்சி... அதான்!"

"என்னடி... அதை இவ்வளவு கூலா சொல்றே?" பதறிப் போய் கேட்டாள் அவள்.

"வருத்தப்பட்டு என்ன பண்றது? வேற பத்திரிகைக்கு அப்ளை பண்ண வேண்டியதுதான்..."

"திடீர்னு அப்படி என்ன ப்ரச்னை? இப்பதான் அந்த ஆகாஷைப் பேட்டி எடுத்து உங்க பத்திரிகைக்கு பெரிய பப்ளிசிட்டி வரவழைச்சி, அதோட சர்குலேஷனையே அதிகமாக்கினே! அந்த நன்றி கூட இல்லையா உங்க எடிட்டருக்கு?" கோபமாக வந்தது அவள் குரல்.

"ம்... இப்ப எடிட்டர் அவர் இல்லையே. மாறியாச்சு... அதான்.. ப்ச்."

"யாருடி உங்க புது எடிட்டர்?"

அவள் கேட்க, "மகா கனம் பொருந்திய... இல்லை.. மகா தலைக் கனம் படைத்த அந்த துர்வாச முனிவர் ஆகாஷ்தான்!"

"என்னது... நீ பேட்டி எடுத்து எழுதினியே... அந்த ஆகாஷா! அவர் ஏன் உன்னை... இப்பதான் கொஞ்சம் முன்னாடி நான் வேற மாதிரி நினைச்சேன்.." யோசனையும் குழப்புமாய் கூறினாள் சுகன்யா.

"வேற என்ன மாதிரி நினைச்சே... அந்த ஆகாஷ் பெரிய 'சாந்த ஸ்வரூபி'ன்னா?"

"இல்லை... நீ அவரை விரும்பறியோன்னு...?"

"சே... என்ன சொன்னே...? கிண்டலா உனக்கு? இந்த வருஷத்திலேயே பெஸ்ட் ஜோக் இதுதான்!" கூறிவிட்டு

கோவில் மணியாய் கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தாள் ப்ரீத்தி.

"ஏய்... சும்மா வெறுப்பேத்தாதே! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் நீ தூக்கத்திலேயே 'ஆகாஷ்'னு உளறினே."

"ஓ! தூக்கத்திலே உளறினா லவ்வா? கஷ்டம்டா சாமி! அதிலயும் விடாம ஃபைட் தான்! அவரை நான் விரும் பிட்டா, அப்புறம் பெரிய பிரளயமே வந்து இந்த உலகம் அழிஞ்சிடும் தெரியுமா?"

"ம்!.. பார்ப்போம்! எப்பவுமே அதிகப்படியான வெறுப்பு தான் அதிகமான அன்பா மாறிடும்... பீ கேர் ஃபுல்மா! அப்புறம் இன்னொரு விஷயம்... நான் வந்தப்ப, உன் நெஞ்சு மேல ஒரு புத்தகம் விரிச்சு கவிழ்ந்து இருந்தது... எடுத்துப் பார்த்தால் அதிலயும் அந்த ஆகாஷ்தான் சிரிச் சிட்டிருந்தாரு... அதான் ஒரு சந்தேகத்துல கேட்டேன்."

"ம்... படிச்சிட்டிருந்தப்ப அப்படியே தூங்கிட்டேன் சுரு. அதான்..! அதிலே நிறைய பேரோட படம் இருக் குமே... விட்டா எல்லாரையும் நான் விரும்பறேன்னு சொல்வே போலருக்கு!" ப்ரீத்தி அசுவாரசியமாகக் கூறினாள்.

"ம்.. ஆனா ஆகாஷ் ஒருத்தருக்குத்தானே, உன் படுக்கையிலயும் நெஞ்சத்துலயும் சேர்ந்து இடம் குடுத் திருக்கே!"

"சீ... ஏய்... ஏதாவது தத்துப் பித்துன்னு உளறாதேடி...! நானே பெரிய குழப்பத்தில இருக்கேன். இந்த நிமிஷம் இந்த உலகத்துலயே நீ வெறுக்கிற ஆளு யாருன்னு என்னை யாராவது கேட்டா, அது அந்த ஆகாஷ்தான்னு அடிச்சிச் சொல்லுவேன்... போதுமா?" சலித்தபடி எழுந்து முகம் கழுவச் சென்றாள் அவள்.

* * *



மறு வாரமே 'உதயம் வீக்லி'யில் ரிப்போர்ட்டர் பதவிக் கான ஒரு விளம்பரம் பத்திரிகையில் வந்திருந்தது.

அதைக் கண்டவுடன், மகிழ்ச்சியுடன் விண்ணப்பித் தாள் ப்ரீத்தி!

அன்று நேர்முகத் தேர்விற்கான இண்டர்வியூ!

அவளுக்குப் பிடித்த இளம் பிங்க் நிற சுடிதாரில், தேவதை யாய் அந்தப் பத்திரிகை வாசலில் ஸ்கூட்டியை நிறுத்தினாள்.

அதே நிமிடம், மாடியறையிலிருந்து வெளிஷியன் பிளைண்ட் ஸ்கீரீனை விலக்கிப் பார்த்த எடிட்டர் முரளிக்கோ பெரும் வியப்பு!

அவளது பேட்டிகளும், சுவாரசியமான ஆர்ட்டிகிள் களும், சமுதாய விழிப்புணர்வோடு அவள் எழுதும் கட்டுரைகள் அனைத்துமே, அவனை மிகவும் கவர்பவை!

இவள் இங்கு எதற்காக வருகிறாள் என்று யோசிக்கும் போதுதான், அன்று தான் நடத்த வேண்டிய ஒரு நேர்முகத் தேர்வு இன்னும் சிறிது நேரத்தில் தொடங்கப் போவது நினைவிற்கு வந்தது.

யோசனையுடன் இண்டர்வியூவை நடத்தியபோது, மூன்றாவது கேண்டிடேட்டாக அவள் உள்ளே நுழைய, அவ னால் ஒரு கணம் இமை தட்டி விழிக்க முடியாது போயிற்று.

அவனுடைய எல்லாக் கேள்விகளுக்கும் புத்திசாதுர் யத்துடனும், துணிச்சலாகவும் அவள் அளித்த பதில்கள், அவனை மிகவும் கவர்ந்தன.

பாரதியின் புதுமைப் பெண்ணை, சுட்டும் விழிச் சுடர் போன்ற விழிகளால் வெகுவாக நினைவு படுத்தினாள் அவள்.



அன்றே... நேரிலேயே அவளிடம் அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டரைத் தயார் செய்து அளித்து விட்டான் அவன்.

சிறிது நேரம் ரிசப்ஷனில் காத்திருந்தவள், உடனே வேலைக்கான உத்தரவு கிடைக்குமென்று சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

அதற்காக முரளியிடம் நன்றி தெரிவித்தபோது, "மிஸ் ப்ரீத்தியா... உங்களுக்கு 'விடியல்' பத்திரிகையிலே என்ன ப்ராப்ளம்னு எனக்குத் தெரியாது... ஆனா இங்கே உங் களுக்கு குடுத்த ஜாபை நீங்க நல்லா செய்வீங்கன்னு நான் எதிர்பார்க்கிறேன்" என்று சிறு முறுவலுடன் கை குலுக் கினான்.

"ஷ்யூர் சார்... ஐ வில் டூ மை பெஸ்ட்..." என்று கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் வெளியேறினாள் அவள்.

உடனே ஆகாஷிற்கு போன் செய்து கூற வேண்டும் போல்!

நேரே மாமாவின் வீட்டிற்குச் சென்று மாமியிடம் விபரத்தைக் கூறிவிட்டுக் கிளம்பினால், அவரோ சாப் பிட்டுவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கச் செய்து விட்டார்.

சாப்பிட்ட பிறகு, பேச்சு வீலாவைப் பற்றி செல்ல, அங்கிருந்து மதியத்திற்கு மேல்தான் கிளம்பினாள் ப்ரீத்தி.

* * *

ஹாஸ்டலுக்குச் சென்றபோது சுகன்யா அறையி லிருந்தாள்.

அவளைக் கண்டதும், "என்னடி... இந்த நேரத்தில் ஹாஸ்டல்லே இருக்கே: "சீக்கிரமே வந்துட்டியா?" ஆர்வத்துடன் விசாரித்தாள் ப்ரீத்தி.



"ம்... லேசா தலைவலி! அதான் மதியமே வந்து மாத்திரை போட்டுப் படுத்திட்டேன். இப்ப பரவாயில்லை..! ப்ரீத்தி.. நீ போன இண்டர்வியூ என்னாச்சு?"

"ம்.. செலக்ட் ஆயிட்டேன்.. உதயம் வீக்லியிலே! அடுத்த வாரம் ஜாயின் பண்ணணும்... இப்பதான் கொஞ்சம் ரிலீஃபா இருக்கு... உடனே அந்த ஆகாஷுக்கு போன் பண்ணி நீங்க வேலையை விட்டு எடுத்திட்டா எனக்கு வேற வேலையே கிடைக்காதுன்னு நினைச்சீங்களான்னு முகத்திலறைஞ்சாப் போல கேக்கணும்னு தோணிச்சு! ப்ச்... வேண்டாம்னு விட்டுட்டேன்."

"சரி விடு ப்ரீத்தி... அதான் வேற ஜாப் கிடைச் சிடுச்சே.. நீ ஃப்ரீதானே...? இன்னிக்கு ஏதாவது சினிமா வுக்குப் போகலாமா?" ஆர்வத்துடன் கேட்டாள் அவள்.

ப்ரீத்திக்கும் ரிலாக்ஸ்டாக எங்காவது சென்று வர வேண்டும் போலிருந்தது... உடனே சரியென்றாள்.

இருவரும் கிளம்பிச் சென்று முதல் வகுப்பில் டிக்கெட் எடுத்து அமர்ந்தனர்.

இடைவேளையில், பொழுது போகாமல் பாப்கார்ன் சாப்பிட்டபடி பார்வையைச் சுழற்றியவளுக்கு, பால்கனி யில் அமர்ந்திருந்த அந்த உருவம் பெரும் அதிர்ச்சியைத் தருவதாய்!

அங்கு, ஒரு பெண்ணுடன் பேசியபடி ஆகாஷ் அமர்ந்திருந்தான்.

இருபுறமும் இரு ஆண்கள் அமர்ந்திருக்க, அந்தப் பெண் நடுவில் இருந்தாள்.

அவள் ஏதோ சொல்ல, இரு ஆண்களும் ரசித்து சிரிப்பது கண்டு, ப்ரீத்தியின் மனம் காட்டுத் தீயாய் தகித்தது.

மலர்களைத் தேடும் வண்டாய் அவனைப் பற்றி ஒரு எண்ணம் தோன்ற, வெறுப்புடன் திரும்பிக் கொண்டாள் அவள்.

அவளுடைய முகத்திலிருந்தே மனதைப் படித்த சுகன்யா, "என்னடி.. அப்படி என்ன அருவெறுப்பான விஷயம் நடந்தது... இப்படி உன் முகம் மாறுது?" வியப்புடன் கேட்டாள்.

"ம்.. அந்த ஆகாஷ் தான்.. ப்ச்" எரிச்சலுடன் அவள் முணுமுணுத்தாள்.

"எப்பப் பாரு, உனக்கு அவர் நினைப்புத்தானா ப்ரீத்தி..?"

அவள் சுவாரசியமாகக் கேட்க, "இல்லைடி... அந்த பால்கனியிலே ஒரு பொண்ணோட உக்காந்திருக்காரு பாரேன்.. அதான்..." என்றாள் ப்ரீத்தி கோபக் குரலில்!

"ஓ... ஜெலஸா..! என்னம்மா... காதல் வந்துடுச்சா?"

"மண்ணாங்கட்டி..! அவரோட முகத் திரையைக் கிழிச்சு சுயரூபத்தை எல்லாருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டணும்கிற வேகம்தான் வந்திருக்கு! அந்த நடிகைக்கு அப்புறம் இந்தப் பொண்ணு போலருக்கு.." சினத்துடன் கூறியபடி திரும்பிக் கொண்டாள் அவள்.

ஏனோ ஷீலாவின் நினைவு உடனே மனதில் படர, கசப்பும் விதிர்ப்பும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

அவனுடைய காதலிகளின் பட்டியலில் இவள் எத்தனையாவது பெண்ணோவென்ற பரிதாபமும், ஷீலாவிற்குப் பிறகு வந்த வரிசையில் இவள் எப்போது அவனுடைய உண்மை உருவைப் புரிந்து கொள்ளப் போகிறாளோவென்ற பதைப்பும் ஆதங்கமும் எழுந்தன.



இப்படிப்பட்ட ஆண்களை நிற்க வைத்துச் சுட வேண்டும்... பெண்களை இவர்கள் என்ன போகப் பொருட்களாக எண்ணிக் கொள்கிறார்களாவென்ற அருவெறுப்பும் கூடவே வந்தது.

ஆகாஷின் மறுபக்கத்தை ஊரறியச் செய்ய வேண்டுமென்ற வெறி, இன்று அவளுக்குள் அதிகமாய்!

சினிமா முடிந்து வெளியே வந்து அவள் ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்யும்போதுதான், திடீரென்று யாரோ உற்றுப் பார்ப்பது போன்ற ஒரு உணர்வு, அவளைத் தீண்டியது.

சட்டென்று திரும்பினால், அருகில் நின்றிருந்த காரைத் திறந்து கொண்டிருந்த ஆகாஷின் விழிகள், அவளையே குத்தூசியாய் ஊடுருவின.

இனம் புரியாத ஒரு விதப் படபடப்புடன் திரும்பியவள், உடனே வண்டியிலமர்ந்து வேகமெடுத்தாள்.

மனம் எரியும் நெருப்பாய் தகித்தது... இன்னொரு ஆணிடம் பேசியபடி அவன் அருகில் நின்றிருந்த அந்தப் பெண்ணை நினைத்தால், பரிதாபமாக இருந்தது!

சுடரை சுற்றும் விட்டில் பூச்சியாய் அவள் நிலை ஆகப் போவதை எண்ணியபோது, விரக்தியில் உதடுகள் சுழித்தன.

பின் ஒரு காலத்தில் அவனுடைய பொய்களைப் புரிந்து கொள்ளும்போது, அந்தப் பெண்ணிற்கு எப்படியிருக்கும்?


ஒரு பாபிலோனியப் பழமொழிதான் அந்த நிமிஷம் நினைவிற்கு வந்தது.



**"பொய்மையில் வசிப்பவனை, உண்மை சொல்லும் போது கூட எவரும் நம்புவதில்லை... இதுவே அவன் பெறும் தண்டனை!"**

"இந்த வரிகள், உன் வாழ்க்கையிலும் ஒரு நாள் உண்மையாகும்... உன்னுடைய பொய் முகம் அன்று வெளியில் தெரிய வரும்!" ஆகாஷைப் பற்றி கோபமாக எண்ணியபடி ஹாஸ்டலுக்குச் சென்றாள் அவள்.

## 9



'உதயம்' பத்திரிகையில், அவளுக்குத் தரப்பட்ட அசைன்மெண்டுகள் எல்லாமே அவளுடைய திறமைக்கு சவாலாகவும், புத்துணர்ச்சி தருவதாகவும் அமைந்தன.

ஒரு குண்டு வெடிப்பு சம்பவத்தையே நேரில் கண்டு அதன் சேதத்தையும், சில மனிதர்களின் கொடூரமான வக்ரத் தனத்தினால் விளைந்த அந்தப் பரிதாபத்தையும், அவள் கவர் ஸ்டோரியாக எழுத, பாராட்டுக் கடிதங்கள் பத்திரிகைக்கு வந்து குவிந்திருந்தன.

அவளுடன் பணிபுரியும் போட்டோகிராபர் சேகரும், மனதை உலுக்கிப் போடும் அந்தக் காட்சிகளை தத்ரூபமாகப் படம் பிடித்திருந்தான்.

எடிட்டர் முரளி, இருவரையும் தனியே அழைத்து வெகுவாகப் பாராட்டினான்.

அப்போது, அவன் விழிகள் ப்ரீத்தியிடமே பதிந்து அவளுடைய திறமையையும், புத்திசாலித்தனத்தையும் அழகையும் மெச்சிக் கொண்டிருந்தன.



அந்த நிமிடம், இவள் மட்டும் தன் துணையாக வந்தால் எப்படியிருக்கும் என்ற உணர்வு அவனை ஆட்படுத்தி, மெய் சிலிர்க்க வைத்தது.

அவன் பார்வையில் தெரிந்த அதிகப் படியான சுவாரசியத்தை உணர்ந்தவுடனே, தர்ம சங்கடத்துடன் விடைபெற்று வெளியேறினாள் அவள்.

மறுநாளே பத்திரிகை அலுவலகத்திற்கு, அநாமதேய போன் கால் ஒன்று வந்தது. அன்று மதியம் நகரை விட்டுத் தள்ளியிருக்கின்ற ஒரு கடலோர பங்களாவில் ஒரு விருந்து நடக்கப் போவதாகவும், அதில் பல பணக்கார இளைஞர்களும், இளம் பெண்களும் கலந்து கொள்ளப் போவதாகவும், அது ஒரு புது விதக் கொண்டாட்டமாக இருக்குமென்றும் செய்தி வந்தது.

முரளியிடம் கூறிவிட்டு, சேகருடன் அந்த இடத்திற்கு சிறு ஹேண்டிகேமை எடுத்துக் கொண்டு சென்றபோது, மனமே கலங்கிப் போனது.

அவர்கள் செல்வதற்கு முன்பே, அங்கு காவல் துறையினர் வந்திருந்தனர்.

பெரிய பணக்கார இளைஞர்களும், பெண்களும் ஆட்டமும் பாட்டுமாய்... சிகரெட்டில் போதை மருந்தை அடைத்து புகைப்பதும், மதுபானங்கள் அருந்துவதும், ஊசிகள் போட்டுக் கொள்வதும் என ஒரு போதை சாம்ராஜ்யமே, அங்கு தாழ் திறந்தாற் போல்!

சேகர் எல்லாவற்றையும் படமெடுக்கும் போதே அனைவரையும் போதை தடுப்புச் சட்டத்தில் அவர்கள் கைது செய்ய, அவளுக்குத் தகவல் தந்தவர்கள்தான் காவல் துறைக்கும் உளவு கூறியிருக்க வேண்டுமென்பது புரிந்தது.

அங்கிருந்து ஏராளமான போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

பிறகு அவர்கள் இருவரும் தங்களுடைய ஐ.டி. கார்டுகளைக் காண்பித்துவிட்டு, அந்த நிகழ்வுகளைப் பற்றிய புகைப்படங்களும் குறிப்புகளும் எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

அவளுடைய துணிச்சலையும், தொழிலின் மீது அவள் கொண்டுள்ள பற்றையும் முரளி மிகவும் பாராட்டினான்.

அவனிடம் விடைபெற்று ஹாஸ்டலுக்கு வந்தபோது, இதயமே இரும்புக் குண்டை வைத்தாற் போல் கனத்தது.

நமது கலாசாரமும், நமக்கென்று இதுவரை வளர்த்து வந்த பாரம்பரியமும் எப்படி சீர் குலைந்ததென்ற கேள்வி புதிராய்!

இந்த மேல்நாட்டு மோகத்தில் நம் பண்பாடும் ஒழுக்கமும் தொலைந்து விடுமோவென்ற நினைவே, மனதிற்குள் தீயாய் தகிக்க, இதயம் உடைந்து சிதறி இருந்தது.

அந்த வாரக் கடைசியில் இருவருக்கும் ஒரு பைவ் ஸ்டார் ஓட்டலில் விருந்து கொடுப்பதாக முரளி கூறியிருந்தான்.

அவள் அந்த போதை விருந்தைப் பற்றியும், சீர் குலையும் நம் சமூகத்தின் கலாசாரத்தைப் பற்றியும் எழுதி இருந்த கட்டுரை, பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. சமூக அவலங்களையும், மாறி வரும் கலாச்சார சீர் கேட்டையும் துகிலுரித்திருந்தது.

* * *

அந்த ஞாயிறன்று, வெள்ளை நிற டிஷ்யூ சுடிதாரில் முத்து செட் அணிந்து ஒரு ஏஞ்சல் போல் விருந்துக்குச் செல்லத் தயாராகிக் காத்திருந்தாள் ப்ரீத்தி!



அவளைத் தேடி யாரோ காரில் வந்திருப்பதாகப் ப்யூன் வந்து கூறியதும், சுகன்யாவிடம் விடை பெற்று உடனே வெளியில் வந்தாள்.

அங்கு, காரில் அமர்ந்தபடி முரளியும் சேகரும் காத்திருந்தனர்.

"குட் ஈவினிங் சார்... ஹாய் சேகர்..." என்றபடி காரின் பின்புறக் கதவைத் திறந்தபோதுதான், பின் சீட்டில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைக் கண்டாள் அவள்.

தயக்கத்துடன் புன்னகைத்தபடி ஏறி அமர்ந்தபோது, "ஹாய் ப்ரீத்திகா... ஐ'ஆம் தீபா...! முரளியோட தங்கை! உங்களைப் பத்தி அண்ணா நிறைய சொல்லியிருக்காங்க..." அவள் உற்சாகத்துடன் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

"ஹலோ...! எப்படி இருக்கீங்க?" ப்ரீத்தி மென் குரலில் விசாரித்தாள்.

"ம்...ஃபைன்" என்று கூறிய தீபா கூறும்போதே, அவளை எங்கோ பார்த்த உணர்வு ப்ரீத்திக்குள் இழையோடியது.

எங்கே என்று ஆழ்மன வெளியில் தேடிய போதுதான், அன்று ஒரு நாள் சினிமா தியேட்டரில் ஆகாஷுடன் அவளைப் பார்த்ததும், அவளுக்காக தான் பரிதாபப் பட்டதும் ஞாபகம் வந்தன.

முரளியுடைய தங்கையா அந்தக் காமுகனின் அடுத்த இலக்கு என்று தோன்றும்போதே, மனம் சோர்ந்து போனது.

எவ்வளவு வெகுளியாக இருக்கிறாள் இவள்... ஆகாஷின் லீலைகளையும் காதலிகளையும் பற்றி இவ



ளிடம் எப்படி எடுத்துக் கூறிப் புரிய வைப்பது என்று யோசிக்கும்போதே, ஹோட்டல் வந்துவிட, அனைவரும் இறங்கினர்.

ஓட்டலுக்கு உள்ளே செல்லும்போதே அவள் கையைப் பிடித்து நிறுத்தினாள் தீபா.

"ப்ரீத்தி... நீங்க அழகா இருப்பீங்கன்னு அண்ணா சொன்னப்ப நான் இவ்வளவு அற்புதமான அழகோட ஒருத்தரை சத்தியமா எதிர்பார்க்கலை... அண்ணா ஏன் இப்படி தலைகுப்புற விழுந்தாருன்னும், உங்களைப் பத்தியே பேசிட்டிருக்காருன்னும், எனக்கு இப்பதான் புரியுது..." குறும்புடன் கூறினாள்.

சட்டென்று மறுத்தாள் ப்ரீத்தி.

"தேங்க்ஸ் அண்ட் சாரி மிஸ் தீபா..! நீங்க நினைக்கிற மாதிரி எங்களுக்குள்ளே எதுவுமே இல்லை.. அவர் எனக்கு பாஸ்... நான் அவரோட எம்ப்ளாயீ... அவ்வளவு தான்! எனக்கு இந்தக் காதல்... அது இதிலெல்லாம் சுத்தமா நம்பிக்கையில்லை... ஐ ஆம் சோ ரியலிஸ்டிக்..." என்றாள்.

பிறகு அன்றைய விருந்து மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமாக முடிய, ஹாஸ்டலுக்கு வந்து சேரும்போது, இரவு பத்து மணியாகி விட்டது.

வார்டனிடம் முன் அனுமதி பெற்றுச் சென்றிருந்ததால், வாட்ச் மேன் புன்னகையுடன் கதவைத் திறந்து விட, யோசனையுடன் அவர்களிடமிருந்து விடைபெற்று அறைக்கு வந்தாள் அவள்.

சுகன்யா அவளுக்காக உறங்காமல் விழித்தபடி காத்திருந்தாள்.



"ப்ரீத்தி... இன்னிக்கு பார்ட்டி எப்படி? சம்பளத்தில் ஏதாவது இன்க்ரிமெண்ட் உண்டா?" கண் சிமிட்டியபடி கேட்டாள்.

"அதெல்லாம் இல்லை... ஜஸ்ட் ஒரு தேங்க்ஸ் கிவிங் டின்னர்... அவ்வளவு தான்! ஆனா, இன்னிக்கு எங்க பாஸோட அவங்க தங்கையும் வந்திருந்தாங்க... அது யாருன்னு சொன்னா நீ அதிர்ச்சியாயிடுவே! அந்த ஆகாஷோட அன்னிக்கு தியேட்டர்லே நாம பார்த்தமே அந்தப் பொண்ணுதான் அவங்க... பேரு தீபா... வெரி நைஸ் கேர்ள்.. பட் அவங்களை நினைச்சாதான் பாவமா இருக்கு!" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

"ஏன்டி... அவங்ககிட்டே ஆகாஷைப் பத்தின உண்மைகளைச் சொல்லிட வேண்டியதுதானே?"

"அதெப்படி? அவங்களை இன்னிக்குத்தான் முதன் முதலாப் பாத்திருக்கேன்... அவங்க என் பாஸோட சிஸ்டர் வேற... சட்டுனு பேசிட முடியாதே..."

"ம்.. சீக்கிரம் சொல்லிடு... அப்புறம் வீணாவுக்கு நடந்த மாதிரி ஆனப்புறம் வருத்தப்பட்டுப் பிரயோஜனமில்லை..."

"ஓ.கே.. பாப்போம்! அடுத்த முறை அவங்களை தனிமையில சந்திக்கிற சந்தர்ப்பம் வந்தாப் பாப்போம்" என்று முடித்தாள் ப்ரீத்தி.

* * *

பிறகு வந்த நாட்கள்... வேலை அதிகமிருந்ததால் நிற்க நேரமின்றி விரைந்தன.

ஒரு நாள், தொழிலதிபர்களின் நேஷனல் கான்ஃபரன்ஸ் ஒன்றை கவரேஜ் செய்து ஆர்ட்டிகிள் எழுதுவதற்காக ப்ரீத்தியும் சேகரும் ஒரு ஹோட்டலுக்கு சென்றிருந்தனர்.

அந்த கான்ஃப்ரென்ஸிற்கு ஆகாஷும் வந்திருப்பதை உள்ளே நுழையும்போதே கண்டு கொண்டாள் அவள்.

ஏனோ, இதயத்தின் ஓரம் மெலிதான வெறுப்புச் சாரல்!

ஆகாஷின் பெயர் அழைக்கப்பட்டதும், அவன் மேடையேறிப் பேசியபோது, முதன் முதலாக அவளுக்குள் பெரும் பிரமிப்பும், வியப்பும் வந்தன.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலைமையையும், அதை முன்னேற்றுவதற்கு செய்ய வேண்டிய முயற்சிகளையும், அந்த முன்னேற்றப் பாதைகளுக்கான படிக்கட்டுகளாய் நாம் களைய வேண்டியவைகளையும், கடைப்பிடிக்க வேண்டியவற்றையும் தெளிவான சுருக்கமான நடையில் அவன் அழகாக நறுக்குத் தெறித்தாற் போல், அனாவசிய அலட்டலின்றி உரையாற்றி முடித்த போது, அரங்கு நிறைந்த கரகோஷம் எழுந்தது.

மற்ற விதத்தில் எப்படியிருந்தாலும் தொழிலைப் பொறுத்த வரையில் அவன் பெரும் திறமையுள்ளவனாகவும், அசைக்க முடியாதவனாகவும் இருப்பதை, அன்று தான் புரிந்து கொண்டாள் அவள்.

அவன் மேடையிலிருந்து இறங்கி வரும்போதே பலர் அவனைச் சூழ்ந்து கொண்டு பாராட்ட, ஒரு பெரிய தொழிலதிபரின் மகள் அவனை அணைத்து சட்டென்று உரிமையுடன் முத்தமிட்டு விட்டாள்.

உடனே விதிர்த்துப் போய் சர்வாங்கமும் பதறிப் போனது ப்ரீத்திக்கு!

சாதாரணமாகவே, பெண்கள் விஷயத்தில் ஆகாஷ் எப்படியென்று அவள் ஒரு கணிப்பு வைத்திருந்தாள்.



ஆனால், இன்று அவன் அந்தப் பெண்ணைப் பார்த்த விதமே வித்தியாசமாய்... ஆர்வமின்றி அவளிடமிருந்து வேகமாக விலகியவன், தன் இடத்தில் வந்து கம்பீரமாக அமர, இது கூட ஒரு வித விளம்பரத் தந்திரமேயென்று அவளுக்குத் தோன்றியது.

அவனைப் பற்றிய நினைவுகளைக் கலைத்து தோளைக் குலுக்கி நிமிர்ந்தபோது, அந்தக் கணம் அவன் விழிகளும் அவள் முகத்தில் நீங்காமல் கூர்மையாய்ப் பதிந்திருந்தன.

உணர்ச்சிகளைத் தொலைத்திருந்த அந்தப் பார்வை, இதயத்தில் சிலீரென்று ஊடுருவி, அந்த நிமிடம் பெரும் இறுக்கம் மிகுந்ததாய் மாற... அவள் விழியோரம் ஒரு புயலின் சீற்றம்!

மனக் கிணற்றில் அவன் பார்வையின் விளைவால், பல எண்ண ஊற்றுகள் திடீரென்று திறந்து கொண்டன.

பிறகு, அந்த கான்ஃபரன்ஸ் முடியும் வரை அவளுக்கு முள்ளின் மேல் நிற்பது போல் ஒரு உணர்வு!

பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று, எழுதி வந்த குறிப்புகளை விரிவாக்கம் செய்தபோது, ஏனோ ஆகாஷைப் பற்றி தவறாகவே அவளால் எழுத முடியவில்லை.

ஆழ்மனவெளியில், அவனுடைய பொருளில்லாப் பார்வையே ஏனோ மையம் கொள்வதாய்!


வானவில் வந்து சென்ற சில நிமிடங்களை, மறக்க முடியாத வானம் போலத் தத்தளித்துத் தவித்தது மனது!

ஜன்னல் வழியே வெளியே பார்த்தபோது பகல் பொழுதில் வெப்பத்தை உமிழ்ந்த சூரியன், இப்போது தன்னையே அமைதிப்படுத்திக் கொண்டு, இளஞ் சிவப்பு நிறத்திற்கு மாறி மறைந்து கொண்டிருந்தான்.



எவ்வளவு மாற்றம்...? வியப்புடன் எண்ணும்போதே, இன்று ஆகாஷிடம் தான் கண்ட மாற்றமும் மறக்க முடியாமல் நினைவிற்கு வந்தது.

10



நாட்கள் வாரங்களாகி விரைந்து செல்ல, ஷீலாவிடமிருந்து ஒரு நாள் போன் வந்தது.

தான் கருவுற்றிருப்பதாக அவள் மகிழ்ச்சியுடன் கூறியபோது, மனம் துள்ளியது. உற்சாகத்துடன் வாழ்த்தியவள், அவளைக் கவனமாக இருக்கும்படி அறிவுரை கூறியபிறகு பிரபுவையும் விசாரித்துவிட்டு வைத்தாள்!

அந்த மகிழ்ச்சியுடன் அலுவலகத்திற்குச் சென்றபோது, முரளி அவளை அழைப்பதாக ப்யூன் வந்து கூறினான்.

அவனுடைய அறைக் கதவை தட்டிவிட்டு உள்ளே சென்றால், அவன் மிகவும் சந்தோஷமாக இருப்பது தெரிந்தது.

"வாங்க ப்ரீத்திகா... உங்களைத்தான் எதிர்பார்த்துட்டிருந்தேன்... ஒரு குட் நியூஸ்... என்னோட கசின் ஆகாஷுக்கு இந்த வருஷத்து இளம் தொழிலதிபருக்கான அவார்ட் கிடைச்சிருக்கு... அவனைப் பேட்டி எடுத்து லைஃப் ஹிஸ்டரி எழுதறதுக்கு உங்களைத் தான் அனுப்பலாம்னு இருக்கேன்... அடுத்த திங்கட்கிழமை அன்னிக்கு அவனோட ஒர்க்கை... தினப்படி நடவடிக்கைகளை எல்லாம் நீங்க கவரேஜ் செய்யணும்... கூடவே சேகரையும் அழைச்சிக்கங்க... அன்னிக்கு முடிச்சாதான், நீங்க அடுத்த மாசம்



முதல் தேதியிலிருந்து கவர் ஸ்டோரி ஆரம்பிச்சிடலாம்..." ஆர்வத்துடன் கூறினான்.

மனதிற்குள் ஏதோ ஒன்று மெல்லச் சரிந்தது... கோப ஊற்றுகள் இயலாமையுடன் பீறிட்டன.

ஆனால் அதை மெல்ல மறைத்தபடி, "ஆகாஷ்... உங்களோட கஸினா?" ப்ரீத்தி வியப்பினால் விரிந்த விழிகளுடன் கேட்டாள்.

"ஏன்... உனக்கு அவனைத் தெரியுமா? ஓ... சென்னைல நடந்த பிசினஸ் மீட்லே அவனைப் பார்த்திருப்பே இல்லை? அவன் என்னோட அத்தை பையன்தான்! அவ்வளவு சீக்கிரத்திலே யாருக்கும் பேட்டி குடுக்க மாட்டான்... நான் கொஞ்சம் ப்ரஷரைஸ் பண்ணினதாலே ஒத்துக்கிட்டான்... நீதான் இதைச் செய்யணும்கிறது என் விருப்பம்... இது நமக்கு ஒரு பெஸ்ட் ஆப்பர்சூனிட்டி!"

திடீரென்று, வார்த்தைகளில் மரியாதை பன்மை தொலைந்து அவன் ஒருமைக்கு மாறியதை, மனம் யோசனையுடன் குறித்துக் கொண்டது.

"ஒரு நிமிஷம் சார்... அவரோட பத்திரிகை 'விடியல்' இருக்கே..! அதில வராம நம்ம மேகசினுக்கு பேட்டி குடுக்க அவர் எப்படி சம்மதிச்சார்?" யோசனையுடன் கேட்டாள் அவள்.

"ஓ! உனக்குத் தெரியாதா! அந்தப் பத்திரிகை இப்ப கை மாறிடுச்சே... அவனோட ஃபிரண்ட் ஒருத்தர் அதை வாங்கிட்டதாக் கேள்வி! அவனுக்கு இருக்கற கமிட்மெண்ட்டுல பத்திரிகை நடத்துறதெல்லாம் முடியாத காரியம்! ஒரு பெரிய சாஃப்ட்வேர் கம்பெனி... பைவ் ஸ்டார் ஹோட்டல்... கிரானைட் எக்ஸ்போர்ட் பிசினஸ்...

சிட்டியிலேயே பெரிய டெக்ஸ்டைல் ஷாப்... நிறைய பிராஞ்சஸ் இருக்கிற டிபார்ட்மெண்டல் ஸ்டோர்... இதை எல்லாம் நிர்வகிக்கவே அவனுக்கு 24 மணி நேரமும் பத்தாதே!" பெருமையுடன் கூறினான்.

"ஓ..!" தணிந்த குரலில் கூறியவளுக்குள் இவ்வளவு பணம் இருக்கின்ற திமிர்தான், பெண்களைத் துச்சமாக நினைத்து தவறு செய்யத் தூண்டுகிறதோவென்ற வெறுப்பும் ஆயாச்சியும்!

"என்ன... அப்படியே ஃப்ரீஸ் ஆகிட்டே... இவ்வளவு பணமான்னு பிரமிப்பா இருக்கா?"

"ப்ச்... அதெல்லாம் ஒண்ணுமில்லை சார்! பிறக்கும் போதே நாம என்ன பணத்தோடவா பிறக்கறோம்? ஆதாம் ஏவாள் காலத்துல பணம்ன்னு ஒண்ணு கிடையவே கிடையாதே... ஆனா அவங்க சந்தோஷமாத்தானே இருந்திருக்காங்க...

"பணம்கிறது மனுஷன் உண்டாக்கின ஒரு வசதி வாய்ப்பு கவசம்... எல்லாத்தையும் விலைக்கு வாங்கற ஒரு செளகர்யமான ஆயுதம்!

"என்னிக்குமே, பணம் எனக்குள்ளே பெரிசா எந்தவித பிரமிப்பையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தினதில்லை... தேவைக்கு அதிகமான பணம், மனுஷனைத் தனக்கு அடிமையாக்கிடும்கிறது என்னோட தாழ்மையான அபிப்ராயம் சார்..."

"ஓ... நீ என்ன... ஒரு சோஷலிஸ்டா?"

"அப்படி இல்லை..! ஒருத்தர் கிட்டயே இருக்கிற கோடிக்கணக்கான பணம் கொஞ்சமாவது பல ஏழைகளுக்கு போய்ச் சேர்ந்தா நல்லாருக்கும்ன்னு தோணும்..."



"இப்போ அப்படித் தோணும்... பணம் சேரச்சேர இன்னும் சேர்க்கணும்கிற வெறிதான் அதிகமாகும்..! ஆனா... உனக்காக... நான் எல்லாத்தையும் அனாதை ஆசிரமத்துக்கு குடுத்துட்டு நிக்கணும்னு எதிர்பார்க்காதேம்மா தாயே!..."

சிறு கேலியும் பெரும் எதிர்பார்ப்புமாய் அவன் கூற, உடனே விதிர்த்துப் போனாள் அவள்.

அவனுடைய பேச்சின் பொருளால், தடதடக்கும் ரயிலோசையாய் மனம் படபடத்தது.

உடனே பேச்சை மாற்றி, "சார் ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... எனக்கு பதிலா நீங்க... வேற யாரையாவது அனுப்பக் கூடாதா? நான் இந்தப் பத்திரிகைக்கு புதுசாச்சே?" தயங்கியபடி கேட்டாள்.

"ஊ ஹூம்... இந்தப் பேட்டியை நீதான் எடுக்கறே...! இது உனக்கு பெரிய திருப்பு முனையா அமையும்... ஒரு வித்தியாசமான அனுபவமாவும் இருக்கும்" முடிவாக கூறினான்.

"சரி சார், நான் கிளம்பறேன்... ஒரு இன்டர்வியூவுக்குப் போகணும்..." தர்ம சங்கடத்துடன் எழுந்தாள் அவள்.

"ஏன் ப்ரீதி... என்னைப் பார்த்தாலே ஓடறே...? நான் என்ன பேயா... பிசாசா... ம்..." முரளி கிண்டலாகக் கேட்டான்.

பதிலேதும் கூறாமல் "நான் வரேன் சார்!" என்றபடி வேகமாக வெளியேறினாள்.

அவளையே ஒருவிதக் கிளர்ச்சியுடன் தொடர்ந்தன, அவன் விழிகள்!

* * *



அந்த முதியோர் காப்பகத்திற்கு இன்டர்வியூவிற்காக ப்ரீத்திகா சென்றபோது, மனம் முழுவதும் வேதனைத் துளிகள் ஜனித்தன.

அவள் பத்திரிகையிலிருந்து வந்திருப்பதாகக் கூறியதும், பலர் பதட்டத்துடன் விலகிச் சென்றனர்.

ஒரு மூதாட்டி மட்டும், வேதனையையும், அலைப்புறுதலையும் சுமந்த விழிகளுடன் அவளிடம் பேச ஒப்புக்கொண்டார்.

நடுங்கிய குரலில் அவர் கூறிய விஷயங்கள், இதயத்தில் பலமாக விழுந்து அவளைப் பெரிதும் அதிரச் செய்தன.

வேறு ஒரு பெரிய காப்பகத்தில் எல்லா வசதிகளும் இருப்பதாகக் கூறி முன்பு சேர்க்கப் பட்டவர்கள்தான், அவர்கள் அனைவரும்!

ஆனால் அங்கு எதுவுமே சரியில்லை... நாள் முழுவதும் இருட்டு அறை வாசம்... பசி, பட்டினி!

எல்லாவற்றையும் விடப் பெரிய கொடுமையாய்... அங்கிருக்கும் சூப்பர்வைசரும் சமையல்காரரும், அங்கே இருக்கின்ற தாய் வயதுப் பெண்களை தவறான எண்ணத்துடன் அணுக, தாங்க முடியாத மன உளைச்சலில் பாதிக்கப்பட்டவர் பலர்!

இவற்றை எல்லாம், ஒரு பெண்மணி மட்டும் தைரியத்துடன் வெளியில் சொல்ல, மாதர் மன்றம், மகளிர் ஆணையம் மூலமாக அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

விடுதி உரிமையாளர்கள், சூப்பர்வைசர், சமையல்காரர், மேலெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, விசாரணை நடந்து வருவதாகத் தெரிந்தது.



தற்போது, அங்கிருந்த முதியோர்களை இந்தக் காப்பகத்தில் வைத்துப் பராமரித்து வருகிறார்கள் என்று அவர் கூறவும், இதயம் காயப்பட்டுப் போனதில் அவளுடைய இமைகள் நனைந்தன.

மனித மன வக்ரங்களும்... பெண்களை ஒரு போகப் பொருளாக மட்டுமே பார்க்கின்ற இந்த சமூகமும், என்று மாறப் போகிறதென்ற ஆதங்கம், ஒரு ஏக்கப் பெருமூச்சாய் வெளி வந்தது.

அந்தத் தாயின் கண்ணீர் சுமந்த வேதனை முகம், மனம் முழுவதையும் மனித நேயத்தையும், பரிதவிப்பையும் ஈரமாய் பரவச் செய்தன.

அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றிவிட்டு, முக்கியமான குறிப்புகளுடன் மீண்டும் அலுவலகம் வந்தாள் ப்ரீத்திகா!

மனம் கனத்துப் போய் நெகிழ்ந்திருந்தது. சில மனிதர்கள் அரக்கர்களாய்... காமக் கசடர்களாய் மாறி விட்டிருப்பது புரிந்து நெஞ்சுக்குள் அணையாத தீ ஒன்று கொழுந்து விட்டு எரிவதாய்!

"நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்...?" பாரதியின் வரிகள் தாம் நினைவிற்கு வந்தன.

மனதிலிருந்த வேதனைகள்... குமுறல்கள் எல்லாவற்றையும் அப்படியே கொட்டி ஒரு ஆர்ட்டிகிள் எழுதி உடனே எடிட்டருக்கு அனுப்பினாள் அவள்.

மனம் எரிமலையின் சீற்றத்துடன் கனன்று கொண்டிருந்தது.

பிறகு ஹாஸ்டலுக்குச் சென்று எல்லாவற்றையும் சுகன்யாவிடம் பகிர்ந்து கொண்டபோது மனம் சற்று அமைதியானது.

* * *

அன்றிரவு, உறக்கம் வராமல் யோசித்த நிமிடங்களில் ஆகாஷ் அவளை வெகுவாக ஆக்கிரமித்துக் கொண்டான்.

அவனுடன் கழிக்கப் போகின்ற அந்த ஒரு நாள், எப்படி இருக்குமோவென்ற சஞ்சலமும், பயமும் வேகமாய் படர்ந்தன.

"இது என்னுடைய வேலை... அதை செவ்வனே செய்து முடிப்பது என் கடமை.. அவனால் என்னை என்ன செய்து விட முடியும்' என்ற எண்ணம் மற்றதை மறக்கச் செய்ய, 'மனதில் உறுதி வேண்டும்' என்ற பாரதியாரின் வரிகள் தான் உடனே நினைவிற்கு வந்தன.

அப்படியே கண்ணயர்ந்து கனவுகளுக்குள் நுழைந்தாள் அவள்.

அந்த வார இறுதியில், அவளையும் சேகரையும் அழைத்தான் முரளி.


"என்ன.. நான் சொன்ன மாதிரி நீங்க ரெண்டு பேரும் ரெடியா? திங்கட்கிழமை காலையில அஞ்சரை மணிக் கெல்லாம் நீங்க ஆகாஷ் வீட்டில இருக்கணும்... நைட் ஒன்பது மணிக்கு திரும்பிடலாம்.. நம்ம ஆபீஸ் காரோட டிரைவரும் உங்க கூட வருவாரு... ஆகாஷை உன்னிப்பா கவனிங்க... அவனோட வெற்றிக்குக் காரணம்... இடை விடாத உழைப்பும் தன்னம்பிக்கையும்தான்கிற உண் மையை நீங்க எழுதணும்! அவன் பயங்கரமான வொர்க்க ஹாலிக்! நீங்க பார்க்கத்தானே போறீங்க...!" என்றான் பெருமையுடன்!

"ஓ.கே. சார்! நாங்க அஞ்சு மணிக்கே கிளம்பிப் போயிடறோம்..." என்றாள் ப்ரீத்தி.



இந்த சந்திப்பின் மூலம், அவனுடைய புதிய பரிமாணத்தை தான் அறிந்து கொள்ளப் போவதை அவள் இன்று அறியவில்லை.

## 11



திங்களன்று அதிகாலையில், நான்கு மணிக்கே எழுந்து தலை குளித்துவிட்டு பால்கனியில் நின்று அவள் கூந்தலை உலர வைத்தபோது, எங்கிருந்தோ ஒலித்த ஒரு செம்போத்துப் பறவையின் இனிய ஒலி, அவள் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பதாய்!

அந்த ஒலியில் ஏதோ ஒரு இனம் புரியாத சோகம்.. தன் இணையைப் பிரிந்த ஏக்கம் தொக்கி நிற்பது போல்!

பிரிந்தும் பிரியாத அந்த வைகறை இருளில், அந்த முகம் காட்டாப் பறவையின் முகவரி தேடி விழிகள் அலைந்தன.

பறவைகளின் வாழ்வியலையும், அவற்றின் பாதச் சுவடுகளையும் பற்றித் தான் ஒரு காலத்தில் படிக்க விரும்பியது நினைவிற்கு வருவதாய்!

மெதுவாக உள்ளே வந்து உடைமாற்றித் தயாரானாள் அவள்.

காலை ஐந்து மணிக்கே, சேகர் ஹாஸ்டலுக்கு வந்து விட்டான். இருவரும் அலுவலகக் காரில் சென்று இறங்கியபோது, ஆகாஷின் பங்களா ஒரு அரண்மனையைப் போல் பிரம்மாண்டமாக இருந்தது.



வாசலிலிருந்த செக்யூரிட்டி, அவர்களுடைய ஐடென்டிடி கார்டுகளை முதலில் பரிசோதித்தான்.

பிறகு உள்ளே இண்டர்காம் அடித்து, ஆகாஷின் மேனேஜரிடம் அவர்களை அனுப்பலாமாவென்று தகவல் கேட்டான்.

அவனுடைய முதலாளியின் உத்தரவின் பேரில், இருவரும் உள்ளே அனுப்பப்பட்டனர்.

அந்த வீட்டைப் பார்த்து வியந்தபடியே, அவளுடன் இணைந்து நடந்தான் சேகர்.

ஆகாஷின் செக்ரட்டரி சுகுமார், அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான்.

வீட்டின் மேல்தளத்திற்கு லிஃப்டில் பயணித்தபோது, ஆகாஷைப் பற்றி எதுவுமே தெரியாததால், இந்த வீட்டில் யார் யார் இருப்பார்களோவென்ற யோசனையுடனே சென்றாள் ப்ரீத்தி.

முதலில், சுகுமார் அவர்களை ஒரு பெரிய 'ஜிம்'மிற்குள் அழைத்துச் சென்றான்.

அங்கு சென்ற சிறிது நேரத்திற்குள்ளாகவே, ட்ராக் சூட் அணிந்து கம்பீரமாக உள்ளே நுழைந்தான் ஆகாஷ்.

அவர்களைக் கண்டதும் வரவேற்கும் விதமாகப் புன்னகைத்து ஒரு புருவ ஏற்றத்துடன் தலையசைத்தவனின் பார்வை அவள் மீது ஒரு கணம் அதிகமாகவே பதிந்து விலகியது.

ஏனோ அவனுடைய பார்வையில் சிறு குறும்பும், ஏளனமும் கலந்திருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

அருகில் வந்தவுடன், "ஹாய்..." என்றபடி இருவரிடமும் கை குலுக்கினான்.



பிறகு தன்னுடைய இயல்பான வேக நடையுடன் சென்று எக்ஸர்சைஸ் செய்ய ஆரம்பித்தான் அவன்.

கேமிராவைத் தயார் நிலையில் வைத்தபடி சேகர் நின்றிருக்க, ஆகாஷுடைய காலை ரொட்டீனைப் பற்றி, சுகுமாரிடம் கேட்டறிந்து குறிப்புகளை எடுக்க ஆரம்பித்தாள் ப்ரீத்தி!

ஆறு மணிக்கு ஜிம்மில் காலைப் பயிற்சிகளை செய்வதிலிருந்து, அவனுடைய நாள் இனிதாக ஆரம்பிக்கும் என்பதை அவன் விவரித்தான்.

அவன், எதிலுமே நேரந் தவறாமையை எதிர்பார்ப்பவனென்றும், ஒழுக்கமும் நேர்மையும் அவனுடைய இரு கண்களென்றும் அவன் கூறியதை நம்பாமலே எழுதி முடித்து நிமிர்ந்தால், கருமமே கண்ணாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தான் ஆகாஷ்!

அவனுடைய திரண்ட தோள்களும், வலிமையுடன் இறுகிய தசைகளுடன் தெரிந்த உடலும் அவளுக்குள் சிறு சலனத்தை ஏற்படுத்த, உடனே திரும்பிக் கொண்டாள் அவள்.

சுகுமாரின் குரல் அவளைக் கலைத்தது.

"சரி மேடம்... சார் வாங்க.. காபி ரெடியா இருக்கு... சார் குளிச்சுட்டு எட்டு மணிக்கு தயாராகி வந்திடுவாங்க... அப்புறமா டிபன் சாப்பிடலாம்" என்றபடி அழைத்துச் சென்றான்.

அப்போது அவனிடம், ஆகாஷின் இளமைப் பருவம், தாய் தந்தையர், சகோதரி, அவன் படித்த பள்ளி, படிப்பு போன்ற எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள் அவள்.

பள்ளிப் பருவத்திலேயே அவன் தன் தாயை இழந்து தந்தையாலும் சகோதரியாலும் வளர்க்கப்பட்டவன் என்ற உண்மையை உணர்ந்தபோது, ஒரு தாயின் வளர்ப்பில்லாமல் போனதுதான் பெண்களை மதிக்காத அவனுடைய நடத்தைக்குக் காரணமோவென்றும் அவளுள் கேள்வி எழுந்தது.

இருவரும் காபி குடித்து முடித்தவுடன், அவர்களுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பிக்கும்படி ஒரு வேலையாளிடம் கூறிவிட்டு, ஆகாஷின் தேவைகளைக் கவனிக்கச் சென்றான் சுகுமார்.

* * *

அந்த வீடு ஒரு இளவரசனின் அரண்மனையைப் போலிருந்தது.. விருந்தினருக்கென்றே ஒரு தனி 'விங்'கும், அதில் பல அறைகளும் இருந்தன.

பின்புறம் நீச்சல் குளமும், ஒரு டென்னிஸ் கோர்ட்டும் அழகுறத் தெரிந்தன.

முன்புறத்தில் பெரிய தோட்டமும், சிறு செயற்கை நீர் வீழ்ச்சியும் ரசனையுடன் அமைக்கப்பட்டிருந்தன.

இவன் இவ்வளவு ரசனையுள்ளவனா என்று வியந்தாள் அவள்.

உடனே உதடுகள் சுழித்தன..! 'எல்லாப் பொறுப்புகளையும் ஒரு பெரிய ஆர்க்கிடெக்டிடம் ஒப்படைத்திருப்பான்... அவருடைய திட்டப்படி எல்லாம் அமைக்கப்பட்டிருக்கும்... பணமிருந்தால் எல்லாவற்றையும் செய்து கொள்ளலாமே" எளனத்துடன் எண்ணினாள்.

சரியாக எட்டு மணிக்குத் தயாராகிச் சாப்பிட வந்து விட்டான் ஆகாஷ்.



அவனுடன் அமர்ந்து காலை டிபன் சாப்பிட்டபோது தான், அவன் அதிகம் பேசாதவனென்பதும், எதிலும் பெரும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவனென்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

சாப்பிட்டு முடித்த பிறகு அவர்களிடம் திரும்பியவன், "முதல்லே நம்ம கிரானைட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் கம்பெனிக்குப் போகலாம்... காலையில அங்க ஒரு மீட்டிங் இருக்கு..." என்றபடி சுகுமாரிடம் திரும்பினான்.

"சுகுமார்! இன்னிக்கு என்னோட என்கேஜ்மெண்ட்ஸை ஒரு தடவை லிஸ்ட் அவுட் பண்ணுங்க.." தீவிரமான தொனியில் கேட்டான்.

"சார்... பத்து மணிக்கு மீட்டிங்... அப்புறம் அங்கேயிருந்து சாஃப்ட்வேர் கம்பெனிக்குப் போறோம்.. அங்கே ஒரு இண்டர்வியூ இருக்கு.. ஹெச் ஆர் டிபார்ட்மெண்ட் எல்லாமே பாத்துகிட்டா கூட நீங்க தான் பைனலா முடிவு பண்ணனும்... மதியம் லஞ்ச் நம்ம ஹோட்டல்லே தான்...! அப்படியே அங்கே அக்கவுண்ட்ஸ் செக் பண்றோம்... மதியம் ஒன் அவர் ரெஸ்ட்... அப்புறம் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸுக்கு போறோம். அங்கேயும் அக்கவுண்ட்ஸ் செக்கிங் இருக்கு... சாயந்திரம் டெக்ஸ்டைல் ஷாப்புக்குப் போறோம்... அப்புறம் ராத்திரி உங்களுக்கு இவங்களோட ஹோட்டல்லே டின்னர் சார்!" என்று முடித்தான் அவன்.

அவனும், சுகுமாரும் ஹோண்டா சிட்டியில் முன்னால் செல்ல, அவர்களுடைய கார் அவனைத் தொடர்ந்தது.

இவ்வளவு பொறுப்பையும் அவன் தனி ஒருவனாக நிர்வகித்து, அதில் வெற்றியும் பெற்றிருப்பது, பெரும் பிரமிப்பையும் வியப்பையும் அளித்தன!



பணம் இருந்தால் மட்டும் போதாது... அதைப் பெருக்க.. தக்க வைத்துக் கொள்ள ஒருவன் எவ்வளவு பாடுபட வேண்டுமென்பதும் புரிந்தது.

அவனுடைய "அருந்ததி கிரானைட்ஸ்" பல ஏக்கர் நிலப் பரப்பில் பரந்து விரிந்து தெரிய, புதிதாய் அவன் மேல் எழுந்திருந்த மதிப்பும், மரியாதையுடனும் உள்ளே சென்றாள் அவள்.

மீட்டிங் நடக்கப் போகும் அறைக்குள், அவன் அவர்களை அனுமதிக்கவில்லை.

அந்த சமயத்தில், அந்த ஃபேக்டரியை சுற்றிப் பார்க்கும்படி ஒரு ஊழியருடன் அவர்களை அனுப்பி வைத்தான்.

பெரிய பெரிய கிரானைட் கற்கள் ஸ்லேப்களாக அறுக்கப்பட்டு பாலீஷ் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

ஏற்றுமதித் துறையில் அவன் கொடி கட்டிப் பறப்பதை பெருமையுடன் விவரித்தபடி, எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்தார் அந்த ஊழியர்!

சேகர் பெரும் வியப்புடன் கேட்டான். "இந்த ஒரு பேக்டரியை நிர்வகிக்கவே நமக்கு நாக்குத் தள்ளிடும்... இதிலே சாருக்கு எத்தனை பிசினஸ் இல்லை...? இதை ஏன் பண்றதுக்குள்ளேயே ஆயிரம் பிரச்னைகளை ஃபேஸ் பண்ணனுமே?"

"ம்.. ஸ்டாக்.. லேபர் பிராப்ளம், எக்ஸ்போர்ட்ஸ் ஆர்டர்ஸ்... குவாலிட்டி, பங்க்சுவாலிட்டி.. இது மாதிரி நிறையப் பாக்கணும்..." என்றார் அவர்.

"எல்லாமே அவர்தான் பார்ப்பாரா?" வியப்புடன் கேட்டாள் ப்ரீதி.



"ஆமாம்மா... இந்த பேக்டரியில, இவரோட அக்கா அருந்ததியம்மாவும் ஒரு பார்ட்னர்.. அவங்க புருஷன் மனோஜ் சார்தான் அமெரிக்காவுல இந்தக் கம்பெனியோட எக்ஸ்போர்ட் பிசினஸ் எல்லாம் பாத்துக்கிறாரு... ஆகாஷ் ஐயா அப்படியே அவங்கப்பா மாதிரிதான்.. வேலையிலே எவ்வளவுக்கெவ்வளவு கறெக்டா இருப்பாரோ, அதே மாதிரி லேபரர்ஸ் விஷயத்துலயும், போனஸ் அலவன்ஸ் தாராளமும் கண்ணன்தான்!

"இவ்வளவு பெரிய கம்பெனிய எந்தவிதமான தடங்கலோ இடைஞ்சலோ இல்லாம ஒரு சீரா நடத்த முடியுதுன்னா, அதுக்கு அவரோட உழைப்பும், நேர்மையும், வொர்க்கர்ஸ்கிட்ட காட்டற அக்கறையும், மனிதாபிமானமும் தான் காரணம்னு நான் சொல்லுவேன்.

"எங்களுக்கு ஒரு அற்புதமான மனிதரை முதலாளியாக் கொடுத்ததுக்கு நாங்க எல்லோருமே தினம் அந்தக் கடவுள்கிட்ட நன்றி சொல்றதோட இந்த பேக்டரியோட வளர்ச்சிக்காக உயிரைக் குடுத்துப் பாடுபடறோம்" நெகிழ்ச்சியுடன் கூறினார் அவர்.

சேகர் எல்லாவற்றையும் புகைப்படமெடுக்க, ஒவ்வொரு சிறு விபரத்தையும் குறித்துக் கொண்டாள் ப்ரீதிகா.

அவர்கள் அவசரமாக எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வரும்போது மீட்டிங் முடிந்திருந்தது.

* * *

அப்போது தன்னுடைய கேபினுக்கு அவர்கள் இருவரையும் ஆகாஷ் அழைப்பதாக சுகுமார் கூறினான்.

அவன் உள்ளே நுழைந்தவுடனே ஒற்றைப் புருவத்தை ஏளனமாக ஏற்றி இறக்கியவன், "என்ன... எல்லாம் சுத்திப்

பாத்தாச்சா? இப்ப புரியுதா நான் எவ்வளவு பிசியான ஒரு பிசினஸ்மேன் அப்படின்னு?'' புரியாத ஒரு குரலில் கேட்டான்.

அவள் கூர்மையுடன் அவனுடைய பார்வையை எதிர் கொண்டு பதில் கூறுவதற்குள் சேகரின் குரல் இடை மிட்டது.

''சார்... எங்களுக்கு ரொம்ப பிரமிப்பா இருக்கு... ஒரு வேலை செய்யறதுக்குள்ளேயே நாங்கல்லாம் ஆடிப் போயிடறோம்... நீங்க இத்தனை பிசினஸை தனி ஒரு ஆளா... அதுவும் சக்ஸஸ்புல்லா அட்மினிஸ்ட்ரேட் பண்றதைப் பாத்தா பிரமிப்பா இருக்கு...'' ஒருவித ஹீரோ வொர்ஷிப்புடன் கூறினான்.

''என்... உங்க ரிப்போர்ட்டர் எதுவுமே பேச மாட்டாங் களா? எங்க ஃபேக்டரியப் பத்தின உங்க அபிப்பிராயம்?''

ஆகாஷ் தன் கூர்மையான விழிகளை, அவளுடைய முகத்தில் பதித்தபடி கேட்டான்.

தன் தோள்களை அலட்சியமாகக் குலுக்கியபடி நிமிர்ந்தவள், ''என்னோட கவர் ஸ்டோரியிலே எல்லாமே கவர் ஆகியிருக்கும் சார்.'' அழுத்தமான குரலில் கூறினாள் அவள்.

''ப்ரீத்தி நல்லாப் பேசுவாங்களே... ரொம்ப ஜாலி டைப்... என்னவோ தெரியலை காலையிலருந்து ரொம்ப மூடியா இருக்காங்க...'' சமயம் தெரியாமல் உளறினான் சேகர்.

''ஓ.. என்னைப் பாத்தவுடனே பயத்துல பேச்சு வரலை போலிருக்கு?'' கேலியாகக் கூறியவனிடம், ''நான் ஏன் சார் பயப்படணும்? நீங்க என்ன சிங்கமா, புலியா நான்



பயப்படறதுக்கு? வேலைன்னு வந்துட்டா, நான் எப்ப வுமே எல்லாத்தையும் உன்னிப்பா அப்சர்வ் பண்ணிட்டு இருப்பேன்.. என் கவனம், சின்ன சின்ன விஷயங்கள் னால சிதறிப் போக நான் அனுமதிக்கறதில்லை!'' எங்கோ பார்த்தபடி கூறினாள் அவள்.

அவள் வார்த்தைகள் உறுத்தினாலும், உடனே அலட் சியமாகத் தலையைக் குலுக்கியவன், ''இங்கே என் வேலை இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கு... வெளியே விசிட்டர்ஸ் ரூம்லே ரெண்டு பேரும் வெயிட் பண் ணுங்க... அரை மணி நேரத்துல கிளம்பிடலாம்'' என்றபடி எழுந்து வழியனுப்பினான்.

அவனை நிமிர்ந்து பார்க்க விருப்பமின்றி விடை பெற்று வெளியே வந்தவளை, விசிட்டர்கள் அமரும் அறைக்கு அழைத்துச் சென்றான் சுகுமார்.

அவனுடைய விழியசைவை எதிர்நோக்கி அங்கு பலர் இருப்பதையும், விரலசைவில் அந்த கிரானைட் கம் பெனியே தடையின்றி சுழலும் இயந்திரம் போலச் சீராகச் சுழல்வதையும், புரிந்து கொள்ள முடிந்தது.

சிறிது நேரம் கழித்து, இருவருக்கும் பிஸ்கட்டும் பழங்களும் காபியும் ஒரு ட்ரேயில் வைத்து எடுத்து வந்து பவ்யத்துடன் வைத்துவிட்டுச் சென்றார் ஒருவர்.

மெதுவாக அதைக் கொறித்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தாள் ப்ரீத்திகா!

இதுவரை அவனிடம் பழகியதில், அவனை ஒரு சபல புத்திக்காரனாகவோ, பெண்களைக் கண்டால் வழிபவ னாகவோ, ஏன்... பார்வையில் ஒரு சிறு முரண்பாட்டையோ கூட அவளால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.



ஒருவிதக் கம்பீரமும், நிமிர்வும் கடமையே கண்ணாக, பம்பரம் போல அவன் சுழல்வது. அவள் எதிர்பாராத ஒரு விஷயமாய்!

யோசனையுடன் தான் எழுதிய குறிப்புகளை வரிசைப் படுத்தி, அந்த ஃபேக்டரியைப் பற்றிய தன் கணிப்பை அவள் எழுத ஆரம்பித்தாள். ஆனால் எழுதிக் கொண் டிருக்கும்போதே அவனிடமிருந்து அழைப்பு வந்து விட்டது.

12



கிரானைட் ஃபாக்டரியிலிருந்து கிளம்பி நகரின் மையப் பகுதியி லிருக்கும் அந்த சாஃப்ட்வேர் நிறுவனத்திற்குச் சென்றனர்.

அப்போதுதான், முன்பொரு நாள் தான் அங்கு வந்ததும் அவமானப்பட்டுத் திரும்பியதும் நினைவிற்கு வர, அவள் முகம் சட்டென்று சுருங்கி இறுகியது.

ஓரக் கண்ணால் அவளுடைய முக பாவத்தையே கவனித்தவன், தனக்குள் மெலிதாகப் புன்னகைத்துக் கொண்டான்.

அங்கு இண்டர்வியூ நடந்து கொண்டிருந்ததால், ஒரே கூட்டமாக இருந்தது.

தன்னுடைய பிரைவேட் காபினுக்கு அவர்களை அழைத்துச் சென்றான் அவன்.

அந்த நிறுவனத்தின் செயல்பாடுகள்... முன்னேற்றம்... ப்ராஜக்ட்கள் பற்றிய விபரங்களை அவர்களுக்கு அளிக்



கும்படி அங்கு பணிபுரியும் ஒருவரை இண்டர் காமில் அழைத்துக் கூறினான்.

அப்போது அங்கு வந்த மேனேஜர் பாஸ்கருக்கோ, அவளைக் கண்டதும் பெரும் வியப்பு! ஆனால், எதையும் வெளிக்காட்டாமல் தன் வேலையை முடித்துக் கொண்டு வெளியேறினான் அவன்.

பிறகு, ஒருவர் வந்து ப்ரீத்தியையும், சேகரையும் அழைத்துச் சென்று எல்லா விபரங்களையும் தெரிவித் தார்.

அவனுடைய கம்பெனி, ப்ரான்ஸ், ஜெர்மனி, யுனை டெட் ஸ்டேட்ஸ் என்று எல்லா நாடுகளிலும் தொடர்பு கொண்டு ப்ராஜெக்ட்களை செய்து தருவது தெரிந்தது.

அங்கு பணியில் இருந்த ஒரு மத்திய வயதுப் பெண் மணி... ஒரு ப்ராஜக்டின் மேனேஜர்... தன் முதலாளியைப் பற்றி மிகுந்த மரியாதையுடன் விபரங்கள் கூறினார்.

''வொர்க்லே எங்க பாஸ் ரொம்ப ஸ்டிரிக்ட்... வெரி பர்டிகுலர்... ஒரு ப்ராஜக்ட்டை இந்த வாரம் முடிக்கணும்னா, அவரே பர்சனலா அதில இறங்கி ஒவ்வொண்ணையும் அனலைஸ் பண்ணுவாரு... நிறைய நாள் லேட் நைட் வரைக்கும் கூட இருந்து வொர்க்கை மானிடர் பண்ணு வாரு... எந்த விதத் தவறும் வராமப் பாத்துப்பாரு... ஹி இஸ் சிம்ப்ளி சூப்பர்ப்!'' மன நிறைவுடன் நெஞ்சாரப் புகழ்ந்தார்.

அப்போது, அங்கு வந்த பாஸ்கரின் முகத்திலோ பெரும் ஆச்சர்யம்!

''மிஸ்.. ப்ரீத்திகா! நினைச்சதை சாதிச்சிட்டீங்க போல ருக்கு!'' யோசனையுடன் கேட்டான்.

"ம்... இப்ப புரிஞ்சிக்கிட்டீங்களா... ஒரு நிருபராலே எதையும் சாதிக்க முடியும்கிறதை!" சிறு முறுவலுடன் அவள் கேட்க, அவன் தலையசைத்தபடி விடைபெறும் போதே, அதைக் கேட்டிருந்த ஒரு முகம் யோசனையுடன் இறுகியது.

* * *

பிறகு அந்த நிறுவனத்தை இருவரும் சுற்றிப் பார்த்தனர்.

எல்லாவற்றையும் அவள் குறித்துக் கொண்டபோது, சுகுமார் அவர்களை அழைத்தான்.

அங்கிருந்து ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டலுக்கு நால்வரும் சென்றனர்.

அங்கு சாப்பிடும்போதும் ஆகாஷ் அமைதியுடனிருக்க, அவனைப் பற்றிய யோசனையுடன் மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் ப்ரீத்திகா.

சாப்பிட்டு முடித்தவுடன் அவர்களை ஹோட்டல் மேனேஜரிடம் ஒப்படைத்து விட்டு, தன்னுடைய ப்ரைவேட் சூட்டில் ஓய்வெடுக்கச் சென்றான் அவன்.

அந்த ஹோட்டலைப் பற்றிய எல்லா விபரங்களையும் தெரிவித்தார், அந்த வயதான மேனேஜர் எட்வின்.

"எங்க பாஸுங்கிறதுக்காக பெருமையா சொல்லலை...! அவர் ரொம்ப நல்லவரும்மா... வெரி டிசிப்லிண்ட் பர்சன்... இந்த வயசுல பொதுவாவே ஆண்களெல்லாம் எப்படி எப்படியோ இருக்கிறாங்க... கொஞ்சம் பணம் கையில இருந்தாக்கூட டிஸ்கோதே, நைட் கிளப், டிரிங்க்ஸ், பொண்ணுங்கன்னு சுத்தற இந்தக் காலத்துல எங்க சார்



மாதிரி ஒரு ஒழுக்கமானவரைப் பாக்க முடியாதும்மா... ஹி இஸ் எ டீ டோட்டலர்!" பெருமையுடன் சிலாகித்தார்.

சட்டென்று மனதில் ஷீலாவின் நினைவுகள் அலையெனப் புரண்டு வர, அவன் சாமர்த்தியக்காரனென்று தோன்றியது.. தவறுகள் செய்தாலும் அதை வெளியில் தெரியாமல் பார்த்துக் கொள்ளும் வித்தைகள் தெரிந்தவனென்பதும் புரிந்தது...!

காலையிலிருந்து அவனுடைய புராணத்தையே கேட்டுக் கொண்டிருப்பது, பெரும் சலிப்பை வரவழைக்க, இதழோரம் விரக்திப் புன்முறுவலொன்று கசிந்தது.

"ஏம்மா ஒரு மாதிரி சிரிக்கிறீங்க? நான் சொல்றதை நீங்க நம்பலை இல்லை! என் அனுபவத்துல நானே பாத்திருக்கேன்... முதல் முறையா, தனக்கு ஒரு அழகான பெண்ணைத் தான் மேனேஜரா அவர் நியமிச்சிருந்தாரு! அவ முதல்லே ஒழுங்காத்தான் இருந்தா... நாளாக ஆக இந்தப் பணம், புகழ் எல்லாம் ஒரு போதையா அவளுக்குள்ளே படர்ந்து பெரும் மோகமா மாறிடுச்சி...!

"அதனால ஒரு நாள் அவர் கிட்ட அவ தப்பான விதத்துல பழக முயன்றதை நானே பாத்துட்டேன். உடனே விட்டாரு பாருங்க ஒரு அறை... அன்னிக்கு அவளுக்கு கிழிச்ச சீட்டுதான்! அடுத்ததா அவர் செலக்ட் பண்ணினது இந்த பாஸ்கரைத்தான்... இவரும் அஞ்சாறு வருஷமா மேனேஜரா இருக்காரு... நான் அவரோட அப்பா காலத்துல இருந்தே இங்கே வேலை பாக்கறேன்.. அப்பழுக்கில்லாத வைரம்னு கேள்விப்பட்டிருப்பீங்களே... அது மாதிரிம்மா எங்க முதலாளி!" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறி முடித்தார்.



"ஏன் சார்... ஒரு சின்ன சந்தேகம்... இது மாதிரி சொல்லச் சொல்லி அவர்தான் உங்களை ஏற்பாடு செஞ்சாரா? தன்னைப் பத்தி பெண்கள் விஷயத்துல நான் ஏதாவது தப்பா எழுதிடப் போறேனு பயத்துல முன் ஜாக்கிரதையா உங்களை ஒரு பொய்யை நிஜம் மாதிரி சொல்லச் சொன்னாரா?" யோசனையுடனும் சிறு கேலியுடனும் கேட்டாள் அவள்.

சட்டென்று அவர் விழிகள் நீரில் நிறைந்தன.

"என்னம்மா...? இப்படி ஒரு கேள்வியைக் கேக்கறீங்க? பத்திரிகை நிருபர்கள் எல்லாத்தையும் தோண்டித் துருவி விசாரிப்பாங்கன்னுதான் கேள்விப்பட்டிருக்கேன்.. ஆனா உண்மையைப் போட இவ்வளவு யோசிச்சி அதையுமே தப்பான கோணத்துலயே பாத்து தவறாவே அர்த்தம் பண்ணிப்பாங்கன்னு நான் சத்தியமா எதிர்பார்க்கலை...!

"இன்னொரு உண்மையையும் இப்போ சொல்றேன்... நான் சொன்ன அந்தப் பொண்ணு வேற யாருமில்லை.. என் சொந்தக்காரப் பொண்ணு தான்! அன்னிக்கு ஞாயித்துக் கிழமை.. ஆனா சில நாள்லே.. அன்னிக்குக் கூட இங்கே ஹோட்டலுக்கு வந்து சார் அக்கௌண்ட்ஸ் எல்லாம் பாப்பாரு... இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தவன், அவளை எதேச்சையா பாக்க வந்தப்பதான் இதைப் பாத்தேன்... உடனே வந்த சுவடே தெரியாம வெளியே போயிட்டேன்..."

"அப்புறம் அந்தப் பொண்ணுகிட்ட கேட்டப்புறம் தான் உண்மையே தெரிஞ்சது... ஆனா அவ எனக்குச் சொந்தம்னோ, அந்த விஷயம் எனக்குத் தெரியும்கிறதோ இன்னிக்கு வரைக்கும் முதலாளிக்குத் தெரியாதும்மா...!

நீங்க நம்புனாலும் நம்பாட்டாலும் உண்மை அதுதான்!" என்று முடித்தவரின் விழிகள், பெரிதும் கனிந்திருந்தன.

அவர் கூறியதை வைத்துப் பார்த்தால், அவனை ஒரு வில்லனாகவோ, கெட்டவனாகவோ அவளால் உருவகப்படுத்தவே முடியவில்லை.

அவனைப் பற்றிய தன் கணிப்புகள் அனைத்தும் பொய்த்துப் போவதையும், அவனுடைய மறுபக்கம் மிகவும் வித்தியாசமாக இருப்பதையும் உணர்ந்த போது, மொழி புரியாத ஒரு உணர்வில் அவள் தவித்துப் போனாள்.

ஆனால், பல கேள்விகள் மனதிலிருந்து முரண்பட்டு மேலெழும்பின.

"உண்மை ஒரு வீரியமான விதை... ஒரு நாள் அது முட்டி மோதி பொய்த் தடைகளை மீறி வெளி வந்தே தீரும்" என்ற வரிகளின் அர்த்தம் புரிந்தது.

* * *

பிறகு அந்த ஹோட்டலை சுற்றிப் பார்த்துவிட்டு, தளங்களின் எண்ணிக்கை... தங்கும் அறைகள், அங்கு பணிபுரியும் ஊழியர்கள்... உணவகத்தின் செயல் முறைகள்... நீச்சல் குளம்... பார்... சிறுவர்களுக்கான விளையாட்டு அரங்கம், எல்லாவற்றையும் பற்றி குறிப்பெடுத்துக் கொண்டாள்.

சிறு விஷயங்கள்கூட கவனத்தில் கொள்ளப்பட்டு, வந்து தங்குபவர்களின் வசதியைப் பெருமளவு கருத்தில் கொண்டு, குறைகளின்றி அனைத்தும் இயங்குவது புரிந்தது.

13



அன்று மாலை, அங்கேயே காபி, டிபன் சாப்பிட்டு விட்டு ஆகாஷுடன் இருவரும் கிளம்பினர்.

அங்கிருந்து நேரே அவர்கள் சென்றது 'ஆகாஷ் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்' என்று நியான் விளக்கொளியில் ஒளிர்ந்த, அந்த மூன்றடுக்கு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸுக்கு!

உள்ளே சென்றதும், ஊழியர்கள் அனைவரும் சட்டென்று அலர்ட்டாகி ஒருவித மரியாதையுடன் அவனை வணங்கினர்.

பின் தொடர்ந்த ப்ரீத்தியையும், சேகரையும் சிறு முறுவலுடன் தலையசைத்து வரவேற்றனர்.

அவன் எம்டியின் அறைக்குச் செல்லும்போதே, அந்த ஸ்டோர்ஸின் மானேஜரை அழைத்தான்.

அந்த ஸ்டோரை சுற்றிக் காட்டும் பொறுப்பினை அவரிடம் அளித்து, இருவரையும் அவர் வசம் ஒப்படைத்து விட்டு, கம்பீரமாக அவன் விலகிச் சென்ற விதம், அவளை முதன் முதலாகக் கவர்ந்தது.

எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்கும்போதுதான், அவனும் அங்கு கஸ்டமர்களின் குறை நிறைகளை கேட்டறிந்தபடி, மெதுவாகச் சுற்றி வருவதை கவனித்தாள் அவள்.

அந்த நேரம் பார்த்து, திடீரென்று ஒரு கார்னரில் பல குரல்கள் உரத்துக் கேட்க, சட்டென்று உடல் விரைத்துத் திரும்பினான் அவன்.



அவளும் ஆர்வத்துடன் அவனைத் தொடர அங்கு ஒரு இளம் பெண்ணும் கடைச் சிப்பந்தியைப் போல் ஒரு இளைஞனும் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

"ஷ்! என்ன நடக்குது இங்கே? கோபி... என்ன ப்ரச்னை?" தீவிரமாக, ஆனால் ஆழ்ந்த குரலில் கேட்டான் அவன்.

"சார்.." என்று தயங்கியபடி அவன் ஆரம்பிக்கும்போதே, "நீங்கதான் இந்த ஸ்டோரோட ஓனரா சார்? ஏன் சார் இப்படிப்பட்ட பொறுக்கியை எல்லாம் வேலைக்கு வெச்சிருக்கீங்க? என்னை மாதிரி சின்னப் பொண்ணுங்க எல்லாம் உங்க கடைக்கு வரவே இனிமே யோசிப்பாங்க... நான் இப்பவே போய் ஈவ் டீசிங்னு கம்ப்ளெயிண்ட் பண்றேன்.." கலாட்டா செய்து கத்த ஆரம்பித்தாள் அவள்.

"மிஸ்... நீங்க என்ன நடந்ததுன்னு கிளியரா சொன்னா தானே, நான் ஆக்ஷன் எடுக்க முடியும்... அதோட கோபி அப்படிப்பட்ட ஆளில்லை... எங்க கடையில அஞ்சு வருஷமா வேலை பாக்கறான்... இங்கே வீண் சண்டை சச்சரவு வேணாம்... கஸ்டமர்ஸ் எல்லாம் கவனிக்கிறாங்க... வாங்க என்னோட கேபினுக்கு போகலாம்" ஆகாஷ் பொறுமையுடன் கூறினான்.

"நோ.. நான் யாரையும் நம்ப மாட்டேன்... வேலைக்காரனே இப்படி இருக்கிறப்ப, ஓனர் நீங்க எப்படி இருப்பீங்களோ.. முடியாது சார்.. நான் கிளம்பறேன்" பிடிவாதமாக வெளியேற முயற்சித்தாள் அவள்.

உடனே கோபியிடம் திரும்பியவன், "என்ன நடந்தது இங்கே?" அடிக்குரலில் உறுமினான்.



"சார்.. இந்த மேடம் ஒரு பெர்ஃப்யூம் பாட்டிலை எடுத்து இடுப்புல செருகி ஒளிச்ச வச்சதைப் பார்த்தேன்... உடனே வந்து வார்ன் பண்ணினா என்னைப் பத்தி தப்பாப் பேசிக் கத்தறாங்க!" மிரட்சியுடன் கூறினான் அவன்.

"சரி.. என் ரூமுக்கு ஒரு நிமிஷம் வர்றீங்களா மிஸ்.. பயப்பட வேண்டாம்... அது கிளாஸ் ரூம்தான்... உள்ளே என்ன நடக்குதுன்றதை வெளியே இருக்கிறவங்களாலே தெளிவாப் பாக்க முடியும். இங்கே யாரும் உங்களை எதுவும் செய்ய மாட்டாங்க... அதையும் மீறி உங்களுக்கு டவுட் இருந்தா... இதோ இவங்க மிஸ் ப்ரீத்திகா! ஒரு ரிப்போர்ட்டர். உங்களுக்கு எந்தக் களங்கமும் வராம பாதுகாத்துடுவாங்க... பாரதி கண்ட புதுமைப் பெண்! வரீங்களா?"

சிறிது கேலியும், பெரும் உறுதியுமாக வந்தது அவன் குரல்.

அவள் தர்மசங்கடத்துடன் தொடர, அறைக்குள் போன உடனேயே கத்த ஆரம்பித்தாள் அவள்.

"என்னை அவமானப்படுத்தணும்னே தனியே கூப்பிட்டு விசாரிக்கிறீங்களா?"

"ஒரு நிமிஷம் மேடம்... இப்ப உண்மை தெரிஞ்சிடும்!" என்றவன் அவனுடைய டேபிளில் இருந்த அந்த சிறு டி.வி. ஸ்கிரீனில் தெரிந்த காட்சிகளை ரீவைண்ட் செய்தான்.

அந்த டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் பல இடங்களில் காமிராக்கள் பொருத்தப்பட்டிருந்ததால், அவனுடைய தேடலுக்கு உடனே பதில் கிடைத்தது...

அந்த மூலையில் இருந்த ரேக்கிலிருந்து அந்தப் பெண் ஒரு 'சென்ட்'டை எடுத்து ஒளிக்க, உடனே வந்த கோபி அவளுடன் பேசுவது திரையில் நிழற் படமாய் விரிந்தது.



உடனே முகமெங்கும் பதறி வெளுக்கத் திரும்பியவள், தன் இடுப்பில் வைத்திருந்த அந்தப் பொருளை எடுத்து அங்கிருந்த டேபிளில் வைத்துவிட்டு 'சாரி' என்ற ஒற்றை வார்த்தையுடன் வெளியேற அவளை "ஒரு நிமிடம்..." என்று சொடக்கு போட்டு நிறுத்தினான் ஆகாஷ்.

அவள் பயத்துடன் நிற்க, "எங்களாலயும் இப்ப கண்டபடி பேச முடியும்...! ஆனா அது தேவையில்லைன்னு நினைக்கிறேன்... சிலருக்கு இப்படித்தான் ஒருவித ஃபோபியா இருக்கும்... ஏதாவது சின்னப் பொருளைப் பாத்தா உடனே தன்னுடையதாக்கிக்கணும்னு தோணும்... அதுக்கு கிளப்டோமேனியான்னு பேரு! முதல்லே ஒரு டாக்டரைப் பாருங்க... சீக்கிரமே குணப்படுத்திடலாம்... உங்ககிட்டே தப்பை வெச்சிக்கிட்டு மத்தவங்களை குற்றவாளியாக்க முயற்சிக்காதீங்க... கோ!" கூர்மையான குரலில் கூறி அவளை அனுப்பினான்.

ப்ரீத்திகாவின் விழிகளில் பெரும் பிரமிப்பும், நம்ப இயலாத வியப்பும் பரவின.

"ஓ! இட்ஸ் அமேசிங்..! இந்தப் ப்ரச்னைய நீங்க ஹேண்டில் பண்ணின விதம் சூப்பர்ப்!" மெல்லிய குரலில் பாராட்டினாள்.

"தேங்க்யூ" என்றவனிடம் முதன் முறையாக ஒரு சிறு முறுவல் கேலியுடன் எட்டிப் பார்த்தது.

"என்ன... வசிஷ்டர் வாயாலேயே பிரம்ம ரிஷிப் பட்டமா? ம்... உன் வாயாலேயே என்னைப் பாராட்ட வெச்சிட்டேன் பாத்தியா? நான் நினைச்சதை சாதிக்கிறவன்..!" விழிகள் மின்ன அழுத்தமான குரலில் கூறினான்.

சட்டென்று, அவளுக்குள் கோபம் துளிர் விட்டது.

"நானுந்தான்!" அதே தொனியில் வந்தது அவன் குரல்.

"அப்படி நீங்க என்ன செஞ்சீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா மேடம்?" இடைவரை குனிந்து போலிப் பணிவுடன் கேட்டான் அவன்.

"ஓ! உங்களுக்கு மறந்திருக்கும்... ஆனா பாதிக்கப் பட்ட எனக்கு மறக்கலை! ஒரு நாள், உங்க பேட்டி வேணும்னு நான் வந்தப்ப, உங்க மேனேஜர் மூலமா என்னை அவமானப்படுத்தி விரட்டி அடிச்சீங்களே ஞாபகமிருக்கா? இன்னிக்கு... உங்களைப் பேட்டி எடுத்திட்டேனா இல்லையா? அதச் சொன்னேன்" தோளைக் குலுக்கியபடி அலட்சியமாகக் கூறினாள்.

அவன் விழிகள், யோசனையும் வியப்புமாய் அவள் மீது ஒரு கணம் அதிகமாகவே பதிந்து விலகின.

எதையோ சொல்ல வந்தவன், தலையைக் குலுக்கி அதை அடக்கித் திரும்பிச் சென்றான்.

பிறகு அந்த ஸ்டோர்ஸின் செயல்பாடுகள் பற்றிய விளக்கங்களை மேனேஜர் கொடுக்க, அப்போதுதான் மணி ஆறாகி விட்டது தெரிந்தது.

தொடர்ந்து வந்த அரை மணி நேரம், அவன் சூறாவளியாய் சுழன்று பல வேலைகளை அஷ்டாவதானியாய் முடிப்பதை, உள்ளூர எழுந்த ஆச்சர்யத்துடன் அளவிட்டுக் கொண்டிருந்தாள் ப்ரீத்திகா.

* * *

ஏழு மணியளவில் கிளம்பி அந்தச் சாலையின் கோடியிலிருக்கும் ஜே.பி. டெக்ஸ்டைல்ஸிற்கு சென்றபோது, அதன் பிரம்மாண்டமும் முகப்பு அழகும் அவளை



வெகுவாய் கவர்ந்தன. அதன் மூன்றடுக்கு தளங்களைப் பார்த்தவள், மனதை மறைக்காமல் கேட்டு விட்டாள்.

"இப்போ நிறைய பில்டிங் பர்மிஷன் வாங்காமே கட்டிடறதாலே இடிக்கப்படும்னு அறிவிச்சிருக்காங்களே... உங்களது எப்படி?" கேட்டுவிட்டு சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"ஓ! சந்தேகமா? அப்பாவுக்கு எப்பவுமே ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் ரொம்ப முக்கியம்.. நாமளே அதை ஃபாலோ பண்ணலைன்னா, நம்ம ஒர்க்கர்ஸ் எப்படி ஃபாலோ பண்ணுவாங்கன்னு சொல்லுவாங்க.. அவங்க கிட்ட வளர்ந்ததாலே நானும் அது மாதிரிதான்! எங்க கட்டிடம், அப்ரூவல் வாங்கி அந்த அளவுக்குண்டான ஃப்ளோர்ஸ் மட்டுமே கட்டப்பட்டிருக்கு!" சிறு கேலியுடன் கூறினான்.

நான்கு தளங்களையும் அவனே அழைத்துச் சென்று சுற்றிக் காட்ட, ஊழியர்கள் அவளையும் பவ்யமாய் வணங்கினர்.

பெண்களின் ரெடிமேட் உடைகள், உள்ளாடைகள் பகுதியில் பெண்களே நியமிக்கப்பட்டிருப்பதைக் கண்ட போது அவளால் அவனை மெச்சாமலிருக்க முடியவில்லை.

அவளுடைய முகபாவத்திலிருந்தே அவளுடைய எண்ணத்தை வாசித்து அறிந்தவன், "கடைக்கு வர லேடிஸ்ங்க சேல்ஸ் வுமன்னா ஃப்ரீயா தங்களுக்கு வேண்டியதை கேக்கலாம் இல்லையா?" அதான் இந்த ஏற்பாடு!" என்று கூறி அவளை அதிர வைத்தான்.



தன் முகபாவத்தில், தான் அவனிடம் இன்னும் கவனமாக இருக்க வேண்டும் என்கிற எச்சரிக்கையொலி, அவள் மனதில்!

ஒவ்வொரு தளத்திலும் குளியலறைகள் அமைக்கப் பட்டிருந்ததும், சுத்தமான குடி தண்ணீரும் வைக்கப் பட்டிருப்பதும், அவளது கவனத்தை ஈர்த்தன.

முகம் சுளிக்காத உபசரிப்புகள்... புன்னகையுடன் வரவேற்கும் சேல்ஸ்மேன்கள்... ஒவ்வொரு தளத்திலும் வருபவர்களை உடனே அணுகி, வேண்டிய செக்ஷனுக்கு அழைத்துச் சென்று தேனீக்களாய் சுறுசுறுப்பு காட்டும் விற்பனைப் பிரிவு அதிகாரிகள்... என்று அந்தக் கடையே ஒரு இனிய தாள லயத்துடன் சுழல்வது போல் ப்ரீத்திக்குத் தோன்றியது.

இதற்கெல்லாம் மூல காரணமாய்... அச்சாணியாய் இருப்பவன், ஆகாஷ் தான் என்ற உணர்வு அவன் மேல் பெரும் மதிப்பைத் தோற்றுவிப்பதாய்!

முரளி அவனை "வொர்க்கஹாலிக்" என்று அழைத்தது எவ்வளவு பொருத்தமானதென்று, இப்போதுதான் புரிந்தது.

அவனைப் பற்றி பல குறைகளை மனதில் பட்டியலிட்டு வைத்திருந்தாலும், அவை எல்லாம் அவனுடைய நிர்வாகத் திறமையின் முன் காணாமல் போயின.

சில கௌண்ட்டர்களிடம் அவளே சென்று, பர்சனலாக வாடிக்கையாளர்களை விசாரித்து அவர்களின் குறை கேட்டறிந்தாள்.

பிறகு அவர்களை மூன்றாவது தளத்திலிருந்த தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றவன், "ம்... எப்படி



எங்களோட பிசினஸ் எல்லாம்? அன்னிக்குக் கோபப் பட்டியே... இப்ப புரிஞ்சுதா நான் எவ்வளவு பிஸின்னு... அன்னிக்கு நான் ஏன் அப்பாயிண்ட்மெண்ட் இல்லாம உன்னோட பேச மறுத்தேன்னும் விளங்கியிருக்குமே?" புரியாத குரலில் கேட்டான்.

மெல்லத் தலையசைத்தாலும், அன்று நேர்ந்த அந்தப் புறக்கணிப்பும், அவமானமும் மனதில் வடுவாய் பதிந்திருக்க, யோசனையுடன் அதையே வருடியது ப்ரீத்தியின் மனது.

அவளுடைய முகத்தையே படித்தவன், "ஓ! தேவையில்லாப் பழசையெல்லாம் ஞாபகப்படுத்திட்டேனா? கொஞ்சம் முன்னால நீ ஆரம்பிச்ச வச்சதுதானே?" யோசனையாகக் கேட்டான்.

தலையைக் குலுக்கி தன் நினைவுகளிலிருந்து விடுபட்டவளுக்கு, அவனைப் பற்றிய தன் கணிப்பு வெகுவாய் மாறி இருப்பது புரிவதாய்!

அவன் குரல் மீண்டும் எண்ணங்களை இடைமறித்தது... "ம்... மீடியான்னா எனக்கு ஒருவித அலர்ஜின்னு கூட சொல்லலாம்..! நீ பேட்டி எடுக்க வாறதுக்கு கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு கடைத் திறப்பு விழாவுக்குப் போயிருந்தப்ப, ஒரு நடிகையும் அங்கே வந்திருந்தாங்க... ஒரு பப்ளிசிட்டிக்காக அவங்க என்னைக் கட்டிப் பிடிச்சி சட்டுன்னு கிஸ் பண்ணிட்டாங்க... நானே எதிர்பார்க்கலை!

"அதைப் பெரிசா ஊதி, எனக்கும் அந்த நடிகைக்கும் முன்னாடியே தொடர்பு இருக்குன்னும், நான் போற இடங்களுக்கெல்லாம் அவங்களையும் அழைச்சிட்டுப் போற

தாவும், கதை கட்டி பத்திரிகைகள்லே ஒரு ஃபால்ஸ் நியூஸைப் போட்டுட்டாங்க... அப்புறம் அதை மறுத்து சாதாரண கிசுகிசுதான்னு புரிய வைக்கிறதுக்குள்ளே... ஏ அதனாலதான், நான் ப்ரஸ் மீட்டிங்கை என்கரேஜ் பண்றதில்லை.

"இப்போ கூட முரளிக்காக... தீபாவுக்காகத்தான் நான் ஒத்துக்கிட்டேன்... அதுகூட நீதான் வரணும்னு கேட்டுக்கிட்டேன்..

"என்னா ஆரம்பத்துல இருந்தே, என்னைப் பத்தி தப்பாவே நீ புரிஞ்சிட்டிருந்தே... ஏனோ அதை மாத்தணும்னு மனசிலே தோணிச்சி... அதான் உன்னையே வரவழைச்சேன்.

"கொஞ்ச நேரம் முன்னாடி பாஸ்கர்கிட்டயும், என் கிட்டயும் நீ சொன்னியே... என்னைப் பேட்டி எடுத்து சாதிச்சிட்டேன்னு... அதுக்குக் கூட அடியேன் தான் காரணம்!

"இந்தப் பேட்டிக்கு நீ வேண்டாம், வேற யாராவது தான் வரணும்னு முரளி கிட்டே என்னால சொல்லியிருக்க முடியும்... ஆனா சொல்லலை...! ஏன் தெரியுமா? மத்த விஷயத்துலே நீ எப்படியோ... உன் வொர்க்லே நீ ரொம்ப சின்சியர்னு உன்னோட நிறைய ஆர்டிகிள்ஸ் படிச்சப்ப, நான் தெரிஞ்சிக்கிட்டேன்... அதான்!"


தன் மனதில் இருந்ததை அவன் மறைக்காமல் வெளிப்படுத்தியபோது, அவன் மீது பெரும் மதிப்பும் மரியாதையும் வந்தாலும், ஷீலாவின் நினைவுகள் அவளை வண்டாய்க் குடைந்தன.

அதன் பிறகு, அவள் எதுவுமே பேசவில்லை!



கோடையில் வற்றிய ஆறாக இருந்தாலும், மணலுக்கடியில் சத்தமின்றி ஒரு நதி ஊற்றாய் ஓடிக் கொண்டிருப்பது போல், அவனுடைய மனதிலும், மனிதாபிமானமும், ஈரமும், பெருந்தன்மையும் இருப்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

14



அன்றிரவு, ஹோட்டலில் டின்னரை முடித்து அவனிடம் விடைபெற்று அலுவலகக் காரில் ஏறியபோது, ஏதோ ஒருவிதத் தனிமை உணர்வும், இனம் புரியாத நிறைவும் நெஞ்சப் பரப்பை ஆக்கிரமிப்பதை அவளால் உணர முடிந்தது.

ஹாஸ்டலுக்கு செல்லும் வழியில், அவளுடைய செல் ஒலிக்க, எடுத்தால் முரளிதான் பேசினான்.

"என்ன ப்ரீத்திகா... ஆகாஷைப் பத்தி எல்லாம் தெரிஞ்சிக்கிட்டாச்சா... சீக்கிரம் கவர் ஸ்டோரியை தயார் பண்ணிடு... அது நல்லா வரணும்! ஏன்னா, கூடிய சீக்கிரம் எனக்கு நெருங்கிய உறவா ஆகப் போறவன் ஆகாஷ்! தீபாவுக்குத்தான் ஆகாஷ்னு சின்ன வயசுல இருந்தே, அம்மா ரொம்ப எதிர்பார்ப்போட இருக்காங்க... சீக்கிரமே ஒரு குட் நியூஸை நாம எதிர்பார்க்கலாம்..." சந்தோஷக் குரலில் உற்சாகமாகக் கூறினான்.

சட்டென்று, அவள் மனதிற்குள் ஒரு வெறுப்புக் குமிழ் வெடிப்பது போல்!

ஷீலாவிற்கு ஆகாஷ் செய்த துரோகத்தை மட்டும், மனம் மன்னிக்க மறுப்பது புரிந்தது.



"என்ன ப்ரீத்தி... சத்தத்தையே காணோம்..?"

"சாரி சார்... ஏதோ பழைய நினைவுகள்! ஐ வில் பீ டைம் பெல்ட் சார்..."

"ஏன் இத்தனை சார்! ப்ளீஸ் கால் மி முரளி!... அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்..! நாளைக்கு ரோஸஸ் டே... கேன்சர் பேஷண்ட்டுகளுக்கான ரோஜாக்கள் தினம்! அன்னிக்கு, ஆகாஷ் கேன்ஸர் இன்ஸ்டிடியூட்லே தான் இருப்பான்.. ஒரு பெரிய அமவுண்டை டொனேட் பண்ணிட்டு அந்த நோயாளிகளோட நிறைய நேரம் செலவழிப்பான்... ஏன்னா... எங்க மாமா.. ஆகாஷின் அப்பா... கேன்ஸர்லேதான் இறந்து போனாங்க...! அது அவனுக்குள்ளே பெரிய பாதிப்பை உண்டு பண்ணிடுச்சி.. சாகற வரைக்கும் மாமா ரொம்ப தைரியமா இருந்தாங்க... வலி தாங்கினாங்க..! கடைசி கடைசியாதான் அவங்களுக்கு ஸ்மாரப்ட் குடுத்து வலி தெரியாமப் பாத்துக்கிட்டோம்.. இத்தனை வருஷங்களாகியும், அவனால அவர் அனுபவிச்ச வலி, வேதனைகளை மறக்க முடியலை.. அதனால தான் புற்று நோயால பாதிக்கப்பட்டவங்களுக்கு, அவன் தன்னால முடிஞ்ச ஆறுதலை சொல்லிட்டு வருவான்!

"நாளைக்கு தீபாவும் அவனோட அங்கே போவா! நீயும் போய் அதைக் கவர் பண்ணிட்டு வந்துடு... சேகர் வேண்டாம்.. இந்த விஷயத்துல ஆகாஷ் பப்ளிசிட்டியை விரும்பமாட்டான்... மதியம், தீபா கிளம்பும்போது உன்னை வந்து ஆபீஸிலேயே பிக்கப் பண்ணிக்கச் சொல்றேன்... குட் நைட்..." என்று வைத்தான்.

ஆகாஷின் மனித நேயமும், மறு பரிணாமமும் விசுவரூபமெடுத்து அவளை வதைத்தன.



அன்றிரவு அவளால் சரியாகவே உறங்க முடியாமல் போயிற்று!

* * *

மறுநாள் காலையிலிருந்தே, தான் குறிப்பெடுத்து வந்தவற்றை தன் இனிய நடையில், விரிவாய் எழுத ஆரம்பித்தாள் ப்ரீத்திகா.

மதியம் சாப்பிடும்போது அவளுடைய 'செல்' மெல்லச் சிணுங்க, எடுத்தால் தீபாதான் பேசினாள்.

"நான் இன்னும் பத்து நிமிஷத்திலே அங்கே இருப்பேன் ப்ரீத்தி... நீங்க ரெடியாயிடுவீங்களா?" ஆர்வத்துடன் வினவினாள்.

"ஓகே மிஸ் தீபா... நான் ரெடியா கீழே கார் பார்க்கிங்லே வெயிட் பண்றேன்..."

"ப்ளீஸ்... அந்த 'மிஸ்'ஸை மட்டும் விட்டுடுங்களேன்.. தீபான்னே கூப்பிடலாமே.. இன்னும் இயல்பா இருக்கும்" உரிமையுடன் கேட்டுக் கொண்டாள் அவள்.

"ஓகே தீபா... தேங்க் யூ... நான் வெயிட் பண்றேன்" கூறிவிட்டு வைத்தாள்.

வேகமாக சாப்பிட்டு முடித்து முகத்தை சீர் செய்து கீழே பார்க்கிங் லாட்டிற்குச் சென்றபோது, தீபா வந்து விட்டாள்.

சிறு புன்னகையுடன் காரில் ஏறி அமர்ந்தபோதுதான், முன் சீட்டில் புதிதாக ஒரு இளைஞன் அமர்ந்திருப்பது தெரிந்தது.

வியப்புடன் நோக்கியவளிடம், "இவர் ஆகாஷோட ஃப்ரெண்ட் சிக்கந்தர்... 'விடியல்' பத்திரிகையோட ஓனர்!" என்று அறிமுகம் செய்து வைத்தாள் தீபா.

அவன் புன்னகையுடன் திரும்பினான். "ஹாய் மிஸ் ப்ரீத்திகா! உங்களைப் பத்தி நம்ம ஆபீஸிலே ரொம்பப் பெருமையா சொன்னாங்க...! நான் பத்திரிகையை டேக் ஓவர் பண்றதுக்குள்ளே நீங்க அங்கிருந்து ராஜினாமா பண்ணிட்டு 'உதய'த்துக்கு வந்துட்டீங்க... உங்களை மீட் பண்ணினது ரொம்ப சந்தோஷம்..." என்று கை குலுக்கினான்.

"ஹலோ சார்... ப்ளீஸ் டு மீட் யூ" மென் குரலில் கூறினாள் அவள்.

அன்றொரு நாள், தியேட்டரில் ஆகாஷ், தீபாவுடன் இவனையும் பார்த்த நினைவு நெஞ்சுக்குள் நிறைந்தது.

பிறகு, கான்சர் இன்ஸ்டிடியூட்டிற்கு சென்றிருந்தபோது, அவர்களுக்கு முன்பே ஆகாஷ் அங்கு வந்திருந்தான்.

ப்ரீத்தியைக் கண்டதும் புருவங்களிரண்டும் நெறிந்து உயர்ந்தாலும், எந்த உணர்ச்சியுமின்றி தலையசைத்து வரவேற்றுவிட்டுத் திரும்பிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அனுமதி பெற்று உள்ளே சென்று, அங்கிருந்த நோயாளிகளைப் பார்த்தபோது, நெஞ்சமே கனத்துப் போனது.

அதுவும், சிறு குழந்தைகள் பலர் ரத்தப் புற்று நோயால் பாதிக்கப்பட்டு அதன் கொடூரத்தை உணராமலே சிரித்த படி வரவேற்றபோது, இதயம் கசிந்து அழ ஆரம்பித்தது.

ஒவ்வொருவருக்கும் ஒரு ரோஜாப்பூவை அளித்து விட்டு, அவன் மென் குரலில் நலம் விசாரித்து பரிவாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அவனைத் தொடரும்போதே, வாழ்வின் நிஜ முகமும், அந்தக் குழந்தைகளின் எதிர்காலமும் கண் முன் நின்று, அவளைக் கனியச் செய்தன.



நெகிழ்ந்து போன மனதுடன் திரும்பி வரும்போதுதான், தன்னைப் போலவே ஆகாஷும் மிகவும் அலைப்புறுத லுடனும், அமைதியுடனுமிருப்பதை உணர்ந்தாள் அவள்.

சட்டென்று அவளிடம் திரும்பியவன், "இதை உன் கவர் ஸ்டோரியில எழுத வேண்டாம்... இது பப்ளிசிட் டிக்காக நான் செய்யற ஒரு காரியம் இல்லை... எங்க அப்பாவோட நினைவா ஆத்மார்த்தமா செய்யற ஒரு உன்னதமான விஷயம்...! அதை வியாபாரமாக்கறது எனக்குப் பிடிக்காது..." அழுத்தமான குரலில் கூறினான்.

"எனக்கும் புரியுது சார்... இதப் பத்தி நான் எழுத மாட்டேன்.. முரளி சார் சொன்னதாலதான் நான் வந்தேன்.." அவள் தயக்கத்துடன் முடித்தாள்.

அவர்கள் வந்த காரை முன்பே அனுப்பி விட்டதால், மூன்று பேருமே ஆகாஷுடன் திரும்பிக் கொண்டிருந் தனர். சூழ்நிலையை இயல்பாக்கும் முனைப்பில், கலகலப்பாகப் பேச ஆரம்பித்தாள் தீபா!

"என்ன இருந்தாலும் பத்திரிகைக்காரங்க கிட்டே நாம ரொம்ப கேர்ஃபுல்லாதான் இருக்கணும்... இல்லை ஆகாஷ்!" சிக்கந்தரையும், அவளையும் பார்த்தபடி குறும் புடன் கூறினாள் தீபா!

மெதுவாக யோசனையுடன் தலையசைத்தவன், "என்ன தீபா... முரளிகிட்டே ஏதும் பேசினியா! இல்லை.. நான்தான் பேசணுமா?" தணிந்த குரலில் கேட்டான்.

"எனக்கு பயமா இருக்கு ஆகாஷ்... என்னதான் பெண்கள் போல்டா இருந்தாலும் இந்த விஷயமெல்லாம் வீட்டில பேசணும்னா கொஞ்சம் தயக்கமாத்தான் இருக்கு!"

சட்டென்று, அவளைக் கேலி செய்து சிரித்தான் சிக்கந்தர்.



"ரொம்ப பயந்த மாதிரிதான்! இப்பல்லாம் எல்லா சட்டமுமே பெண்களுக்குத் தானே சாதகமா இருக்கு... என் ஆகாஷ்...? ஏற்கனவே வரதட்சணை கொடுமைன்னு போய் பொண்ணுங்க புகார் பண்ணினாலே போதும்... விசாரிக்காமலே ஆண்களை உள்ளே தூக்கிப் போட்டுடு வாங்க... இப்ப குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் வேற அறிமுகமாகியிருக்கு... நம்ம எதிர்காலத்தை நினைச்சாலே பயமா இருக்கு...!" போலிப் பெருமூச்சுடன் கேலியாகக் கூறினான்.

"அப்படி எல்லாம் இல்லை... ஆர்டிஓ விசாரணைக்கு அப்புறமாதான் இப்பல்லாம் கைது பண்றாங்க...! ஏன், லேடீஸ்க்கு பாதுகாப்பு தேவையில்லையா? கணவன் எவ்வளவு கொடுமை பண்ணினாலும் பொறுத்திட்டிருக் கிறதுக்கு, நாங்க ஒன்னும் அந்தக்கால கண்ணகியோ, சாவித்திரியோ, சந்திரமதியோ இல்லை! தெரியுமா?" தீபா உணர்ச்சியுடன் கூறினாள்.

உடனே ஆகாஷ் இடை மறித்தான்.

"தெரியும்! அதான் எங்க பயமே..! ஒன்னுமில்லாததுக் கெல்லாம் இனிமே நீங்கள்லாம் கோர்ட்டுல போய் நிக்கப் போறீங்க... அவஸ்தைப்படப் போறது நாங்கதான்..!" ஏளனமாக வந்தது அவன் குரல்!

"ம்... அப்படியெல்லாம் இல்லை, பெண்களை இழிவாப் பேசறதும், அடிச்சிக் கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்யறதும், இனிமே குறைஞ்சா சரி! பெண்களுக்கான வரம்தான் இந்த சட்டம்!"

"ஆமாமாம்! ஆண்களுக்கான சாபம்னு கூடச் சொல்ல லாம்... இதை எத்தனை பொண்ணுங்க மிஸ்யூஸ் பண்



ணப் போறாங்களோ?" தோள்களைக் குலுக்கி 'ப்ச்...' என்றபடி சலிப்புடன் முடித்தான் ஆகாஷ்.

"என்னங்க... ஒரு ஜர்னலிஸ்ட் நீங்க... அமைதியா வந்தீங்க! எனக்கு சப்போர்ட்டா ஏதாவது பேசுவீங்கன்னு பார்த்தா..." ப்ரீத்தியை ஊக்குவித்தாள் அவள்.

"போச்சுடா..." என்று ஆகாஷ் முணுமுணுத்த விதமே அவளை உசுப்பிவிட, "இப்படி ஒரு சட்டம் வரப் போகுதுன்ன உடனே குடும்ப அமைப்பு தகர்ந்திடும்னு பல எதிர்ப்பு குரல்கள் வந்தது தீபா! ஆனா இத்தனை நாள் இந்த ஆணாதிக்க சமுதாயம் பெண்களை அடிமைப் படுத்தி இருந்ததே, அப்ப இவங்கல்லாம் எங்கே போயி ருந்தாங்க... ஆதிக்க மனப்பான்மை ஒழிஞ்சு, குடும்பத்துல அன்பும் அனுசரணையும் வரது நல்லதுதானே! வன்முறை யும், யுத்தமும் நாடுகளுக்குள்ளேயே கூடாது எனும் போது, குடும்ப வன்முறை பெரிய அராஜகம் இல்லையா?"

"ஆம்பளைன்னா அப்படித்தான் பேசுவான்... அடிப் பான்...! பொம்பளை பொறுத்துப் போகணும்"கிறதெல் லாம் அந்தக் காலம்! இந்த வன்முறைக்கு முற்றுப்புள்ளி வெச்சே ஆகணும்! இந்த சட்டம் குடும்பத்தை... கலா சாரத்தை பாதிக்காது! எந்தக் கலாசாரம், மனைவியை தீக்குளிக்க வைக்குதோ... எந்தக் குடும்பம் பெண்ணை சுயமரியாதையின்றி அடிமையா அடக்கி வச்சிருக்கோ, அவங்களைத்தான் தட்டிக் கேக்கும்!

"உண்மையிலேயே மனைவி மேலயும், பெண்கள் மேலயும் ப்ரியமும், மதிப்பும் வச்சிருப்பவங்க, இந்தச் சட்டத்தை வரவேற்பாங்க..! தங்களோட மனைவியையும் ஒரு உயிருள்ள மனுஷியா... ப்ரிய சகியா மதித்து நடக்கிறவங்க, இதுக்காக பயப்பட வேண்டாமே! இந்த

சட்டத்து மூலமா ஒரு சின்ன மறுமலர்ச்சியாவது பெண்களுக்குக் கிடைக்குதா... பார்ப்போம்'' வேகக் குரலில் முடித்தாள் அவள்.

தீபா உற்சாகத்துடன் கை தட்டிவிட்டு, அவள் கையைப் பிடித்து குலுக்கினாள்.

''ம்! நினைச்சேன்... ஒரு பொண்ணையே நம்மால சமாளிக்க முடியாது... இன்னிக்கு ரெண்டு பேரு வேற..! நாம பேசாம வாயை மூடிட்டு வந்திருக்கலாம்... இல்லை ஆகாஷ்!'' சலிப்புடன் போலியாக பயந்தபடிக் கேட்டான் சிக்கந்தர்.

சிறு முறுவலுடன் பதிலேதும் கூறாமல் காரை ஓட்டிய ஆகாஷைப் பார்த்தபோது, தான் பேசியது அதிகப்படியோ என்று தோன்ற ஆரம்பித்தது, ப்ரீத்திக்கு!

அவர்களின் இயல்பான பேச்சும், ஒருவரை ஒருவர் கேலி செய்தபடி உரிமை எடுத்துக் கொண்டு பேசிய ஒரு வித்த் தோழமை உணர்வும், அவர்களுடைய ஆழமான நட்பை அவளுக்கு உணர்த்தின.

பிறகு தீபா சளசளத்தபடி வர, ப்ரீத்தியை அலுவலகத்தில் இறக்கிவிட்டு மற்றவர்கள் கிளம்பும்போதுதான், தீபா தனக்கு ஒரு இனிய தோழியாகிவிட்டது புரிந்தது.


''பிறப்பினால் உறவினராக இல்லாவிட்டாலும், முழு நட்புரிமையுடன் இருப்பவரே, உண்மையான உறவும் நட்புமாவான்!''

விதுரநீதியின் வரிகள்தான், நினைவிற்கு வந்தன.

தீபாவிற்கு, ஒரு நல்ல எதிர்காலமும், இனிய வாழ்க்கையும் அமைய வேண்டுமென்று ப்ரார்த்தித்தது, மனது!



## 15



அலுவலகத்திற்குச் சென்றவுடனே, முரளியிடமிருந்து அழைப்பு வந்தது.

அவனுடைய அறைக்குச் சென்றபோது, ''என்ன... ப்ரீத்தி... டு யு ஹேவ் எ நைஸ் டைம்?'' மெதுவாக விசாரித்தான் அவன்.

''ம்... இல்லைன்னுதான் சொல்லணும் சார்... சாரி... முரளி..! அங்கே கேன்சர்னாலே பாதிக்கப்பட்டிருக்கற நிறைய குட்டி ரோசஸை பாத்தப்ப.. மனசு ரொம்ப ஹெவியாயிடுச்சி... ஆனா தீபாவோட பேசிட்டு வந்தது, கொஞ்சம் இதமா இருந்தது.''

''ஆமாம்! அதனாலதான் நான் போறதில்லை.. முதல் வருஷம் பாத்துட்டு வந்தவங்கள்லே முக்கால்வாசிப் பேர், மறுமுறை போறப்ப உயிரோடு இருக்கிறதில்லைன்னு ஆகாஷும் தீபாவும் வேதனையோடு சொல்லுவாங்க...''

''நமக்கு ஒரு தடவை போயிட்டு வந்ததே தாங்க முடியலையே... அவங்களோடயே இருந்து சேவை செய்யற டாக்டர் சாந்தாவை நினைச்சா பிரமிப்பா இருக்கு... அவங்களுக்கு 'மகசேசே' விருது கிடைச்சதை ரொம்ப பெருமையா ஃபீல் பண்றேன் முரளி!'' உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள் அவள்.

இந்த அருமையான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த ஆகாஷிற்கு, உடனே நன்றி கூற வேண்டும்போல் மனம் பரபரத்தது.

தன் கேபினுக்கு வந்தவுடன், அவனுடைய கார்டில் இருந்த பர்சனல் எண்ணுக்குத் தொடர்பு கொண்டாள்.



உடனே எடுத்தவனது ஆழ்ந்த கம்பீரமான குரல், ''யெஸ்... ஆகாஷ் ஹியர்'' என்று அவள் செவிகளை வருடியது.

ஒரு கணம் பேச்சிழந்து போனவள், மறு நொடியே ''தேங்க் யூ சார்... நான் ப்ரீத்தி! இன்னிக்கு எனக்கு அற்புதமான ஒரு உலகத்தைக் காட்டினீங்க! நாம எல்லாரும் எவ்வளவு ஹெல்தியா சந்தோஷமா இருக்கோம், எந்த அளவு கிஃப்டட்ங்கிறதை அந்தப் பிஞ்சு உள்ளங்கள் புரிய வச்சது... தேங்க்யூ சோ மச்...'' நெகிழ்ந்து போய் கூறினாள்.

''வெல்கம்! நீ தான் மனித நேயத்துக்கு உதாரணமாச்சே! ஒரு குழந்தைக்கு ஆபரேஷன் பண்ணணும்னா, உடனே யாராவது பணக்காரனைப் பாத்து, அவனை டொனேட் பண்ண வைக்கிற ஒரு புதுமையான சமூக சேவகியாச்சே.. புதுசா என்னென்னவோ சொல்றே?'' கிண்டலாகக் கேட்டான்.

அவனுடைய வார்த்தைகள், சுருக்கென்று முள்ளாய்த் தைத்தன.

''ஸாரி சார் உங்களாலே பழசை இன்னும் மறக்க முடியலைன்னு நினைக்கிறேன்... இந்த மாதிரி இடத்துக்கு நான் போறது இதுதான் முதல் முறை..! அதுதான் என்னை ரொம்ப அஃபக்ட் பண்ணிடுச்சின்னு தோணுது...''

''ம்.. எனக்கும் அப்படித்தான்... ஆனா இப்பல்லாம் பழகிடுச்சு! நம்மை விடக் கஷ்டப்படறவங்க, இந்த உலகத்துலே எத்தனையோ பேர் இருக்கோம்கிறது அங்கே போனாப் புரியும்.''

''தேங்க் யூ சார்... எனக்கு அந்த அனுபவத்தை புரிய வச்சதுக்கு! குட் டே!'' என்றபடி போனை வைத்தாள் அவள்.



தன்னுடைய செய்கையால் அவன் பாதிக்கப்பட்டிருப்பதும், அதை தன்னுடைய பாலிசிக்கு விருந்த அடியாகக் கருதுவதையும் உணர முடிந்தது.

முதன் முதலாகத் தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது.

அவனுடைய நிலையில் தான் இருந்தாலும், இப்படித் தான் கோபப்பட்டிருப்போம் என்று தாமதமாக உணர்ந்தது.

* * *

ரயில் பயணத்தில், மெதுவாய் கடந்து எதிர் திசையில் செல்லும் ஜன்னலோரப் பெண்ணின் அழகிய முகமாய், நாட்கள் விரைந்தன.

ஆகாஷைப் பற்றிய கவர் ஸ்டோரி, அற்புதமான ஒரு வாழ்க்கைப் பதிவாய்... கம்பீரமான புகைப் படங்களுடன் ''தொழிலில் சிகரம் தொட்ட ஒரு சாதனை சிற்பி'' என்ற பெயரில் வெளிவர ஆரம்பித்தது.

முதல் இஷ்யூ வந்தவுடனேயே, பலர் அவனை நேரிலும் போனிலும் அழைத்து வாழ்த்துக் கூறினார்கள்.

அந்த வாரமே அவனுக்கு விருது வழங்கும் விழா, நகரத்தின் மையத்திலிருக்கும் ஒரு பெரிய ஏசி ஹாலில் நடந்தது.

அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அலுவலகத்தில் பிஸியாக இருந்த ப்ரீத்தியை உடனே வரும்படி முரளி இண்டர்காமில் அழைத்தான்.

அவனுடைய அறைக்குச் சென்றபோது, அங்கு கம்பீரமாக அமர்ந்திருந்தான் ஆகாஷ்.

அவளைக் கண்டதும் புன்னகையுடன் எழுந்தவன், ''தேங்க் யூ மிஸ் ப்ரீத்திகா! என்னைப் பத்தின கவர்

ஸ்டோரி ரொம்ப அருமையா வந்திருக்கிறதா எல்லாரும் சொன்னாங்க... அதுக்கு நன்றி சொல்லிட்டு எனக்கு விருது வழங்கப்போற ஃபங்ஷனுக்கு நேரிலேயே இன்வைட் பண்ணிட்டுப் போகலாம்னு வந்தேன்..." இன்விடேஷனை நீட்டியபடி கூறினான்.

"தேங்க்யூ சார்! நிச்சயமா வரேன்..." என்றபடி அதைப் பெற்றுக் கொண்டாள் அவள்.

"ப்ரீத்தி வராமலா? உன் ஃபங்ஷனை கவரேஜ் பண்ணி, 'உதயத்'துல எழுதப் போற ரிப்போர்ட்டரே ப்ரீத்தி தானே?" முரளி பெருமையுடன் கூறினான்.

"தீபா இப்ப எப்படி இருக்கா?" என்று முரளியிடம் ஆகாஷ் விசாரித்தான்.

"ஓ! ஃபைன்! ஒரு வாரமா அவளுக்கு வைரஸ் ஃபீவர்... ப்ரீத்தி கிட்ட கூட பேசணும்னு சொல்லிட்டே இருந்தா! ஃபங்ஷனுக்கு வருவா" என்றபடி ஆகாஷுக்கு விடை கொடுக்க எழுந்து நின்றான்.

ப்ரீத்தியை மீண்டும் ஒரு முறை, அழைத்து விட்டு விடை பெற்றான் ஆகாஷ்.

அவன் கிளம்பியவுடன், தீபாவின் செல் நம்பரை வாங்கி அவளிடம் பேசி உடல் நலத்தை விசாரித்தாள் அவள்.

"ப்ரீத்தி! ஆகாஷைப் பத்தின கவர் ஸ்டோரி சூப்பரா வந்திருக்கு... நானே போன் பண்ணணும்னு நினைச்சேன்... ஃபீவர்லே படுத்திட்டேன், அதான்! ஃபங்ஷனுக்கு கட்டாயம் வந்திடுங்க!" என்று வைத்தாள் அவள்.

* * *



ஆகாஷிற்கு விருது வழங்கும் விழா, இனிது ஆரம்பித்தது.

சேகர் எல்லாவற்றையும் உதயத்தின் சார்பில் படமெடுக்க, ப்ரீத்தி ஒன்று விடாமல் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள்.

"ம்... எங்கே வந்தாலும் வேலைதானா? அண்ணா உங்களை ரொம்பத் தான் புழிஞ்செடுக்கிறான்னு நான் நினைக்கிறேன்...! கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கங்க ப்ரீத்தி!" குறும்புடன் கூறினாள் தீபா.

"ம்... இது தானே என்னோட ஜாப் தீபா... அப்புறம்... இந்த வாங்க, போங்க எல்லாம் வேண்டாமே... வா போன்னே பேசலாம்."

"இப்ப ஓகே! அப்புறம்...!" குறும்புடன் அவள் கேட்க ஒன்றும் புரியாமல் விழித்தாள் ப்ரீத்தி!

உள்ளே எதுவோ நெருட, புரியாத ஒரு குளிர் பரவி, தீபா ஏதோ தவறாக எண்ணுவது புரிந்து, "அப்புறம்னா...?" கூர்மையுடன் கேட்டாள் அவள்.

"எங்க அண்ணியா நீங்க வந்ததுக்கு அப்புறம்னு சொல்றேன்!" கண்களை சிமிட்டியபடி இயல்பாக அவள் கேலி செய்ய, சட்டென்று விதிர்த்துப் போனது ப்ரீத்தியின் மனது!

"தீபா... நீங்க தப்பாப் புரிஞ்சிட்டீங்கன்னு நினைக்கிறேன்... எனக்கும் உங்க அண்ணாவுக்கும் இடையில இருக்கிற உறவு... ஒரு எம்ப்ளாயர்... எம்ப்ளாயீ ரிலேஷன்ஷிப்! அவ்வளவுதான்...! சரி!" உறுதியுடன் கூறினாள்.

அதைக் கேட்டவுடன், தீபாவின் முகம் சுருங்கி பிறகு இயல்பானது.



பிறகு அந்த விழா இனிது முடிவடைய, அவனுடைய கவர் ஸ்டோரிக்கான பெரும் பாராட்டுக்களும் அங்கு ப்ரீத்திக்குக் கிடைத்தன.

மூன்று வாரங்கள் தொடராய் வந்த அந்தக் கட்டுரை, அந்தப் பத்திரிகையின் சர்க்குலேஷனையும், புகழையும் உயர்த்தப் பெரும் காரணமாயிருந்தது.

ஆகாஷிற்கு அந்தத் தொடர் பெரும் மதிப்பையும் பப்ளிசிட்டியையும் ஈட்டித்தர, அவனும் அதற்காக அவளிடம் தனியே பேசி மனதார நன்றி தெரிவித்தான்.

அவனைப் பற்றிய தன் கணிப்புகளும், தவறான எண்ணங்களும், பொய்யாய்.. பொடிப் பொடியாய் சிதறியது புரிந்தாலும், ஷீலாவின் நினைவுகள் மட்டும் நெருஞ்சி முள்ளாய் மனதின் ஒரு ஓரத்தில் உறுத்திய படியே தான் இருந்தன.

## 16



அந்த வார இஷ்யூவிற்காக சில செய்திகளைச் சேகரித்தபோது, போன மாதம் நவம்பர் 15-ந் தேதி பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம், பெண்களுக்கு பெரும் சாதகமாய் அமைந்திருப்பது கவனத்திற்கு வருவதாய்!

பாலியல் ரீதியான வன்முறைகள் சகஜமாகவும், தொடர்கதையாய் தொடர்கின்ற பாகிஸ்தானில், "இனி பாலியல் பலாத்காரத்தை நிரூபிக்க சாட்சிகள் தேவையில்லை... மரபணு சோதனை மட்டும் போதுமானது" என்ற சட்டம்



பலத்த எதிர்ப்புக்கிடையே கொண்டு வரப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பெரும் வரப் பிரசாதமாய்!

அதன் பின்புலத்தை ஆராய்ந்தபோதுதான் தெரிந்தது... சில மாதங்களுக்கு முன்பு பாகிஸ்தானின் பெண்ணிய வாதி முக்தரான் பீபி எழுதிய சுய சரிதையான "இன் த நேம் ஆஃப் ஹானர்" என்ற புத்தகத்தின் தாக்கம் தான் அது என்பது!

பாகிஸ்தானில் மீர்வாலா என்ற குக் கிராமத்தில் பிறந்த பின் தங்கிய குஜார் இனத்தைச் சேர்ந்த முக்தரான் பீபி, கடந்த 2002ம் ஆண்டு ஜூன் மாதம் சொந்த கிராமப் பஞ்சாயத்தார் விதித்த கொடூரத் தீர்ப்பினால் மேல் ஜாதியைச் சேர்ந்த ஒரு முரட்டுக் கும்பலால் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

அவருடைய தம்பி, மேல் ஜாதி இனப் பெண்ணை கெட்ட எண்ணத்துடன் தீண்டியதாக குற்றம் சாட்டப்பட, அதற்குத் தண்டனையாக இந்தக் கொடிய வக்ர வெளிப்பாட்டை தீர்ப்பாக வழங்கியது ஊர்ப் பஞ்சாயத்து!

ஆனால், பாதிக்கப்பட்ட பல அப்பாவிப் பெண்களைப் போல் அவரும் மனதிற்குள்ளேயே புழுங்கி ஒடுங்கி விடுவார் என்று ஊரே எதிர்பார்க்க, ஃபீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுந்தது அந்தப் பெண் புறா.

தைரியச் சிறகுகளை வளர்த்து நம்பிக்கை வானில் பறக்க அவர் எடுத்து வைத்த முதல் அடியே, அந்த பெண்ணாதிக்க சக்திகளுக்கு மரண அடியாய்!

முக்தரான் பீபி, தனக்கு நிகழ்ந்த அவலத்தை, தான் பாதிக்கப்பட்டதை மீடியாவின் முன் ஒப்புக் கொண்டு வெளியே வந்த தினம்தான், பாகிஸ்தானுடைய வரலாற்றில் பெண்களின் உரிமை நிலை நாட்டப்பட்ட தினம்!

அதற்குப் பிறகு ஆச்சர்யமான திருப்பங்கள்... பாகிஸ்தான் நாளிதழ்களில் அந்த செய்தி தலைப்புச் செய்தியாய் உயிர் பெற, பி.பி.சி. நிறுவனம் முக்தரான் பீபியை மக்கள் முன் கொண்டு வந்தன.

குற்றவாளிகளில் ஒருவரையே மணந்து, இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாமென்று பல அமைப்புகள் யோசனை கூற, தீர்க்கமாய் மறுத்தார் முக்தரான்!

"தண்டனை கொடுப்பதற்கு பதில் வாழ்வை அவர்களுக்கு பரிசளிக்கச் சொல்கிறீர்களே? அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்... பாகிஸ்தானில் இனி என் போன்ற அபலைப் பெண்கள் உருவாகாமல் இருப்பதுதான் என் லட்சியம்" என்று மன உறுதியோடு கூறினார்.

உள்ளூர் மக்களின் தாக்குதல்கள், கொலை மிரட்டல்கள் என்று அவரைத் தாக்க வந்த ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு, முக்கிய குற்றவாளிகள் 5 பேருக்கும் மரண தண்டனையும், பஞ்சாயத்தாருக்கு சிறைத் தண்டனையும் வாங்கிக் கொடுத்த அந்த இரும்புப் பெண்மணி, இப்போது பலரின் உதவியால் சொந்த கிராமத்தில் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவியுள்ளார்.

"பெண்களுக்கு கல்வியறிவைக் கொடுப்பதும் தன்னம்பிக்கையை வளர்ப்பதும்தான், என் போன்றவர்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வெறிச் செயலுக்கான பதிலடி!

"என் மீதான வன்முறையே பெண்கள் மீதான கடைசி வன்முறையாக இருக்க வேண்டும். அதற்காக என் கடைசி சொட்டு ரத்தத்தையும் சிந்தத் தயாராக இருக்கிறேன்.." என்கிறார் இவர்.



பாகிஸ்தான் நாட்டுச் சட்டப்படி, "பாலியல் பலாத்காரத்தை நிரூபிக்க, ஒரு பெண் நான்கு சாட்சிகளை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டும்... தவறினால், அவளுடைய புகாரின் அடிப்படையிலேயே அவளை சிறையில் தள்ள முடியும்.." என்ற சட்டம் பெண்களுக்கு எதிரான ஒன்றாய்!

இன்று பாதிக்கப்பட்ட தனியொரு பெண்மணியின் எதிர்ப்பும், எழுத்தும், ஒரு பாராளுமன்றத்தின் சட்ட திட்டங்களையே மாற்றி அமைத்த வெற்றிச் சாதனையாய்! பாதிக்கப்பட்ட பெண்களுக்கான விடிவை... ஒரு தனி பெண்ணின் பிரதிநிதியாய் முன் நின்று சாதித்த அந்த சாதனைப் பெண்மணிக்கு தலை வணங்குகிறோம்..." என்று எழுதி முடித்தபோது, ப்ரீத்தியின் விழிகள் கசிந்தன!

மனம் மானசீகமாக வணங்கியது... அந்தச் சிறந்த பெண்ணியவாதியை.. பெண் விடுதலையாளரை... நியாயத்தை நிலை நாட்டிய நீதி தேவதையை!

"பெண்ணுலகம் வணங்கி நிற்கும் புதுமைப் போராளி!" என்ற தலைப்பில் அந்தப் பெண்ணின் சாதனையை எழுதி, எடிட்டோரியலுக்கு அனுப்பினாள் அவள்.

* * *

மறு வாரத்தில் ஒரு நாள், தீபா அலுவலகத்திற்கே வந்திருந்தாள்.

மதிய சாப்பாட்டை முடித்துவிட்டு வேலையில் ஆழ்ந்திருந்த ப்ரீத்தியை, தீபாவின் "மே ஐ கமின் மேடம்!" என்ற உற்சாகக் குரல் கலைத்தது.

ஆர்வத்துடன் நிமிர்ந்தவள், "ஹாய் தீபா... வாங்க... என்ன திடீர்னு ப்ளசண்ட் சர்ப்ரைஸ் எல்லாம் தர்றீங்க!" முறுவலுடன் எழுந்து வரவேற்றாள்.

114 உயிர்க் காதலில் ஓர் கவிதை!

அதற்குப் பிறகு ஆச்சர்யமான திருப்பங்கள்... பாகிஸ்தான் நாளிதழ்களில் அந்த செய்தி தலைப்புச் செய்தியாய் உயிர் பெற, பி.பி.சி. நிறுவனம் முக்தரான் பீபியை மக்கள் முன் கொண்டு வந்தன.

குற்றவாளிகளில் ஒருவரையே மணந்து, இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாமென்று பல அமைப்புகள் யோசனை கூற, தீர்க்கமாய் மறுத்தார் முக்தரான்!

"தண்டனை கொடுப்பதற்கு பதில் வாழ்வை அவர்களுக்கு பரிசளிக்கச் சொல்கிறீர்களே? அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்... பாகிஸ்தானில் இனி என் போன்ற அபலைப் பெண்கள் உருவாகாமல் இருப்பதுதான் என் லட்சியம்" என்று மன உறுதியோடு கூறினார்.

உள்ளூர் மக்களின் தாக்குதல்கள், கொலை மிரட்டல்கள் என்று அவரைத் தாக்க வந்த ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு, முக்கிய குற்றவாளிகள் 5 பேருக்கும் மரண தண்டனையும், பஞ்சாயத்தாருக்கு சிறைத் தண்டனையும் வாங்கிக் கொடுத்த அந்த இரும்புப் பெண்மணி, இப்போது பலரின் உதவியால் சொந்த கிராமத்தில் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவியுள்ளார்.

"பெண்களுக்கு கல்வியறிவைக் கொடுப்பதும் தன்னம்பிக்கையை வளர்ப்பதும்தான், என் போன்றவர்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வெறிச் செயலுக்கான பதிலடி!

"என் மீதான வன்முறையே பெண்கள் மீதான கடைசி வன்முறையாக இருக்க வேண்டும். அதற்காக என் கடைசி சொட்டு ரத்தத்தையும் சிந்தத் தயாராக இருக்கிறேன்.." என்கிறார் இவர்.

உமா பாலகுமார் 115

பாகிஸ்தான் நாட்டுச் சட்டப்படி, "பாலியல் பலாத்காரத்தை நிரூபிக்க, ஒரு பெண் நான்கு சாட்சிகளை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டும்... தவறினால், அவளுடைய புகாரின் அடிப்படையிலேயே அவளை சிறையில் தள்ள முடியும்.." என்ற சட்டம் பெண்களுக்கு எதிரான ஒன்றாய்!

இன்று பாதிக்கப்பட்ட தனியொரு பெண்மணியின் எதிர்ப்பும், எழுத்தும், ஒரு பாராளுமன்றத்தின் சட்ட திட்டங்களையே மாற்றி அமைத்த வெற்றிச் சாதனையாய்! பாதிக்கப்பட்ட பெண்களுக்கான விடிவை... ஒரு தனி பெண்ணின் பிரதிநிதியாய் முன் நின்று சாதித்த அந்த சாதனைப் பெண்மணிக்கு தலை வணங்குகிறோம்..." என்று எழுதி முடித்தபோது, ப்ரீத்தியின் விழிகள் கசிந்தன!

மனம் மானசீகமாக வணங்கியது... அந்தச் சிறந்த பெண்ணியவாதியை.. பெண் விடுதலையாளரை... நியாயத்தை நிலை நாட்டிய நீதி தேவதையை!

"பெண்ணுலகம் வணங்கி நிற்கும் புதுமைப் போராளி!" என்ற தலைப்பில் அந்தப் பெண்ணின் சாதனையை எழுதி, எடிட்டோரியலுக்கு அனுப்பினாள் அவள்.

* * *

மறு வாரத்தில் ஒரு நாள், தீபா அலுவலகத்திற்கே வந்திருந்தாள்.

மதிய சாப்பாட்டை முடித்துவிட்டு வேலையில் ஆழ்ந்திருந்த ப்ரீத்தியை, தீபாவின் "மே ஐ கமின் மேடம்!" என்ற உற்சாகக் குரல் கலைத்தது.

ஆர்வத்துடன் நிமிர்ந்தவள், "ஹாய் தீபா... வாங்க... என்ன திடீர்னு ப்ளசண்ட் சர்ப்ரைஸ் எல்லாம் தர்றீங்க!" முறுவலுடன் எழுந்து வரவேற்றாள்.

"எனக்கு மட்டும்தான், வாங்க, போங்கன்னு சொல்லக் கூடாதுன்ற உபதேசமா? அது உனக்கும் பொருந்தும்... எப்படி இருக்கே ப்ரீத்தி?'' உரிமையாகக் கேட்டபடி, சலுகையுடன் எதிர் நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"ம்... ஃபைன்... என்ன விஷயம் தீபா...?''

''காரணமில்லாம நான் வரமாட்டேனேன்னு கேக்கிறியா? ஒரு குட் நியூஸ்... நீ எழுதின கவர் ஸ்டோரி ஆகாஷை ரொம்ப இம்ப்ரெஸ் பண்ணிடுச்சின்னு நினைக்கிறேன்... அடுத்த வீக் எண்ட், நாம எல்லாருமே சேர்ந்து ஒரு இடத்துக்கு ஜாலி டிரிப் போறோமே!'' குதூகலத்துடன் ஆர்ப்பரித்தாள்.

"போறோமா? என்னையும் சேத்துக்கிற மாதிரி தெரியுது... ஸாரி தீபா! நான் தெரியாதவங்களோட, வெளி மனுஷங்களோட டூரெல்லாம் போறதில்லை..'' தர்ம சங்கடத்துடன் நிறுத்தினாள்.

"ஏய்... நாங்க என்ன வெளி ஆளுங்களா? நான் உன்னோட ஃப்ரெண்ட்... எங்கண்ணா உனக்கு ஃபாஸ்! ஆகாஷையும் உனக்கு நல்லாத் தெரியும்... சிக்கந்தரும் வாராரு... அவர் கூடவும் நீ நல்லாப் பேசியிருக்கே... அப்புறம் என்ன தயக்கம்?'' கூர்மையுடன் கேட்டாள்.

ஆகாஷ் வருவதுதான் தயக்கம் என்று கூற முடியாமல், உதட்டைக் கடித்தபடி யோசித்தபோது, இண்டர்காம் ஒலித்தது.

"ப்ரீத்திகா.. ஒரு நிமிஷம் என் ரூமுக்கு வந்துட்டுப் போக முடியுமா?'' அழைத்தது முரளியின் குரல்.

"உடனே வரேன் சார்!'' என்று எழுந்தவளுடன், தீபாவும் கிளம்பினாள்.



இருவரும் பேசியபடி அவனுடைய அறைக்குச் சென்ற போது, ஆகாஷும் அங்கு அமர்ந்திருந்தான்.

இருவரையும் கண்டவுடன் சோம்பலுடன் எழுந்தவன், அவளிடம் திரும்பினான்.

''மிஸ் ப்ரீத்திகா! அடுத்த வீக் எண்ட் உங்கும் முரளிக்கும் ஒரு தேங்க்ஸ் கிவிங் ட்ரீட்! என்னோட கெஸ்ட் ஹவுஸ் ஒண்ணு வேலூரைத் தாண்டியிருக்கிற அமிர்தி ஃபாரஸ்டுல இருக்கு! எனக்கு ஒய்வெடுக்கணும்னு தோணுச்சின்னா நான் அங்கே தான் போவேன்! வெரி நைஸ் ப்ளேஸ்! முரளி, தீபா, சிக்கந்தரும் வராங்க... நீயும் கட்டாயம் வரணும்... உன்னை நேராவே இன்வைட் பண்ணத்தான் நான் வந்தேன்... வெள்ளிக்கிழமை ஈவினிங் கிளம்பினா சரியா இருக்கும்... சண்டே நைட் வந்துடலாம்...''

அவளுடைய முகத்தையும் அந்தக் கள்ளக் குறுநகையுமே கூர்ந்தபடி கூறினான்.

''நான்... சார்...'' அவள் தயங்கியபடி முரளியைப் பார்த்தாள்.

''அதெல்லாம் ப்ரீத்தியை அழைச்சிட்டு வர நானாச்சு... நீங்க கிளம்புங்க ஆகாஷ்... நான் பாத்துக்கறேன்...'' என்று அவனை அனுப்பி வைத்தாள் தீபா.

உடனே அவளிடம் திரும்பி, ''நோ எக்ஸ்கியூசஸ் ப்ரீத்தி... நீ வரே! நீ வந்தாதான் நானும் வருவேன்! அண்ணா... ப்ரீத்திய அழைச்சிட்டு வாறது உங்க பொறுப்பு!'' என்று முடித்தாள்.

தர்ம சங்கடத்துடன் நின்றிருந்தவளை, சிறு புன்னகையுடன் ஏறிட்ட முரளி, ''இங்கே தீபாவோட பேச்சுக்கு



அப்பீலே கிடையாது ப்ரீத்தி! அதனால நீ வந்துதான் ஆகணும்... இது உன் பாஸோட ஆர்டர்!'' என்றான் மெல்லிய குரலில்.

அவனிடம் மெதுவாகத் தலையசைத்துவிட்டு வெளியே வந்தபோது, மனதிற்குள் பெரும் உறுத்தலாய்...

* * *

அந்த வாரம் வேகமாய் விரைய, ஞாயிறன்று வீணா அவளிடம் பேசினாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு, அவளுடைய குரலைக் கேட்டதும் மிகுந்த மகிழ்ச்சி வந்தது.

''எப்படி இருக்கே? இப்போ சரியா எவ்வளவு மாசம்! ஸ்கேன் பண்ணினியா? குழந்தை எப்படி இருக்கு...?''

"ஏய்.. மெதுவா பேசு.. வரிசையா கேள்விய அடுக்கறே? ஒரு நிமிஷம் மூச்சு விட்டுக்கோ... நான் நல்லா இருக்கேன்.. இப்போ சரியா ஆறு மாசம் முடிஞ்சிருக்கு! ஸ்கேன் பண்ணியாச்சு... பேபி இஸ்... ஃபைன்! அப்புறம் நீ எப்படி இருக்கே! ஒர்க் எல்லாம் எப்படிப் போகுது?''

''ம்.. நல்லாப் போயிட்டிருக்கு!'' என்றவள், ஆகாஷைப் பற்றி கூறலாமென்று நினைத்து அடக்கிக் கொண்டாள்.

''இங்கே எனக்கு ஒரு நல்ல ஃப்ரெண்ட் கிடைச்சிருக்காங்க... அருந்ததின்னு பேரு... பிரபுவுக்கு ரொம்ப நாளா ஃபேமிலி ஃப்ரெண்ட்!... அவங்க யாருன்னு தெரிஞ்சா அசந்துடுவே! ஆகாஷோட ஸிஸ்டர்தான் அவங்க... எனக்கு ஒரு நல்ல தோழி...!''

''வீணு! அவங்களுக்கு உன்னோட.... பழைய விஷயமெல்லாம் தெரியுமா?''



''இல்லை... தெரியாது... பழசை எல்லாம் எப்பவோ நான் மறந்திட்டேன்... மத்தவங்களைப் பத்தி நினைக்கவே நேரமில்லாமே பிரபு என்னை தன்னோட அன்பால மாத்திட்டாரு! இங்கே வந்தவுடனே, அவர்கிட்ட எல்லா உண்மையையும் சொல்லிட்டேன்... அவர் என்னைப் புரிஞ்சுக்கிட்டாரு... சின்ன வயசுல வர ஒருவித இன்ஃபாக்சுவேஷன்தான் அதுன்னு புரிஞ்சிக்கிட்டாரு... இப்ப நான் எந்த உறுத்தலுமில்லாம நிம்மதியா இருக்கேன்!''

பெரும் நிம்மதியும் அமைதியும் அவளிடம் தெரிந்தன.


''தேங்க் காட்... உடம்பை நல்லா கவனிச்சிக்கோ... டெலிவரிக்கு இங்கதானே வருவே.''

''இல்லை... அம்மா, அப்பாவை இங்கே வரவழைச்சிடலாம்னு நினைக்கிறேன்... குழந்தை இங்கேயே பிறக்கணும்கிறது இவரோட விருப்பம்! அப்பதான் அமெரிக்கன் சிட்டிசனாக முடியும்னு சொல்றாரு... நானும் சரின்னுட்டேன்.''

''ஓகே வீணு... டேக் கேர்... பை!'' என்று வைத்தபோது, பாதிக்கப்பட்ட அவளே அந்த நினைவுகளிலிருந்து விடுபட்டு விட்டாலும், தன்னால் மட்டும் கலபத்தில் மறக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எழுவதாய்!

அதுவும் ஆகாஷைப் பார்த்த மாத்திரத்தில், அவனுடைய நல்ல குணங்களை எல்லாம் மீறி அந்த ஏமாற்றுத் தனமும், பொய்மையும் மனதில் நெருடலாய் விசுவரூபமெடுப்பதை, அவளால் இன்று வரை தடுக்க முடியவில்லை.

## 17



மறு வாரம் வேகமாக விரைய, வெள்ளிக்கிழமை அன்று காலையிலேயே தீபா அலுவலகத்திற்கு வந்து விட்டாள்.

''ப்ரீத்தி! இன்னிக்கும் உங்களுக்கு அண்ணா வீடு தானேயா? சரி... மதியம் லன்ச்சுக்கு அப்புறம் ஹாஸ்டலுக்கு போய் ரெண்டு நாளைக்குத் தேவையான திங்க்ஸ் எல்லாம் பாக் பண்ணிட்டு நாலு மணிக்கு ரெடியா இருங்க... நாங்க ஷார்ப்பா வந்திடுவோம்'' என்றவள் முரளியைப் பார்க்கச் சென்றாள்.

தன்னுடைய மறுப்பிற்குப் பயனின்றிப் போகவே, மதியமே ஹாஸ்டலுக்கு வந்து விட்டாள் அவள்.

அதிசயமாக அன்று சுகன்யாவும் அறையிலிருந்தாள்.

''என்னடி... எத்தனை மணிக்கு கிளம்பறே! இன்னும் துணி எல்லாம் எடுத்து வைக்கலை போலருக்கு!'' ஆர்வத்துடன் விசாரித்தாள்.

''ப்ச்... எனக்கு இன்ட்ரஸ்ட்டே இல்லை சுகு... இது வரைக்கும் மாமா வீட்டைத் தவிர எங்கேயுமே நான் நைட் தங்கினதில்லை... அதான் ரொம்ப யோசனையா இருக்கு!''

''உனக்கு ஒரு நன்றியறிவிப்பு மாதிரித் தானேடி! எனக்கு மட்டும் இப்படி ஒரு ஆப்பர்ச்சுனிடி கிடைச்சா குஷியாக் கிளம்பிடுவேன்! சரியான கட்டுப் பெட்டிடி நீ! மத்ததுக்கெல்லாம் பெரிசா பெண்ணுரிமை அது இதுன்னு எழுதற ஜர்னலிஸ்டா இப்படின்னு ஆச்சர்யமா இருக்கு!''

''உனக்குப் புரியாது... விடு! பெண்ணுரிமை எல்லாம் சரிதான்... ஆனா மனசுக்குப் பிடிக்காத... ஒப்பாத



விஷயத்தை செய்யத்தானே யோசனையா இருக்குன்னு சொல்றேன்...''

''எனக்கு ஒரு சந்தேகம்... கொஞ்ச காலமா உன்னை அறியாமலே நீ அந்த ஆகாஷை விரும்ப ஆரம்பிச்சிட்டியோன்னு எனக்குத் தோணுது... அது சரியா... இல்லை...?'' இழுத்தாள்.

''ஏய்... அப்படி எல்லாம் ஒண்ணும் கிடையாது... நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே! ஆகாஷ் அழைச்சதாலயும்... அவரோடப் போகணும்கிறதாலயும் தான், நான் இவ்வளவு யோசிக்கிறேன்... அது தெரியுமா?''

''அதான் ஏன்னு கேக்கிறேன்... மனசுல ஒண்ணுமில்லைன்னா இயல்பா பேசிட்டு வர வேண்டியது தானே? அதோட... தீபா தான் இப்ப உனக்கு ஒரு நல்ல தோழியா விட்டாங்க.. அப்புறம் என்ன தயக்கம்?''

''உனக்கு சொன்னா புரியாது... விட்டுடு... நான் கிளம்பணும்'' என்றபடி தன் துணிகளை அடுக்க ஆரம்பித்தாள் அவள்.

திடீரென்று சுகன்யா சிரிக்கும் ஒலி கேட்டது.

''என்னடி சிரிக்கறே?'' கோபத்துடன் திரும்பிக் கேட்டாள் அவள்.

''ம்... இன்னும் கொஞ்ச நாளானா தன்னாலத் தெரியப் போகுது... ஜோதிகாவுக்கு சூர்யா யாருன்னு தெரிஞ்ச மாதிரி... பாப்போம்...'' கூறிவிட்டுக் குறும்புடன் புன்னகைத்தாள்.

* * *



சரியாக நான்கு மணிக்கு அனைவரும் வந்துவிட, வார்டனிடம் அனுமதி பெற்றுக் கிளம்பினாள் ப்ரீத்திகா.

அவர்கள் சென்ற 'ஸ்கார்பியோ'வை சிக்கந்தர் ஓட்ட, ஆகாஷ் முன் இருக்கையில் அமர்ந்திருந்தான்.

பின்புறம், முரளியும் தீபாவும் அவளும் இருந்தனர்.

வழி முழுவதும், ஒரே கிண்டலும் கேலியுமாகப் பொழுது இனிதே சென்றது.

அன்றுதான் முதன் முறையாக, ஆகாஷின் 'சென்ஸ் ஆஃப் ஹியூமரை'யும் இயல்பான புன்னகையையும் கண்ட ப்ரீத்திக்கு, பெரும் வியப்பு!

இவனால், இவ்வளவு இலகுவாகக் கூட கேலி செய்து பழக முடியுமாவென்ற ஆச்சர்யமும், ஆராய்ச்சியும் மனதில் கை கோர்த்தன.

அப்போது திடீரென்று திரும்பினான் அவன்.

''இந்த தேங்க்ஸ் கிவிங் எதுக்குத் தெரியுமா முரளி... இந்த லேடி வசிஷ்டர் வாயால, பிரம்ம ரிஷி பட்டம் கிடைச்சதே அதுக்குத்தான்...''

அவளைக் காட்டி சிரிக்காமலே அவன் கூற, விழிகளில் மட்டும் குறும்புப் பூக்கள் மலர்ந்திருந்தன. பார்வை, அந்தக் கன்னக்குழியையே சோம்பலாய் வருடியது.

அந்த நிமிடம் அவனுடைய முகமும், அந்தக் குறுகுறுத்த விழிகளில் கசிந்த புன்னகையும், மாயக் கண்ணனின் சிரிப்பை அவளுக்கு நினைவுபடுத்தின.

மனதிற்குள் இனம் புரியாத ஏதோ ஓர் உணர்விழை புதிதாய் நெய்யப்படுவது புரிவதாய்!



மண்ணில் நட்ட மறு கணமே, விதை திடீரென்று மரமாகி பூக்களை சொரிந்ததுபோல் ஒரு உணர்வு!

தீபாவும், முரளியும் ஆகாஷுடன் தொழில்தொடர்பு விஷயத்தைப் பற்றிப் பேசியபடியே வர, ப்ரீத்தி மட்டும் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

சிக்கந்தர் எல்லாவற்றையும் கேட்டு ரசித்து சிரித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

''ஏன் தீபா... உன் ஃப்ரெண்ட் பேச மாட்டாங்களா? போனவால மட்டும்தான் பேசுவாங்களா?'' கிண்டலாக வந்த ஆகாஷின் குரல், அவளை உசுப்பியது.

உடனே, தீபா அவளிடம் திரும்பினாள்.

''ப்ரீத்தி.. ஏன் ரொம்ப அமைதியா வரே? ப்ளீஸ்... எங்களோட பேச்சில நீயும் கலந்துக்கக் கூடாதா?'' கொஞ்சலாகக் கேட்டாள்.

சன்னமாக முறுவலித்த ப்ரீத்தியும், ''என்ன பேசறது தீபா? நீங்க எல்லாரும் நல்ல ஃப்ரெண்ட்ஸ்... உங்களுக்குள்ளே டிஸ்கஸ் பண்ண நிறைய விஷயம் இருக்கும்... இதிலே நான் எதுக்கு குறுக்கே...'' மெல்லிய குரலில் கூறினாள்.

''முரளி... அவங்களை ஏதும் மிரட்டி அழைச்சிட்டு வந்திருக்கியா? ஊர் விஷயங்களை எல்லாம் 'ஃபிங்கர் டிப்'புல வெச்சுக்கிட்டு பேனா முனையில எல்லாரையும் ஆட்டுவிக்கிறவளுக்கு பேசத் தெரியலைன்னு சொன்னா நம்ப முடியலையே?'' ஆகாஷ் குறும்புடன் கேட்டான்.

''என்னை எதிலயுமே இழுக்காதே ஆகாஷ்... நான் அவளுக்கு பாஸா... அவ எனக்கு பாஸான்னு புரியாம நானே பயந்திட்டிருக்கேன்...''

கிண்டலாக அவன் முடித்த உடனே, ஆகாஷின் முகம் சட்டென்று சுருங்கி இறுகுவதை கண்ணோரப் பார்வையில் உணர்ந்தாள் ப்ரீத்தி.

"ஆகாஷ்! நாம ரெண்டு பேரும்தான் தனி! அவங்க மூணு பேரும் பத்திரிகைக்காரங்க... பி கேர்ஃபுல்!" என்றாள் தீபா.

"பத்திரிகைக்காரங்களா இருந்தாலும் நாங்க மூணு பேரும் ஹார்ம்லெஸ்... தெரியுமா?" சிக்கந்தர் மெதுவாகக் கேட்க, பேச்சு களை கட்டியது.

கிண்டலும் கேலியுமாகப் பயணம் தொடர, அவர்கள் அம்ரிதி காட்டிற்குள் நுழையும்போது, இரவாகி விட்டது.

* * *

இரவின் கருமையும், உயர்ந்த மரங்களும், மலைத் தொடர்களும் கரிய நிழல்களாய் தொடர, அந்த கெஸ்ட் ஹவுசிற்கு சென்று இறங்கியபோது, சில்லென்று வீசிய குளிர்ந்த காற்று, அவர்களை மெதுவாக நலம் விசாரித்து வரவேற்றது.

வாசலிலேயே காத்திருந்த கேர் டேக்கர் அவர்களை வரவேற்க, வாட்ச்மேன் லக்கேஜ்களை எடுத்து வர, அனைவரும் பின் தொடர்ந்து சென்றனர்.

அங்கிருந்த அறைகளில், ஆண்கள் மூன்றிலும், தீபாவும் ப்ரீத்தியும் ஒரு அறையிலும் தங்கிக் கொண்டனர்.

அங்கு, முழு நேர சமையல்காரர் ஒருவரும், ஒரு உதவியாளரும் இருந்தனர்.

அந்த இரவின் குளிருக்கு இதமாக, சூடாக இட்லியும், சப்பாத்தியும் கோழிக் குருமாவுடன் சுவையாகப் பரிமாறப் பட்டன.



இரவு சாப்பாடு முடிந்து அறைக்கு வந்ததும், ஒரு நைட்டியை அணிந்து கொண்டு படுத்த ப்ரீத்திக்கு, ஏனோ வெகு நேரம் உறக்கம் வரவில்லை.

பிறகு ஆழ்ந்த உறக்கத்தில் ஏதோ சப்தம் கேட்டு விழித்த போது, தீபா அருகில் இல்லை... அவள் படுத்திருந்த இடம் வெற்றிடமாய்...!

அவளும் உறக்கம் வராமல் வெளிக் காற்றை சுவாசிக்க விரும்பிச் சென்றிருப்பாளோவென்ற எண்ணம் வர, சோம்பலுடன் எழுந்து மெதுவாகக் கதவைத் திறந்து வெளியில் வந்தாள்.

அங்கு வராந்தாவில் யாரும் இல்லை...! தோட்டம் சோடியம் வேப்பர் வெளிச்சத்தில் மஞ்சள் சாயம் பூசியபடி ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அவள் தோட்டத்திற்குச் சென்றிருப்பாளோ என்ற ஐயம் எழ, வெராந்தாவின் கோடிக்குச் சென்று படிகளில் இறங்க முற்பட்டபோது கேட்ட பேச்சுக் குரல், அவளை நிறுத் தியது.

"சிக்கந்தர்... எனக்கு பயமா இருக்கு! அண்ணாவுக்கும், அம்மாவுக்கும் பயந்து எத்தனை நாள்தான் நாம திருட்டுத் தனமா சந்திக்கிறது? இப்பவும் ப்ரீத்தி நல்லாத் தூங்கினப் புறம்தான் கிளம்பி வந்தேன்... ஆகாஷை கேடயமா வச்சு நாம ரெண்டு பேரும் எவ்வளவு நாள் தான் தப்பிக்க முடியும்? பேசாம அம்மாகிட்டயும் அண்ணாகிட்டயும் கூடிய சீக்கிரமே பேசிடலாம்னு நினைக்கிறேன்..." ஆதங் கத்துடன் கிசுகிசுத்தாள் தீபா.

"உங்கம்மாதான் பாவம்! ஆகாஷைத்தான் மாப் பிள்ளையா நினைச்சி கற்பனை பண்ணி பெரிய கனவுக்



கோட்டையெல்லாம் கட்டியிருக்காங்க... அவங்களுக்கு தான் ரொம்ப ஏமாற்றமா இருக்கும். முரளிகூட பரவா யில்லை... ஆனா அவருக்கும் இது ஷாக்காதான் இருக் கும்னு நினைக்கிறேன்."

"ஆமாம்... ஆகாஷுக்குத் தான் நாம தேங்க்ஸ் சொல் லணும்... அவர் கூட நான் வெளியே போறேன்ற தைரியத்துலதான் அவங்க ரெண்டு பேரும் பேசாம இருக் காங்க... ஆனா அவர் நம்ம ரெண்டு பேரு காதலை சேர்த்து வைக்கத்தான் உதவி பண்றாருன்னு தெரிஞ்சா, அவர் மேலேயே கூட அவங்க கோபம் திரும்பலாம்!" ஒரு பெருமூச்சுடன் தீபா கூற விதிர்த்துப் போனாள் ப்ரீத்தி.

இதயம் பலமாய் முரசு கொட்ட, மூச்சுக்காற்றைத் தேடி உள்ளுறுப்புகள் தவித்தன.

அவர்கள் மூவரும் சேர்ந்து போட்ட ஒரு திரை மறைவு நாடகம் வெளிச்சத்திற்கு வந்தபோது, ஏனோ அதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

திடீரென்று மூச்சு முட்டுவதைப்போல் ஒரு உணர்வு!

நம்ப முடியாத கனவொன்று, திடீரென்று நிஜ மானதைப் போல் தலை சுற்றியது.

முரளியின் எதிர்பார்ப்பும், விருப்பங்களும் அவன் பேச்சிலிருந்தே அவள் அறிந்ததுதான். ஆகாஷையும், தீபாவையும் இணைத்து வைக்க அவர்களுடைய குடும் பமே முயன்று கொண்டிருந்த நேரம் இது!

இந்த அதிர்ச்சியை அவன் எப்படி எதிர்கொள்வான் என்று எண்ணும்போதே, தீபாவின் சிணுங்கலும் பேச்சும் தொடர, வேகமாகத் திரும்பி அறைக்குள் வந்தபோது மூச்சு வாங்கியது.



எதிர்பாராமல் கேட்ட பேச்சு, அவளைப் பெரும் சஞ் சலத்தில் ஆழ்த்தியதாய்!

ஆகாஷ் - தீபாவைப் பற்றி அவள் ஒரு விதமாகக் கணித்திருக்க, நிலைமையே வேறு விதமாய் இருப்பதை உணர்ந்தபோது, தான் எப்படி உணர்கிறோமென்றே அவளால் தீர்மானிக்க முடியவில்லை.


இந்தப் பயணத்தை பயன்படுத்தி, மெதுவாக ஆகாஷைப் பற்றி தீபாவிடம் எச்சரிக்கை செய்யலாமா வென்று எண்ணி, அதை செயல்படுத்தும் முன்பே இந்த திடீர் திருப்பத்தை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆகாஷ் தன் நண்பனுக்கும், சகிக்கும் உதவி செய்யவே அன்று தியேட்டருக்கு வந்திருக்கிறான் என்பதை உணர்ந்தபோது, தன் கணிப்பு மீண்டும் தவறாகிப் போனது புரிந்தது.

வெகு நேரம் விழித்திருந்தபோதும் தீபா அறைக்கு வரவில்லை... மெல்ல மெல்ல உறக்கம் வந்து அவளை அணைத்து ஆட்படுத்தியது.

வெளியில், இருளை சம்ஹாரம் செய்து உச்சி வானில் உலா வரத் தொடங்கியிருந்தது முழுநிலவு!

18



ப்ரீத்தி மீண்டும் கண் விழித்த போது, லேசாக விடிய ஆரம்பித் திருந்தது.

புள்ளினங்கள் சங்கீதம் கற்றுக் கொள்ளாமலே பண்பாடி, அந்த

பிராந்தியத்தையே கலகலப்பாய் உசுப்பி எழுப்பிக் கொண்டிருந்தன.

சோம்பலுடன் புரண்டபோதுதான், அருகில் படுத்திருந்த தீபா நல்ல ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதைக் கண்டாள் அவள்.

மெல்ல எழுந்து, அவளுடைய உறக்கம் கலைக்காமல் குளித்து முடித்து புது சல்வாரணிந்து தயாரானபோது, மணி ஆறு என்றது சுவர்க் கடிகாரம்..!

அப்போதும் தீபா விழித்திருக்கவில்லை.

மெதுவாக கதவைத் திறந்து வெளியே வந்தால், சோம்பலுடன் விழிக்க ஆரம்பித்து விடியலுடன் கை கோர்த்திருந்த அந்த அற்புதமான இடம், அவளை இரு கரம் நீட்டி பசுமையுடன் வரவேற்றது.

வியப்பினால் விரிந்த விழிகளுடன் இயற்கையின் அழகை விழிகளால் வருடி, இதயத்தில் தேக்க முயன்றபடி நடக்க ஆரம்பித்தாள்.

அப்போதுதான், அந்த கெஸ்ட் ஹவுஸிலிருந்து ஒரு மண் பாதை காட்டிற்குள் செல்வதைக் கண்டாள் அவள்.

அங்கு வாசலில் நின்றிருந்த வாட்ச்மேனிடம், அந்தப் பாதையில் செல்லலாமாவென்று கேட்க, அவரும் தலையசைத்தார்.

மெதுவாக நடந்து சென்றபோது, அந்தத் தனிமையும், பசுமையும் மனதை ரம்யமாக்க, இதமான குளிர் காற்று முகத்தில் மோதி காதோர முடிகளிடம் சில்மிஷம் செய்தன.

அங்கு சுற்றிலும் உயர்ந்து தெரிந்த பசிய மலைகளையும், காற்றின் சுவாசச் சீறலும், பறவைகளின் பாஷை



களும் மட்டுமே பரவியிருந்த சூழ்நிலையையும் ரசித்தபடி நடக்க ஆரம்பித்தாள்.

திடீரென்று அழுத்தமான காலடியோசை அருகில் கேட்க, யோசனையுடன் திரும்பினால் அங்கு ஆகாஷ் வந்து கொண்டிருந்தான்.

அவள் திரும்பியதை உணர்ந்ததும், லேசாக முறுவலித்தவன் "குட் மார்னிங்" என்றான்.

பதிலுக்கு "குட் மார்னிங் சார்" என்று அவள் வாழ்த்த, "உனக்கும் ஏர்லி மார்னிங் வாக் பிடிக்குமா?" இயல்பாகக் கேட்டான்.

"ம்... ரொம்பப் பிடிக்கும்... ஹாஸ்டல் கேம்பஸுக்குள்ளேயே தினம் நடப்பேன்..."

"எனக்கு இந்த மார்னிங் வாக்தான் பெரிய ஃப்ரெஷ்னெஸ் டானிக் மாதிரி! என்னோட மைண்ட் ரிலாக்ஸ் ஆகணும்னா இப்படி நடந்தாத்தான் உண்டு!"

"எனக்கு வாக்கிங் ரொம்பப் பிடிக்கும்னாலும், என்னை ரிலாக்ஸ் பண்றது மெலோடியஸ் ம்யூசிக்தான்!" கூறிவிட்டு உடனே உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள்.

தான், அளவுக்கு மீறி அவனிடம் பேசி விட்டோமோ வென்ற தவிப்புடன் அவள் நின்று விட்டபோது, கீழ் உதடுகளின் மீது அழுந்தப் பதிந்திருந்த அந்த வெண்ணிற முத்துப் பற்களின் மீதும் குழிந்த கன்னங்களின் மீதும் அவன் பார்வை ஒரு கணம் பதிந்தது.

அவளுடைய தயக்கத்தை உணர்ந்தவன், அதை இயல்பாக்க முயன்றபடி, "ஏன் நின்னுட்டே? கம்.. லெட்ஸ் கோ!





ம்யூசிக்கைப் பத்தி சொன்னே இல்லையா? எனக்கும் மியூசிக் ரொம்பப் பிடிக்கும்.. மெலோடியஸ், பாப், ஃபாஸ்ட் பீட் எல்லாமே!" சிறு முறுவலுடன் தோளைக் குலுக்கி கைகளை விரித்தபடி முடித்தான்.

பிறகு சிறிது தூரம் அவள் மௌனமாகவே வரவும், "நீ படிச்சதெல்லாம் எங்கே? ஹாஸ்டல்லே இருக்கே? அம்மா, அப்பா வெளியூரிலே இருக்காங்களா?" ஆர்வத்துடன் கேட்டான்.

"இல்லை... அப்பா, அம்மா என் சின்ன வயசிலேயே இறந்துட்டாங்க! மாமா வீட்டில்தான் வளர்ந்தேன்.. என் மாமா பொண்ணுதான் ஷீலா!"

அவள் முடிப்பதற்குள் "ஓ..!" என்ற அவனுடைய ஆழமான குரல் அவளை நிறுத்தியது.

மீண்டும் அவள் மௌனத்தை துணைக்கழைக்கவும், "ம்... அப்புறம் ஏன் ஹாஸ்டல்லே இருக்கே?" அவன் ஊக்கினான்.

"மாமாவுக்கும் மாமிக்கும் தொந்தரவா இருக்க வேண்டாமேன்னுதான் வேலை கிடைச்சவுடனே ஹாஸ்டலுக்கு போயிட்டேன்..." மெதுவாகக் கூறியவளையே கூர்மையுடன் நோக்கியவனின் விழிகளில் கடும் யோசனை!

முதன் முதலாக அவளுடைய மென்மையான மறுபக்கத்தையும், புதிய பரிமாணத்தையும் பார்த்த திகைப்பு, மனதில்!

"ப்ச்... இது புரியாம நான் வேற உன்னை வேலையிலருந்து தூக்கிட்டேன் இல்லை..! ஆனா, நீதான் உடனே முரளிகிட்ட ஜாப்லே சேர்ந்துட்டியே.. ம்..." யோசனையுடன் மலை முகட்டை வெறித்தபடி கூறினான்.



"அப்ப கூட பணம் ஒரு ப்ராப்ளமா இல்லை! என்னை அப்பாவோட சொத்தெல்லாம் வித்து மாமா ஒரு பிக்ஸட் டெபாசிட்டா போட்டு வெச்சிருக்காங்க... ஒரு வீடு இருக்கு... தன் மானம்தான் கொஞ்சம்...!" சட்டென்று உதட்டைக் கடித்து நிறுத்தினாள்.

அவனிடம் அடிபட்டதை, அவனிடமே கூற மனம் தயங்கும்போதே, அவன் குரல் இடைமறித்தது.

"எனக்கும் அதே தான்... அந்தக் குழந்தைக்கு மருத்துவ உதவிய நானே செஞ்சிருந்தா அது வேற... பட் நீ ஃபோர்ஸ் பண்ணி செய்ய வச்சப்போ... ம்... வேண்டாம்... பழசையெல்லாம் மறந்துடலாமே..."

"சாரி... நானும் அப்படி செஞ்சிருக்கக் கூடாது... ஏதோ ஒரு வேகம்... நீங்க பேட்டி குடுக்க மறுத்த கோபம்... எல்லாமா சேர்ந்து..!"

"ஓகே... பாஸ்ட் இஸ் பாஸ்ட்! 'டிட் ஃபார் டேட்'ன்னு எல்லாமே முடிஞ்சிருச்சி... அதனால ஒரு நல்ல ரிப்போர்ட்டரை சிக்கந்தர் இழந்துட்டான்.. ஆனா முரளிகிட்டே தானே நீ வொர்க் பண்றே... அவனும் சிக்கந்தரும் எனக்கு ஒண்ணுதான்!" தோளைக் குலுக்கியபடிக் கூறினான் அவன்.

* * *

பிறகு இருவரும் அமைதியாகத் தங்கள் நடையைத் தொடர, எங்கிருந்தோ ஒலித்த ஒரு முகமறியாப் பறவையின் குரலோசை அவளை ஈர்த்தது.

சட்டென்று திரும்பி நின்று அதைக் கூர்ந்து கவனித்தவளிடம், அவன் பார்வை வியப்புடன் படிந்தது.

''உனக்கும் பேர்ட்ஸ்னா பிடிக்குமா?''

''ரொம்ப... பேர்ட் வாட்சிங்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும்... எவ்வளவுதான் ராகம் கண்டு பிடிச்சாலும் ஒரு குரு இல்லாம அழகா இசைக்கிற அந்தப் பறவைகளின் குரலுக்கு தான் எவ்வளவு சக்தி! பூபாளம் பாடுகிற குயில்... கீரவாணி ராகத்தை கத்துக்கிட்டு பாடற மாதிரியான தேன் சிட்டுக்களோட அந்த ஒலி... ஓ... லவ்லி!''

இண்டியன் பிட்டா, பஃப்பின் ஹெரான், ஃப்ளெமிங்கோ, ஐகேனா, லாப் விங், கோல்டன் ப்ளோவர் இது மாதிரி நிறைய பேர்ட்ஸ் பிடிக்கும்.. இந்த சத்தம் எந்தப் பறவைன்னு யோசிக்கிறேன்.

இரு கைகளையும் கன்னத்தில் பதித்து ரசனையுடன் முகம் நிமிர்த்தி, மரக் கூட்டங்களுக்கிடையில் அந்தப் பறவையின் முகவரியைத் தேடிய அவளின் முகம், அந்த நிமிடம் அவனுக்குள் ஏனோ ஆழப் பதிவதாய்!

சிறிது நேரம் தன்னையறியாமல் அவளையே ரசித்தவன், ''அப்புறம் ஏன் நீ அந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலை?'' ஆவலுடன் கேட்டான்.

இயல்பாகத் திரும்பியவள், ''அதெல்லாம் ஒத்து வராதுன்னு மாமா சொல்லிட்டாங்க... பெரிய பணக் காரங்க வேணா, பொழுது போகாம அதை ஒரு ஹாபி மாதிரி செய்யலாம்... எங்களை மாதிரி மிடில் கிளாஸுக்கு சம்பாதிக்கிற மாதிரியான ஒரு படிப்பு தான் முக்கியம் னுட்டாங்க... ஜர்னலிஸம்கூட அவங்களுக்கு விருப்ப மில்லை...'' சிறு சோகத்துடன் கூறினாள்.

''ம்... அப்புறம் எப்படிப் படிச்சே?'' அவளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆர்வம் தெரிந்தது அவன் குரலில்!



''என் மனசுல சில லட்சியங்கள் இருந்தது... சாதா ரணமா ஆர்ட்ஸ் குரூப் எடுத்து படிச்சி எல்லாரையும் மாதிரி வேலை பார்க்கிறதில எனக்கு விருப்பமில்லை... ஜுவாலஜி முடிச்சி ஆர்னிதாலஜி படிச்சிட்டு பேர்ட் வாட்சிங் பத்தி ரிசர்ச் பண்ணணும்னு ரொம்ப ஆசை! ஆனா நடைமுறைக்கு ஒத்து வரலை! அடுத்த சாய்ஸ் ஜர்னலிஸம்தான்! அதான் அதை செலக்ட் பண்ணிக் கிட்டேன்!'' கூறி முடித்தவளின் இதழோரங்கள் ஏதோ நினைவில் சுருங்கின.

''என்ன... வேற ஏதாவது நிறைவேறாத ஆசை இருக்கா?'' அவளையே ஊடுருவியபடி கேட்டான் அவன்.

''ஏன்... அதை நீங்க நிறைவேத்தப் போறீங்களா?'' சட்டென்று கேட்டுவிட்டு உதட்டைக் கடித்துக் கொண் டாள் அவள்.

மனதிற்குள் சில்லென்று ஒரு குளிர் பரவ, அதிக உரிமை எடுத்துப் பேசி விட்டோமோவென்ற பயம், அவளை ஆக்கிரமித்தது.

''ம்... முடிஞ்சா ஹெல்ப் பண்ணலாமேன்னுதான்... உனக்கு ஒண்ணு தெரியுமா? ஃபேமஸ் ஆர்னிதாலஜிஸ்ட் ஜீவானந்தம் பத்தி நீ என்ன நினைக்கிறே?''

''ம்... அவரோட புக்ஸ் சிலது படிச்சிருக்கேன்... அவரை உங்களுக்குத் தெரியுமா?'' ஆவலுடன் கேட்டாள்.

''அவர்... என்னோட தாத்தா!'' அவன் கூறியதும் நம்ப முடியாத வியப்பில், அவள் விழிகள் விரிந்தன.

''சின்ன வயசுல அவர் 'பேர்ட் வாட்சிங்'குக்கு போகும் போது சில தடவை நானும் கூடப் போயிருக்கேன்... அதனால அதிலே எனக்கும் கொஞ்சம் இண்ட்ரெஸ்ட் வந்தது... அப்புறம் படிப்பு அது இதுன்னு அப்பா விடற தில்லை! அப்பாவுக்கு தொழில்தான் முக்கியம்... அதிலே என்னை ஈடுபடுத்தணும்னு, என்னைப் படிப்புல முழு



மூச்சா ஈடுபடுத்தி வேற எண்ணமே வராதபடி செஞ்சு எம்.பி.ஏ. முடிக்க வச்சாரு... தாத்தாவும் இறந்துட்டாங்க... என் இன்ட்ரஸ்ட் மாறிடுச்சி!

''இப்ப அவரோட புக்ஸ்... கலெக்ஷன்ஸ் எல்லாம் நான் தான் ஒரு லைப்ரரி மாதிரி வச்சி பாதுகாத்திட்டு வரேன்... உனக்கு அதிலிருந்து ஏதாவது புக்ஸ் வேணும்னா எடுத்து யூஸ் பண்ணிக்கலாம்..!'' சிறு முறுவலுடன் முடித்தான்.

''ஓ! தேங்க்யூ சார்!''

''வெல்கம்! நான்கூட அவர் எழுதின புத்தகத்துல பறவைகளைப் பத்தின நிறைய ஆச்சர்யமான விஷ யங்களைப் பத்திப் படிச்சிருக்கேன்...''

''ஆமாம்... பறவைகள்லே தூக்கணாங் குருவிக் கூடு எனக்கு ரொம்பப் பிடிக்கும்... அழகா வாசல் வச்சிக் கூடு கட்டி இரவு நேரக் கருமை இருட்டை தூர விரட்டறதுக்கு மின் மினிப் பூச்சிகளை எடுத்து வந்து கூட்டுக்குள்ளே வச்சி வெளிச்சத்தை வரவழைக்குமாம்..!'' வியப்புடன் கூறினாள் அவள்.

''ம்..! அதைவிட ஆச்சர்யமான பறவை ஒண்ணு ஆஸ்திரேலியாவிலே இருக்காம்... 'அட்லஸ் பவர்'னு பேரு! அந்த வகை ஆண் பறவை, பெண் பறவையைக் கவர்வதற்காகவே சின்ன வசந்த மாளிகை கட்டுமாம்!

''சின்னக் குச்சிகள், மரத் துண்டுகள் எல்லாத்தையும் சேகரிச்சு கூடு கட்டி, கூழாங்கல், சிப்பி, பூக்கள், பழங்களால அலங்கரிக்குமாம்... இந்த பறவைக்கு நீலம் அல்லது பச்சை நிறத்துல எச்சில் சுரக்குமாம்! அதை உமிழ்ந்து தான் கட்டுற கூட்டுக்கு வண்ணம் பூசுமாம்!

''இதைக் கட்டறதுக்கு பல மாதங்கள் வரைக்கும் கூட ஆகுமாம்! அதுக்கப்புறம் தன் காதல் பறவை எதிரே போய் காதல் நடனம் செய்யுமாம்!



''அதைப் புரிஞ்சிக்கிட்ட அந்தப் பெண் பறவையும், அந்த வசந்த மாளிகைக்கு வருமாம்! அந்த ஆண் பறவை தற காதல் பரிசை ஏத்துக்குமாம்! ஆச்சர்யமா இல்லை?''

அவன் கூறக் கூற, அவளுள் வியப்பு வந்தது.

சிலோன் போனப்ப தாத்தாவோட போய் எல்லாம் பார்த்திருக்கேன். எனக்கு ஸ்பூன் பில், இண்டியன் ரோலர், சிலோன் லாரிகீட், ஆர்னிதாலஜிகல் ஜுவல்னு சொல்லப் படற ரெயின்போ கிங் பிஷர், சிலோன் ப்ளூ மேக்பை, மலே பிட்டா, விசிலிங் டீல், ப்ளூ கூட்ஸ் இப்படி எல்லாமே பிடிக்கும்.

எல்லா விஷயத்தையும் ஆழத் தெரிந்து வைத்திருக்கும் புத்திசாலி அவனென்பது புரிந்தது.

''யா..! இட்ஸ் அமேசிங் சார்!'' உற்சாகத்துடன் கூறிய வளுக்கு, தாங்களிருவரும் பேசிக் கொண்டே வெகு தூரம் வந்து விட்டது புரிந்தது.

அவனைப் பற்றி நன்றாக உணர்ந்த பிரமிப்புடன்... தன்னைப் பற்றிய விஷயங்களை எல்லாம்... இதுவரை தான் வெறுத்து வந்த ஒருவனிடம் எப்படி இவ்வளவு இயல்பாகப் பகிர்ந்து கொள்ள முடிந்ததென்ற வியப்பும், யோசனையும் மனதில் ஆழமாய் வேரோடின.

தனக்கு என்னாயிற்று... ஒரு இளங்காலை நேரத்து மென் விடியல் தன்னை மிகவும் பலவீனப் படுத்தி விட்டதோ... நெஞ்சிற்குள் பல கேள்விச் சரங்கள்!

திடீரென்று, அசையாமல் நின்று தனக்குள் மூழ்கி புருவங்கள் நெரிய யோசித்தபடி நின்றவளைக் கண்டதும், அவனுடைய ஒற்றைப் புருவம் கேள்வியாய் உயர்ந்தது!

''ப்ரீத்தி!'' சொடக்குப் போட்டு அவன் அழைத்த வுடனே கலைந்தவள், குழப்பத்துடன் நிமிர்ந்தாள்.

''ஏன்... என்ன திடீர்னு உனக்குள்ளேயே மூழ்கிட்டே! இப்பதான் கொஞ்சம் முன்னாடி ரொம்ப சந்தோஷமா

'தேங்க்ஸ்' சொன்னே... அப்புறம் என் இந்த ஒதுக்கம்...? புரியலையே?'' ஆழ்ந்த குரலில் கேட்டான்.

''ம்... ஒண்ணுமில்லை... நாம ரொம்ப தூரம் வந்துட்டோம்னு நினைக்கிறேன்... கெஸ்ட் ஹவுசுக்குத் திரும்பிப் போகலாமா சார்?''

அவளிடம், திடீரென்று ஒருவித விலகல் தன்மை தெரிந்தது.

''உன் கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன்... இப்ப நான் உனக்கு ஹோஸ்டா இருக்கலாம்... ஆனா இந்த சார் எல்லாம் வேணாமே! 'ஆகாஷ்'ங்கிற பேர் ஒண்ணும் காடு, புலி, சிங்கம்கிற மாதிரி கூப்பிட ஒண்ணும் கஷ்டமா இல்லையே? நல்லாத்தானே இருக்கு?''

அவன் குரலில் தெரிந்த இதமான கேலி அவளை அமைதிப்படுத்தினாலும், இவ்வளவு நேரம் பேசிப் பழகியதை மறக்கடிக்க, திடீரென்று மனதில் பரவிய ஷீலாவின் ஞாபகம் ஒன்றே போதுமானதாய்...!

உடனே நிமிர்ந்தவள், ''சாரி சார்... உங்களை என்னால அப்படிக் கூப்பிட முடியாது!'' உறுதியான குரலில் கூறினாள்.

''ஏன்...?'' கூர்மையுடன் வந்தது அவன் குரல்.

''என் நெருங்கிய நண்பர்களை மட்டும்தான் நான் பேர் சொல்லி இயல்பாக் கூப்பிடுவேன்...''

அவள் முடிக்கும் முன்பே, ''அப்போ முரளி உன் நெருங்கிய நண்பனா? அவனை மட்டும் பேர் சொல்லி கூப்பிட்டே?'' அழுத்தமான குரலில் கேட்டான்.

''நான்... எப்போ...?''



''நேத்து காரிலே வரும்போது ஒரு தடவை இயல்பா 'முரளி'ன்னு சொன்னியே!'' அவன் குரலில் புரியாத ஒரு பாவனை!

''அது... அவர் என்னோட பாஸ்... அப்படிக் கூப்பிடணும்கிறது அவரோட ஆர்டர்... அதை என்னால மீற முடியாது!''

''ஓ! அது வெறும் பாஸ்... எம்ப்ளாயி ரிலேஷன்ஷிப் தானே? அதுக்கும் மேலே ஏதும் இல்லையே?'' விழிகள் இடுங்கக் கேட்டான்.

அந்த நிமிடம், அவன் பார்வை சில்லென்றிருந்தது.

''ஏன்? அப்படி ஏதும் இருந்தா நீங்க என்ன செய்யப் போறீங்க?'' அவளும் வீம்பாகவே கேட்டாள்.

''ம்... ம்... ஒண்ணும் செய்ய முடியாது... ஆனா இல்லை தான்... இல்லையா?''

கண்ணோரங்கள் சுருங்க விழிகளில் ஒருவிதக் கூர்மையுடன் அவன் கேட்டபோது, அவளால் பொய் சொல்ல முடியவில்லை.

''ம்... யு ஆர் ரைட் சார்... இட்ஸ் ப்யூர்லி எ பிசினஸ் ரிலேஷன்ஷிப்...'' என்றபடித் தோளைக் குலுக்கியவள், ''நாம போகலாமா? தீபா தேடுவாங்க'' என்று திரும்பினாள்.

''ம்... என்கிட்ட இருந்து தப்பிக்க ஓடலாம்னு பாக்கறியா?... ம்... நீ எங்கே போறேன்னு பாக்கறேன்...'' ஒற்றை விரலை எச்சரிக்கையுடன் உயர்த்தியபடி திடீரென்று பூத்த குறும்புடன் கூறினான் அவன்.

ஏதோ தப்பிக்க முடியாத நதிச் சுழலில் சிக்கிக் கொண்டதைப் போல் ஒரு உணர்வு தன்னைச் சூழ, திடுக்கிட்டுப் போனாள் அவள்.



அச்சில் வார்த்தெடுத்த தங்கப் பதுமையாக தலை குனிந்து நின்றிருந்தவளை, அவன் விழிகள் முதன் முதலாக ரசனையுடன் வருடின...

இன்று அவளைக் கண்டபோது, 'பூக்கள் சிதறும் தீயோ'வென்று தோன்றியது.

அவளுடன் பழகிக் கடந்த பழைய நினைவுகளால், மனதில் பெரும் யோசனையும் வந்தது.

அவளுடைய விழிகள்... மொழிகள் பேசும் மௌனக் கவிதை வரிகளை முதன் முதலாக அவனுக்குள், அறிமுகப்படுத்தின.

இருவரும் திரும்பி வருகையில், அவர்களுக்கு நடுவில் மௌனம் என்ற மொழி மட்டுமே பலமாய் ஆட்சி செய்தது!

வழி மறந்த ஆட்டுக் குட்டியாய், அவனைப் பின் தொடர்ந்தாள் ப்ரீத்தி.

## 19



கெஸ்ட் ஹவுசிற்கு வந்த போது, தீபா அவளுக்காக வாசலிலேயே காத்திருந்தாள்.

ஆனால், இருவரையும் கண்டதும் சட்டென்று அவள் முகம் கசங்குவதை, தூரத்திலிருந்தே ப்ரீத்தியால் உணர முடிந்தது.

அருகில் வந்ததும் ''எங்கே போயிட்டே ப்ரீத்தி... கூப்பிட்டிருந்தா நானும் வந்திருப்பேன் இல்லை!'' ஆவலுடன் கேட்டாள்.



''தீபா! நாங்க ரெண்டு பேரும் வாக்கிங் போயிட்டு வரோம்... நீ கும்ப கர்ணி மாதிரி தூங்கிட்டிருக்கறதா ப்ரீத்தி சொன்னா! என்ன... ராத்திரி ரொம்ப நேரம் ஆச்சா... தூங்கறதுக்கு...'' கிண்டலாகக் கேட்டான் ஆகாஷ்.

''ஐயோ... நான் அப்படி எல்லாம் சொல்லலை தீபா...'' தவிப்புடன் கூறினாள் ப்ரீத்தி.

''என்ன... சீக்கத்தும் எழுந்திட்டாளா?'' ஆகாஷ் கேட்க, தீபாவின் முகம் சட்டென்று வெளுத்தது.

ஓரக் கண்ணால் ப்ரீத்தியையே பார்த்தவள், ''தெரியலை ஆகாஷ்... அண்ணாதான் உங்களைப் பாக்கணும்னு சொன்னாங்க'' மெதுவாகக் கூறினாள்.

பிறகு அனைவரும் டிபன் சாப்பிட்டுத் தயாராகி ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினர்.

காட்டிலாகா மாளிகையின் அருகிலிருந்த சிறு வன விலங்கு சரணாலயத்திற்குச் சென்று மிருகங்களைப் பார்த்தபோது, ஒருவரை ஒருவர் சீண்டியபடி கேலி செய்ய, பொழுது வேகமாகச் சென்றது.

''என்ன தீபா... நீ கூண்டுக்கு உள்ளே போய் உக்காந்துட்டு கோபமா முறைச்சிட்டிருக்கே?'' அங்கு கூண்டுக்குள்ளிருந்த குரங்கைப் பார்த்துவிட்டு கேலியாகக் கேட்டான் ஆகாஷ்.

விழிகளில் மட்டுமே கிண்டல் கசிய, முகம் வெகு சீரியஸாக ஜோக் அடித்த சுவடே இன்றி, அழுத்தமாக இருந்தது.

தீபாவும் உடனே உதடு சுழித்து, ''அதோ அந்தக் கூண்டில கூடத்தான் நீங்களும் உங்க ஃப்ரெண்டும் இருக்கீங்க'' சிரித்தபடி கூறினாள்.

திரும்பினால், அங்கு இரு நரிகள் இருந்தன.

"ம்... நாங்க ஏதோ பாக்க சுமாராவாவது இருக்கோம்... இல்லை ஆகாஷ்...?" சிறு குறும்புடன் கேட்டான் சித்தார்.

சட்டென்று சிரித்து விட்டாள் ப்ரீத்தி.

அவன் விழிகள், அவளுடைய குழிந்த கன்னங்களில் பதிந்து உறைந்தன.

"என்ன?... எங்களை நரின்னவுடனே ஒரு சிலைக்கு உயிர் வந்துடிச்சி போலருக்கு! என்னைக் குரங்கு, கோட்டான்னாதான் உன் ஃப்ரண்ட் சிரிப்பாங்களா?"

தீபாவிடம் கேட்டபடி, ஓரக்கண்ணால் அவளையே கூர்ந்தான் ஆகாஷ்.

உடனே சிரிப்பு நின்றுபோக, "சாரி சார்.." என்றபடி அடுத்த கூண்டிடம் செல்ல ஆரம்பித்தாள் அவள்.

அங்கு சிறு காட்டு முயல்கள் குறுகுறுவென்று பார்த்தபடி சுற்றி வர, அவற்றை வேடிக்கை பார்த்தபடி இருந்த போது, அவள் காதருகில் ஒரு குரல் சீறலாகக் கேட்டது.

"'லாஃபிங் த்ரெஸ்' அப்படின்னு ஒரு பறவை... சிரிக்கிற பறவை இனத்தைப் பத்தி படிச்சிருக்கியா? பறவைகூட சிரிக்குது! ஏன் ப்ரீத்தி... வாக்கிங்போயிட்டு வந்தப்புறம் திடீர்னு மூட் அவுட் ஆகி சைலண்டா யிட்டே?" ஆகாஷ்தான் வினவினான்.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை சார்... நான் இயல்பாதான் இருக்கேன்... நீங்க உங்க கெஸ்ட்டை கவனிங்க... ப்ளீஸ்."

"யாரு என் கெஸ்ட்? நீதானே என்னோட முக்கியமான கெஸ்ட்... உனக்காகத்தான் இந்த டிரிப்பே! அப்போ



உன்னைத்தானே நான் கவனிக்கணும்!" இலகுவான குரலில் கூறிவிட்டு அவன் புன்னகைத்தான்.

அந்த நிமிடம் அவளுடைய சிரிப்பு, அந்த வனத்தையே அழகாக்கியது போல்!

வெகு அரிதாய் அரும்பி உதிர்கின்ற நிஷாகந்தி மலராய், அவள் புன்னகை உடனே மறைந்தது.

"என்ன யோசனை ப்ரீத்தி...?" அவள் முகத்திலிருந்தே உணர்வுகளைப் படித்து விட்டு வினவினான்.

"ம்... ஒன்னுமில்லை சார்..." உதட்டைக் கடித்தபடி அவள் கூற, "அப்போ நிச்சயமா ஏதோ இருக்கு... உன் முகம் ரொம்ப எக்ஸ்பிரசிவ் ப்ரீத்தி... உணர்ச்சிகளை அப்படியே கண்ணாடியா வெளிப்படுத்தற ஒரு முகம்... கோபம், வருத்தம், சோகம் எல்லாத்தையுமே அது அற்புதமா வெளிப்படுத்துது!"

அவன் கூறியவுடனே அவளுக்குள் விதிர்த்துப் போனது...!

தன்னைப் பற்றி இவன் என்ன ஆராய்ச்சியா செய்து கொண்டிருக்கிறான் என்று தோன்றும்போதே, இது நல்லதற்கில்லை என்பதும் புரிந்தது.

"நான் சொன்னது உண்மைன்னு நிரூபிக்கவா? என்னையே பாத்துட்டிருந்தியே... என் சிரிப்பு உனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன்... சரியா?" மென் குரலில் கேட்டான்.

அவன் கேட்டவுடனே பதறிப் போய் விழிகளை உயர்த்தினால், கண்கள் குறுகுறுக்க சிரித்துக் கொண்டிருந்தான் அவன்.



அவளுடைய கேலி வெளிப்படுத்திய நிஜம் அவளுடைய ஈகோவைத் தாக்கிவிட, "நீங்க என்ன... கிளி ஜோசியக்காரரோட கூண்டில இருக்குற கிளியா? என் முகத்தைப் பத்தி ஜோசியம் சொல்றீங்க?" சிரிக்காமல் கேட்டு விட்டாள்.

"ஒரு நிமிஷம்மா... அந்தக் கிளிக்கு தன்னோட எதிர்காலம் எப்படி இருக்கும்னே தெரியாது.. தான் எப்ப விடுதலையாகப் போறோம்ன்னும் தெரியாது... பாவம். ஆனா அது ஊரில இருக்கிற எல்லாருக்கும் சீட்டு எடுத்துக் தரும்! நான் அந்த மாதிரி இல்லை... என்னைப் பத்தி... ம்... உன்னைப் பத்தி... ஏன்... நம்ம எதிர்காலத்தைப் பத்திக்கூட எனக்குத் தெரியுமே?"

அவன் முடித்தவுடன் படபடத்துடன் அவள் திரும்ப, "ஏன் இவ்வளவு பயம்? நான் கேஷுவலா சொன்னேன் ப்ரீத்தி... என் ஃப்யூச்சர் என் பிசினஸ்... அதை டெவலப் பண்றது! உன்னோடது ஜர்னலிசம்... ஆர்னிதாலஜி... இப்படி..! அதைத்தான் சொன்னேன்" நமட்டுச் சிரிப்புடன் முடித்தான்.

வெகு நேரம், அவளுக்குள் எழுந்த படபடப்பு மட்டும் ஏனோ அடங்கவேயில்லை.

அவனை நினைவு படுத்திக் கொள்ளும்போதே மனதில் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்வது போல்!

"சரி... வா... உனக்குப் பிடிச்சது அங்கே இருக்கு... நாம அங்கே போகலாம்..."

அவன் பறவைகளிருக்கும் கூண்டைக் காட்டிக் கூறியபோது, திரும்பினால் தீபாவிடம் பேசியபடி முரளி அவளையே வெறித்துக் கொண்டிருந்தான்.

"இல்லை... அவங்க எல்லோரும் வரட்டும்... அப்புறம் போகலாம்.." அவள் மெதுவாக முணுமுணுத்தாள்.



பார்வை அவளையே விசித்திரமாக ஊடுருவ, ஏதோ யோசனையுடன் கூர்மையாக அளவிட்டவன், அதற்குப் பிறகு, ஏனோ அவளைக் கட்டாயப்படுத்தவில்லை.

பிறகு, "ஹாய் கைஸ்... வாங்க... போய் பேர்ட்ஸ் எல்லாம் பாக்கலாம்" என்றபடி கையாட்டி அழைத்தான்.

அனைவரும் வர, சுற்றிப் பார்த்துவிட்டுக் கிளம்பி அமிர்தி நீர்வீழ்ச்சிக்குச் சென்றனர்.

வெண்மையாய் பொங்கிப் பெருகிய நுரையுடன் கூடிய அந்த சிற்றருவி மெலிதாய் அனைவரின் மனதையும் நிறைத்தது.

மாற்று உடைகள் எடுத்து வந்திருந்ததால், அனைவரும் அதில் உற்சாகத்துடன் நனைய ஆரம்பித்தனர்.

சில்லென்று தேகத்தில் பரவிய நீர் மனதையும் குளிரச் செய்ய, அதை ரசித்து குளிக்க ஆரம்பித்தாள் ப்ரீத்தி.

அவளுடைய ரசனை கலந்த ரம்யமான மௌன ஆர்ப்பரிப்பையும், நீரில் நனைந்து வரி வடிவாய்த் தெரிந்த உடலையும், இரு விழிகள் விழியெடுக்காமல் ரசித்ததை, அவள் அறியவில்லை.

ஆனால், அதைக் கவனித்துவிட்ட முரளியின் முகம் சட்டென்று சுருங்கியது. தான் ப்ரீத்தியுடன் இங்கு ஏன் வந்தோமென்று வருந்தியது, நெஞ்சம்!

பிறகு, அனைவரும் உடை மாற்றி கிளம்பி கெஸ்ட் ஹவுசிற்கு சென்றனர்.

மதியம் ஓய்வெடுத்த பிறகு, மாலையில் அனைவரும் ஆகாஷின் அறையில் அமர்ந்து கார்ட்ஸ் விளையாட ஆரம்பித்தனர்.

பொழுது பெரும் சுவாரசியத்துடனும், உற்சாகத்துடனும் ஒருவரை ஒருவர் இயல்பாகக் கேலி செய்தபடி இனிதாகக் கழிந்தது.

பிறகு இரவுச் சாப்பாடு முடிந்து படுக்கச் செல்லும் முன் தீபா அவளை அழைத்தாள்.

"ஒரு நிமிஷம் ப்ரீத்தி... நான் உன்கூட கொஞ்சம் பேசணும். உனக்குத் தூக்கம் வருதா?" மெதுவாகக் கேட்டாள்.

"இல்லையே? சொல்லு தீபா... என்ன விஷயம்?"

"நீ ஆகாஷை விரும்பறியா? நான் இப்படிக் கேக்கறேன்னு தப்பா நினைச்சிக்காதே ப்ரீத்தி..." தர்ம சங்கடத்துடன் நிறுத்தினாள்.

உடனே விதிர்த்துப் போனது ப்ரீத்திக்கு!

"இல்லை தீபா... ஏன் உனக்கு திடீர்னு இந்த சந்தேகம்?" குழப்பத்துடன் கேட்டாள்.

"உண்மையா இல்லை தானே? என்னா... நீ... முரளி அண்ணாவைப் பத்தி என்ன நினைக்கிறே? அதை முதல்லே சொல்லு..."

"முரளி என்னோட பாஸ்... என் மரியாதைக்குரியவர்... நல்லவர்... அவ்வளவுதான்... ஏன்?"

"ஆனா உன் மனசுக்கு பிடிச்சவர் இல்லேங்கிறியா?" அவள் கேட்டவுடனே தீபாவின் நடவடிக்கைகளுக்கான காரணம், ப்ரீத்திக்கு உடனே புரிந்தது.

உடனே அதை மறுக்கும் கடமையை உணர்ந்து, "தீபா... அப்படி எந்த எண்ணமும் எனக்குக் கிடையாது. இதுவரைக்கும் என் வாழ்க்கையில... என் மனசுல... எந்த ஆணுக்கும் நான் இடம் தந்ததில்லை... ஃபர்ஸ்ட் லவ்



வுன்னு எல்லாரும் சொல்ற ஒரு விஷயத்தை என்னைப் பொறுத்த வரைக்கும் நான் இதுவரைக்கும் ஃபீல் பண்ணினதும் இல்லை..." அழுத்தமாகக் கூறினாள்.

"அப்படி இல்லைன்னாலும், எங்க முரளி அண்ணா உன் கிட்டே கல்யாணம் பண்ணிக்க கேட்டா நீ சம்மதிப்பியா? அதுதான் எனக்குத் தெரியணும்..."

"சரி... இப்ப நான் கல்யாணம்கிற ஒரு கமிட்மென்டுக்கே தயாராகலை தீபா...! வாழ்க்கையில எவ்வளவோ சாதிக்க வேண்டியிருக்கு... பெண்களுக்கு எப்பவுமே கல்யாணம்கிறது ஒரு தடைக்கல்லாத்தான் இருந்துட்டு வருது! ப்ளீஸ்... வேற விஷயம் பேசலாமே!"

தன் மனதைக் கண்ணாடியாய் வெளிப்படுத்திவிட்டு, அமைதியாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள் அவள்.

தீபாவிற்குள் பெரும் யோசனை!

வெகு நேரம் விழித்திருந்தவள், ப்ரீத்தி உறங்கிய பிறகே, சிக்கந்தரைச் சந்திக்கச் சென்றாள்.

அவனிடம், முரளியைப் பற்றியும், ப்ரீத்தியைப் பற்றியும் கூறிவிட்டு, முரளி அவளை விரும்புவதாகத் தான் எண்ணுவதையும் தெரிவித்தாள்.


"தீபா! சும்மா எல்லாரையும் சந்தேகப்படாதே! எனக்கென்னவோ, அது வெறும் தொழில் தொடர்பாத்தான் தெரியுது! முரளி ரொம்ப அமைதி... சென்சிடிவ் டைப்... ப்ரீத்தி ரொம்ப போல்டான ஒரு பொண்ணு! அவ்வளவு தான். அவங்களுக்குள்ளே காதல் அது இதுன்னு என்னால நினைச்சிக் கூடப் பாக்க முடியலை!"

உறுதியுடன் கூறியவனையே யோசனையுடன் நோக்கியவள், சலுகையுடன் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.





20



மறுநாள் விடியல், பனிப் பொழிதலுடன் அழகாகப் புலர்ந்தது.

அன்றும் ப்ரீத்திக்கு சீக்கிரமே விழிப்பு வந்து விட்டது... உடனே குளித்துத் தயாராகி முதல் நாளைப் போல் நடக்க ஆரம்பித்தாள்.

தோட்டத்தில், டேலியா, ஜெனியா, சாமந்தி, மேரி கோல்ட், ரோஜா எனப் பல வித மலர்கள் மலர்ந்து முகம் மலர்த்தி சிரித்தபடி, அவளைத் தலையசைத்து வரவேற்றன.

மலரிதழ்கள் பனித் திவலைகளால் வியர்த்திருக்க, வண்ணத்துப் பூச்சிகள் அவற்றைத் துடைப்பதற்காக வேட்கையுடன் சுற்றிச் சுற்றி வந்தன.

இன்றும் ஆகாஷ் வாக்கிங் வருவானோ என்ற நினைப்புடன் நடந்தபோது தான், ஏதோ சப்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

அவளுக்கு முன்பே அங்கு ஹேண்டி கேமுடன் நின்று இயற்கைக் காட்சிகளைப் படமெடுத்துக் கொண்டிருந்தான் அவன்.

அவள் வருகையை உணர்ந்ததும் சிறு முறுவலுடன் வரவேற்றவன், "குட்மார்னிங் ப்ரீத்தி... உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருந்தேன்... போகலாமா?" என்றான் சிறு முறுவலுடன்!

மெதுவாக தலையசைத்தபடி அவனைத் தொடர்ந்தவள், வெகு நேரம் மௌனமாகவே வந்தாள்.

ஹேண்டி கேமில் படமெடுத்தபடியே கூட நடந்து வந்தவன், "ஏன்... இன்னிக்கு மௌன விரதமா! பேச



மாட்டியா?" கேலியாகக் கேட்க, "அப்படி இல்லை... ஒதுங்கியிருந்தா வீண் சந்தேகங்களுக்கு இடமில்லாமப் போயிடும் இல்லையா? அதான்" மெல்லிய குரலில் கூறினாள்.

சட்டென்று அவளுடைய கையைப் பிடித்து இரும்பாய் தடுத்தது அவன் கரம்!

"யார் உன்னை என்ன சொன்னாங்க...? வீண் சந்தேகம்னா... முரளி ஏதாவது நம்மைப் பத்தி கேட்டானா?" அழுத்தமான குரலில் கூர்மையுடன் கேட்டான்.

"இல்லை... அவர் ஒண்ணும் பேசலை!"

அவசரமாக அவள் மறுக்கும்போதே, "அப்போ தீபாவா? என்ன சொன்னா அவ? அவ காதலுக்காக நான் ...ப்ச்...அது வேண்டாம்.. நம்ம கதைக்கு வருவோம்... நீ என் கூடப் பழகினா அவளுக்கு என்னவாம்?"

தீக்கங்குகளாய் ஜொலித்த அவனுடைய விழிகளும், முகமும், குரலும் அவன் கோபத்தைப் புரிய வைக்க, பயத்துடன் பின்னடைந்தபோதுதான், அந்தப் பிளிறல் சத்தம் பயங்கரமாகக் கேட்டது.

அவள் மிரண்டு போய் பயத்துடன் திரும்பினால், ஒரு சிறு குட்டியுடன் பெரிய யானை ஒன்று, எதிரிலிருந்த புதருக்குள்ளிலிருந்து சீற்றத்துடன் தும்பிக்கையை உயர்த்தியபடி, வேகமாய் வெளி வந்தது.

அதன் வேகத்தையும், சீற்றத்தையும் குட்டியுடன் தனித்திருந்த விதத்தையும் கண்ட ஆகாஷ், உடனே நடக்கப் போகும் விபரீதத்தை யூகித்து விட்டான்.

"ப்ரீத்தி... நீ அந்த சரிவுலே இறங்கிடு... நான் இந்தப் பாதையில அதை டைவர்ட் பண்ணி தப்பிச்சிடுறேன்..." தவிப்புடன் அடிக்குரலில் கூறினான்.

சட்டென்று அவனுடைய கைகளை இறுகப் பிடித்துக் கொண்டாள் அவள்.

"நோ! உங்களை யானை கிட்ட மாட்ட விட்டுட்டு நான் மட்டும் தப்பிச்சிப் போக மாட்டேன்..."

"ஆர்க்யூ பண்ண இது நேரமில்லை... போ..."

மறுகணம் நடப்பது என்னவென்று உணரும் முன்பே, அவளை சரிவிலிருந்த புல்வெளிப் பக்கம் தள்ளிய ஆகாஷ், எதிர்ப்புறமாக ஓட ஆரம்பித்தான்.

அவள், புல்வெளியில் உருண்டு அடுத்திருந்த பாதையில் விழுந்த போதுதான், அவன் குரல் சப்தமாக ஒலித்தது.

"ப்ரீத்தி... நீ போயிடு... பீ கேர்ஃபுல்..." மெதுவாக அவன் குரல் தேய்ந்துவிட, முழங்கைச் சிராய்ப்பைக் கூடப் பொருட்படுத்தாமல் எழுந்து நின்றவளுக்கு, சட்டென்று கண்கள் கரித்து இமைகள் நனைந்தன.

யானையின் பிளிறல் சப்தம் விடாது கேட்கவே, இதயம் படபடத்து ஆகாஷுக்கு ஒன்றும் ஆகிவிடக் கூடாதே என்று மனம் பரிதவித்தது.

மறு நிமிடமே, கண் மண் தெரியாமல் ஓட ஆரம்பித்தவளுக்குள், தன்னைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் அவளைக் காப்பாற்றி விட்டு யானையின் கவனத்தை தன் மேல் திசை திருப்பி ஓட ஆரம்பித்த அவனுடைய செய்கை, உள்ளத்தை உலுக்குவதாய்!

யாரையாவது உதவிக்கு அழைக்க வென்று வெகு தூரம் வேகமாக ஓடிச் சென்றால், தான் ஏதோ மாற்று வழியில் வந்து விட்டிருப்பது அப்போதுதான் புரிந்தது.



அவள் வழி தெரியாமல் தவித்து நிற்கும்போதுதான், ஒரு கிராமத்துப் பெண் அந்த வழியாக வந்து கொண்டிருந்தாள்.

அவளை நிறுத்தியவள், "எங்க... இங்கே ஃபாரெஸ்ட் கெஸ்ட் ஹவுஸ் ஒண்ணு இருக்கே... அங்கே என்னை அழைச்சிட்டுப் போறீங்களா? என் கூட வந்தவரை ஒரு யானை திடீர்னு துரத்த ஆரம்பிச்சிடுச்சி... அவர் என்னைக் காப்பாத்தறதுக்காக அதோட கவனத்தை தன் பக்கமா திருப்பிக்கிட்டு ஓட ஆரம்பிச்சிட்டாரு... அவரைக் காப்பாத்தணும்... எங்க ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் அங்கே அவ ரோட கெஸ்ட் ஹவுசிலே இருக்காங்க... ப்ளீஸ்... நான் உடனே அங்கே போய் யாரையாவது கூட்டிக்கொண்டு வரணும்... ஃபாரெஸ்ட் கெஸ்ட் ஹவுஸ் போயிட்டா எனக்கு வழி தெரியும்... அழைச்சிட்டுப் போறீங்களா?" கண்ணீருடன் இறைஞ்சினாள்.

அவளையே ஆச்சர்யமாகப் பார்த்தவள், "அப்ப, அந்த அய்யா சொன்ன பொண்ணு நீங்கதானா? எங்க கிராமத்துல தான் அவரு இருக்காரு.. என் கூட வாங்க... அந்த அய்யா ஓடி வந்து எங்க கிராமத்துக்குள்ளே வந்தவுடனே, தீப் பந்தம் காமிச்சு எங்க ஆட்கள் அந்த யானையை விரட்டிட்டாங்க... அது மதயானை இல்லை! குட்டியோட இருந்ததாலே அதை ஏதாவது பண்ணிடுவீங்களோன்ற பயத்துல, உங்களை விரட்ட ஆரம்பிச்சிருக்கு... அவ்வளவுதான்!"

அவள் முடிப்பதற்குள் ஆவலுடன் அவள் கையைப் பிடித்தவள், "அப்போ... ஆகாஷுக்கு ஒண்ணும் ஆகலையா? நல்லாத்தானே இருக்காரு... தேங்க் காட்! கடவுளே... நான் ஆடிப் போயிட்டேன்... ஒரு நிமிஷம் என் உயிர் என்கிட்டயே இல்லை...!" குமுறலும் அழுகையுமாகக் கூறினாள்.



"வாங்கம்மா போகலாம்... அங்கே அந்த அய்யாவும் உங்களைப் பத்தி தான் எங்க ஊரு பெரியவங்க கிட்டே கவலைப்பட்டு சொல்லிட்டிருந்தாரு... நல்ல வேளை நானே உங்களைப் பாத்திட்டேன்..." என்றபடி சமாதானப் படுத்தி அழைத்துச் சென்றாள்.

* * *

மரங்கள் அடர்ந்த அந்தக் காட்டிற்குள் நடந்தபோது, மனதிற்குள் பயம் வந்தாலும், அங்கு ஆகாஷிற்கு ஒன்று மில்லை என்பதே, பெரும் தைரியமளிப்பதாய்!

அந்த ஊரின் எல்லைக்குள் நுழைந்து குடியிருப்புப் பகுதிகள் தெரிய ஆரம்பித்தவுடனே, அவள் விழிகள் படபடத்துடன் சுழன்று ஆகாஷைத் தேடின.

கூட்டமாக நின்றிருந்த கிராமத்தினரிடம் விடை பெற்றுக் கொண்டிருந்தவனின் விழிகள் எதேச்சையாகத் திரும்பியபோது, வந்து கொண்டிருந்த ப்ரீத்தியின் முகத்தில் நிலைத்தன.

அதற்கு மேல் என்ன நடந்ததென்றே உணராமல் ஓடிச் சென்று அவளை இறுகப் பற்றி அணைத்துக் கொண்டான் அவன்.

விம்மலும் விசும்பலுமாய் அவள் அழ ஆரம்பிக்க, மெதுவாக அவளை வருடி ஆறுதல் படுத்தினான் அவன்.

ஒரு குழந்தை போல் அழுதவளிடம், அடுத்து என்ன சீண்டலாம் என்று ஏனோ குறும்பாய் யோசித்தது மனது!

தன் சுயநினைவற்ற அந்தப் பரிதவிப்பு நிலையிலும், விடாமல் தன்னைப் பற்றிக் கொண்டிருந்த அந்தக் கைகளின் இதமான கூட்டில் அவனுடைய ப்ரியம் தெரிவது போல்!



சிறிது நேர அழுகைக்குப் பிறகு ஓய்ந்து போய் அவள் நிமிர, அவளுடைய முகத்தை இரு கைகளாலும் ஏந்தியவன், "ஏய்... என்ன... இவ்வளவுதானா உன் தைரியம்! பத்திரிகையில் எல்லாரையும் கிழிகிழின்னு கிழிக்கிறே? பெரிய ஜர்னலிஸ்ட்... நான் என்னவோ உன்னைப் பெரிய தைரியசாலின்னு நினைச்சிட்டிருந்தேன்... ம்..." குறும்புடன் கேட்டான்.

அப்போதுதான் அவனது கேலியில் தன்னிலை உணர்ந்து, அவன் அணைப்பிலிருந்து பதைப்புடன் விலகினாள் அவள்.

"நான் ஒண்ணும் எனக்காக அழலை... உங்களுக்கு ஏதாவது ஆகியிருக்குமோன்னுதான்! என்னைக் காப்பாத்தப் போயிதானே நீங்க அந்த யானை கிட்டே மாட்டிக்கப் பாத்தீங்க...!" சலுகையாகச் சிணுங்கினாள்.

"ஓகே... ஓகே... நீ ரொம்ப தைரியசாலின்னு ஒத்துக்கறேன்..." ஒற்றைக் கண் சிமிட்டி அவன் சிரிக்க, அவள் இதயம் நடம் புரண்டது.

பாதுகாப்பான தாயின் சிறகுகளுக்குள்ளிருந்து விலகி வெளியேறி வெளி உலகத்தை தரிசித்த உணர்வு வந்தது... ஆகாஷின் பிடியிலிருந்து விலகியதும்...!

மெல்லத் தன் பார்வையைத் தழைத்து ஈர விழிகளை அவள் துடைத்தபோது, அவன் குரல் கரகரப்பாய் மென்மையாக முணுமுணுத்தது...

"தேங்க்யூ ப்ரீத்தி... எனக்குன்னு அழக்கூட ஒருத்தர் இருக்காங்கன்னு நினைக்கிறப்போ... ஐ யம் ஸோ ஹேப்பி! இந்த நிமிஷம் இந்த உலகத்துலயே ரொம்ப சந்தோஷமான ஒரு மனுஷனா நான் ஃபீல் பண்றேன்..." மயிலிறகாய் வருடின அவன் வார்த்தைகள்!

"அய்யா... உங்களுக்கு ஒரு ஆபத்துன்னவுடனே அம்மா ரொம்ப பயந்துட்டாங்க... அழுதிட்டே வழி தெரியாம மாத்து வழியில வந்துட்டிருந்தாங்க... தன் உயிரே தன்கிட்டே இல்லை... அப்படியே ஆடிப் போயிட்டேன்னு துடிச்சுப் போய் சொன்னாங்க - நீங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்குன்னே மத்தவங்க பிறந்த மாதிரி அவ்வளவு அழகான ஜோடிய்யா! எங்க கண்ணே பட்டுடும் போல இருக்கு" அவளை அழைத்து வந்த பெண் கூறினாள்.

ஒரு நிமிடம் உருகி நின்றவளை, மறு நிமிடமே பழைய நினைவுகள் தகர்த்தன.

சட்டென்று ஒருவித விறைப்புத் தன்மையுடன் நிமிர்ந்தவளை கைப்பிடித்து அழைத்தவன், அந்த மக்களிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

அவளும் மௌனமாகத் தொடர, அந்த நிமிடம் வேகமாக வந்து நின்ற ஸ்கார்பியோவில் இருந்து இறங்கினான் சிக்கந்தர்.

பதட்டத்துடன் முன்னால் வந்தவன், ஆகாஷை அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டான்.

"என்னடா ஆச்சு? செல்லிலே நீ சொன்னவுடனே பதறிப் போயிட்டேன்... முரளியக் கூட எழுப்பலை... உடனே வண்டியை எடுத்துட்டு ஓடி வந்திட்டேன்..." தவிப்புடன் கூறினான்.

"ஒண்ணுமில்லைடா... நான்தான் சொன்னேனே... அந்த யானை குட்டியோட இருந்திருக்கு... அதனாலதான் அதை சேஃப் பண்றதுக்காக வயலண்டா மாறியிருக்கு... நான் மட்டும்னாகூடப் பயந்திருக்க மாட்டேன்... இவளைத்



தப்பிக்க வைக்கணுமே... ஒண்ணும் ஆகாமப் பாத்துக்கணுமேன்ற பயம்தான் உடனே வந்தது... எனி ஹௌ... இப்ப நோ ப்ராப்ளம்!" சோர்வுடன் புன்னகைத்தான்.

"சரி... வா... கிளம்பலாம்!... என்ன ஜான்ஸிராணி மேடம்... உங்க வீர தீரப் பராக்கிரமங்களை எல்லாம் எங்கே தொலைச்சீங்க... இப்படி அழுத முகத்தோட மழையில நனைஞ்ச பறவையாட்டம் ஒடுங்கி நிக்கறீங்க...?" கிண்டலாகக் கேட்டான் சிக்கந்தர்.

அவள் பதிலொன்றும் கூறாமல் மௌனமாகத் தலை குனிவதைப் பார்த்த ஆகாஷ், "ஏய்... அவளைத் தொந்தரவு பண்ணாதே... ஷி இஸ் இன் டெரிபிள் ஷாக்... அது மறைய கொஞ்சம் டைமாகும்... ப்ரீத்தி!... வா போகலாம்" என்று கை நீட்டி அழைத்தான்.

அவனுடைய அக்கறையும் கரிசனமும் ஆழமாக மனதில் பதிய, உடனே தன்னையறியாமலேயே அவன் கரத்தில் தன் கையைப் பதித்தாள் அவள்.

சிக்கந்தரின் பார்வை, வினோத உணர்வும், வியப்புமாய் இருவரிடமும் பதிந்தது... ஏதோ புரிந்தாற்போல், தனக்குள்ளேயே புன்னகைத்துக் கொண்டான் அவன்.

## 21



பிறகு மூவரும் கிளம்பி கெஸ்ட் ஹவுசிற்குச் சென்றபோது, வாசலிலேயே அனைவரும் பதட்டத்துடன் காத்திருந்தனர்.

ஆகாஷ் இறங்கியதுமே, முரளி ஓடிவந்து அவனை அணைத்துக் கொண்டான்.



"என்னடா! தனியாப் போய் மாட்டிக்கிட்டே... ரொம்ப பயந்து போயிட்டோம்... இதுலே ப்ரீத்தி வேற கூட என்னாச்சோன்னு நடுங்கிட்டோம்..." ப்ரீத்தியையும் அவனையும் அலை பாய்ந்த விழிகளுடன் ஆராய்ந்தபடி கூறினான்.

தீபா, அவனுடைய கையைப் பிடித்து அழுதே விட்டாள்.

"வாட்ச்மேன் சொன்னவுடனே என்ன பண்றதுன்னே தெரியலை... வேற வண்டியும் இல்லை... எந்தப் பக்கம் போனதுன்னும் தெரியாம தவிச்சிப் போயிட்டோம் தெரியுமா?" அழுகைக்கு இடையே கூறினாள்.

ப்ரீத்தி அவளை ஆறுதல் படுத்த, அனைவரும் உள்ளே சென்றபோதுதான், அவளுடைய முழங்கையில் இருந்த சிராய்ப்பைக் கவனித்தான் ஆகாஷ்.

"ப்ரீத்தி... நில்லு... இதென்ன காயம்? ஏன் நீ ஒண்ணும் சொல்லலை...? டேவிட்! உடனே ஃபர்ஸ்ட் எய்ட் கிட்டை எடுத்துட்டு வாங்க..." கேர் டேக்கரிடம் இரைந்தான்.

பிறகு, தீபா அவளுடைய காயத்தை சாவ்லானில் சுத்தம் செய்துவிட்டு கை கழுவச் சென்றாள்.

ஆன்ட்டிசெப்டிக் க்ரீமை எடுத்து ப்ரீத்தி காயத்தின் மேல் தடவ எத்தனிக்கும்போதே அதைப் பறித்த ஆகாஷ், "இரு... நான் போட்டு விடறேன்..." என்றபடி மெதுவாகத் தடவி விட்டான்.

மயிலிறகால் ஒத்தடம் தந்த அந்த செய்கை, அடிமனதிலும் அதன் விளைவுகளை செதுக்கின.

இந்தக் காட்சியைக் கண்ட முரளியின் முகம் மட்டும், சுருங்கி கசங்கிப் போனது.



அதன்பிறகு டிபன் சாப்பிட்டுவிட்டு இருவரையும் ஓய்வெடுக்க சொல்லிய முரளி, தனக்குள் யோசனையில் ஆழ்ந்தபடி தோட்டத்திற்குச் சென்றான்.

சிக்கந்தரும், தீபாவும் இந்த சமயத்தைப் பயன்படுத்தி ஹாலில் அமர்ந்து மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தனர்.

தன் அறையில், தனியே படுத்திருந்த ப்ரீத்திக்குத் தான், உறக்கமே வரவில்லை.

ஆகாஷுடைய அக்கறையும், பரிவும், தன் உயிரையும் துச்சமாக மதித்து அவளைக் காப்பாற்றிய தைரியமும், கம்பீரமும் அலை கடலாய் மனம் முழுவதும் பரவி, உயிர் வரை நிறைந்தன.

அதற்கு, அவனிடம் தான் ஒரு சிறு நன்றி கூடத் தெரிவிக்கவில்லையே என்ற குற்றவுணர்வு, முள்ளாய்...!

அவனிடம் ஆயிரம் குறைகளைத் தன் மனம் தேடித் தேடி கண்டு பிடித்து வைத்திருந்தாலும், இப்போது அவனிடம் பழகப் பழக, அந்தக் குறைகளெல்லாம் ஆதவனைக் கண்ட பனியாய் விலகி விட்டதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

இப்போதெல்லாம் அவனுடைய மறு பக்கமும், மனித நேயமும் பிரமிக்க வைப்பதாய்...!

ஆனால் விழிகளுக்கிடையே மாட்டிய சிறு தூசியைப் போல், ஷீலாவின் நினைவுகள் மட்டும், அவளை ஆக்கிரமித்து உறுத்தி வதைத்தன.

அவன் க்ரீமைத் தடவியபோது அந்தத் தீண்டல் சிறகால் வருடியதைப் போல்... ரோமக் கால்களெல்லாம்

ஒருவித சிலிர்ப்புடன் குத்திட்டு நின்றதை, அவனால் இப்போதும் உணர முடிந்தது.

ஏனோ, விடாமல் நெஞ்சுக்குள் மையம் கொள்ள ஆரம்பித்தது. அவன் நினைவு!

அவனை ஞாபகப்படுத்திக் கொள்ளும்போதே, இனம் புரியாத ஏதோ ஒன்று மனதினுள் நிகழ்வதும் புரிந்தது.

அப்படியே உறங்கிப் போனவள், வெகு நேரம் கழித்தே விழித்தாள்.

* * *

ப்ரீத்தி, சோம்பலுடன் கண்களைத் திறந்தபோது, எதிரில் அமர்ந்திருந்தாள் தீபா.

"என்ன, மகாராணி கண் விழிச்சாச்சா? நாங்க எல்லாரும் சாப்பிட்டாச்சு... ஆகாஷ்தான் உன்னை எழுப்ப வேணாம்னுட்டாரு... காலையில நடந்த அதிர்ச்சியும், அலைச்சலும் உன்னை ரொம்ப பாதிச்சிருக்கும்... ரெஸ்ட் எடுக்கட்டும்னாரு...! அதான் பிரியாணியும் ரைய்தாவும் சிப்ஸும் எடுத்துட்டு வந்து இங்கேயே ஹாட் பேக்கில வச்சிருக்கேன்.. அப்படியே ஸ்பூன் போட்டு சாப்பிட றியா?" பரிவுடன் கேட்டாள்.

சோர்வுடன் எழுந்தவள், "ஓ சாரி... மணி ரெண்டாயிடுச்சா... படுத்தது தான் தெரியும்... அப்புறம் அவ்வளவு தான்... ஒரு நிமிஷம் தீபா... இதோ வரேன்" என்றபடி முகம் கழுவி வந்தாள்.

பிறகு சாப்பிட்டுவிட்டு அவள் ஓய்வெடுத்தபோது தான், தீபா மெதுவாக ஆரம்பித்தாள்.

"ப்ரீத்தி... நான் உன்கிட்டே மனசு விட்டு சில விஷயங்களைப் பேசணும்னு நினைச்சிட்டேதான் இங்கே



வந்தேன்... இப்ப உனக்குப் பரவாயில்லையா? பேசலாமா? ஒண்ணும் கஷ்டமா இல்லையே?"

"இல்லை தீபா.. சொல்லு!" அவள் ஊக்கிய பிறகே, தன் காதலைப் பற்றி கூற ஆரம்பித்தாள்.

"நானும்... சிக்கந்தரும் ரெண்டு வருஷமா ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம்.. இது ஆகாஷுக்கு மட்டும்தான் தெரியும்...! இன்னும் அம்மாவுக்கு, அண்ணாவுக்கும் கூடத் தெரியாது... அவங்க ரெண்டு பேரும் நான் ஆகாஷைத்தான் விரும்பறதா நினைச்சிட்டிருக்காங்க..."

தயக்கத்துடன் அவள் நிறுத்த, "நான்கூட அப்படித் தான் நினைச்சேன்..." மெல்லக் கூறினாள் ப்ரீத்தி.

வியப்புடன் நிமிர்ந்த தீபா, "அப்போ என் மேல ஜெலஸா இருந்திருப்பியே?" ஒற்றை விரல் நீட்டி குறும்புடன் கேட்டாள்.

"ஏன்... அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை தீபா... நான் தான் உன்கிட்டே நேத்தே சொன்னேனே!" பதறிப் போனாள் ப்ரீத்தி!

"ம்... நீ சொன்னே... ஆனா நாங்கதான் இன்னிக்கு உங்க ஹீரோவோட வீரச் செயலைப் பத்தி நேரில பாக்கலைன்னாலும், கேட்டுட்டோமே! அந்த நேரத்துலக் கூட தன்னைக் காப்பாத்திக்காம, உன்னைக் காப்பாத்தணும்னு உறுதியா செயல்பட்டிருக்கற அந்த வேகமும், தவிப்பும் உனக்குப் புரியலைன்னாலும் எங்களுக்குப் புரியுது..."

"இல்லை தீபா... அது உன்னோட கற்பனை! என்னைப் பொறுத்த வரைக்கும் நம்மை நம்பி வந்த ஒரு பொண்ணைக் காப்பாத்தணும்கிற மனித நேயமும்,



ரெஸ்பான்சிபிலிட்டியும் தான் அதில் தெரிஞ்சது" உறுதியுடன் மறுத்தாள் ப்ரீத்தி.

"ம்.. சரி.. ஆரம்பத்துல எல்லாருமே இப்படித்தான் ஒத்துக்க மாட்டாங்க..! அப்புறமா எல்லாமே வெளிச்சத்துக்கு வந்துடும்... பாப்போம்! சரி... என் கதைக்கு வரேன்... எங்க காதலுக்கு இன்னிக்கு வரைக்கும் ஆகாஷ்தான் எல்லா விதத்துலயும் உதவறாரு... அவரைப் பாக்கப் போறதா சொல்லிட்டுதான்... அவரோட தான் நான் வெளிய போவேன்... அப்போ சிக்கந்தரும் வருவாரு...! அநேகமா மாசம் ஒரு சண்டே... இல்லைன்னா சில வீக்டேஸ்ல எப்போ ஃப்ரீயா அவர் இருக்காரோ... அதை நானும் சிக்கந்தரும் பயன்படுத்திப்போம்...! இப்பக்கூட வீட்டுல இந்த விஷயத்தை சொன்னப்புறம் என்ன ரியாக்ஷன் இருக்கும்னு தெரியலை... பயமா இருக்கு!"

"ஏன்னா, சிக்கந்தர் நார்மலான மிடில் கிளாஸ்தான்... ஆகாஷை மாதிரி ஒரு கோடீஸ்வரரை மாப்பிள்ளையா எதிர்பார்த்துட்டு இவரை அக்செப்ட் பண்ணிக்கறது அம்மாவுக்கு கஷ்டம்தான்! அதோட எங்களோட மதம் வேற வேற! கல்ச்சர் வேற! பல தடைகள்... எல்லாத்துக்கும் நாங்க ரெண்டு பேரும் ஆகாஷைத்தான் துணை நம்பியிருக்கோம்..."

"உண்மையிலேயே அவர் ஒரு ஜெம் ஆஃப் எ பர்சன் தெரியுமா? நீ அவரை விரும்பறியா இல்லையான்னு தெரியலை! ஆனா உண்மைய நான் சொல்லித்தான் ஆகணும்... ஒரு சாதாரண வேலையில இருந்த இவருக்கு முதலா பணம் போட்டு, லோனும் அரேன்ஜ் பண்ணிக் குடுத்து, அந்த விடியல் பத்திரிகைய வாங்கி அதில ஈடுபட வெச்சாரு ஆகாஷ்! சிக்கந்தர் ஓரளவுக்காவது



அண்ணாவுக்கு சரியான அந்தஸ்தில, தொழில்ல இருக்கட்டுமேன்னு! இவரும் முழு மூச்சா அதில இறங்கி நடத்திட்டிருக்காரு!

"வெளியே பாத்தாதான் ஆகாஷ் ஒரு முன் பளா மாதிரி! ஹீ இஸ் சோ கூல் அண்ட் கம்போஸ்ட்! மனசு முழுக்க நிறைய நல்ல எண்ணங்கள்... மனிதாபிமானம் எல்லாம் நிறைஞ்சவர் அவர்... அது பழகினவங்களுக்கு மட்டும் தான் தெரியும்!

"மாசா மாசம் ஹாஸ்பிடல்லே இருக்கிற அநாதைப் பிணங்களை தன் சொந்த செலவுல அடக்கம் பண்றதாகட்டும்... ரோஸஸ் டே அன்னிக்கு கேன்சர் இன்ஸ்டிட்யூட் போய் டொனேட் பண்ணிட்டு அந்த பேஷண்ட்ஸுக்கு ஆறுதலா இருந்திட்டு வரதாகட்டும்...

"தன்னோட ஒர்க்கர்ஸுக்கெல்லாம் கணக்கு பாக்காம தாராளமா போனஸ் அலவன்ஸ் தாதிலாகட்டும்... ஊரில இருந்து தொடிச்சுப் போய் வர உறவுக்காரங்களுக்கு வேலைக்கு ஏற்பாடு பண்ணித் தந்து எதிர்காலத்துக்கு வழி செய்யறதிலயாகட்டும்... நண்பர்களுக்கு உதவுறதுலயும் சரி... அவரை மாதிரி ஒருத்தரைப் பாக்கவே முடியாது... ஹெவன் லைக் பர்சன்...

"நீ கூட நினைக்கலாம்... இவ இவ்வளவு புகழ் பாடறாளே... ஏன் இவளே ஆகாஷை விரும்பலைன்னு! சின்ன வயசுல இருந்தே ஒண்ணாப் பழகினதாலே அவர் மேல எனக்கு அந்த மாதிரி ஒரு விருப்பமே வந்ததில்லை... முரளி அண்ணா மாதிரி... இன்னும் பாக்கப் போனா ஒரு பெரிய அண்ணா மாதிரி... எல்லா விஷயத்துக்கும் அவர்கிட்டதான் சலுகையாப் போய் நிப்பேன்... அது என் காதல் விஷயம் வரைக்கும் தொடர்ந்தது.

''ஆகாஷும் ஒரு நாள் அதைத்தான் சொன்னாரு... ஜாடையா அம்மா எங்க கல்யாணத்தைப் பத்தி அவர் கிட்ட பேசியிருக்காங்க... அப்போ பதறிப் போய் வந்து என்கிட்டே பேசினாரு... அவர் மனசுலயும் என்னை ஒரு குட்டித் தங்கையாதான் நினைச்சிட்டிருக்கறதா சொன்னப்ப, எனக்கும் பெரிய பாரம் இறங்கின நிம்மதி!

''அருந்ததி அக்காவைப் பாத்தா, எனக்கு எப்பவுமே பொறாமையா இருக்கும்... இப்படி ஒரு சகோதரர் அவங்களுக்கு கிடைச்சிருக்காரேன்னு! ஆனா, ஆகாஷ் என்னை கூடப் பொறாத தங்கையா நினைக்கிறதைப் புரிஞ்சிக்கிட்டப்புறம் அதுவும் போயிடுச்சி... இப்பக்கூட அவர் தான் என் காதலைப் பத்தி வீட்டில பேசணும்... அவர் சொன்னா வீட்டில கேப்பாங்க... என் ஃப்யூச்சரை நினைச்சா பயமா இருக்கு.. ம்.. பாப்போம்..'' ஒரு பெருமூச்சுடன் முடித்தாள்.

உடனே அவளுடைய கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள் ப்ரீத்தி.

''உங்களோட எதிர்காலம் நல்லாருக்கும் தீபா! உங்க காதல் நிறைவேறி, கல்யாணம் முடிஞ்சி நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருப்பீங்க... பாரு!'' அனுசரணையுடன் ஆறுதல் கூறினாள்.

''தேங்க்யூ ப்ரீத்தி... அப்போ நீதான் எனக்கு தோழியா இருக்கணும்... சரியா?'' ஆவலுடன் கேட்டாள்.

''நிச்சயமா...'' உறுதி கூறினாள் ப்ரீத்தி.

பிறகு பொதுவான விஷயங்களில் அவர்களுடைய பேச்சு தொடர்ந்தாலும், ஆகாஷைப் பற்றி அவள் கூறியவற்றையே மனம் அசை போட்டபடி இருந்தது.



சிறிது நேரத்தில் கதவு தட்டப்பட, முரளிதான் அழைத்தான்.

''என்ன... ரெண்டு பேருக்கும் சென்னைக்குக் கிளம்ப மனசு வரலையா? சீக்கிரம் ரெடியாவுங்க... இன்னும் ஒன் அவர்லே கிளம்பணும்... ப்ரீத்தி... எப்படி இருக்கே? இப்போ பரவாயில்லையா?'' அவளிடம் அக்கறையுடன் விசாரித்தான்.

''ம்... நல்லாருக்கேன் முரளி'' மெதுவாகக் கூறிவிட்டு, துணிகளை அடுக்க ஆரம்பித்தாள் அவள்.

அவளையே யோசனையுடன் பார்த்துவிட்டு அவன் கதவை மூடிவிட்டுச் செல்ல, தீபாவின் பார்வையும் யோசனையுடனே அவளை நோக்கியது.

''என் ப்ரீத்தி... அண்ணாவைப் பத்தின உன் ஒபினியன்லே எந்த மாற்றமும் இல்லையே...?'' மெல்லக் கேட்டாள்.

வேகமாக நிமிர்ந்தவள், ''வேற மாதிரி சொல்லவா? நீங்க எப்படி ஆகாஷைப் பத்தி நினைக்கறீங்களோ... அதே உணர்வுதான் எனக்கும் உங்கண்ணாவைப் பாக்கறப்ப வருது... இப்பப் புரியுதா?'' தலை சரித்துக் கேட்டாள்.

''ம்... புரியுது... வேற என்னவோ ஒண்ணு இருக்குன்னும் யோசனையா இருக்கு... ஆனா நீதான் ஒத்துக்க மாட்டேங்கறே...? ம்... இரு நானே கண்டு பிடிக்கறேன்...'' சுட்டு விரலைக் காட்டியபடி எச்சரித்தாள்.

''சரி! எனக்கென்ன பயம்? ஏதும் இருந்தாத்தானே கண்டு பிடிக்க முடியும்.?''

அசுவாரசியமாகக் கூறிவிட்டு தோள்களைக் குலுக்கிய போது, உள்ளே ஒரு குரல் கேட்டது.





'அடிப் பெண்ணே! உன் மனதில் இன்று சிறு சலனம் ஒன்று புதிதாய் ஏற்படவில்லை...? உண்மையைச் சொல்...! ஆகாஷ் அருகிலிருக்கும்போது நீ தடுமாறிப் போகவில்லை...? அவன் மார்பில் சாய்ந்தபோது, நாம் பாதுகாப்பாய் வந்த இதம் தெரியவில்லை? உன் முழங்கை நீவி அவன் மருந்திட்டபோது, உன் உள்மனம் சிலிர்க்கவில்லை...?'

மனதிற்குள், ஆயிரம் கேள்விகள் நைல் நதியாய் நீள துவங்கின.

உடனே செல்லமாக அதட்டி அதை அடக்கியவள், பிடிவாதமாக ஷீலாவை நினைவிற்கு கொண்டு வந்தாள்.

கிளம்பும்போது, அனைவரும் கெஸ்ட் ஹவுஸின் முன்னால் ஒன்றாக நின்று போட்டோ எடுத்துக் கொண்டனர்.

போலராய்டு கேமிரா என்பதால், ஆளுக்கு ஒரு போட்டோவை, ஞாபகார்த்தமாக ஆகாஷ் கொடுத்துவிட, அதைத் தன் கைப்பைக்குள் பத்திரப் படுத்தினாள் அவள்.

ஏனோ, அங்கிருந்து கிளம்பவே அவளுக்கு மனமில்லை!

22



பிறகு காரில் திரும்பி வரும் போது, அனைவரிடமுமே ஏதோ ஒருவித இறுக்கமும் அமைதியும் தெரிய, அந்தப் பயணமே நிசப்தம் நிறைந்ததாய்...!

இனிமேல் ஆகாஷை எப்போது சந்திப்போம் என்ற கேள்வி, பெரும் சிகரமாய் எழுந்து நின்றது!



அவளுக்கு, தான் இன்னும் நன்றி கூறவில்லையே என்ற குற்றவுணர்ச்சி பெரிதாய்!

சென்னைக்கு சென்று முதலில் முரளியையும் தீபாவையும் இறக்கி விட்டுவிட்டு, பிறகு ஹாஸ்டலுக்குச் செல்லும் வழியில் சிக்கந்தரிடம் திடீரென்று பேச ஆரம்பித்தான் ஆகாஷ்.

''சிக்கந்த்... உங்க விஷயம் பத்தி முரளி கிட்ட தீபா எப்போ பேசறேன்னா?'' யோசனையுடன் கேட்டான்.

''தெரியலை ஆகாஷ்... கூடிய சீக்கிரமே பேசிடுவான்னு நினைக்கிறேன்... அப்புறம் ஏதாவது ப்ராப்ளம் வந்தா நீ தான் அதைத் தீர்த்து வைக்கணும்.''

''ம்... எதுவும் வராது... வந்தா நான் பாத்துக்கறேன்.''

''அது சரி... நீ எப்போ உன் ஹீரோயின் கிட்டே உன் மனசை சொல்லப் போறே? ம்... அதுக்கு நான் ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா?'' குறும்புடன் வந்தது சிக்கந்தரின் குரல்.

''ம்... சொல்லணும்... பாப்போம்... முதன் முதலா என் மனசுல ஒரு பொண்ணுக்கு இடம் குடுத்திருக்கேன்... அவளும் என்னை விரும்பறான்னு தெரிஞ்சிடுச்சு... கூடிய சீக்கிரமே, நானும் உனக்கு அந்த குட் நியூஸ் சொல்வேன்னு நினைக்கிறேன்.''

ஆகாஷ் கூறியவுடன், ப்ரீத்தியின் மனம் சட்டென்று வறண்டு போனது. சட்டென்று ஷீலாவின் நினைவு வந்தது...

அவன் வாழ்க்கையில் பல பெண்கள் இருப்பதாக நினைத்தபோது முன்பு கொதித்த மனது, இன்று ஒரே ஒரு

பெண் அவன் இதயத்தில் தடம் பதித்து விட்டாளோ என்றெண்ணித் துடித்துத் தவித்துப் போனது.

"என்ன ப்ரீதி... காலையிலருந்து ரொம்ப அமைதியா இருக்கீங்க... பயந்திட்டீங்களா?" சிக்கந்தர் கேட்டான்.

"ம்.. கொஞ்சம்! நான் தைரியசாலின்னு இவ்வளவு நாள் நினைச்சிட்டிருந்தேன்.. சாவோட விளிம்புக்குப் போய் எட்டிப் பார்த்த பிறகுதான் தெரியுது... ஒவ்வொரு மனுஷனும் எவ்வளவு கோழைன்னு! ப்ச்... அதுவும் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ஒரு பாகனை மத யானை ஒன்னு வதம் பண்ணி சாகடிச்சதை எல்லா மீடியாவிலும் போட்டுக் காண்பிச்சது. இன்னும் மனசு அகலாம ரணமா இருக்கு!"

மெதுவாகக் கூறியவளை இடைமறித்தது. ஆகாஷின் குரல்!

"இல்லை... இவ ரொம்ப தைர்யமானவ சிக்கந்த்...! அதை இன்னிக்கு காலையிலதான் நான் பார்த்தேன்... உன் முன்னாடி ஒரு யானை அட்டாக் பண்ண வந்தா நீ என்ன செய்வே... உடனே ஓடத்தானே முயற்சிப்பே... அந்த நிமிஷத்திலயும் இவ என்னை விட்டுட்டுப் போக மாட்டேன்னு ஒரே அடம்...! அப்புறம் நான் தான் சரிவில இவளை தள்ளி விட்டுட்டு வேற பக்கம் ஓடினேன்... ஐ திங்க் ஷி இஸ் ஸோ ப்ரேவ்."

பெருமையுடன் அவன் கூற, சிக்கந்தரும் வியப்புடன் கேட்டபடி காரை ஓட்டினான்.

"அதெல்லாம் ஒன்னுமில்லை... அதுக்கப்புறம் உங்களுக்கு என்னாகியிருக்குமோன்னு நான் ரொம்ப பயந்து போயிட்டேன் தெரியுமா?"



"அதுக்குப் பேர் பயமில்லை ப்ரீதி... இவன் மேல உள்ள அக்கறைதான் உன்னை தவிக்க வெச்சிருக்கு!" அதுக்குப் பேர் மனிதாபிமானம்... இல்லை... வேற பேர் கூட சொல்லலாம்."

சிக்கந்தர் கூறியதுமே விதிர்த்துப் போன மனதை அடக்கியவள், உடனே மௌனமானாள்.

அந்த நிமிடம், அவளுடைய உயிரிலும் உணர்விலும் முதன் முதலாக உணரப்பட்டது காதல்.

மறு நிமிடமே, இந்த எதிர்காலமில்லாத காதல் தனக்குள் ஏன் வந்ததென்றே கோபமும், அவன் வேறு ஒரு பெண்ணை விரும்பியதாக சற்று முன் கூறிய வார்த்தைகளும் சுனாமியாய் சுழன்று அவளை சுருட்டிப் போட்டன.

இதயத்தின் பரிதவிப்பு விழிகளில் கண்ணீராய் ஜனிக்க, மனதில் பெரும் பாரத்துடன் ஜன்னல் வழியே வெளியே திரும்பிக் கொண்டாள்.

* * *

பிறகு, எப்படி ஹாஸ்டல் வாசலில் வந்து இறங்கினாள் என்பதே அவளுக்கு நினைவில்லை.

அவர்களிடம் விடைபெற்று அறைக்கு வந்து படுத்தவள் தான்... திடீரென்று விழித்தால் உடம்பு கனகன வென்று சூடாகி விழிகள் சிவந்திருந்தன!

அவள் அனத்துவதைக் கண்டு, உசுப்பி எழுப்பினாள் சுகன்யா.

"ப்ரீத்தி... ஏன் இப்படி அனத்துறே? அய்யோ உடம்பு இவ்வளவு சூடா இருக்கு... இரு ஒரு பாராசிட்டமால்



தரேன்... போட்டுக்க!" என்று எழுப்பி மாத்திரை போட்டுக் கொள்ள வைத்தாள்.

அவளுக்கு நடந்த நிகழ்ச்சிகள் எதுவும் தெரியாததால், தன் தோழிக்கு என்னவாகியிருக்குமென்ற யோசனை நெருடலாய்!

ஹாஸ்டலுக்கு வரும்போதே நோமாகி விட்டதாலும், அன்று முழுவதும் நேர்ந்த அதிர்ச்சியிலும் அலுப்பிலும் வந்தவுடனே ஒரு நைட்டியை மாட்டிக் கொண்டு படுத்து விட்டாள் ப்ரீத்தி.

விடிந்த பிறகு விசாரிக்கலாம் என்று சுகன்யாவும் உறங்கி விட்டாள்.

காலையில் ப்ரீத்தியால் எழவே முடியவில்லை.

உடனே அலுவலகத்திற்குப் போன் செய்து விபரம் கூறி வைத்தால், சுகன்யா பிடித்துக் கொண்டாள்.

அவளிடம் நடந்த விஷயங்களைக் கூறியபோது, அவளுக்கும் பெரும் வியப்பு!

"ஏய்...! என்ன பெரிய அட்வென்ச்சர்லேருந்து தப்பிச்சி வந்திருக்கே! சொல்லவேயில்லை? எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது... இப்போ சரியாயிடுச்சி!"

"என்னடி சந்தேகம்?"

"ம்.. நீ அந்த ஆகாஷை விரும்பறியோன்ற சந்தேகம்..!"

"ஏதாவது உளறிட்டிருக்காதே... எனக்கு டயர்டா இருக்கு... நான் தூங்கணும்" கூறிவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டாள் அவள்.

சுகன்யாவின் கூரிய பார்வை யோசனையுடன் அவள் முதுகையே துளைத்தது.



"சரி! நான் பிரட், ஹார்லிக்ஸ், மாத்திரை எல்லாம் வாங்கி ஆயாம்மா கிட்டே குடுத்திட்டுப் போறேன்... ஏது பிடிக்குதோ கொஞ்சமாவது சாப்பிட்டுட்டுப் படு! சரியா?"

அக்கறையுடன் அவள் அதட்ட, சரியென்று தலையசைத்தாள் ப்ரீத்தி.

பிறகு ரொட்டியும் ஹார்லிக்ஸும் சாப்பிட்டு விட்டு மாத்திரை போட்டதும் ஆயாம்மாவிடம் தன்னை தொந்தரவு செய்ய வேண்டாமென்று கூறிவிட்டுப் படுத்து விட்டாள்.

* * *

அன்று மதியம், அவளுடைய செல் வெகு நேரம் ஒலித்தது.

அவள் அதை உணராமலே உறங்கிக் கொண்டிருக்க, அவளைத் தேடி நேரிலேயே வந்து விட்டாள் தீபா.

அலுவலகத்திற்கு அவள் வரவில்லையென்று முரளி கூறியவுடன், தீபா போன் செய்தால், அதையும் அவள் எடுக்கவில்லை.

மாலையானதும் காரை எடுத்துக் கொண்டு ஹாஸ்டலுக்கே வந்தாள் அவள்.

வார்டனிடம் அனுமதி பெற்று அறைக்குச் சென்ற போது, ஓய்ந்து போய் படுத்திருந்தாள் ப்ரீத்தி.

"ஹாய் தீபா... நீ எங்கே இங்கே?" அவளைக் கண்டதும் வியப்புடன் கேட்டாள்.

"உன்னோட பேசலாம்னு ஆஃபீஸுக்குப் பேசினேன்... அண்ணா நீ வரலைன்னாங்க... செல் அடிச்சேன்.. நீ எடுக்கலை... அதான் இந்த சர்ப்ரைஸ் விசிட்!" என்றபடி அருகில் அமர்ந்தாள்.

"ம்... ராத்திரில இருந்து ஜுரம்... அதான் அப்படியே அசந்துட்டேன்..." சோர்வுடன் முணுமுணுத்தாள் ப்ரீத்தி.

"டாக்டரைப் பாத்தியா? முழங்கை காயம் ஏதும் செப்டிக் ஆகி இருக்கப் போகுது... வா... கிளம்பு!" பதட்டத்துடன் விசாரித்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை தீபா... அது ஆறவே ஆரம்பிச்சிடுச்சி... சின்னக் காயம் தானே? நேத்தைய ஷாக், அலுப்பு எல்லாம் சேர்ந்து உடம்பு அழண்டு போயி டுச்சின்னு நினைக்கிறேன்! நாளைக்கே நார்மலா யிடுவேன்!"

"என்னவோ உன்னைப் பாக்கணும்போல இருந்தது... அதான்..! வீட்டில எல்லாத்தையும் சொல்ல வேண்டிய நேரம் வந்துடிச்சின்னு நினைக்கிறேன்..." நகம் கடித்த படிக் கூறினாள் தீபா.

"ஏன் தீபா... என்னாச்சு?"

"நேத்து, எங்க அம்மா அமெரிக்காவுக்கு போன் பண்ணி அருந்ததி அக்கா கிட்டே எல்லாம் கேட்டாங்களாம்... அவங்களும் ஆகாஷ் கிட்டே இது பத்திப் பேசறேன் னாங்களாம்... காலையில அம்மா, அண்ணாகிட்டே சொல்லிட்டிருந்தாங்க... எனக்கு உடனே பயமாயிடுச்சி... ஆகாஷுக்குப் போன் பண்ணினா அவர் பிஸி... ஏதோ கான்ஃப்ரென்ஸில இருந்தாரு... சிக்கந்தர் கிட்டே கேட்டா, உடனே வீட்டில சொல்லிடுங்கறார்... அதான் உன் கிட்டயும் யோசனை கேட்கலாம்னு வந்தேன்..."

சிறிது நேரம் யோசித்தவள், "எனக்கு தெரிஞ்சு நீ சொல்றதை விட முதல்லே ஆகாஷ் கிட்டே உங்கண்ணா பேசட்டுமே! அதுக்கு அவர் என்ன சொல்றாருன்னு



பார்ப்போம்! அதை விக்க உன்னோட ஒபீனியனையும் கேட்பாங்க இல்லையா! அப்போ உன் முடிவுல உறுதியா இரு!" அழுத்தமாகக் கூறினாள்.

"ம்... எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலை! பயமா இருக்கு... அம்மா கலப்பதுல எங்க காதலை ஏத்துக்க மாட்டாங்கன்னு தோணுது... ஆகாஷைத்தான் எல்லாத் துக்கும் நம்பியிருக்கேன்..."

"காதலிக்கிறபோது இந்த பயமெல்லாம் எங்கேயோ ஓடிப்போய் ஒளிஞ்சிக்குது இல்லை... வீட்டில தெரியும் போது மட்டும் பயம் வந்துடுது... ம்?" தலையைச் சரித்தபடி கேட்டாள் ப்ரீத்தி.

"இரு... இரு! ஒரு நாள் நீயும் லவ் பண்றேன்னு வந்து நிப்பே பாரு... அப்ப நான் பாத்துக்கறேன்."

"ஊஹூம்.. அது மட்டும் நடக்கவே நடக்காது!" தன் மனதை மறைத்துப் பொய் கூறினாள் அவள்.

"பார்க்கலாம்... எனக்கென்னவோ ஆகாஷ் உன்னை விரும்பற மாதிரித் தோணுது... உன்கிட்டே ஏதாவது ப்ரபோஸ் பண்ணினாரா?"

"சும்மா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே தீபா!"

"அதானே... அந்த சிஷ்ய சிருங்கராவது காதலிக்கிற தாவது..." கூறிவிட்டு சட்டென்று சிரித்தாள் தீபா.

தான் ஆகாஷை விரும்புவதையும், அவன் வேறு ஒரு பெண்ணை விரும்புவதையும் அறிந்தால், தீபா என்ன சொல்வாள் என்று நினைக்கும்போதே, இதழோரம் ஒரு விரக்திப் புன்னகை ஜனித்தது.

தன் இதயத்தில், முதல் காதல் அரும்பிய அன்றே உதிர்ந்து வாடியதும்... காதல் கேட்டு வாங்குகின்ற



பொருளல்ல... உயிரிலிருந்து இயல்பாய் பொங்கி எழ வேண்டும் என்பதும் புரிந்தது!

மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

சிறிது நேரம் கழித்து தீபா கிளம்பிச் சென்றாள்.

* * *

பிறகு கிடைத்த தனிமையில், மனம் இந்த இரண்டு நாட்களில் ஆகாஷுடன் கழித்த பொழுதுகளை, சுகமாய் அசை போட ஆரம்பித்தது.

மெல்ல யோசித்தபோது, தன்னை அவன் காப்பாற்றிய தற்கு ஒரு சிறு நன்றி கூட இதுவரை தான் தெரிவிக்க வில்லை என்பது நினைவிற்கு வந்தது.

உடனே அவனுடைய விசிட்டிங் கார்டை எடுத்துப் பார்த்து, அதிலிருந்து செல் நம்பருக்குத் தொடர்பு கொண் டாள் ப்ரீத்தி.

முதல் அழைப்பிலேயே எடுத்தவனுடைய ஆழ்ந்த குரல் "யெஸ்... ஆகாஷ் ஹியர்" என்றது கம்பீரமாக!

"நான்... ப்ரீத்தி பேசறேன்... ம்... தேங்க்ஸ்..." மெல்லிய குரலில் கூறினாள்.

"எதுக்கு...?"

"எல்லாத்துக்கும்...!"

"அப்படின்னா...?"

"வீக் எண்ட் ட்ரீட்டுக்கு... என்னைக் காப்பாத்தின துக்கு...!"

"ஓ... ஞாபகம் இருக்கா? அதுக்கு இப்பவாவது தேங்க்ஸ் சொல்லத் தோணிச்சே! நான் உன்னோட நன்றியை



எதிர்பார்த்து இதைச் செய்யலை! அந்த நிமிஷம் என் மனசுல என்னைக் காப்பாத்தணும்கிறதை விட, உனக்கு ஒண்ணும் ஆகாமப் பாத்துக்கணுமேங்கிற தவிப்புதான் முதல்லே வந்தது..!

"எனிவேஹ... லேட்டா சொன்னாலும் உன் தேங்க் ஸுக்கு வெல்கம்! ஆனா என்கிட்ட நன்றி சொல்றது கூட அவ்வளவு கஷ்டமா ப்ரீத்தி... ம்...?" குறும்புடன் கேட் டான்.

"சாரி... எனக்கிருந்த ஷாக்கில மறந்திட்டேன்... பை!" என்று உடனே வைத்து விட்டாள் அவள்.

அந்த நொடி தன்னுடைய சுவாசத்தில் அவனும் இணைந் திருப்பது தெரிந்தது. பிரிவின் ஏக்கப் பரிசாய், அவ னுடைய மூச்சுக் காற்றை கடன் வாங்கிச் சுவாசிக்கவும் ஆசை வந்தது!

அன்றைய இரவு உறக்கமில்லா இரவாய்...!


கண்களுக்குள், அவனுடைய உருவமே நடனமிட, நித்திரை தொலைத்துப் பரிதவித்தாள் அவள்.

காலையிலிருந்து படுத்தே இருந்தது பெரும் அலுப்பைத் தர, சோம்பலுடன் எழுந்து பால்கனிக்குச் சென்றாள்.

நிலவு மட்டும் வானில் தனித்திருக்க, பனிமூட்ட இரவில், விண்மீன்கள் விழி மூடி இருந்தன.

ஆகாஷ், இந்த நேரம் விழித்திருந்தால், அவனும் இந்த நிலவைத் தானே பார்த்துக் கொண்டிருப்பானென்ற சிலிர்ப்பு, மனதில் சுகமாய் பரவியது.

## 23



பின்வரும் நாட்களில், பொழுதுகள் நரகமாகத் துவங்கின.

கலைந்து போகப் போகும் கானல் நீரிது என்று தெரிந்தாலும் புலிகள் புன்னகை செய்து புள்ளி மான்களை விழ்த்துவதோ காதல் என்ற புதிர் கேள்வி ப்ரீத்தியின் மனதில்!

அந்த வாரம் முழுவதும், வேகமாகச் சென்றது.

அவன் பெயரை நினைத்தாலே... அவன் பெயரொன்றே அவளுக்குள் உற்சாகம் ஊற்றெடுக்கப் போதுமான ஒன்றாய்!

தான் இப்படி மாறிப் போய் விடுவோமென்று அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை...!

இந்த மாற்றம் எப்படி வந்தது என்ற கேள்விக்கும், அவளிடம் விடையில்லை.

மனதிற்குள் ஊழிக் காற்றாய் அவன் நினைவுகள் சேதம் விளைவிக்க, தனக்குள்ளேயே போராடித் தோற்றுப் போகும் நிலையில் அவள் இருந்த போதுதான், ஒரு நாள் முரளி அவளை அழைத்தான்.

காலை பதினோரு மணியளவில், ஒரு பேட்டி எடுப்பதற்காக அவள் வெளியே செல்லக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

அன்று, வழக்கத்திற்கு மாறாக முரளி அலுவலகத்திற்குத் தாமதமாக வந்திருந்தான்.

திடீரென்று அவனிடமிருந்து இண்டர்காமில் அழைப்பு வரச் சென்றபோது தான், அவன் எதற்காக அழைத்திருக்கிறானென்பது புரிந்தது.



உள்ளே நுழைந்ததும், "குட் மார்னிங் முரளி... என்ன விஷயம்...?" இயல்பாகக் கேட்டபடி அவனெதிரில் அமர்ந்தாள்.

"நீ இப்ப ஃப்ரீதானே? உன் கூடக் கொஞ்சம் பர்சனலாப் பேசணும்..." யோசனையுடன் கூறினான்.

"நான் இப்ப ஒரு பேட்டி எடுக்கப் போயிட்டிருக்கேன்... ஏதாவது முக்கியமான விஷயமா?"

"அந்த இண்டர்வியூவுக்கு சரிதாவை அனுப்பிடலாம்... ஒரு நிமிஷம் இரு..." என்றவன் போனை எடுத்து அவளிடம் விபரம் கூறி, அங்கு சென்று வரும்படி சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்போது அவளுடைய செல் ஒலித்தது.

எடுத்தால், தீபாதான் பேசினாள்.

"ப்ரீத்தி! நான் ஒரு பெரிய ப்ராப்ளத்துல மாட்டிட்டிருக்கேன்... வீட்டுல விஷயத்தை சொல்லிட்டேன்...! அம்மா ஒரே ரகளை... அண்ணாவும் இதை எதிர்பார்க்கலை...! சிக்கந்தரைப் பத்தி சொன்னவுடனே ரொம்ப கோபமாயிட்டாங்க...

"அவங்க எதிர்பார்த்திருந்ததே வேற இல்லையா? ஆகாஷை நான் விரும்பலைன்றது ஒரு பக்கம்னா, நான் சிக்கந்தரை காதலிச்சது அவங்களை மிருகமாக்கிடுச்சு! பயங்கர சண்டை! அதெல்லாத்தையும் விட பெரிய பிரச்னை ஒண்ணு... அதை நீ ஒருத்தி தான் சால்வ் பண்ண முடியும்! ஏய்... ஏன் பதிலே பேச மாட்டேன்றே...?" பதைப்புடன் கேட்டாள்.

"நான் இப்ப முரளியோட பேசிட்டிருக்கேன்... கொஞ்ச நேரம் கழிச்சிப் பேசவா?" யோசனையுடன் அடிக் குரலில் கேட்டாள்.



"தோ... அதுக்கு முன்னாடி நான் உன்கிட்டப் பேசியாகணும்... ப்ளீஸ்... நான் சொல்றதை மட்டும் கேட்டுக்க... நீ எதுவும் அவர் முன்னாடி திரும்பிப் பேச வேண்டாம்..." என்று கூறித் தொடர்ந்து பேசிய விஷயம், அவள் தலையில் இடியாய் இறங்கியது.

தீபா தன்னைப் பற்றி ஏதுவோ கூறப் போகிறாளென்று காத்திருக்க, அவள் கூறிய விஷயமோ, ப்ரீத்தியை சுழற்றிப் போடுவதாய்!

"ப்ரீத்தி.. என்னை மன்னிச்சிடு... என் சுய நலத்துக்காக ஒரு பொய் சொல்லிட்டேன்... சிக்கந்தரை மறந்துட்டு நான் ஆகாஷைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு அம்மா ரொம்ப வற்புறுத்தினாங்க...! அப்பதான்... நான்... ஆகாஷ் வேற ஒரு பொண்ணை விரும்பறதா சொல்லிட்டேன்."

"சரி.. அதுனால எனக்கு என்ன கஷ்டம் தீபா...! எனக்கும் அது தெரியும்!" அடிக் குரலில் பேசினாள்.

அவள் பேசும்போதே தொழில் ரீதியாக முரளிக்கு ஒரு முக்கியமான போன் கால் வர, அவன் அதில் பேச ஆரம்பித்தது, அந்த நேரம் பெரும் வசதியாய்...!

"அதில்லை... அந்தப் பொண்ணு நீதான்னு நான் அண்ணாகிட்டே சொல்லிட்டேன்... அப்ப அவர் முகத்துல பாக்கணுமே ஒரு அடி பட்ட வலியை...! முரளி அண்ணாவும் உன்னை விரும்பறாரோன்னு நான் நினைச்சது, உண்மைதான் போலருக்கு!"

தொடர்ந்து அவள் அளித்த அதிர்ச்சிகள், உணர்வுகளை மறத்துப் போகச் செய்தன.



மீண்டும் கேட்ட அவள் குரல், ப்ரீத்தியை இவ்வுலகிற்கு மீட்டு வருவதாய்!

"ஸாரி ப்ரீத்தி... எனக்காக... என் எதிர்காலத்துக்காக நான் சொன்ன இந்தப் பொய், உன் வாழ்க்கையை எந்த விதத்திலும் பாதிக்காது... இந்த விஷயம் நமக்கு மட்டும்தானே தெரியும்... அண்ணாகிட்ட மட்டும் இல்லைன்னு மறுத்திடாதே... ப்ளீஸ் எனக்காக!"

சட்டென்று, உடைந்து போய் அவள் அழுவது போலவும் கேட்டது.

இருதலைக் கொள்ளி எறும்பாய் தகிக்க மனதை அடக்கியவள், "நான் வெச்சிடறேன்... அப்புறம் பேசறேன்..." என்று வைத்தாள்.

முரளியும், அப்போது தான் பேசி முடித்து போனை வைத்துவிட்டு, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன... தீபாவா?" என்று அவன் கேட்கும்போதே, மறுப்பதற்கும் யோசிப்பதற்கும் கூட நேரமின்றி, அவள் இப்படி ஒரு இக்கட்டில் தன்னை மாட்டி விட்டு விட்டாளே என்ற கோபம் ப்ரீத்தியின் மனம் முழுவதும் நிறைந்தது.

ஆமாமென்று அவள் தலையசைத்ததும், "ம்... நான் உன்கிட்டப் பேசணும்னு சொன்னது தீபாவைப் பத்தித்தான்! நாங்க எல்லாரும் அவ ஆகாஷைத்தான் விரும்பறான்னு நினைச்சிட்டிருக்கும்போது, திடீர்னு இன்னிக்குக் காலையில ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுட்டா... நானே இது பத்தி ஆகாஷ்கிட்டே பேசலாம்னு இருந்தேன்... அதுக்குள்ளே இவ சிக்கந்தரை விரும்பறதா சொல்றா... என்னாலயும், அம்மாவாலயும் இதை நம்பவும்

முடியலை... நம்மால இருக்கவும் முடியலை...! அம் மாவுக்குத்தான் பாவம்... ரொம்ப ஷாக்! ஒரு முஸ்லீமை மாப்பிள்ளையா ஏத்துக்கறதுன்னா..."

சட்டென்று இடைமறித்தாள் ப்ரீதி.

"என் முரளி... அவங்களும் மனுஷங்க தானே...! மதம் காதலுக்கு தடையாகறதிலே எனக்கு உடன்பாடில்லை... ஒரு மனுஷனுக்கு ஜாதி மதத்தைவிட நல்ல குணம், மனுஷ நேயம், சக மனுஷங்களை நேசிக்கற சுபாவம் இதெல்லாம் முக்கியமில்லையா? அந்த விஷயத்துல மிஸ்டர் சிக்கந்தர் அருமையான ஒரு மனுஷர்னு நான் நினைக்கிறேன்..."

"ம்... எனக்கும் சிக்கந்தரை நல்லாப் பழக்கம்தான்... நீ சொல்ற மாதிரி ரொம்ப நல்லவனும் கூட! ஆனா மனசல ஊறிப்போன பழைய சம்பிரதாயங்களைக் களையறது நமக்கு சுலபமா இருக்கலாம்... ஆனா அது நம்ம மூத்த தலைமுறைக்கு கஷ்டம்! அதோட ஆகாஷையே மாப் பிள்ளையா கற்பனை பண்ணிட்டிருந்தவங்களுக்கு இது நிச்சயமா பெரிய அதிர்ச்சிதான்..." ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

"எனக்குப் புரியுது... நான் அவங்களைக் குத்தம் சொல் லலை... தீபா வேற ஒருத்தரை விரும்பினப்புறம், நீங்க அவ எதிர்காலத்தையும் சந்தோஷத்தையும் தான் யோசிச்சு முடிவு பண்ணணும். கல்யாணம் செஞ்சிக் கிட்டு வாழப் போறவ அவ... அவளோட விருப்பமும், முடிவும்தானே முக்கியம்... அதைச் சொன்னேன்!"

"எனக்குப் புரியற விஷயம் அம்மாவுக்குப் புரியாது ப்ரீதி! அவங்களுக்கு தான் நினைச்சது நடக்கலைன்ற



கோபம் வேற! நாம இளைய தலைமுறை! காதல், கலப்புத் திருமணம் இதெல்லாத்தையும் மனசு சுலபமா ஏத்துக்கும்... ஆனா வயசானவங்க தங்களுக்குன்னு சில வரைமுறைகள் வெச்சிருப்பாங்க... அந்த வட்டத்துக் குள்ளே வாழறவங்களை வெளியே வர வைக்கிறது ரொம்பக் கஷ்டம்!" நிறுத்தியவன் ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தான்.

"ம்... ஆனா, ஆகாஷால மட்டும்தான் அவங்களை சமாதானப்படுத்த முடியும்னு நான் நினைக்கிறேன்... இனிமேதான் நான் அவன்கிட்டப் பேசணும்... அப்புறம்... இன்னொரு விஷயம்..." தயங்கியபடி நிறுத்தினான்.

அவன் என்ன கேட்கப் போகிறானென்பது தெரிந்த வுடனே அவள் நெஞ்சம் படபடத்தது.

தன் மனம், கண்ணாடி போல் வெளிப்பட்டு விடுமோ வென்ற பயத்தில், இதயம் தாறுமாறாய் துடிக்க ஆரம் பித்தது.

"என்ன...?" என்றபடி பார்வையைத் தழைத்துக் கொண்டவளையே, ஒரு கணம் ஆழ்ந்து நோக்கியவனின் முகம், சொல்லொணாத வேதனையிலும் வலியிலும் சுருங்கியது.

"நீ... ஆகாஷை... இல்லை... ஆகாஷ் உன்னை... சே... ரெண்டுமே ஒண்ணு தானே!... என்ன ஒரு முட்டாள் பாரு நான்! அது உண்மையா ப்ரீதி!" தவிப்புடன் கேட்டான்.

ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு, முதல் முதலாக தன் மனதில் பொக்கிஷமாய் சேமிக்க ஆரம்பித்திருந்த நேசத்தின் விளைவாக, அவனை மெல்ல நிமிர்ந்து பார்த்து, 'ஆம்' என்பது போல் தலையசைத்தாள் அவள்.





அவன் முகம் உடனே இறுகிக் கசங்கிவிட, அதைக் கண்டதும் தாங்க முடியாமல் எழுந்தாள் அவள்.

"நான் போகலாமா?" அவள் மெதுவாகக் கேட்டபோது,

"ஹூம்... இதை நான் எதிர்பார்க்கலை... தீபா பொய் சொல்றான்னு நினைச்சேன்...! எவ்வளவு சுலபமா ஏமாந்துப் பட்டிருக்கேன்... பெண்களோட மனசு ஆழம் காண முடியாத கடல் மாதிரின்னு யாரோ சொன்னது இப்ப நினைவுக்கு வருது..! இதிலே ரெண்டு விதத்திலயும்... ஹூம்... நீ போகலாம்" கூறிவிட்டு வேகமாக எழுந்து வெளியே சென்றான் அவன்.

மனம் தீப்பட்டாற்போல் துடித்தது... தான் கூறியது பொய்யில்லை என்று அவளுடைய உள் மனதிற்கு தெரிந்தாலும், முரளி தன்னை விரும்பியிருப்பது பெரும் வேதனையாய்!

திடீரென்று நினைவுகள் ஆகாஷிடம் நீந்திச் செல்ல, சட்டென்று தூக்கி வாரிப் போட்டது.

இதை அறிந்தால் அவன் தன்னைப் பற்றி என்ன நினைப்பான்... அவனோ வேறு ஒரு பெண்ணை விரும்பு பவன்... அவன் இதை எப்படி ஏற்றுக் கொள்வானென்ற கேள்வி கண் முன்னால் விசுவரூபமெடுத்து நின்றது.

தீபாவிடம் உடனே பேச வேண்டுமென்ற வேகம் வர, மறு நிமிடமே அழைத்தாள்.

எடுத்தவுடனே, "அண்ணா என்ன சொன்னாங்க ப்ரீதி...?" ஆவலுடன் கேட்டாள்.

"எல்லாமே சொன்னாரு... ஆனா ஏன் தீபா... இப்படி ஒரு பொய்யைச் சொன்னே? இதனால நானும் ஆகாஷும் பாதிக்கப்படுவோம்கிற நினைப்பே உனக்கு இல்லையா?



அவர் வேற ஒரு பொண்ணை விரும்பறாரே... அவங் களுக்குள்ளே இதனால எந்த அளவு ப்ரச்னை வரும்னு எதுவுமே யோசிக்காம ஏன் இப்படி ஒரு காரியத்தை செஞ்சே... உங்க அண்ணா கிட்டப்பேசவே இன்னிக்கு கஷ்டமா இருந்தது... இதிலே நான் ஆகாஷை எப்படி ஃபேஸ் பண்றது? என்னைப் பெரிய இக்கட்டுல மாட்டி விட்டிருக்கே நீ!" படபடவென்று பொரிந்தாள்.

"சரி... சரி... லட்சம் சாரி ப்ரீதி... எனக்கு அந்த நிமிஷம் என்ன சொல்றதுன்னே புரியலை, அதான்... ஆனா ஆகாஷ் வேற ஒரு பெண்ணை விரும்பறாரா?" சரி... நான் எல்லாத்தையும் ஆகாஷ்கிட்டயே பேசிக் கிறேன்... பேசிட்டு சாயந்திரம் உன்னைக் கூப்பிடறேன்" என்று வைத்தாள்.


ப்ரீத்தியின் மனம் பெரும் போர்க்களமாகியிருந்தது.

அன்று முழுவதும் ஏனோ வேலையே ஓடவில்லை.

ஆகாஷ் என்ன கூறியிருப்பானோவென்ற எண்ணமே தவிப்பாய்!

அவன், தன்னைப் பற்றி தவறாக எண்ணி விடுவானோ வென்ற பயமே, அவளைப் பெரிதும் வதைத்தது.

## 24



அந்த நிமிடம், ஆகாஷிடம் போனில் அதைப் பற்றித்தான் தீபாவும் பேசிக் கொண்டிருந்தாள்.

எல்லா விஷயங்களையும் அவள் கூறி முடித்தபோது, சட் டென்று இடை மறித்தான் அவன்.

"தீபா... நான் ப்ரீத்தியை விரும்புறேன்னு நீ உங்க வீட்டில சொன்னது அவளுக்குத் தெரியுமா?"

"ம்... தெரியும்..."

"தெரிஞ்சதும் என்ன சொன்னா?" அவசரமாகக் கேட்டான்.

"பயங்கர ஷாக் அவளுக்கு..! என்கிட்ட ரொம்பக் கோபப்பட்டா... அப்புறம் ஆகாஷும் நானும் இதாலே எவ்வளவு பாதிக்கப்படுவோம்னு ஏன் யோசிக்கலைன்னு சத்தம் போட்டா..! நீங்க வேற ஒரு பொண்ணை விரும் பறீங்கன்னும் சொன்னா... ஆகாஷுக்கும் அந்தப் பொண் ணுக்கும் இதனால பெரிய ப்ரச்னைதானேன்னு ஒரே டோஸ்... அப்புறம் லட்சம் சாரி கேட்டு அவளை சமா தானப்படுத்தினேன்!"

"ஓ! நான் வேணா இதுபத்தி அவகிட்டப் பேசவா?" ஆகாஷ் கூர்மையுடன் கேட்டான்.

"வேண்டாம்... நீங்க இப்ப அவகிட்ட பேசினா அவ ளுக்கு ரொம்ப எம்ப்ரேஸ்மெண்ட்டா இருக்கும்... கொஞ்ச நாள் போகட்டும்... அப்புறம் இன்னொரு ஷாக் நியூஸ்!"

"என்ன...?"

"முரளி அண்ணாவும் ப்ரீத்தியை விரும்பறது இன் னிக்கு தான் எனக்குத் தெரிஞ்சது... பாவம்!... நான் சந் தேகப்பட்டது உண்மையாயிடுச்சு! அண்ணாவை எப்படி சமாளிக்கிறதுன்னே தெரியலை... எப்படியும் அவங்க உங்ககிட்ட வந்து பேசுவாங்க..."

சிறிது நேரம் எதிர் முனையில் கடும் நிசப்தம் நில வியது.



"ஆகாஷ்... லைன்லே இருக்கீங்கதானே?"

"ம்... சொல்லு... முரளி... ப்ரீத்தியை... இதை நான் எதிர்பார்க்கலை... ஆனா... ப்ரீத்தி அவனை விரும் பலைங்கறது நூறு சதவீதம் நிஜம்தானே...?" பெரும் தவிப்புடன் வந்தது ஆகாஷின் குரல்.

"நிச்சயமா இல்லைங்கிறதை அவ வாயாலேயே நான் தெரிஞ்சிக்கிட்டேன்... போதுமா? ஏன் ஆகாஷ்... உங்க மனசைப் பத்தி... காதலை வெளிப்படையா அவகிட்டே சொல்லிட வேண்டியதுதானே?

அவள் கேட்டவுடன் அவனிடமிருந்து வேக மூச் சொன்று சீறலாக வெளிப்பட்டது.

"அதெல்லாம் எடுத்தோம் கவிழ்த்தோம்னு பேச முடியாது தீபா... முதல்லே உன் கதையைப் பார்ப்போம்! சரி... நான் முரளி கிட்டப் பேசறேன்..." என்று வைத்த வனின் மனதிற்குள் பல கேள்விகள் புதிராய்!

மறுகணமே, இண்டர்காமில் முரளி அவனைக் காண வந்திருப்பதாக செக்ரட்டரி கூறினாள்.

மனதிற்குள் அவனை நினைத்துப் பரிதாபம் எழுந் தாலும், அவனிடம் பேச ஆகாஷ் தன்னைத் தயார் படுத்திக் கொண்டான்.

அவன் உள்ளே வந்ததும் உற்சாகத்துடன் எழுந்து வர வேற்றபோது, பெரும் தயக்கத்துடன் தீபாவைப் பற்றியும் அவள் காதலைப் பற்றியும் பேச ஆரம்பித்தான் முரளி.

அவனுடைய சஞ்சலமும் ஏமாற்றமும், முகத்திலேயே தெரிந்தன.

அவன் பேசி முடிக்கும் வரை பொறுமை காத்தவன், "முரளி! உன் பத்திரிகையில என்னோட பேட்டி வர



ணும்னு நீ கேட்டப்ப நான் சொன்னது ஞாபகமிருக்கா?" கூர்மையுடன் கேட்டான்.

"ஆமாம்... இதுக்கு பதிலா, நான் ஒரு நாள் உனக்கு உதவி செய்யணும்னு என் கிட்டே சொன்னே! அப்போ நான் சிரிச்சேன்... நீ கேட்டு செய்யற மாதிரி உதவி என் கிட்ட எதுவுமே இல்லைன்னேன்... அதுக்கென்ன இப்போ?"

"ம்... இப்போ கேக்கிறேன்... என் நண்பனுக்கு உன் தங்கையை நீ தரணும்... அதுக்காகத்தான் விடியல் பத்திரிகையையே வாங்கினேன்... அவனுக்கு உன் மாப்பிள்ளைன்ற தகுதி வர மாதிரி செஞ்சேன்" மெது வாகக் கூறினான்.

முரளியால் ஏனோ மறுக்க முடியவில்லை.

பிறகு அவன் கேட்ட கேள்விகளுக்கு உரிய பதிலை அளித்து அனுப்பி வைத்தபோது, அவன் பெரும் சோர்வுடன் திரும்பிச் செல்வது ஆகாஷிற்குப் புரிந்தது.

தான் ப்ரீத்தியை விரும்புவதாகக் கூறியதும், அவன் முகத்தில் சட்டென்று படிந்த கரிய நிழலும்... கண்களில் திடீரென்று எழுந்த ஒரு வலியும் வேதனையும் மனதில் ஒரு விதத் தாக்கத்தை ஏற்படுத்தின.

ஆனால், இதற்கு மேல் தன்னால் ஏதும் செய்ய முடியா தென்பதும், ஆரம்பத்திலேயே சரி செய்து விட்டால், சில எண்ணங்கள் புரையோடிப் போகாமல் காக்கலாமென் பதையும் உணர்ந்தான் அவன்.

மனதில் ப்ரீத்தியைப் பற்றிய எண்ணங்கள் அன்று அதிகமாய்... உடனே அவளைப் பார்க்க வேண்டும் போல் ஒரு உணர்வு!



தலையைக் குலுக்கி நினைவுகளை கலைத்து வேலையில் ஈடுபட ஆரம்பித்தான் அவன்.

* * *

அந்த வாரம் முழுவதும் ப்ரீத்திக்கு வேலை சரியாக இருந்தது. உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் பல குழந்தைகளை இருவர் பாலியல் பலாத்காரம் செய்து புதைத்திருப்பதை அறிந்தபோது, அதிர்ச்சியில் உறைந்து போனாள் அவள்.

அவர்கள் இருவரும் கோர்ட்டிற்கு வரும்போது பொங்கி எழுந்த மக்கள் அவர்களையும் வக்கீலையும், கொதித்துப் போய் அடிக்க ஆரம்பிக்க, தனி மனிதனுக்கு பாதுகாப் பில்லையா என்று அவர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர்.

அதைப் பார்த்ததும் மனம் நெருப்பாய் தகித்தது..!

முப்பது குழந்தைகளுக்கும் மேல் பாலியல் பலாத் காரம் செய்து புதைத்தபோது, தனி மனித உரிமையையும் பாதுகாப்பையும் குழி தோண்டிப் புதைத்தது யாரென்று கேட்க வேண்டும் போல்!

மனது தாங்காமல், உடனே ஒரு கட்டுரையும் கவிதை யும் எழுதிப் பத்திரிகையில் வெளியிட்டாள்.

இனி வரும் சர்வசித்து
வருடத்திலாவது...
பிள்ளைக்கறி கேட்காத
நொய்டா பூமியும்...
அமைதி பொங்கும்
அகிம்சா தேசமும்...
மாசுபடாத புனிதமாக

மருத்துவத் தொழிலும்...
சாதிமதச் சண்டைகளில்லாத
சாத்வீக சமுதாயமும்...
இயற்கை சீற்றங்களில்லாத
இனிய பொழுதுகளும்...
தடைப்படாத பெருக்காய்
காவிரித்தாயின் வருகையும்...
மாசு படாத பீடமாய்
இறைத் தூதர்களும்...
இந்த பூமியில்
சாசுவதமாகட்டும்...!

இனியாவது...
அப்துல் கலாமின்
அற்புதக் கனவுகளை...
சாத்தியப் படுத்துவோம்
இச்சத்திய பூமியில்!
கடவுளையே
சிருஷ்டித்தவர்
நாம்!
நம்மால்
கனவுகளையா
கைவசப்படுத்த
முடியாது...?"
என்று முடித்திருந்தாள்.



மறு வாரமே, அதற்கு நிறையப் பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிந்தன.

* * *

ஒரு வாரம் கழித்து தீபாவே ஸ்வீட்டுடன் ப்ரீத்தியைத் தேடி தாஸ்டலுக்கு வந்து விட்டாள்.

அன்று ஞாயிறு என்பதால், தலை குளித்துவிட்டு இடை வரை நீண்டிருந்த கூந்தலை டவரயில் உலர வைத்து விரித்து விட்டபடி, ஒய்வாகப் புத்தமொன்றைப் படித்துக் கொண்டிருந்தாள் அவள்.

நேற்றுதான் லாயிட்ஸ் ரோடிலுள்ள சுல்வரி லெண்டிங் லைப்ரரியிலிருந்து 'ரிச் டேட்... புவர் டேட்' என்ற ராபர்ட் கியோசாகியின் புத்தகத்தை எடுத்து வந்திருந்தாள்.

அவள் கல்லூரியில் படிக்கும் காலத்திலிருந்தே அங்கு உறுப்பினராக இருக்கிறாள்.

ஏனோ, அந்த நூலகத்தின் அமைப்பும், புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கும் நேர்த்தியும் அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

அந்தப் புத்தகத்தின் கருத்துக்களில் ஆழ்ந்து மனதை செலுத்தியபடி படிக்கும்போது தான், வாழ்க்கையில் உயர்வதற்கு பணம் மட்டும் முக்கிய காரணமில்லை யென்பது புரிந்தது.

அப்போது மெதுவாகக் கதவு தட்டப்பட்டது.

யாரென்று நிமிர்ந்து பார்த்தால், தீபா ஒரு பூங்கொத் துடனும் ஸ்வீட் பாக்கெட்டுடனும், முகம் முழுவதும் சந்தோஷ மின்னல் மின்ன உள்ளே வந்தாள்.



இரண்டையும் ப்ரீத்தியிடம் கொடுத்தவள், "ப்ரீத்தி...! அம்மாவும் அண்ணாவும் சம்மதிச்சிட்டாங்க... சிக்கந்தருக் கும் எனக்கும் இப்போ எப்படி இருக்கு தெரியுமா? எல்லாத்துக்கும் ஆகாஷ்தான் முக்கிய காரணம்! நேத்து முழுக்க அம்மாவோட பேசிப் பேசியே அவங்களை சம்மதிக்க வெச்சிட்டாரு... நீயும் இதுக்கு ஒரு முக்கிய காரணம்... அதனாலே இன்னிக்கு மதியம் லஞ்ச் உனக்கு எங்க ட்ரீட்தான்...! கிளம்பு... கிளம்பு..." உற்சாகத்துடன் அவளை எழுப்பினாள்.

"இரு... இரு... முதல்லே கங்கிராட்ஸ்... நேரப்பி அண்ட் ப்ராஸ்பரஸ் ஃப்யூச்சர்! நீங்க ரெண்டு பேரும் எப்பவுமே ஒத்துமையா சந்தோஷமா இருக்கணும் தீபா!" மனம் நிறைந்த புன்னகையுடன் வாழ்த்தினாள்.

"தேங்க் யூ ப்ரீத்தி... ஐ லவ் யூ சோ மச்" என்றபடி தீபா அவளுடைய கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

"ஏய்... இதை நீ சிக்கந்தர்கிட்டே சொல்லணும்... அவருக்காக இதை எல்லாம் சேமிச்சி வச்சிக்கணும்... இப் படி வேஸ்ட் பண்ணக்கூடாது..." கன்னத்தைத் துடைத்த படி கூறினாள் அவள்.

"உனக்கு மட்டும்தான்...! ஒரு தேங்க்ஸ் கிவிங் கிஸ்... பயந்துடாதே... ஆகாஷுக்கு குடுத்துட மாட்டேன்..." குறும்பு குறுகுறுக்கக் கூறினாள்.

சுட்டு விரலைக் காட்டி அவளை பதிலுக்கு எச்சரித் தவள், "தீபா... என்ன பேசறே? ஆகாஷுக்கு நீ முத்தம் கொடுத்தா, நான் ஏன் கவலைப் படணும்?" வீம்பாகக் கேட்டாள்.

"ஓ! அப்ப உனக்கு ஒண்ணுமே இல்லையா? அப்போ... இந்த புத்தகத்தை பார்த்தா நீ கோபப்பட மாட்டே..."



கேட்டபடி ஹேண்ட் பேகில் வைத்திருந்த ஒரு மேக சினை எடுத்தாள் அவள்.

அதை அவள் விரித்தபோது, நடுப் பக்கத்தில் ஒரு பார்ட்டியில் ஆகாஷ் கவர்ச்சியாக புன்னகைத்துக் கொண் டிருக்க, பக்கத்திலிருந்த ஒரு மாடல் பெண் அவனுடன் உரசியபடி, போஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மறு கணமே, நெஞ்சமே உலர்ந்து போனது போல ஒரு தவிப்பு எழுந்து, ப்ரீத்தியின் உடல் குலுங்கியது.

அவன் தனக்கு மட்டுமே சொந்தமென்ற ஒருவித அதுமை உணர்வு அவளை ஆக்ரமிக்க, சட்டென்று விழி களில் ஒருவித சிவப்பு பரவி முகம் வாடியது.

உடனே அதை கவனித்து விட்ட தீபாவும், தனக் குள்ளேயே புன்னகைத்துக் கொண்டாள்.

"சரி... நீ முதல்லே டிரஸ் மாத்திட்டுக் கிளம்பு..." என்று அவளை எழுப்பினாள்.

"இல்லை தீபா... இன்னொரு நாள் வரேனே... ப்ளீஸ்!" மெதுவாக மறுத்தாள் ப்ரீத்தி.

"அதெல்லாம் இல்லை... இன்னும் அரை மணி நேரத்துல ஆகாஷும் சிக்கந்தரும் வந்துடுவாங்க... நீ ரெடியாவுறே!"

"என்னது... ஆகாஷா? அப்போ நான் வர முடியாது!"

"ஏன்... என்ன ப்ராப்ளம் உனக்கு? உன் மனசுல ஏதும் இல்லைன்னா வர வேண்டியதுதானே? ட்ரீட் குடுக்கப் போறது நாங்க... உன்னை மாதிரி ஆகாஷும் எங்க கெஸ்ட்... திடீர்னு எங்க புரோக்ராமை மாத்த முடியாது... ப்ளீஸ்... கிளம்பு ப்ரீத்தி!"

"எனக்கு தர்ம சங்கடமா இருக்கு..."

"ஏன்..! ஆகாஷோட மனசு க்ளீன் ஸ்லேட்டா இருக்கறதாலே... எந்த சலனமும் இல்லைன்றதாலே அவர் கூப்பிட்ட உடனே வர ஒத்துக்கிட்டாரு... உன் மனசு அப்படி ஏதாவது இருக்கா... ம்...!" குறும்புடன் கண் சிமிட்டிக் கேட்டாள்.

எப்படியாவது ப்ரீத்தியின் மனதை அவள் வாயாலேயே அறிந்து கொள்ளும் வேகம் வந்தது அவளிடம்!

"நோ... நான் ஏன் சலனப்படணும்? நீ சொன்ன பேர் என்னைக் கடுகளவு கூட பாதிக்கலைன்னா நம்புவியா?"

"ம்... நம்புவேன்... நீ எந்த பிகுவும் பண்ணாம என்கூட லன்ச்சுக்கு வந்தா...!"

"ஓகே... இரு... டென் மினிட்ஸ்லே ரெடியாயிடுறேன்..." என்று முகம் கழுவ குளியலறைக்குள் புகுந்தாள் அவள்.

தீபாவிற்குள் பல யோசனைகள்!


ஆகாஷின் மனநிலையைப் பற்றி அறிந்திருந்தால், அதைப் பற்றி ப்ரீத்தியிடம் பேச மனம் துடித்தாலும், அவன் அனுமதியின்றி அப்படிச் செய்வது தவறென்பது புரிந்தது.

இது அவர்களுடைய அந்தரங்க விஷயம்! அதைப் பற்றி ஆகாஷே அவளிடம் கூறுவது தான் முறையென்று சிக்கந்தர் கூறியதும் நினைவு வருவதாய்!

ஆனால், ப்ரீத்தியைப் பற்றி எந்த முடிவுக்கும் வர முடியாமல் திணறிப் போனாள் அவள்.



25



பிறகு இருவரும் ஹாஸ்டல் வாசலில் காத்திருக்க, சரியான நேரத்திற்கு வந்து விட்டான் சிக்கந்தர்.

வந்தவுடன், "ஹாய் ப்ரீத்தி! எப்படி இருக்கீங்க..." என்று ஆவலுடன் விசாரித்தான்.

"ஃபைன்... கங்கிராட்ஸ்... நீங்க எப்படி இருக்கீங்க?"

அவள் கேட்டதும் "உங்க ரெண்டு பேரோட புண்ணியத்தாலே ரொம்ப சந்தோஷமா இருக்கேன்... தேங்க்ஸ்" என்றபடி காரின் கதவைத் திறந்து விட்டான் அவன்.

உள்ளே ஏறி அமர்ந்தவுடன் முன்புறம் திரும்பினால் ஆகாஷைக் காணவில்லை.

"ஆகாஷ் வரலை?" தீபாவின் கேள்விக்கு, "அவனுக்கு அவசரமா ஒரு மீட்டிங்... நம்மைச் சாப்பிடச் சொன்னான்... இடையில வந்து ஜாயின் பண்ணிக்கிறேன்னான்..." பதில் கூறினான் சிக்கந்தர்.

அனைவரும் அந்த த்ரீ ஸ்டார் ஓட்டலுக்குச் சென்று, முன்பே ரிசர்வ் செய்திருந்த டேபிளில் அமர்ந்தனர்.

பிறகு ஆர்டர் செய்து சாப்பிட ஆரம்பித்த போதும், ஆகாஷ் வரவில்லை.

ப்ரீத்தியின் விழிகள் மட்டும் ஒரு தேடலுடன் அலை பாய்ந்தபடி அடிக்கடி வாசலிலேயே பதிந்தன.

"ஒருவேளை அந்த மாடல் பெண்... அவன் காதலியுடன் முக்கியமான மீட்டிங்கோ...?" இகழ்ச்சியுடன் எண்ணியது நெஞ்சம்.



ஆனால், சாப்பிட்டு முடியும் வரை ஆகாஷ் வரவேயில்லை... அவனிடமிருந்து ஒரு போன் மட்டுமே வந்தது.

எடுத்துப் பேசிய சிக்கந்தர் உடனே தீபாவிடம் திரும்பினான்.

"உங்கம்மாவுக்கு திடீர்னு லோ பி.பி.யாம்... மயக்கமாகிட்டாங்களாம்...! முரளியும் ஊரிலே இல்லையா? நல்ல வேளை ஆகாஷை போன் பண்ணி வரவழைச்சிருக்காங்க... இப்போ உங்க குடும்ப டாக்டர் வந்து பார்த்து மாத்திரை குடுத்திருக்காராம்... அவங்க ரெஸ்ட் எடுக்கிறதாலே ஆகாஷ் அங்கதான் இருக்கானாம்... நம்ம எல்லாரையும் சாப்பிட்டுட்டு அங்கே வரச் சொன்னான்..." என்றான்.

அவர்களும் சாப்பிட்டு முடித்துக் காத்திருந்ததால், உடனே கிளம்பினர்.

"தீபா.... நான் ஆட்டோவுல போயிடறேன்... நீங்க கிளம்புங்க..." ப்ரீத்தி கூறியதை சிக்கந்தர் ஒத்துக் கொள்ளவில்லை.

"இல்லை... நீங்களும் எங்க கூட வாங்க... ஆண்ட்டியப் பாத்துட்டு போற வழியிலே நானே உங்களை ட்ராப் பண்ணிடறேன்" என்று வற்புறுத்தி அழைத்துச் சென்றான்.

செல்லும் வழியில், அதுவரை சேமித்து வைத்திருந்த சந்தோஷத் தருணங்களைத் தொலைத்து இருண்டிருந்த தீபாவின் முகத்தைப் பார்த்தால், ப்ரீத்திக்கு பரிதாபமாக இருந்தது.

அவளை அணைத்து தோளில் சாய்த்து சமாதானப் படுத்தியவள், "பயப்படாதே தீபா. அம்மாவுக்கு ஒன்



னும் ஆகாது... அவங்க நல்லாருப்பாங்க... தைரியமா இருக்கணும்!" என்றாள் ஆறுதலாக!

* * *

தீபாவின் வீட்டிற்கு சென்றபோது, ஹாலில் அமர்ந்து ஏகாந்தமாக டைம்ஸில் ஆழ்ந்திருந்த ஆகாஷ், சப்தம் கேட்டு நிமிர்ந்தான்.

அங்கு, ப்ரீத்தியைக் கண்டதும் இரு புருவங்களும் வியப்பில் உயர, அவளை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை, அவன் முகபாவமே உணர்த்துவதாய்!

"என்னாச்சு ஆகாஷ்!" என்று பதறியபடி வந்த தீபாவிடம் "அத்தை ரெஸ்ட் எடுக்கறாங்க... போய் பார்த்துட்டு வா... ஆனா டிஸ்டர்ப் பண்ணாதே..." என்று அனுப்பினான்.

சிக்கந்தரும் அவள் பின்னோடு செல்ல, தான் என்ன செய்வதென்று புரியாமல் தவிப்புடன் அங்கேயே நின்றிருந்தாள் ப்ரீத்தி.

அப்போது, ஆகாஷின் குரல் அவளை அழைத்தது.

"ப்ரீத்தி... உக்காரு! நீ வருவேன்னு நான் எதிர்பார்க்கலை... சாரி... லன்ச்சுக்கு வர முடியலை... மீட்டிங் முடிஞ்சு கிளம்பும்போது, அத்தைகிட்ட இருந்து போன்! அதான்!" அவளையே கூர்ந்தபடி கூறினான்.

மெதுவாகத் தலையசைத்தபடி அமர்ந்தவளுக்கு, என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

மடியில் கோர்த்திருந்த தன் விரல்களையே பார்த்தபடி தர்ம சங்கடத்துடன் அமர்ந்திருந்தாள் அவள்.

இளம் நீல நிற சுடிதாரில் ஒரு தேவதை போல் இருந்தவளையே ரசனையுடன் அளவிட்டன, ஆகாஷின் விழிகள்!

நாம் எதிரெதிர் திசையில் பயணித்தாலும், உணர்வு களிலும் கனவுகளிலும் மட்டும் ஒன்றாகத்தானே இருக்கி றோம் என்று அவளிடம் கேட்க வேண்டும் போல்...!

அவர்களுக்கிடையே நெய்யப்பட்டிருந்த மாயத் திரையை சிதறடித்தது. சிக்கந்தரின் வருகை!

"ஆகாஷ்! அப்போ நான் கிளம்பறேன்... ப்ரீத்தியை ட்ராப் பண்ணிட்டு அப்படியே வீட்டுக்குப் போகணும்..." என்றான்.

"இல்லை... நீ கிளம்பு... நான் அவளை அழைச்சிட்டுப் போறேன்... தீபா எங்கே?"

"அவ ஆண்ட்டிகிட்டே உக்காந்திருக்கா...! ப்ரீத்தி... தீபா உன்னை உள்ளே வரச் சொன்னா!"

அவள் மெதுவாக எழுந்து உள்ளே சென்றால், தன் தாயின் அருகில் கலங்கிய விழிகளுடன் அமர்ந்திருந்தாள் அவள்.

மெதுவாக அவளருகில் சென்று தோளில் கை வைத்து ஆறுதலாக அழுத்திய போது, படுத்திருந்த பெண்மணி யின் விழிகள் மெல்லத் திறந்தன.

எதிரே அவளைக் கண்டதும், கேள்வியாக அவர் தீபாவிடம் திரும்பினார்.

"இவ தாம்மா ப்ரீத்தி.. நம்ம ஆஃபீஸ்லதான் ஒர்க் பண்றா... ஆகாஷ் விரும்பறதா சொன்னேனே... அது இவதான்!" எனும்போதே அவள் விதிர்த்துப் போய் திரும்பினாள்.

"ம்.... ரதியாட்டம் இருக்கா... அதான் ஆகாஷை வளைச்சிப் போட்டுட்டா...! நான் என்னென்னவோ



நினைச்சேனே...? கடவுள் வேற மாதிரி இல்லை முடிச்சுப் போட்டு வச்சிருக்காரு...! என்ன செய்யறது?"

அவர் முடிக்கும் முன்பே சிக்கந்தரை அனுப்பி விட்டு உள்ளே வந்த ஆகாஷ், அவரை அமைதிப்படுத்தினான்.

"அத்தை.. ரொம்பப் பேசக் கூடாது.. ரெஸ்ட் எடுங்க! ஸ்டிரெயின் பண்ணிக்காதீங்க... நான் கிளம்பறேன்...! தீபா... அம்மாவைப் பாத்துக்க.. ஏதும் தேவைன்னா எனக்கு உடனே கால் பண்ணு...!" என்றவன் அவளிடம் திரும்பினான்.

"நாம போகலாமா ஹனி?" அவன் கேட்டதும், தூக்கி வாரிப் போட எதிட்டால் அவள் முகம் ஏதோ புரியாத செய்தியொன்றை சுமந்திருந்தது.

நெஞ்சம் எரிமலையாய் கனன்றாலும், முகத்தை புன்னகைப் பூவாய் வைத்தபடி, தீபாவிடமும் அவள் தாயிடமும் விடைபெற்றாள் ப்ரீத்தி.

வெளியே வந்தவுடன் சீற்றத்துடன் திரும்பியவள், "ஒரு பேச்சுக்கு உங்களை... ப்ச்... சொன்னா அதுக்காக என்ன வேணாப் பேசுவீங்களா? இந்த மாதிரிப் பேசற உரிமையை யார் உங்களுக்குக் குடுத்தாங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" அடிக் குரலில் பொரிந்தாள்.

"ஈஸி... ஈஸி மை கேர்ள்! அது அத்தைக்காக நான் போட்ட ஒரு சின்ன ட்ராமா... ஓகே வா? நடிக்க ஆரம்பிச் சாச்சு... அதை பர்ஃபெக்டா செய்ய வேணாமா? அட் லீஸ்ட் தீபா கல்யாணம் வரைக்குமாவது நாம அதை செஞ்சாகணும்! அத்தை ரொம்ப ஷார்ப்... எல்லாத்தையும் கண்டுபிடிச்சிடுவாங்க.. அதான் அப்படிச் சொன்னேன்..." அடிக்குரலில் கூறினான்.





"ஆனாலும், இது உங்களுக்கே ஓவராத் தெரியலை...! இதெல்லாம் எனக்குப் பிடிக்காது...!"

உடலின் ஒவ்வொரு 'செல்'லும் அவன் வார்த்தை களை நினைத்து ரசித்து துடித்துக் கொண்டிருந்தாலும், உதடுகள் வீம்புடன் பொய் கூறின.

"எது... நான் "ஹனி..."ன்னு கூப்பிட்டேனே அதுவா? பிடிக்கலைன்னாலும் தீபாவுக்கு உதவி செய்யறதா முடிவு செஞ்சப்புறம், சிலதை நாம சகிச்சுத்தான் ஆகணும்..."

கண்ணோரங்கள் இடுங்க அவள் முகத்தையே ஊடு ருவியபடி அழுத்தமாகக் கூறினான் அவன். சிரிக்காமலே குழிந்திருக்கும் அவளுடைய கன்னங்களின் மீது பார்வை ஒரு கணம் அதிகமாகவே பதிந்து நிலைத்தது.

சட்டென்று அவன் பார்வையின் கூர்மையைத் தாங்க முடியாமல் இமைகளைக் குடையாக அவள் பிடித்தபோது, அதுவரை கோபக் கவிதை வாசித்துக் கொண்டிருந்த இரு கருவிழிகள் மெதுவாக ஒளிந்து கொண்டு கண்ணாமூச்சி ஆடின.

அவளையே ரசனையுடன் அளவெடுத்தவனின் மனதிற்குள், ஒரு மௌனப் புன்னகை மையம் கொண்டது.

அவளை அடிக்கடி கிண்டல் செய்து சீண்ட வேண்டும் போல் ஏனோ ஒரு உத்வேகம் வந்தது.

வேகமாக முன்னே சென்று காரின் முன் கதவை அவளுக்காக திறந்து வைத்து அவன் காத்திருக்க, மறுத்துவிட்டு பின் சீட்டில் ஏறிக் கொண்டாள் அவள்.

"ம்... என்னை உன் டிரைவராக்கணும்னு எவ்வளவு நாளா பிளான் பண்ணியிருந்தேன்னு தெரியலை... ஏன்..



பக்கத்துல உக்காந்தா என்ன.. உன்னை நான் கடிச்சா தின்னுடுவேன்....?" கோபமாகக் கேட்டான்.

முகம் எங்கோ வீம்பாய் வெளியே பார்த்திருக்க, பதில் கூறாமல் உதட்டை சுழித்தபடி திரும்பிக் கொண்டாள் அவள்.

ரியர்வியூ மிரர் வழியாக அவள் முகத்தையே கூர்ந்த வனின் பார்வை, அவள் உதடுகளில் ஒரு கணம் அதிக மாகவே பதிந்து விலக, வேகமாகக் காரை எடுத்தான்.

அவளுடைய இதழ்கள், கோபம் கொண்டு விரத மிருக்க.. அவனுடைய உதடுகள், விரகம் கொண்டு பசித் திருந்தன.

வழியில் இருவருமே எதுவுமே பேசவில்லை... அவன் மனதில் முதன் முதலாக ஒரு பெண்ணால் புறக்கணிக் கப்பட்ட கோபம்.. அவள் இதயத்திலோ அவனைச் சேரும் வரம் வேண்டுமென்று, தன்னை அவனிடம் தொலைத்துத் தவித்த ஏக்கம்!

தன் உணர்வுகள் முகத்தில் தெரியாதபடி மறைத்துக் காத்தவளின் மனதிற்குள்ளோ, ஒரு கோடி இரவுகள் அவன் மடி தூங்க ஆசை வந்தது.

ஆனால், மௌனமெனும் இரும்புத் திரை இருவருக்கு மிடையே கனத்த இழையாய்...!

* * *

ஹாஸ்டல் வாசலில் இறங்கிக் கொண்டு அவள் நன்றி சொல்வதற்காக நிமிர்ந்தால், அவன் திரும்பாமலே வேகமாகக் காரை ஓட்டிச் சென்று விட்டான்.

அவனுடைய பாராமுகம், பெரும் வெற்றிடத்தை அவளுக்குள் ஏற்படுத்தியது.

அவன் வந்து சென்ற நொடி நிஜமவென்று தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள் அவள்.

காரை வேகமாக ஓட்டிச் சென்ற ஆகாஷுக்கோ, அவளுடைய புறக்கணிப்பு அவன் தன்மானத்திற்கும், ஈகோவிற்கும் விழுந்த பெரிய அடியாய்!

ஒரு தட்டு தட்டினால் எட்டு குட்டிக் கரணம் அடிப்பது போல் மெல்லியவளாக இருப்பவளுக்கு, எவ்வளவு திமிரென்று மனம் கடித்தது.

பொதுவாகவே, நிறையப் பெண்கள் அவனைக் கண்டால் வழிந்து பேசி, மறு சந்திப்பிலேயே உருகிக் காதலிப்பதுபோல் நடிப்பதைப் பார்த்தவன் அவன்!

இன்று, முதன் முதலாக ஒரு பெண்ணால் விலக்கி நிறுத்தப்படுவது, புதிய அனுபவமாய்!

முன்பு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத நேரங்களில், அவளுடைய வார்த்தைக் கணைகள் வலிக்க வைத்ததில்லை!

இப்போது நல்ல நண்பர்களாகி... அதற்கும் மேல் ஒரு ஆபத்தில் சிக்கி, ஒருடல் ஈருயிராய் அணைத்து நின்ற பிறகும் அவள் தீக்கங்காய் காய்ந்ததைத்தான், அவனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

நேற்றுதான், அவளுக்காக தன் தாத்தாவின் கலெக்ஷனிலிருந்து ஆர்னிதாலஜி பற்றிய சில புத்தகங்களை தேர்வு செய்து, அவளுக்கு குரியரில் அனுப்பியிருந்தான்.

அதைப் பற்றிக் கூட சொல்ல மனமின்றி அவளுடைய மறுப்பும், வெறுப்பும் அவனைக் கட்டிப் போட்டன.

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவனுடைய மனதிற்குள், பெரும் உறுதி ஒன்று வந்தது.



உன்னைச் சரித்துக் காட்டுகிறேன் பார் என்று, நெஞ்சம் அவளிடம் சவால் விட்டது.

அவளைத் தன் காலடியில் விழ வைக்க வேண்டுமென்ற வேகமும் வருவதாய்...!

அன்றிரவு, வெகு நேரம் தன் அறையில் கூண்டுப் புலியாய் நடைபயின்று கொண்டிருந்தான் அவன்!

இது எதையுமே அறியாத ப்ரீத்திக்கோ, உறக்கத்திலும் கனவுகள் வந்து அவளுடைய உணர்வுகளைக் கிள்ளின.

இன்று, அருகருகில் அமர்ந்திருந்தும், நம் விழிகள் கூடப் பேசவில்லையே என்ற ஏக்கம், அவன் உருவைக் கனவிலும் அவளுள் செதுக்கியது.

## 26



மறுநாள் காலையிலேயே, அவளுக்கு ஒரு குரியர் வந்திருப்பதாக, ஆயாம்மா வந்து அழைத்தாள்.

என்னவென்று பார்த்தால், ஆகாஷிடமிருந்து வந்திருந்தது.

மனம் துணுக்குற்றாலும், அந்த பார்சலை வாங்கிப் பிரித்தபோதுதான் தெரிந்தது... ஆர்னிதாலஜி பற்றிய புத்தகங்களைத் தேர்வு செய்து அவன் அனுப்பியிருப்பது!

அவளுக்காக... அவள் கூறியதை நினைவு வைத்து, அவன் செய்திருக்கும் இந்தச் செயல்... அவளைப் புரட்டிப் போடுவதாய்!



ஏனோ, அவனை உடனே பார்க்க வேண்டும் போல...! தன்னுடைய அலமாரியிலிருந்த அந்தக் கவரை எடுத்தாள்...

அதற்குள், முன்பு 'விடியல்' பத்திரிகையில் அவன் எழுதிய கட்டுரையும், அவனுடைய போட்டோவும் இருந்தன.

அதற்குக் கீழ் அமரிதி ஃபாரெஸ்டில் அனைவரும் எடுத்துக் கொண்ட அழகிய புகைப்படம்!

நேச நினைவுகளைச் சுமந்தபடி, அந்த நிழற்படங்கள் அங்கு நிசப்தமாய் உறைந்திருந்தன.

இனம் புரியாத பரவசமும்... காயப்பட்ட வலியும் கலந்து விடையின்றித் தவித்தது இதயம்!

இது என் நேசத்தின் அடையாளம்... நிகழ்கால நிஜத்திற்கும், இறந்த கால நிழலிற்கும் நடுவே நெஞ்சம் வெகுவாய் அலைப்புற ஆழமான சில உணர்வுகளை எவ்வளவு முயன்றும் விலக்க முடியவில்லை.

மெதுவாக, மனம் நினைவுலகம் திரும்பியது....

நேற்றைய தன் கோபமும் பிடிவாதமும், எடுத்தெறியும் பேச்சும் அவனை எவ்வளவு பாதித்திருக்குமென்ற கவலை, மெல்ல இதயம் தீண்டியது.

உடனே தன் செல்லை எடுத்து உயிர்த்தவள், அவனுடைய எண்ணைத் தேடி டயல் செய்தாள்.

முதல் ரிங்கிலேயே எடுத்தவன், ''எஸ்... ஆகாஷ் ஹியர்...'' என்றான் ஆழ்ந்த குரலில்!

''ம்... நான்... ப்ரீத்தி!'' மேலே பேச்சு வராமல் அவள் தயங்கியபோது, ''என்.. இன்னிக்கு உன் கணக்குல வேற ஏதாவது இன்சல்ட் பாக்கியிருக்கா? நேத்து மறந்திட்டியா?'' ஏளனமாகக் கேட்டான்.



ஒரு கணம் சுள்ளென்று கோபம் வந்தாலும், ''இல்லை... புக்ஸ் குரியர்லே வந்தது... தேங்க்ஸ்...'' தயங்கியபடி பேசும்போதே, ''வெல்கம்...'' என்ற ஒற்றை வார்த்தையோடு இணைப்பைத் துண்டித்தான் அவன்.

சட்டென்று யாரோ முகத்திலறைந்தாற் போன்ற ஒரு உணர்வு எழ, நத்தையாய்ச் சுருங்கியது மனது!

தான் நெருங்கிச் சென்றால் அவன் விலகுவதும், அவன் நெருங்கி வந்தால் தான் முறுக்கிக் கொள்வதும் காதலில் கண்ணாமூச்சி விளையாட்டோவென்று தோன்றியது.

* * *

நாட்கள் வேகமாக விரைய, தீபாவின் கல்யாணத்திற்கான நாளும் குறிக்கப்பட்டது.

புடவை, நகைகள் வாங்குவதற்கென்று, ப்ரீத்தியையும் துணையாக அழைத்துக் கொண்டாள் தீபா.

முரளி, இப்போதெல்லாம் ப்ரீத்தியிடம் இயல்பாகப் பேசுவதேயில்லை.

ஏதோ ஒரு இனம் புரியாத ஒதுக்கம் தெரிந்தது அவனிடம்!

ஆகாஷையும், அன்றைய லன்ச்சிற்குப் பிறகு அவள் பார்க்கவேயில்லை.

அவன் அனுப்பிய புத்தகங்களில் இரண்டைப் படித்தும் முடித்து விட்டாள்.

தீபாவின் திருமணத்திற்கென்று, புதிதாக அழகிய லேவண்டர் நிறத்தில் பட்டுப் புடவை எடுத்து தயாராக வைத்து விட்டாள்.

திருமணத்தன்று காலையில், அந்தப் புடவையை அணிந்து பொருத்தமான நகைகளுடன் தளரப் பின்னிய

கூந்தலில் முல்லைச் சரங்கள் ஊஞ்சலாட... ஒரு உயிர் வந்து சிலை போல் தயாராகி மண்டபத்துக்குச் சென்றாள் ப்ரீத்தி!

முதல் நாளிரவே, இஸ்லாமிய முறைப்படி அவர்களின் திருமணம் முடிந்திருக்க, காலையில் இந்து முறைப்படி திருமாங்கல்ய தாரணம் நடத்த முடிவு செய்திருந்தனர்.

மணப்பெண்ணின் அறைக்குச் சென்றபோது, தீபா அவளை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தாள்.

அழகு நிலையப் பெண்கள் அவளை அழகாக அலங்கரித்திருந்தனர்.

"தீபா.. இன்னிக்கு நீ ரொம்ப அழகா இருக்கே!" அவள் கையைப் பற்றியபடி மகிழ்ச்சியுடன் ப்ரீத்தி பாராட்ட, "ஏய்... நீ எப்படி இருக்கே தெரியுமா? வானத்திலிருந்து ஒரு தேவதை இறங்கி வந்த மாதிரி இருக்கு... எனக்கே ரொம்ப கிக்கா இருக்கு... எத்தனை ஆம்பிளைங்க மயங்கி விழப் போறாங்களோ தெரியலை!" கூறிவிட்டுக் கண் சிமிட்டிச் சிரித்தாள் தீபா.

ஆனால், என் மனதில் இருப்பவன் நிச்சயமாக மயங்கி விழ மாட்டான் என்று அவளிடம் கூறவேண்டும் போல்!

ஆனால், ஆகாஷின் விழிகள் வந்தவுடனே அவளைத் தான் தேடின.

வெகு நேரத் தேடலுக்கு பதிலாய்... மணப் பெண்ணின் அறையில் அவளைக் கண்டபோது, அவனால் இமை கொட்டி விழிக்க முடியாமல் போயிற்று.

விழிகள் அவளிடமிருந்து விலக மறுத்து உறைந்து போய் ஸ்தம்பித்து விட்டன.



"என்ன ஆகாஷ்... உள்ளே வாங்க" தீபாவின் குரல் ப்ரீத்தியைத் திரும்பச் செய்தது.

அதற்குள், தன்னுடன் வந்த அந்த மாடல் அழகியை, இருவருக்கும் அறிமுகப்படுத்தினான் அவன்.

"இவங்க நம்ம கம்பெனி மாடல்... மிஸ் கவிதா! வேற ஏதோ ஒரு ஃபங்ஷன் இருக்கறதாலே, உன்னைப் பாத்து கிஃப்டைக் குடுத்துட்டுக் கிளம்பணுமாம்!"

அவன் கூறியவுடன் தீபா எழுந்து அன்பளிப்பைப் பெற்றபடி புன்னகைக்க, அவளை வாழ்த்திவிட்டு கன்னத்தில் முத்தமிட்டாள் கவிதா!

"ஆகாஷ்... ஏன் லேட்டாயிடுச்சி?" தீபா சலுகையுடன் கேட்டாள்.

"ம்... உங்க மேரேஜ் முடிஞ்சு போறப்பவே மிட் நைட்டாயிடுச்சி... இப்போ காலையிலே வேற உடனே எழுந்திரிச்சி கிளம்பி வர வேண்டியதாப் போச்சு.. தூக்கமே இல்லை...! இரு... நான் சிக்கந்தரைப் பாத்துட்டு வரேன்..." என்று திரும்பியவனின் பார்வை, ப்ரீத்தியையே தாபத்துடன் உரசியது.

ப்ரீத்தியின் விழிகளும், அவனிடமிருந்து ஒரு கணமும் அகலவில்லை... அழகிய சந்தன நிற ஷெர்வானியில் அசத்தலாக இருந்தான் அவன்!

இருவருடைய பார்வைப் பரிமாற்றத்தை உணர்ந்த தீபா, "சரி.. போய் சிக்கந்தரைப் பாருங்க... ஏன் இங்கிருந்து போக முடியலையா? சின்ன மேக்னட் ஒண்ணு அந்த இரும்பு மனுஷனை கவர்ந்து இழுத்துடுச்சி போலருக்கு..." இழுத்தாற்போல் நிறுத்தி கேலி செய்தாள்.



அந்த விழிகளின் மாய வலையிலிருந்து சட்டென்று விடுபட்டு, உடனே திரும்பி கவிதாவுடன் வெளியே சென்றான் அவன்.

பிறகு திருமணச் சடங்குகளின் போது, இருவரும் பெண் தோழி, மாப்பிள்ளையின் தோழனாய் அருகிலேயே இருக்க, சிக்கந்தரின் குறும்புச் சீண்டல்களும், பதிலுக்கு தீபாவின் செல்லச் சிணுங்கல்களும், ப்ரீத்தியை மிகவும் பாதித்தன.

அவளறியாமல் விழிகள் உயர்ந்து ஆகாஷின் திசையில் பயணிக்க, அந்த நொடி அவனும் புரியாத ஒரு பாவனையுடன் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான்.

அவன் விழிகள், சிறு கர்வத்துடனும் பெரும் குறும்புடனும் சிரித்தன... செல்லமாக இடுங்கின!

புதிதாய் மனதிற்குள் மொட்டு விட்டிருந்த காதல் அரும்பு மலரத் துவங்க, அவனுடைய பார்வையும் சிரிப்பும் வேறு, ப்ரீத்தியை நெகிழச் செய்வதாய்!

திருமணம் முடிந்தவுடன் நண்பர்களின் வற்புறுத்தலுக்காக சிக்கந்தர் தீபாவின் கன்னத்தை முத்தமிட்ட போது, அதை எதிர்பார்த்திருக்காத ப்ரீத்தியை, வெட்கம் இனிதாய் தழுவியது.

சன்னமாக அதிர்ந்த மனதிற்குள் ஆகாஷின் விழுங்கும் பார்வையே மையம் கொண்டிருக்க, அவளுடைய கன்னங்களில் இரு இளம் சிவப்பு ட்யூலிப்கள் அழகாக மலர்ந்தன.

ஆகாஷின் விழிகள், அவள் கன்னங்களில், அதன் குழியில்... அதில் பூத்த வண்ணத்தில் பதிந்து விலக மறுத்து அடம் பிடித்தன.



பிறகு திருமாங்கல்யம் அணிவித்து முடிந்து தம்பதியாய் நின்ற தீபா, சிக்கந்தரைப் பார்த்தபோது, "இறைவா! இவர்களுடைய வாழ்க்கையாவது நன்றாக சிறக்க வேண்டும்!" என்று இதயம் உருகி மனதிற்குள் வாழ்த்தினாள் ப்ரீத்தி!

விழியோரங்கள் கசிய உருகிப் போய் நிமிர்ந்தால், அப்போதும் ஆகாஷ் அவளையே பார்த்தபடி குறும்புப் புன்னகையை இதழ்களில் தேக்கியிருந்தான்... விழிகள் செல்லமாய் கண் சிமிட்டின.

சட்டென்று, தன் பார்வையை விலக்கிக் கொண்டாள் அவள்.

பிறகு முறைப்படி நடந்த சடங்குகள், அங்கு பெரும் கலகலப்பை ஏற்படுத்தின.

மேடையின் கீழ், ஒரு அண்டாப் பானையில் மோதிரமும் பாலாடையும் போட்டு மணமக்களின் எதிரே வைத்தனர்.

"உள்ளே மோதிரம் போட்டிருக்கோம்... தேடி எடுக்கணும்.. விடாதீங்க.. யார் எடுக்கறீங்கன்னு பாப்போம்... அவங்கதான் குடும்பத்திலே டாமினேட் பண்ணுவாங்க!" உறவுக்காரப் பெண் ஒருவர் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்.

உடனே அந்த சடங்கைப் பார்க்க கூட்டம் கூட, ஆவலாய் கவனிக்க ஆரம்பித்தாள் ப்ரீத்தி... மனம் வெகுவாக நெகிழ்ந்திருந்தது!

"ஏய் சிக்கந்த் விடாதே... நீ தான் எடுக்கணும்... விட்டுக் குடுத்துடாதே...வெற்றி உனக்குத்தான்!"

ஆகாஷ், மாப்பிள்ளையின் அருகிலேயே துணையாய் நின்று அழுத்தமாக ஆணையிட்டான்.

உடனே அவளுக்கும் செல்லக் கோபம்... சிறு ஊடலாய்! வேகமாக தீபாவின் அருகில் சென்று நின்று கொண்டாள்.

''தீபா... நீதான் ஜெயிக்கணும்.. சாமர்த்தியமா எடுத்துடு...'' காதோரம் கிசுகிசுத்தாள்.

''ம்.. பார்ப்போம்...'' என்றான் ஆகாஷ், அதைக் காதில் வாங்கியபடி!

உதடு கழித்தபடி அவள் தவிப்புடன் காத்திருக்க, இருவரும் ஆவலுடன் கைகளை தண்ணீருக்குள் மூழ்கடிக்க, முதலில் தீபாவிடமிருந்து 'ஆ'வென்ற அலறல் மட்டும் வர, சுற்றியிருந்த கூட்டம் கைதட்டி ஆர்ப்பரித்தது.

பிறகு, தீபா கையை வெளியே எடுத்தபோது அவள் பாலாடை சங்கை எடுத்திருந்தாள். சிக்கந்தரின் உள்ளங்கையில் மோதிரம் தெரிந்தது.

''ஹோ'' வென்ற கூச்சல் அனைவரின் செவிகளையும் இனிதாய் நிறைக்க, ''சீக்கிரமே வீட்டில தொட்டில் சத்தம் கேக்கப் போகுது'' என்றார் ஒரு மூதாட்டி!

அந்த சூழ்நிலையே கலகலப்பும், இனிமையும் நிறைந்திருக்க, நிமிர்ந்தபோது ஆகாஷின் விழியோரக் குறும்புச் சிரிப்பு, அவள் நெஞ்சத்தை அள்ளியது.

தன் புன்னகை எனும் ஒற்றைச் சாவியால், அவளுடைய இதயத்தைத் திறக்கும் வித்தை அறிந்திருந்தான் அவன்.

தீபாவின் காதல் இனிதே முடிந்த நிறைவா... இல்லை ஆகாஷ் மீது முடிச்சிட்டிருந்த காதல் கிளர்ச்சியா.. எது



வென்றே யூகிக்க முடியாமல் ஒருவித இனிய மயக்கம் அவளைச் சூழ ஆரம்பித்தது.

திடீரென்று விழிகள் காந்த மின்னலுடன் நேசக் கதைகள் பேச, ஆகாஷின் இதயமே மரத்துப்போய் அவன் உலகமே மறந்தாற்போல்!

''என்ன ஆகாஷ்... நீ இங்கே நின்னுட்டிருக்கே... ரெண்டு பேரும் பொண்ணு மாப்பிள்ளையோட போய் நில்லுங்க.. அவங்க மேடைக்கு போயிட்டாங்க பாரு...'' தீபாவின் அம்மா அழைத்த பிறகே, உணர்வுகள் சமன் பட்டன.

''ஹாய் ப்ரீத்தி... மை லவ்! வா... நம்ம ரொமான்ஸை அப்புறம் வச்சிக்கலாம்... முதல்லே தீபாவையும் சிக்கந்தரையும் கவனிப்போம்...'' குறும்புடன் கண் சிமிட்டியபடி அருகில் வந்து அழைத்தான்.

அடி வயிற்றில் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் சிறகடிக்க, அவள் வெட்கத்துடன் நிமிர்ந்தபோதுதான், ''ஏய் ஷீலா... வா சாப்பிடப் போகலாம்'' என்று யாரோ ஒருவரின் அழைப்பு கேட்டது.

உடனே, உணர்வுகள் சம்மட்டியாய் அடிபட்டன.

குளிர்ந்த பனிநீரை யாரோ முகத்தில் சிதறடித்த உணர்வுடன் நிமிர்ந்தவள், ''ஆகாஷ்.. திஸ் இஸ் தி லிமிட்.. போதும் உங்க நடிப்பு! தீபா கல்யாணம் முடிஞ்சாச்சு.. உங்க ரொமான்ஸை எல்லாம் இந்த நிமிஷத்தோட நிறுத்திக்கங்க.... எனக்கு வெறுப்பா இருக்கு!'' சட்டென்று முகத்திலறைந்தாற் போல் கூறிவிட்டாள்.

உடனே ஆகாஷின் முகம் இறுகிக் கடுமையாகி விட, விழிகள் தாங்க முடியாத சீற்றத்தினால் செவ்வரியோடிச் சிவந்தன.



கை முட்டிகள் இறுகி, நரம்புகள் வெடித்து விடும்போல் தெறிக்க, அவனுடைய முகமே மிகவும் அதிர்ச்சியும் குழப்பமுமாய்...!

விருட்டென்று திரும்பி அவன் மேடையேற, தீபா அவளையும் அழைத்தாள்.

போராடிக் களைத்த தன் மனதை அடக்கியபடி, பெரும் சஞ்சலத்துடன் ப்ரீத்தி அவனைத் தொடர்ந்தாள்.

அவ்வளவு நேரம் சந்தனச்சிலையாய் அருகில் நின்று, வெட்கம் கமழ்ந்து புன்னகைத்து, எல்லாச் சடங்குகளிலும் இனிதாய் பங்கேற்றவள், திடீரென்று வார்த்தைகளில் திராவகத்தை வீச வேண்டுமென்றால் என்ன நடந்திருக்கு மென்ற குழப்பம் அவனுக்குள்!

ஆனால், எதுவும் புரியாததால் அவன் தலையைக் குலுக்கியபடி சிக்கந்தரிடம் செல்ல, ''என்ன ஆகாஷ்... இன்னும் உன் தேவதைகிட்ட காதலை சொல்லலையா?'' தணிந்த குரலில் கேலி செய்தான் அவன்.

''ஹூஹூம்... எங்கே சொல்றது? 'இம்'முங்கிறதுக்கு முன்னாடி எகிறிடறா... பாத்து மெதுவாத்தான் பேசணும்...''

''என் நண்பனா இது? வானத்தில் ஏறி நட்சத்திரம் பறிச்சிட்டு வரலாமான்னா, அடுத்த நிமிஷம் அதை நடத்திக் காட்டுவான்.. அவனுக்கு என்னாச்சு...? அந்த தைரியமெல்லாம் எங்கே போச்சு?'' குறும்புடன் கேலி செய்தான்.

''ஏய்... நாளாவது ப்ரீயா இருக்கேன்.. நீ இன்னிக்குதான் இந்த 'சாட்டர் பாக்ஸ்' கிட்டே வசமா மாட்டியிருக்கே... நாளைக்கு நீ எப்படி இருக்கேன்னு நானும் பாக்கிறேன்...'' ஆகாஷ் சுட்டு விரலைக் காட்டி எச்சரிக்கை செய்தான்.



தீபா அவளுடைய கையைப் பற்றியபடி, ''என்னடி? முகமெல்லாம் சிவந்திருக்கு.. உங்க ரெண்டு பேருக்கும் எவ்வளவு பொருத்தம்னு நான் ரசிச்சிட்டிருந்தேன்.. திடீர்னு ஏன் இப்படி எதிரும் புதிருமா முறைச்சிட்டு நிக்கறீங்க?'' மெதுவாகக் கேட்டாள்.

''ம்... ஒண்ணுமில்லை...'' விரக்தியுடன் கூறியவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள் தீபா.

''இன்னிக்கு எங்களோட திருமண நாள்... எல்லாரும் சந்தோஷமா இருக்கணும்னு நான் எதிர்பார்க்கிற ஒரு நாள்...! ப்ளீஸ்டி.. எனக்காக கொஞ்சம் சிரியேன்... அம்மா உங்களையே கவனிச்சிட்டிருக்காங்க... அவங்களுக்காக வாவது கொஞ்சம் இயல்பா இருடி...'' கெஞ்சலாகக் கேட்டாள்.

பிறகு வந்த தருணங்களில் பெண் மாப்பிள்ளையை எல்லாரும் கேலி செய்ய, சற்று இயல்பானது, ப்ரீத்தியின் மனது.

அவளுடைய முகத்தில், சிறு மென்னகையைக் கண்டவுடன், ஆகாஷும் தன் விறைப்பு தளர்ந்து இயல்பானான்.

அவர்களிருவரும் கேலி செய்து ஒருவரை ஒருவர் வாரிக் கொள்வதை ப்ரீத்தியின் மனம் ரசித்தாலும், ஆகாஷின் இதயத்தில் இடம் பிடித்த அந்த தேவதை யாராக இருக்கும் என்று எண்ணும் போதே, மனம் ரணமாக வலிக்க ஆரம்பித்தது.

உடனே, காலையில் கண்ட அந்த மாடல் அழகியின் நினைவுதான் வந்தது. அவர்களிருவரும், பத்திரிகையில் ஜோடியாக போஸ் கொடுத்திருந்ததும் அவளை வதைப்பதாய்!

சட்டென்று இதயம் கசங்கி விட இமைகள் நனைந்த தால், வேகமாகக் குளியலறைக்குச் சென்றாள் அவள்.


அங்கு சென்றதும், கண்ணீரை மெதுவாக ஒற்றி யெடுத்து ஒப்பனை கலைந்து விடாமல் காத்தபடி, சிறிது பவுடர் காம்பேக்ட்டை தடவிக் கொண்டு மெதுவாக வெளியில் வந்தாள்.

அழகிய முழு நிலா இரவில், சட்டென்று மறைந்த மழை நிலவாய் அவள் உருவம்!

திடீரென்று அவள் திரும்பிச் சென்ற விதம் ஆகாஷை வெகுவாகத் தாக்கிவிட, அவள் வரும் வழி நோக்கி, அவன் தன் விழிகளைப் பதித்துக் காத்திருந்தான்.

திரும்பி வந்தவளின் விழிகளில் தெரிந்த மெல்லிய செவ்வரிகளைப், பிறர் அறியவில்லை என்றாலும், அவை தீபாவின் பார்வைக்குத் தப்பவில்லை.

## 27



திருமணம், மற்ற சடங்குகள் எல்லாம் முடிந்து, எல்லாரும் சாப் பிட்டுவிட்டு கிளம்ப ஆரம்பித்த போது, ப்ரீத்தியும் விடைபெற்றுக் கிளம்பினாள்.

ஆகாஷின் விழிகள் அவள் விடை பெறுவாளென்று காத்திருக்க, அவளோ அவ னிருந்த பக்கமே திரும்பவில்லை.

உடனே அவளைத் தொடர்ந்து வாசல்வரை வந்தவன், "ஒரு நிமிஷம்.." என்று அவளை நிறுத்தினான்.



அவள் திரும்பாமலே அமைதியாக நிற்கவும், "ஏன் ப்ரீத்தி..! என் முகத்தைப் பாக்கக் கூட உனக்கு பிடிக் கலையா? அவ்வளவு வெறுப்பா இருக்கா?" தணிந்த குரலில் சிறு கோபத்துடன் கேட்டான்.

பதறிப்போய் திரும்பியவள், "அப்படி எல்லாம் இல்லை... எனக்கு கொஞ்சம் தலைவலி... அதான்!" மெல்ல முணு முணுத்தாள்.

"என்னைப் பார்த்தாலே தலைவலியும் சேர்ந்து வந்திடுதா? அந்த அளவு கொடூரமாவா இருக்கேன்?.. ம்...?" கேட்டுவிட்டு, அவள் பதிலை எதிர்பாராமல் திரும்பி, தூரத்தில் நின்று கொண்டிருந்த டிரைவரை அழைத்தான்.

"டிரைவர்... இவங்களை, அவங்க சொல்ற இடத்தில ட்ராப் பண்ணிடுங்க..." என்று பணித்தான்.

"ப்ளீஸ்... நான் ஆட்டோவுல போயிடுவேன்..."

"ப்ரீத்தி.. சில நேரம் நான் சொல்றது நல்லதுக்காகக்கூட இருக்கலாம்... இன்னிக்குப் பக்கத்துல ஏதோ மாநாடு நடக்குது...! ட்ராஃபிக் டைவர்ட் பண்ணி விடுவாங்க... காரிலன்னா சேஃபா போய் இறங்கிடலாம்... நான் சொல்றதைக் கேக்கக் கூடாதுங்கற உன் பிடிவாதத்தை கொஞ்சம் தளர்த்திக்கலாம்... விருப்பமிருந்தா!"

தணிந்த குரலில் டிரைவருக்குக் கேட்காத வண்ணம் கூறிவிட்டு, வேகமாகத் திரும்பிச் சென்றான்.

கோபமாக விலகிச் செல்பவனையே பார்த்த விழிகள் மெல்லக் கசிந்தன... பார்வை அவனுடைய உருவத்தை கலங்கலாய் கண்முன் சமர்ப்பிக்க, மெதுவாகத் திரும்பி நடந்து சென்று காரில் ஏறினாள்.





அவன் விலகிச் சென்றால் உருகி தவிக்கும் மனது, அருகில் வந்தாலோ தகித்துப் போய் வார்த்தைகளை அம் லாய் சிதற விடுவது மட்டும், ஏனென்று புரியவில்லை.

* * *

ஹோஸ்டலில் இறங்கிக் கொண்டு டிரைவரிடம் நன்றி சொல்லி அனுப்பி வைத்து விட்டு வந்து உடை மாற்றிப் படுத்தவுடன், ஏனோ கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஆகாஷ் கூறியபடியே, வழியில் போக்குவரத்தை மாற்றி திருப்பி விட்டதில், சுற்றிக் கொண்டுதான் வர முடிந்தது.

அவனுடைய இறுகிய முகமும், உணர்ச்சிகளைத் தொலைத்த பார்வையும், ஆழ்மனவெளியில் பெரும் தவிப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தின.

புதிதாக ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்து நெஞ்சம் நெகிழ, தன்னை அணு அணுவாய் கொல்வது என்னவென்று புரிந்தாலும், ஷீலாவின் ஞாபகங்கள் அவளை உயிர்வரை சிதைத்தன.

எதை வேண்டுமானாலும் மன்னித்து மறக்கலாம்... ஒரு பெண்ணிற்கு துரோகம் செய்த ஒரு விமனைசரை தன்னால் சத்தியமாக ஏற்றுக் கொள்ள முடியாதென்பதை, மனதின் மறுபக்கம் உறுதியாக உரைத்தது.

தனக்குள்ளேயே போராடித் தோற்றுப் போய், உறங்க ஆரம்பித்தாள் அவள்.

ஆழ்ந்த உறக்கத்திலும் அற்புதக் கனவுகள்...! பூமிக்கு வராத புதுமை எல்லாம் புதையலாய் மேலெழும்பி கன வில் காட்சியாக... அங்கும் ஆகாஷின் ஆதிக்கம்!



ஏதோ ஒரு ஒலியின் அழைப்பினால் விழித்தபோது, அவளுடைய செல் ஒலித்துக் கொண்டிருந்தது.

சோம்பலுடன் புரண்டு எழுந்து பார்த்தால், ஆகாஷ் தான் அழைத்திருந்தான்.

பட்டனை அழுத்தி ஆன் செய்தபோது, "ப்ரீத்தி.. நான் உன் கூடக் கொஞ்சம் பர்சனலாப் பேசணுமே! இப்போ ஈவினிங் அஞ்சு மணிக்கு நானே அங்கே வரேன்... ஏதா வது ஒரு ரெஸ்டாரெண்டுக்குப் போகலாமா?" அழுத்த மான குரலில் கேட்டான்.

"ம்... நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில... சாரி... பர்சன லாப் பேச ஏதும் இருக்கிற மாதிரி எனக்குத் தோணலை..." ஒரு விலகல் தன்மையுடன் வந்தது அவள் குரல்.

"ஆனா எனக்கு இருக்கே..! நீயும் உன் ஃபிரண்டும் என் சம்மதமில்லாமலேயே ஏதேதோ சொல்லியிருக் கீங்க.. அது என்னையும் பாதிக்கும்தான்! இந்த சொசைட் டியில நானும் ஒரு ரெப்யூட்டட் பர்சன்... அதை மறந்திட வேண்டாம்!

"அத்தைக்கு தெரிஞ்ச விஷயம் இப்ப ஊருக்கே தெரிஞ்சிருக்கு... எல்லாரும் என்னை நேராவே கேக்க ஆரம்பிச்சிட்டாங்க... ஒரு பெண்ணைக் காதலிச்சு கை விட்டுட்டான்னு எனக்கு கெட்ட பேர் வரதை நான் விரும் பலை... ஆரம்பத்துலயே முடிவெடுத்துடறது பெட்டர்!

"நீ உடனே ரெடியாயிருக்கே.. நான் வரேன்!... நோ மோர் அப்ஜெக்ஷன்ஸ்!" ஆணையிடும் குரலில் கூறி விட்டு வைத்து விட்டான்.

ஷீலாவின் நினைவுகளால் மனம் ஈரவிறகாய் புகைய, தனக்கான முடிவுகளை அவன் எடுப்பதும், தன்னை ஒரு

ஆட்டுவிக்கும் கருவியாய் அவன் நினைப்பதையும், அவளால் தாங்கவே முடியவில்லை.

உடனே கிளம்பி மாமாவின் வீட்டிற்கு சென்று விடலா மென்று கூடத் தோன்றியது.

ஆனால் அவன் என்னதான் சொல்ல வருகிறான் என்பதை கேட்கலாமென்று தோன்ற, மெதுவாக எழுந்து தயாரானாள்.

சரியாக ஐந்து மணிக்கு செல்லில் மிஸ்டு கால்வர, ப்ரீத்தி கிளம்பிச் சென்றாள்.

காரில் சாய்ந்து நின்றபடி, தன் ஜீன்ஸ் பாக்கெட்டில் கைவிட்டுக் கொண்டு கம்பீரமாக நின்று கொண்டிருந்த வனை, இதயம் உடனே படம் பிடித்து தனக்குள் பதித்துக் கொண்டது.

அவள் முன்புறம் ஏறி அமர்ந்ததும், கார் வேகமாகக் கிளம்பிச் சென்று டிரைவ் இன் உட்லண்ட்ஸ் ஹோட்டல் பார்க்கிங் ஏரியாவில் நின்றது.

வெயிட்டர் வரும்வரை அமைதியாக அமர்ந்திருந் தவன், அவர் வந்தவுடன், "உனக்கு என்ன வேணும்...?" அவளிடம் திரும்பிக் கேட்டான்.

"எனக்கு எதுவும் வேண்டாம்.." அவள் மெல்ல முணு முணுத்தாள்.

உடனே சர்வரிடம் திரும்பியவன், "ரெண்டு ப்ளேட் கட்லெட் கொண்டு வாங்க... அப்புறம் ரெண்டு ஃப்ரூட் சாலட்" என்று ஆர்டர் செய்தான்.

எனக்கு எதுவும் வேண்டாம் என்று 'ஓ'வென்று கத்த வேண்டும்போல் ஒரு உணர்வு, அவளுள் பொங்கியது.



ஸ்டீயரிங் வீலில் வெளிதாகத் தாளமிட்டவன், ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தான். மனதிற்குள் அலையெனப் புரண்டன... நேச ஞாபகங்கள்!

பிறகு அவளிடம் திரும்பியவனின் முகத்தில் எல்லா உணர்ச்சிகளும் துடைக்கப்பட்டு, விழிகள் வெற்றுப் பார்வை பார்த்தன.

"ப்ரீத்தி! நான் இப்ப பேசப் போற விஷயம் ரொம்ப முக்கியமானது.. நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கை சம்பந்தப்பட்டது... அதனால உடனே மறுக்க வேண்டாம்.. நல்லா யோசிச்சு உன் பதிலை சொன்னாப் போதும்..." பெரிய பீடிகையுடன் ஆரம்பித்தான்.

கண்களில் கேள்வியுடன் அவள் நிமிர்ந்தபோது, "தெரிஞ்சோ தெரியாமலோ நீயா ஒரு பொய் சொல் லிட்டா... அதனால நீயும் நானும் காதலர்கள்னு எல்லாரும் நினைக்க ஆரம்பிச்சிட்டாங்க...! சில ப்ரச்சனைகளை சால்வ் பண்ணணும்னா, அது போக்கிலேயே போய் சரி பண்றதுதான் நல்லது! வீணா அதை வளர விட்டுட்டு பின்னாடி அவஸ்தைப்படறதிலே எனக்கு உடன்பாடு இல்லை... அதனால நான் ஒரு முடிவெடுத்திருக்கேன்..." மெதுவாக நிறுத்தினான்.

அந்த நிமிடம்... ஒரு நல்வார்த்தை இங்கு நீ சொன் னால், என் மனவலியெல்லாம் பறந்து போய்... பெரும் மனவலிமை வந்து விடுமென்று கூற வேண்டும் போல்!

அவள் அமைதியாக அமர்ந்திருக்கவும், அவனுடைய முகத்திலிருந்து எதையுமே யூகிக்க முடியாமல், "அது என்னன்னு கேட்க மாட்டியா...?" மென் குரலில் கேட்டாள்.

சிறு கோபத்துடன் நிமிர்ந்தவள், "இவ்வளவு சொல் லிட்டீங்க... அதையும் சொல்ல வேண்டியதுதானே?" கள்ளென்று கேட்டு விட்டாள்.



"ம்.. நீ ரொம்பக் கோபமா இருக்கே... ஆனாலும் இனிமே காலம் தாழ்த்த முடியாது! ஊர் வாய்க்கு அவலா நாம மற வேண்டாம்... அதனால கூடிய சீக்கிரமே நாம ரெண்டு பேரும் நம்ம கல்யாணத் தேதியை முடிவு பண்ணிட லாம்னு நினைக்கிறேன்... எனக்கு உன் பதில் வேணும்.. நாள்..."

அவன் முடிப்பதற்குள் வேகமாக நிமிர்ந்தவளின் முகத்தில், தாங்க முடியாத வெறுப்பும், சீற்றமும்!

"என்ன சொன்னீங்க... கல்யாணமா... அதுவும் உங்க ளோடவா? இந்த நிமிஷம் நீ வெறுக்கிற மூணு பேரோட பேரைச் சொல்லுன்னு யாராவது என்கிட்ட கேட்டா, அந்த மூணு தடவையும் நான் உங்க பேரைத்தான் சொல்லு வேன்... புரியுதா?"

அவள் முடிக்கும் முன்பே வெயிட்டர் கட்லெட்டுடன் வந்துவிட, அந்த இடமே கனத்த அமைதியிலாழ்ந்தது.

பிறகு, அவன் போனபிறகு திரும்பிய ஆகாஷின் முகமோ கடும் ரௌத்ரமாய்...!

"ஏய்... என்ன விளையாடுறியா? உன் ஃப்ரெண்டு என்னன்னா நீயும் நானும் காதலிக்கிறதா ஊர் முழுக்க சொல்லுவா! அதை நீயும் எல்லார்கிட்டயும் ஒத்துப்பே! அதை சரி செய்யலாம்னு கல்யாணத்தைப் பத்தி பேசினா கண்டபடிபேசுவியா? அப்புறம் ஏன்டி முரளிகிட்டே என்னை விரும்பறேன்னு சொன்னே...?" மிருகமாய் உறுமினான்.

அவனுடைய கோபமும், அத்துமீறிய வார்த்தைகளும் அவளை நிலைகுலையச் செய்தன.

தானும் வார்த்தைகளில் வரம்பு மீறியது புரிந்தது.



"அது.. வந்து.. சரி.. தீபாவுக்காக அப்படி ஒரு பொய்யை சொல்ற மாதிரி ஆயிடுச்சி...!"

உள்ளே அவனை உயிராய் காதலித்த மனம் இந்த நுரைத்தாலும் உதடுகள் பொய் சொல்லின.

"நான் என்ன பகடைக்காயா... நீங்க ரெண்டு பேரும் விளையாடிட்டா உருட்டி விளையாடறதுக்கு? உனக்கு ஒரு வாரம் டைம் தரேன்... அதுக்குள்ளே எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும்... இப்போ சாப்பிடு!" கூறிவிட்டு, ஒன் றுமே நடக்காதது போல் கட்லெட்டை ஸ்பூனால் எடுத்து சாப்பிட ஆரம்பித்தான்.

அவளுக்குத்தான் எதுவுமே செய்ய முடியவில்லை... உணர்வுகள் மரத்துப் போனாற்போல் உறைந்து விட, ஓய்ந்து போய் சிலையாக அமர்ந்திருந்தாள்.

திடீரென்று அவன் குரல் அழைத்தது.

"அது நான் ஆர்டர் பண்ணினதாச்சேன்னு பயப்பட வேண்டாம்... விஷம் எதும் கலக்கலை.. தைரியமா சாப்பிடலாம்... அப்படியே இருந்தாலும் மனசு முழுக்க விஷமா இருக்கறவளை, அது ஒன்னும் பாதிக்காது..." ஏளனமாகக் கூறினான்.

உடனே, அவளுக்குள் கடும் சீற்றம் கிளர்ந்தெழுந்தது.

"அப்புறம் ஏன் ஒரு வெனமஸ் லேடியை கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறீங்க? ஏதாவது நல்ல பொண்ணாப் பாத்து கல்யாணம் பண்ணிக்கங்க.. குட் பை..." கூறிவிட்டு வேகமாக காரைவிட்டு இறங்க, சட்டென்று அவன் கையை அழுந்தப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான் அவன்.

''ப்ளீஸ்... என் கைய விடுங்க.. விடலைன்னா கத்தி ரகளை பண்ணுவேன்... அப்புறம் அசிங்கமாயிடும்..! உங்களுக்கு தான் கெட்ட பேர்.. இது பப்ளிக் ப்ளேஸ்.. பி ஹேவ் யுவர் செல்ஃப்!''


அடிக்குரலில் கூறிவிட்டு, தன் கைகளை விடுவித்துக்கொண்டு வேகமாக வெளியே செல்ல ஆரம்பித்தாள்.

''ஷிட்..!'' பலமாக எதிரிலிருந்த ஸ்டியரிங்கை குத்தியவனின் மனம் உலைக்களமாய்!

ஒரு பெண்ணிடம் தோற்றுப் போன உணர்வு, அவனைப் பெரிதும் பலவீனப் படுத்துவதாய்!

தன் வாழ்க்கையில், தான் முதன் முதலாக விரும்பிய ஒரு பெண், தன்னை நிராகரித்தது, அவனைப் பெரிதும் பேதலிக்கச் செய்தது.

## 28



ஓட்டல் வாசலில் ஒரு ஆட்டோவைப் பிடித்து ஹாஸ்டலுக்கு சென்ற ப்ரீத்தியின் மனமோ, ஆகாஷின் திடீர் கல்யாண முடிவினால் பெரிதும் அலைபாய ஆரம்பித்தது.

அவள் தினம் தினம் எதிர்பார்த்து தவித்துக் காத்திருந்த ஒரு அற்புதமான தருணம் கைவசப்பட்டும், அதை ஏற்றுக் கொள்ள அவளுடைய தன்மானமும் சுயகௌரவமும் இடம் கொடுக்கவில்லை.

திருமணம் என்பது, இரு மனமும் இணைந்து சங்கமிக்க வேண்டிய ஒரு உன்னதமான உறவுப் பிணைப்பு என்பதில், அவள் உறுதியாக இருந்தாள்.



அறியாமல் தீபா செய்த சிறு பிழைக்காக, விருப்பமில்லாத ஒரு வாழ்வை பிராயச்சித்தம் என்ற பெயரில் ஏற்றுக் கொள்ள, ஆகாஷ் முன் வந்திருப்பது புரிந்தது.

அவனை அப்படி ஒரு இக்கட்டில் மாட்டி வைக்கவும், பரஸ்பரம் அன்பில்லாத ஒரு எந்திரமயமான வாழ்க்கையை வாழ்வதற்கும், அவள் தயாராக இல்லை!

ஊர் உலகத்தில் எல்லோரும் என்ன கூறுவார்களோ என்ற பயத்தினால், அவன் விரும்பாத இந்தத் திருமணத்தில் தன்னை சங்கிலி போட்டுப் பிணைத்துக் கொள்ள ஆகாஷ் நினைத்தாலும், தன்னால் அதுபோல் முடியாதென்று தோன்றியது.

அவனுடைய முழு விருப்பமும் நேசமும் இருந்தாலொழிய, தன்னால் இந்தத் திருமணத்திற்கு உடன்பட முடியாதென்பதில், அவள் உறுதியாக இருந்தாள்.

அதனாலேயே அவனிடம் திட்டவட்டமாக முடியாதென்று கூறிவிட்டுத் திரும்பியிருந்தாள்.

திடீரென்று மனதின் ஓரத்தில் சிறு சலனம்... தன்னைப் போலவே அவனும் காதலெனும் மாய வலையில் சிக்குண்டு தவித்ததால்தான், இந்த முடிவுக்கு வந்திருப்பானோவென்ற சிறு நப்பாசையும், எதிர்பார்ப்பும்...!

தலையைக் குலுக்கி அந்த நினைவை அழித்தவளுக்குள்,அவன் அவ்வளவு சுலபத்தில் ஒரு பெண்ணிடம் வீழ்ந்து விட மாட்டானென்பதை, ஷீலாவின் தற்கொலை முடிவு உறுதிப்படுத்துவதாய்!

இது, அவளைப் பழி வாங்குவதற்கென்றே அவன் எடுத்த ஒரு முடிவாகக் கூட இருக்கலாமென்று ஒரு எண்ணம் வர, உடனே அதை அடக்கினாள் அவள்.



அவளறிந்த வரையில், அவன் அப்படிப்பட்டவனில்லை என்று காதல் கொண்ட இதயம், பரிந்து வந்தது.

முன்பு அவனைப் பற்றி புரிந்து கொள்ளாமல் அவள் இருந்தாலும், அவனை இண்டர்வியூ செய்தபோதும்... அம்ரிதி ஃபாரெஸ்டுக்கு சென்று வந்த பிறகும், அவனுடைய உயர்ந்த உள்ளமும், மனித நேயமும், நட்புணர்வும், அவள் உணர்ந்ததுதான்!

ஆனால், இன்று அவனை மறுப்பதற்கு அவளுக்கு வேறு வழியே தெரியவில்லை.. அவனை வெறுக்கிறேன் என்று ஒரு பெரிய பொய்யை மனம் உடைந்து கூறுவதைத் தவிர!

அதோடு, இன்று வரையில் ஷீலாவின் விஷயம் வேறு தீர்க்கப்படாத ஒரு புதிராய்!

அது வேறு நெருஞ்சி முள்ளாய் உறுத்துகையில், அவனை ஏற்பது தன்னால் முடியாத காரியம் என்பதை பரிபூரணமாக உணர்ந்திருந்தாள் அவள்.

அதனாலேயே, அவனை உசுப்பேற்றி, அவனை வெறுப்பதாகப் பொய் கூறி மறுத்துவிட்டு வந்திருந்தாள்.

ஆனால், கைக் கெட்டிய புதையலை... பொக்கிஷத்தை கை நழுவ விட்ட பரிதவிப்பும், வேதனையும் விழியோரங்களில் கண்ணீராய் கசிய ஆரம்பித்தன.

நெஞ்சக் கூட்டிற்குள் ஒரு சோகக் கவிதையின் மலர்வு!

*உன் சோக நிமிடங்களில்...*

*நேசமாய் முன்னுச்சி கோதுகையில்...*

*ஒரு தோழியாய்!*

*சிகையில் நீர் சொட்ட*



*நீ சிலிர்த்து நிற்க...*

*உன் தலை துவட்டுகையில்*

*ஒரு அன்னையாய்!*

*மோகப் பெருக்கில் நீ...*

*மதுவுண்ட வண்டாய் கிறங்குகையில்...*

*உனக்கு எனை ஈந்து*

*ஒரு மனைவியாய்!*

*உன் ஏகாந்தம் கலைத்து...*

*சிலிர்ப்பாய் குறும்பு செய்கையில்...*

*உன் சேயாய்!*

*தன் நலம் விடுத்து...*

*உன் நலமே பெரிதாய் பேணுகையில்...*

*ஒரு சேவிலியாய்!*

*உயிரில் உருகி உணர்வில் கலந்து...*

*உன்னில் உறைய ஏக்கம்தான்!*

*ஆனால்...*

*என் காதல் கனவுகள்*

*கானல் நீரானதும்...*

*நான் கடந்த பாதையில்*

*உன் சுயம் அறிந்ததும்...*

*உன்னைத் தொலைத்து...*

*எனை இழந்து நின்றது*

*மட்டுமே நிஜமாய்!*

உன்னுடன் கழித்த
பொழுதுகளுக்கு சாட்சியாய்...
ஞாபகப் பெட்டகத்தின்
மிச்சமாய்...
ஏக்க நினைவுகளின்
எச்சமாய்...
இன்று...
என்னுடனிருப்பவை...
உன்னுடைய
நிழல் நினைவுகளின்...
நேசத் தொகுப்பு
மட்டுமே!

மனம் விரக்தி கீதம் இசைக்க, அவனை மறுத்த அந்த நிமிஷம், பெரும் நரக நிமிஷமாய்!

இருவரின் மௌன யுத்தத்திற்கு நடுவில், கடும் கோபத்தின் தீசல் வாசம்!

வாழ்க்கையைப் பெரும் போர்க்களமாக்கியிருந்தது காதல்!.. அவன் கைப்பிடித்த அழுத்தத்தில் கை ரேகைகள் தேய்ந்து காணாமல் போனதைப் போல் ஒரு உணர்வு!

அந்த நிமிடம், மடிந்தாலும் அவன் சுவாசக் காற்றின் நிழலிலேயே மடிய வேண்டும் என்ற ஏக்கம் வந்தது.

மறு நிமிடமே, அவன் வேறு ஒரு பெண்ணை விரும்பு வதாக சிக்கந்தரிடம் கூறியதும் நினைவில் வர, அந்தக் காதல் என்ன ஆயிற்றென்ற கேள்வியும் பெரும் சுயபச் சாதாபமும் பூதாகாரமாய்!



ஊராரின் பேச்சுக்காக, காதலை அடகு வைக்க அவன் துணிவானென்றும் தோன்றவில்லை.

அப்போது, ''உங்க ஹாஸ்டல் வந்துடுச்சிம்மா...'' ஆட்டோ டிரைவரின் குரல் அவளைக் கலைத்தது.

கனவுகள் கலைந்து பணம் கொடுத்து அவரை அனுப்பி விட்டு அறைக்குச் சென்றபோது, சுகன்யா வெளியில் சென்றிருந்தாள்.

அந்த நிமிடம், அவளுக்கு தனிமை மிகவும் தேவை யான ஒன்றாய்!

முகம் கழுவிவிட்டு படுக்கையில் சாய்ந்த போது, அவனை சந்தித்த முதல் நிமிடத்திலிருந்து இந்த நிமிடம் வரை, மனம் பல நிகழ்ச்சிகளை வருட ஆரம்பித்தது.

சிறு தூறலால் வெளியே சாரல் தெளித்துக் கொண் டிருந்தது மழை! அடை மழையாய் அவள் நெஞ்சில் ஆகாஷின் நினைவுகள்!

எண்ணச் சரங்கள் நீளும் போதுதான் தெரிந்தது... இதயத்தை இழந்த வலி!

* * *

அன்று மாலையில் அவளைத் தேடி ஒரு விசிட்டர் வந்திருப்பதாக ஆயாம்மா வந்து கூற, யாராக இருக்கு மென்ற யோசனையுடன் விசிட்டர்ஸ் ஹாலுக்குச் சென் றால், அங்கு வார்டனிடம் இயல்பாகப் பேசிக் கொண்டிருந் தான் ஆகாஷ்!

இவன் ஏன் இங்கு வந்தான் என்ற தவிப்புடன் அருகில் சென்றபோது, வார்டன் புன்னகையுடன் அவளிடம் திரும்பினார்.



''என்ன ப்ரீத்தி.. சாரை உனக்கு நல்லாத் தெரியுமாமே? என் கிட்ட சொல்லவேயில்லை... அதோட நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறீங்களாம்... கூடிய சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களாம்! மிஸ்டர் ஆகாஷ் சொன்னவுடனே எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?'' உற்சாகத்துடன் அவள் தோளைப் பற்றியபடி கேட்டார்.

உணர்வுகள் தொட்டாற்சுருங்கியாய் சுருங்கி, அடி வயிற்றிலிருந்து நாபி வரை அனலாய் தகிக்க, சினத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

உடனே, ''சாரி டியர்! உங்க வார்டனாச்சேன்னு உண் மையைச் சொல்லிட்டேன்... ப்ளீஸ் கோச்சுக்காதே ஹனி! எப்படி இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாளிலே தெரியத் தானே போகுதுன்னு நம்ம விஷயமெல்லாம் பேசிட்டேன்...''

விழிகளில் குறும்பு கசிய, அவள் கோபத்தை உள்ளூர ரசித்தபடி கூறினான் அவன்.

மனதிற்குள் கோபம் எரிமலையாய் பொங்க, ''மேடம்...'' என்று அவள் அழைக்கும்போதே, ''சார் உன்னை வெளியே அழைச்சிட்டுப் போக வந்திருக்காரு ப்ரீத்தி! சீக்கிரம் ரெடியாகிட்டு வா... அது வரைக்கும் நான் அவரோட பேசிட்டிருக்கேன்...'' என்றார் அவர்.

மறுக்க முடியாமல் திரும்பி ஆகாஷை முறைத்து விட்டு அவள் விருட்டென்று திரும்பிச் செல்லும்போது, அவன் குரல் காதில் விழுந்து எரியும் தீயில் எண்ணெய் வார்த்தது.



''அவளுக்கு என் மேலே சின்னக் கோபம்... அதான்..! எல்லாருக்கும் வர லவர்ஸ் குவாரல்தான்! நீங்க தப்பா நினைச்சிக்காதீங்க!'' இயல்பாக அவன் கூறியதும் இதயம் முரசாய் அதிரத் துவங்கியது.

இத்தனை விளக்கத்தையும் கேட்டுவிட்டு தன் மறுப்பையும் அவனிடம் முகத்தில் அறைந்தாற்போல கூறவேண்டும் போல்...!

வேகமாக கிளம்பி ஹாலுக்கு வந்தபோது, உடனே எழுந்து வார்டனிடம் விடைபெற்றான் அவன்.

அவனைப் பின்தொடர்ந்து செல்லும்போதே, மனதிற் குள் ஆர்ட்டிசியன் ஊற்றாய் கோபம் பொங்கியது.

அவன் ஆட்டுவித்தால் ஆடுகின்ற பொம்மையாய், பொம்மலாட்ட உலகில் சஞ்சரித்திருப்பது போல் ஒரு வித சலிப்பு வர, நெஞ்சம் பெரும் ஆயாசமானது.

## 29



காரில் ஏறி அமர்ந்தவுடன் கடும் சீற்றத்துடன் திரும்பிய வள், ''உங்க மனசுல நீங்க என்ன நினைச்சிட்டிருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா..?'' சுள்ளென்று கேட்டாள்.

''ம்... உன்னைத்தான்னா புரியுமா? இல்லை... அந்த ஆஸ்திரேலியப் பறவை மாதிரி ஒரு வசந்த மாளிகையைக் கட்டி, காதல் நடனம்

ஆடனுமா? அப்ப நான் நம்புவியா?'' அவன் சிறுமுறுவலுடன் கண் சிமிட்டியபடி கேட்டான்.

''நிச்சயமா நம்ப மாட்டேன்... ஏன் இப்படி ஒரு பொய்யை உண்மை மாதிரி சொல்றீங்க? நீங்க பெரிய பணக்காரர்.. அதோட ஒரு ஆண்..! சொசைட்டியில உங்க பேர் கெட்டாலும் பரவாயில்லை.. சுலபமா மறக்க வெச்சிடலாம்..! ஆனா நான் ஒரு பெண்... அதுவும் நார்மல் மிடில் கிளாஸ்.. எனக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு... அதை ஸ்பாயில் பண்ணினா எனக்குப் பிடிக்காது!'' படபடவெனப் பொரிந்தாள்.

''முதல்லே ஒன்னு தெரிஞ்சுக்க... நான் பொய் சொல்லலை... உன்னை வெறுக்கவும் இல்லை! அதான் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேக்கறேன்... இப்ப நீ சொன்னியே உன் பேருக்கு களங்கம் வரக் கூடாதுன்னு! அதையும் சரி பண்ணிடலாம்.. அதோட நம்ம ரெண்டு பேரையும் இணைச்சு நிறைய பேர் இப்பவே பேச ஆரம்பிச்சிட்டாங்க... அந்தையோட கைங்கர்யம், இது லேடீஸ் கிளப் வரைக்கும் போயிடுச்சு... அதுக்கெல்லாம் சீக்கிரமே ஒரு முற்றுப்புள்ளி வெச்சாகணும்! அதான் இந்த முடிவு!'' அழுத்தமான குரலில் கூறினான்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை... ஊரிலே பேசறாங்கன்றதுக்காக கல்யாணமெல்லாம் பண்ணிக்க முடியாது! விருப்பம், காதல் இதெல்லாம் மனசுல தானா பொங்கி வரணும்! மத்தவங்களுக்காக ஒரு பொய் வாழ்க்கை வாழறதை விட தனியா இருக்கறதே பெட்டர்! ஒருத்தருக்கொருத்தர் பரஸ்பரம் அன்பு, நேசம் இதெல்லாம் இல்லாத ஒரு திருமண வாழ்க்கையை என்னால சத்தியமா ஏத்துக்க முடியாது'' உறுதியான குரலில் மறுத்தாள் அவள்.



''நம்ம அப்பா, அம்மாவெல்லாம் அரேஞ்ட் மேரேஜ் தான் பண்ணிக்கிட்டாங்க... அவங்கள்ளாம் லவ் பண்ணிக்காம நல்லாத்தானே இருந்தாங்க... அதனால உன் வாதத்தை என்னால ஒத்துக்க முடியாது...'' இதழோரங்கள் துடிக்கக் கூறினான் அவன்.

''நீங்க ஏத்துக்கிட்டாலும், ஏத்துக்கலைன்னாலும் எனக்குக் கவலையில்லை.. என்னால முடியாது... அவ்வளவுதான்!''

''ஏய்...! என்ன ரொம்பத் திமிராப் பேசறே? எத்தனை பொண்ணுங்க என் பின்னாடி சுத்தி சுத்தி வந்திருக்காங்க தெரியுமா? அப்பல்லாம் இளகாதவன் உன்னைப் பாத்து ஏன்... சே!'' ஸ்டியரிங் வீலில் வேகமாகக் குத்தினான்.

''அதான் நான் கேக்கறேன்.. ஊர் உலகத்துல பொண்ணா இல்லை... உங்களையே சுத்தின அந்த நடிகை.. விடாம அட்டையா ஒட்டிட்டிருந்த அந்த மாடல் சுனிதா... அவங்களை ஏன் ரிஜெக்ட் பண்ணினீங்க?'' குத்தலாகக் கேட்டாள்.

''என்ன உளறல் இது ப்ரீதி? அந்த நடிகையைப் பத்தி நான் முன்னாடியே சொல்லியிருக்கேன்...! என் கம்பெனிக்கு மாடல் சுனிதா...! டெக்ஸ்டைல் ஷாப் அட்வர்டைஸ்மெண்டுல வரவ... அவளோட ஒரு பார்ட்டிக்குப் போயிருந்தேன்... அது தப்பா? ப்யூச்சர்லே கூட இது மாதிரி சம்பவங்கள் நடக்கலாம்... ஆனா நீ என்னை நம்பணும்... கணவன் மனைவிக்கு இடையில வரக் கூடாத முக்கியமான ஒரு விஷயம் சந்தேகம் தான்... அதைப் புரிஞ்சிக்க!''





''அதை ஏன் என்கிட்ட சொல்றீங்க..? உங்க வருங்கால மனைவி கிட்ட போய் சொல்லுங்க...''

''நான் அவகிட்டதான் பேசிட்டிருக்கேன்...''

ஆழ்ந்த குரலில் அவன் கூறியவுடன், சட்டென்று ஒரு குளிர் பரவத் திரும்பினாள், அவன் விழிகள் தீக்கங்குகளாய் ஜொலித்தன.

அவனுடைய கோபம் புரிந்து மனதில் பயம் வந்தாலும், ப்ரீதி வீம்புடன் திரும்பிக் கொண்டாள்.

மறு கணமே, அவளுடைய முகம் வெறியுடன் பற்றித் திருப்பப் பட்டது.

''ஏய்... என்கிட்ட இந்த அலட்சியம், திமிரெல்லாம் வேண்டாம்... என்னை ஏன் மறுக்கிறே? உண்மையான காரணம் எனக்குத் தெரிஞ்சாகணும்...''

''ம்... எனக்கு உங்களைப் பிடிக்கலை... அதான்'' கன்னென்று கூறி முடித்தவுடன், அவள் இதயமே தன் செயலின் வலி தாங்காமல் அழத் துவங்கியது.

''நான் நம்ப மாட்டேன்... என்கிட்ட இருந்து தப்பிக்கறதுக்காக நீ பொய் சொல்றே! உன் கண்கள்... அதுல பல சமயங்கள்லே வழிஞ்ச காதல்... அன்னிக்கு அம்பிதி ஃபாரெஸ்டுல எனக்கு என்னவச்சோன்னு பதறிப் போய் ஓடிவந்து அணைச்ச நீ அழுத அழுகை... அதுதான் உண்மை!''

கூர்மையாக அவளையே ஊடுருவியபடி கூறினான்.

தலைகுனிந்து அமர்ந்திருந்தவளிடமிருந்து, பதிலேதும் வரவில்லை... இறுகிப் போய் கல்லாய் அமர்ந்திருந்தாள் அவள்.



''ப்ரீதி! ஏன் இப்படி என்னைக் கொல்றே! இது வரைக்கும் எந்தப் பொண்ணுகிட்டயும் நான் இப்படிக் கெஞ்சினதில்லை.. என்னைப் புரிஞ்சிக்கவே மாட்டியா? எனக்கு என்ன குறைச்சல்? அழகில்லையா.. இல்லை.. பணமில்லையா...? இப்ப சொல்லு.. என் சொத்து எல்லாத்தையும் உன் பேரிலே எழுதி வைக்கிறேன்...''

உடனே சீற்றத்துடன் நிமிர்ந்தாள் அவள்.

''யாருக்கு வேணும் உங்க பணம்? ஏன்.. என்னை விலைக்கு வாங்கலாம்னு பாக்கறீங்களா? நீங்க பண்ணின பாவம்தான் உங்களை இப்படி சுத்துது...''

சட்டென்று அவனுக்கு ஏதோ புரிந்தாற் போல!

வேகமாகத் திரும்பி அவள் தோளைப் பிடித்து உலுக்கியபடி, ''நான் எந்தப் பாவமும் பண்ணலை... ஏதோ மனசில வச்சிக்கிட்டுத்தான் நீ இது மாதிரி பேசறே... என்னை நிராகரிக்கிறே! அது என்னன்னு எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்.. சொல்லு!'' இடியாய் உறுமினான்.

''ம்... தெரிஞ்சிக்கங்க! நீங்க ஒரு அபலைப் பொண்ணைக் காதலிக்கறதா நடிச்சி ஏமாத்தி, அவ கல்யாணம் பண்ணிக்கக் கேட்டதும் மறுத்தீங்களே... அப்ப அவ தற்கொலை செஞ்சிக்க முடிவெடுத்தாளே... அந்தப் பாவம்தான் நான் சொன்னது!'' தாங்க முடியாமல் கூறிவிட்டாள்.

மறுகணமே, அவன் உடல் நாணேற்றிய வில்லாய் இறுக, கண்கள் செவ்வரியோடிச் சிவந்து, கை முட்டிகளில் நரம்புகள் தெறித்தன.

''என்ன உளர்றே? நான் ஒருத்திய காதலிச்சி ஏமாந்தேனா? என் வாழ்க்கையில் நான் முதன் முதலா காதலிச்சது உன்னைத்தான்... அதைக் கூட ஏன் செஞ்சேன்னு இப்போ வருத்தப்பட ஆரம்பிச்சிருக்கேன்!'' இறுகிய குரலில் இரைந்தான்.

அவளுக்குள், ஷீலாவின் நினைவுகளால் எரிமலையே வெடிப்பது போல்!

வேகமாக நிமிர்ந்தவள், ''ம்... சத்தறதினாலே பொய் உண்மையாகிடாது சார்! நான் பாத்தேன்... என் கண்ணாலப் பார்த்தேன்.. உங்களாலே தற்கொலைக்கு முயற்சி செஞ்சி குத்துயிரா இருந்த ஷீலாவைப் பார்த்தேன்...'' நீதி கேட்டுப் பாண்டியனின் முன் நின்ற கண்ணகியாய்ச் சீறினாள்.

''என்னது...? என்னால அவ தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்சாளா? வேடிக்கை தான்... என்னைக் காதலிக்கிறதா சொல்லி சுத்தி வந்த பொண்ணுங்களை எல்லாம் நான் கல்யாணம் செஞ்சுக்கணும்னா.. இது வரைக்கும் நூறு பேர் என் அந்தப்புரத்திலே இருந்திருப்பாங்க!'' நக்கலாகக் கூறினான்.

''உங்களுக்கு பெண்கள்னா அவ்வளவு கேவலமா? அவளைக் காதலிக்கிற மாதிரி நடிச்சி ஏமாத்திப்பழகி, அவ கல்யாணம் செஞ்சுக்க கேட்டதுமே, நீங்க வெறுத்து ஒதுக்கலை...?''

''இல்லை... நான் அதுமாதிரி ஆள் இல்லை... அவதான் என்னை சுத்தி சுத்தி வந்தா... ஆனா நான் கண்டுக்கலை...! ஏன்னா பணத்துக்காக என்னை சுத்தின பெண்களோட எண்ணிக்கை எப்பவுமே அதிகம்! ஒரு நாள் அவ என்னை



விரும்பறதாவும், என்னைத் தான் கல்யாணம் செஞ்சுப் பேன்னும் வந்து அழுதா...! எனக்கு அந்த மாதிரி எண்ணமே இல்லைங்கிறதைச் சொல்லி வாா பண்ணி அனுப்பினேன்...அப்பவும் என்னை அவ விடலை... நான் ஒத்துக்கலைன்னா, தற்கொலை பண்ணிப்பேன்னு மிரட்டினா... அவ ஏதோ விளையாட்டுக்குத்தான் சொல்றான்னு நினைச்சேன்... திட்டினேன்...! ஆனா அவ உண்மையிலேயே அதுக்கு முயற்சி செஞ்சது எனக்குத் தெரியாது...! இது தான் உண்மை!''

''நோ... நீங்க பொய் சொல்றீங்க... எனக்கு ஷீலா எல்லா உண்மையும் சொல்லிட்டா... அன்னியிலேருந்து மனசுக்குள்ளே தணலா எரிஞ்சிக்கிட்டிருக்கற நெருப்பு இது! அது அவ்வளவு சுலபத்துல அணையாது...! நான் உங்களை நம்ப மாட்டேன்...மேலே மேலே பொய் சொல்லி உங்களை நீங்களே கேவலப்படுத்திக்கிட்டீங்க... ஐ ஹேட் யூ! ஐ ஹேட் யூ...!'' ப்ரீத்தி வெறி பிடித்தவள் போல் கத்தினாள்.

மறு கணமே, ஆகாஷின் முகம் சுருங்கி பல வகையான உணர்ச்சிகளைக் கலவையாய் பிரதிபலித்தது.

சினம், வெறுப்பு, நம்ப இயலாமை... தன்னிரக்கம் எல்லாம் சேர்ந்து அவனைப் பெரும் அதிர்ச்சியிலாழ்த்தியிருப்பது தெரிந்தது.


''சே... இப்படி ஒரு பொண்ணையா நான் காதலிச்சேன்...? வாழ்க்கைக்கு அடிப்படையே நம்பிக்கைதான்...! அது இல்லாத ஒருத்தியை... மனசு முழுக்க நஞ்சும், குரோதமுமே இருக்கிறவளை... வேண்டாம்... நீ.. என்னை நம்ப வேண்டாம்...! போ... என் கண் முன்னாடி நிக்காதே.. போயிடு...!''



சீற்றத்துடன் காரக் கதவை அவன் திறந்துவிட, கோபமும் அழுகையுமாய் விம்முடன் திரும்பிப் பார்க்காமலே வெளியேறினாள் ப்ரீத்தி.

மறு நிமிடமே, இரு கைகளிலும் முகத்தைப் புதைத்தவளின் மனதிற்குள், வாழ்க்கையில் முதன் முதலாக எல்லா வகையிலும் தோற்றுப் போன ஒரு உணர்வு!

30



ஹோட்டல் வாசலிலேயே ஒரு ஆட்டோவைப் பிடித்து நேரே ஹாஸ்டலுக்கு சென்ற ப்ரீத்திக்கோ, கைக் கெட்டிய புதையலைத் தானே கை நழுவச் செய்து விட்டோமே என்ற பரிதவிப்பும், ஏக்கமும்!

ஆனால், ஆகாஷின் பொய்யும், அதனால் அவள் தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டதையும் உணர்ந்து, பெரும் ஏமாற்றமும் வந்தது.

அறையிலிருந்த சுகன்யாவிற்கு அவளுடைய அழுகையும், குமுறலும் எதையோ புரிய வைக்க, ப்ரீத்தி தானாகவே சமாதானமாகட்டும் என்று அவள் காத்திருந்தாள்.

வெகு நேரம் கழித்து அவள் சற்று இயல்பாகிய பிறகே, சுகு அவளிடம் விசாரித்தாள்.

விம்மலும், விசும்பலுமாய் நடந்ததை எல்லாம் அவள் கூறிய போது, சுகுவிற்கு என்ன செய்வதென்றே புரிய



வில்லை! மெல்ல ப்ரீத்தியின் தோளை வருடி ஆறுதல்படுத்தியவள், ''நீ ஆகாஷை விரும்பறது உண்மைதான்... இல்லையா?'' மெதுவாகக் கேட்டாள்.

பதில் கூறாமலே ப்ரீத்தி அழுகையைத் தொடரவும், ''ஏன் அவர் சொல்றது உண்மையா இருக்கக் கூடாது? கொஞ்சம் யோசிச்சிப் பார்த்தியா?'' யோசனையுடன் கேட்டாள்.

''அப்போ ஷீலா பொய் சொல்லியிருப்பான்றியா? அவ தற்கொலை செஞ்சுக்கற அளவு போனது அப்ப பொய்யா? இவ்வளவு நாள் கழிச்சி ஆகாஷ் என்னை விரும்புறதுன்னு தெரிஞ்சு முன்னாடியே எச்சரிக்கை செஞ்சாளா? என்னடி உளர்றே? கையும் களவுமா மாட்டினப்புறம், என்ன சொல்லி சமாளிக்கறதுன்னு புரியாம, தான் லவ் பண்ணவே இல்லைன்னு ஆகாஷ் சொன்னதுதான் பொய்! என்னைத் தொந்தரவு பண்ணாதே!'' குமுறலுடன் கூறிவிட்டு, திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

* * *

மறுநாள் காலையில் ப்ரீத்தி ஒரு முடிவுடனே எழுந்தாள்.

பத்திரிகை அலுவலகத்திற்குச் செல்லும்போதே ஒரு மாத விடுமுறைக்கான கடிதத்தையும், தான் பணியிலிருந்து விலகுவதாக ஒரு ராஜினாமாவையும் கையோடு எடுத்துச் சென்றாள்.

முரளியின் அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்று இரண்டையும் அவன் முன்னால் வைத்தபோது, அதை யோசனையுடன் பிரித்தான் அவன்.

பார்வையை ராஜினாமாக் கடிதத்தில் ஓட்டிய மறு கணமே அவன் முகம் சுருங்கியது.

வேகமாக நிமிர்ந்து, "ப்ரீத்தி! திடீர்னு ஏன் இந்த முடிவுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா? இதை ஏற்க நான் மறுத்தா..." கேள்வியாக நிறுத்தினான்.

"சாரி சார்... அது பர்சனல்.. எனக்கு வேற இடத்தில வேலை கிடைச்சிருக்கு... நீங்க என் ராஜினாமாவை ஏத்துக்கிட்டுத்தான் ஆகணும்!" மெல்லிய குரலில் கூறினாள்.

"என் ப்ரீத்தி... இங்க உங்களுக்கு ஏதாவது ப்ராப்ளமா? நான் கூட ஒதுங்கித் தானே இருக்கேன்... அந்த வேலையில சம்பளம் அதிகம்னா நானும் அதே அளவுக்குத் தரேன்."

"இல்லை சார்... நான் வெளியூருக்கு வேலைக்குப் போகலாம்னு முடிவெடுத்திருக்கேன்... ப்ளீஸ் அக்செப்ட் பண்ணிக்கங்க."

அவளையே குழப்பத்துடன் ஊடுருவியவன், "இது ஆகாஷுக்குத் தெரியுமா?" கூர்மையாகக் கேட்டான்.

சட்டென்று அவள் முகத்தில் பெரும் பதட்டம் விரவிப் பரவியது...!

"ஊஹூம்... தெரியாது.. ப்ளீஸ்... அவர்கிட்டே எதுவும் சொல்ல வேண்டாம்... அப்புறம் இன்னொரு விஷயம்.. தீபாவுக்குக் கூட இப்ப தெரிய வேண்டாம்.. நானே சொல்லிக்கறேன்..." தவிப்புடன் கூறிவிட்டு கைப்பையுடன் வெளியேறியவளைப் பார்த்தபோது அவனுக்குள் பெரும் யோசனை வந்தது.



அவனுக்கும் ஆகாஷுக்கும் இடையே ஏதாவது பிரச்சனையாக இருக்குமோவென்று நினைக்கும்போதே அதைப்பற்றி ஆகாஷிடம் கேட்க முடியாமல் தடுத்தன... ப்ரீத்தியின் வார்த்தைகள்!

ஆனால், தான் ஒரு நல்ல ரிப்போர்ட்டரை இழக்கப் போவது மட்டும் நிதர்சனமாய் உறைத்தது.

அன்று முழுவதும் முரளி அதே யோசனையுடனேயே இருந்தான்.

* * *

அலுவலகத்திலிருந்து கிளம்பிய ப்ரீத்திகா, நேரே மாமாவின் வீட்டிற்குச் சென்றாள்.

அவளைக் கண்டதும், "வா வா... என்னடி ப்ரீத்தி இந்த நேரத்துல? ரொம்ப ஆச்சர்யமா இருக்கு... நானே உனக்கு போன் பண்ணலாம்னு இருந்தேன்..." ஆவலுடன் வரவேற்றார் கௌசல்யா.

"சும்மாதான் வந்தேன் மாமி.. இன்னிக்கு லீவு போட்டிருக்கேன்... உங்களைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்..."

"நாங்க அடுத்த வாரம் அமெரிக்கா போறோம்... ஷீலாவுக்கு இப்ப எட்டாவது மாசம்... அடுத்த மாசம் வளைகாப்பு செய்யணும்... கொஞ்சம் முன்னாடியே போறது நல்லதுன்னு நான்தான் உங்க மாமாகிட்டே சொன்னேன்... விசா எல்லாம் வந்துடிச்சி... இன்னிக்கு தான் அவர் டிக்கெட் கன்ஃபர்ம் பண்ணப் போயிருக்காரு... என்னிக்குன்னு தெரிஞ்சவுடனே உனக்கு போன் பண்ணி



சொல்லலாம்னு இருந்தோம்... இப்ப போனா ஆறு மாசம் கழிச்சித் தான் வருவோம்... அதுவரைக்கும் வீட்டைப் பூட்டி வச்சிட்டுப் போகணுமேன்னு தான் கவலையா இருக்கு!" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினார்.

"இப்போ ஷீலா எப்படி இருக்கா மாமி! நான் பேசி ஒரு மாசத்துக்கு மேல ஆச்சு!" மெல்ல விசாரித்தாள் அவள்.

"நல்லாருக்காடி... பிளட்பிரஷர்தான் அடிக்கடி அதிகமாகுதுன்னு நேத்து போன் பண்ணினப்ப சொன்னா... மத்தபடி நல்லாருக்காளாம்... ரெகுலரா செக் அப் போறேன்னா!"

"அவளை நான் ரொம்ப விசாரிச்சதா சொல்லுங்க மாமி.. ஜாக்கிரதையா இருக்கச் சொல்லுங்க" அவள் கூறிக் கொண்டிருக்கும்போதே, ராமலிங்கம் வந்து விட்டார்.

"ப்ரீத்தி.. இப்பதான் உன்னைப் பத்தி நினைச்சிட்டே வரேன்... உன்கிட்டே ஒரு உதவி கேக்கலாமான்னு யோசனை... எப்படிம்மா இருக்கே?" என்று நலம் விசாரித்தார்.

"நான் நல்லாருக்கேன் மாமா.. என்ன.. உதவி அது இதுன்னு கேக்கறீங்க... சொல்லுங்க மாமா.. நான் என்ன செய்யணும்?"

"அது ஒண்ணுமில்லைம்மா... மெட்ராசிலே வீட்டைப் பூட்டிட்டுப் போகணும்னு நினைச்சாலே பயமா இருக்கு... ஆறு மாசத்துக்காக வாடகைக்கும் விட முடியாது.. அதான்.. நீ.. வந்து இங்கே தங்கியிருக்க முடியுமான்னு கேக்க நினைச்சேன்.. நாங்க வந்தப்புறம் கூட நீ இங்கேயே இருக்கலாம் ப்ரீத்தி.. ஷீலாவோட ரூம் காலியாத்தானே



இருக்கு... என்ன சொல்றே...? யோசிச்சு சொல்லு!" என்றார்.

இறைவனே தனக்கு இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த உணர்வில், உடனே ஒத்துக் கொண்டாள் அவள்.

"சரி மாமா! நான் இங்கேயே வந்து தங்கிக்கறேன்... நானும் அந்த ஹாஸ்டலை விட்டு வேற இடம் பார்க்கலாமான்னு யோசிச்சிட்டிருந்தேன்.. நீங்க வர்ற வரைக்கும் நான் இங்கேயே இருக்கேன்..."

ராமலிங்கத்திற்கும் கௌசல்யாவிற்கும் பெரும் பாரம் இறங்கிய நிம்மதி!

ப்ரீத்தியும், ஹாஸ்டலில் இருந்தால் ஆகாஷ் மீண்டும் வந்து தொந்தரவு செய்வானோவென்ற பயத்தில் தான் இந்த முடிவெடுத்தாள்.

வேலையை விட முடிவெடுத்ததும், அந்தக் காரணத் தினால்தான்....

அவனை ஒரு அளவிற்கு மேல் தவிர்ப்பது தன்னால் முடியாதென்பதும்... தன்னையறியாமலே தன் மனம் வெளிப்பட்டுவிட்டால் என்ன செய்வதென்ற பயமும் அவளைப் பெரிதும் ஆட்டிப்படுத்தியிருந்தன.

"என்ன ப்ரீத்தி டல்லா இருக்கே?" மாமா கண்டு பிடித்து விசாரித்தார்.

"ஒண்ணுமில்லை மாமா.. இந்த வேலையை ரிசைன் பண்ணிடலாம்னு இருக்கேன்... வேற ஜாப் தேடணும்" யோசனையுடன் கூறினாள்.

"ஏன்.. என்னாச்சும்மா.. மேனேஜ்மெண்ட்டோட ஏதாவது ப்ராப்ளமா?"

"ஒன்னுமில்லை மாமா.. நானாத்தான் முடிவெடுத்தேன்... ஒரே பத்திரிகையில இருந்து போரடிக்குது.. அதான்!" மனதை மறைத்துக் கூறியவள், உடனே கிளம்பி விட்டாள்.

* * *

பிறகு ஹாஸ்டலில், இது பற்றிக் கூறியபோது, சுருதான் பெரிதும் ஆடிப்போனாள்.

"என்னடி ப்ரீத்தி... திடீர்னு இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே? உன்னைப் பிரிஞ்சி நான் எப்படி இருப்பேன்.. உங்க மாமா ஃபாரின் போனா வீட்டுக்கு ஏதாவது ஒரு செக்யூரிட்டியை ஏற்பாடு பண்ண வேண்டியது தானே?" வருத்தத்துடன் கேட்டாள்.

"இது அதுக்காக மட்டும் எடுத்த முடிவில்லை சுரு! வேலைய விடறதா முடிவு பண்ணி முரளிகிட்டே ரெசிக்னேஷன் லெட்டர் கொடுத்திட்டேன்... இங்கே இருந்தா ஆகாஷ் என்னைத் தேடி வந்தாலும் வரலாம்... ஆனா மாமா வீடுன்னா யாருக்கும் தெரியாது.. நான் எந்த வித பயமும் இல்லாம நிம்மதியா இருக்கலாம்... உடனே வேற வேலைக்கும் ட்ரை பண்ணலாமின்னு இருக்கேன்..."

"ஏன்டி இப்படிப் பண்றே? ஆகாஷ் சொல்றதையும் கன்சிடர் பண்ணிப் பார்க்கலாமில்லையா? அப்போ அப்படி நடந்திருந்தாலும், இப்ப உன்னை விரும்பறேன்னு வரப்ப.. அதுவும் இப்படி ஒரு மல்ட்டி



மில்லியனர்... ஸ்மார்ட் பிசினஸ் மேன்.. இந்த வாய்ப்பு எல்லாருக்கும் கிடைக்குமா... யோசிச்சிப்பாரு!" ஆதங்கத்துடன் கூறினாள்.

"சுரு.. இனிமே ஆகாஷ் பத்தி என்கிட்டே எதுவுமே பேச வேண்டாம்... ப்ளீஸ்" என்றபடி தன் துணிகளை எல்லாம் எடுத்து அடுக்க ஆரம்பித்தாள் அவள்.

அப்போதுதான், ஆகாஷ் அனுப்பிய ஆர்னிதாலஜி பற்றிய புத்தகங்களின் நினைவு வந்தது.

எல்லாவற்றையும் தனியே எடுத்து வைத்தவள், உடனே அதைப் பார்சல் செய்து கூரியரில் அனுப்ப ஏற்பாடு செய்தாள்.

'ஆகாஷின் புத்தகங்களை அவசரம் அவசரமாக அனுப்புகிறாயே.. அவனுடைய நினைவுகள் உன் இதயத்திற்குள் ஆதார சுருதியாய் ஒளிந்திருக்கிறதே.. இந்தப் புத்தகங்களை விட கனமாய் பதிந்திருக்கிறதே.. அதை என்ன செய்யப் போகிறாய்' என்று செல்லமாய் அதட்டியது உன் மனது!

தன்னையே அடக்க முடியாமல் போராடியவளின் இதயம், ரத்தக் கண்ணீர் வடித்தது.

## 31



மறுநாள் காலையிலேயே, வார்டனிடம் தன் முடிவு பற்றிக் கூறிய ப்ரீத்திகா, மேலும் இரண்டு மாதங்களுக்கான அறை வாடகையையும் அவரிடம் அளித்து விட்டாள்.



தான், திடீரென்று அறையைக் காலி செய்வதால், தன்னால் அவருக்கு எந்த இழப்பும் ஏற்படக் கூடாதென்று எண்ணினாள்.

"என்ன ப்ரீத்தி... மிஸ்டர் ஆகாஷுக்கும், உனக்கும் கல்யாணம் நிச்சயமாயிடுச்சா? அதான் ரூமை வெகேட் பண்றியா...?" வார்டன் சுவாரசியத்துடன் கேட்டார்.

உடனே விதிர்த்துப் போனவள், "இல்லை மேடம்... அப்படி இருந்தா உங்ககிட்டே சொல்ல மாட்டேனா? மாமாவும், மாமியும் யு.எஸ் போறாங்க! ஆறுமாசம் வீட்டைப் பூட்டி வைக்க பயம்... அதான் நானே அங்கே போய்த் தங்கிடலாம்னு இருக்கேன்...!" மெதுவாகக் கூறினாள்.

அவள் ஹாஸ்டலை விட்டு செல்லப் போவதை அறிந்து, சுருவிற்கு தான் தாங்கவில்லை.

"என்னால டைஜஸ்ட் பண்ணவே முடியலைடி ப்ரீத்தி! நீ இல்லாம நான் எப்படித் தனியா இங்கே இருக்கப் போறேன்... நினைச்சாலே ரொம்பக் கஷ்டமா இருக்கு.. நட்புங்கறது எவ்வளவு உயர்ந்த ஒரு உணர்வுன்னு உன் பிரிவுலதான் எனக்குப் புரியுது..." கலங்கிய விழிகளுடன் நிறுத்தினாள்.

அவளுடைய தோளை ஆதரவாகப் பற்றியவள், "எப்படி இருந்தாலும் ஒரு நேரத்துல நாம பிரிஞ்சுதானே ஆகணும் சுரு! உனக்கே கல்யாணம் முடிவாயிடுச்சின்னா, நீ உன் கணவர் இருக்கிற ஊருக்குத் தானே போயாகணும்...! நான் இங்கேதான் இருக்கேன்.. வீக் எண்டுலே நாம மீட் பண்ணலாம்... நீ எங்க வீட்டுக்கு வா... இல்லைன்னா நான் இங்கே வரேன்...! ஆனா ஒரு விஷயம் சுரு.. யார்



வந்து கேட்டாலும் தவறு செஞ்சு எங்க மாமா வீட்டு அட்ரஸ் மட்டும் யாருக்கும் குடுத்திடாதே.. ப்ளீஸ்...!" சிறு சோகத்துடன் கேட்டாள்.

"ஏன்டி இப்படிச் செய்யறே? எனக்கென்னவோ ஆகாஷைப் பார்த்தா தப்பாவே நினைக்கத் தோணலை! உன்னோட முடிவை ரீகன்சிடர் பண்ணக் கூடாதா? நீ திட்டினாலும் பரவாயில்லைன்னு நான் இதச் சொல்றேன்."

அவளிடம் பேசியபடி நிமிர்ந்த சுருவை, கலங்கிய விழிகளும், அதில் தெரிந்த காயப்பட்ட பாவனையும், வாயமூடச் செய்வதாய்!

* * *

மறுநாள் மாலை, மாமா டாக்சியுடன் வர, அனைவரிடமும் விடைபெற்றுக் கிளம்பினாள் ப்ரீத்தி.

சுருவும் ஆயாவும், அவளுடைய டாக்சி கண்களிலிருந்து மறையும் வரை கலங்கிய விழிகளுடன் விடை கொடுத்தனர்.

மாமாவின் வீடு, ப்ரீத்திக்கு உடனே பழகிப் போயிற்று! அவளுடைய இளமைக்கால நாட்களின் பதிவுகளை ஒவ்வொரு சுவரும் ஞாபகப்படுத்தின.

மாமா, மாமியின் துணை பெரும் பலம் தருவதாய்!

அந்த வாரம் முழுவதும் அறையிலேயே அடைந்திருந்தவளுக்குள், ஆகாஷின் நினைவுகள் தான் அதிகமாய்!

ஆனால், ஆகாஷோ பெரும் கோபத்திலும் காயப்பட்ட வேதனையிலுமிருந்தான்.

எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்தாலும், கம்பெனி சம்மந்தப்பட்ட ஃபைல்களை வீட்டிற்கே எடுத்து வந்து பார்த்தாலும், மனதில் புகைந்து கொண்டிருந்த சீற்றக் கனலை மட்டும், அணைக்கவே முடியவில்லை.

ஒரு பெண்... அதுவும் தான் விரும்பியவள், தன்னை நம்பாமல் புரிந்து கொள்ளாமல் நிராகரித்துத் தூக்கி யெறிந்து விட்டுச் சென்றது, அவனைப் பெரிதும் நிலை குலையச் செய்திருந்தது.

எப்போதுமே, எல்லா விஷயங்களையுமே, தன் அக்கா அருந்ததியிடம் பகிர்ந்து கொள்பவனுக்கு, இந்த முறை ஏனோ அதற்கும் மனமில்லை!

தன்னுடைய தன்மானத்திற்கும், ஈகோவிற்கும் விழுந்த அடியை, வெளியே வெளிச்சம் போட்டுக் காட்ட மறுத்தது, நெஞ்சம்!

அந்த சனிக்கிழமையன்று, மகாபலிபுரத்திலிருக்கும் தன்னுடைய கெஸ்ட் ஹவுசிற்கு சென்று தங்கிவிட்டு வரலாமென்று அவனுக்குத் தோன்றியது.

இதயம் தனிமையை வேண்ட உடனே கிளம்பிவிட்டான் ஆகாஷ்.

அதற்கு முன் சுகுமாரை அழைத்தவன், "நம்ம மகாபலிபுரம் கெஸ்ட் ஹவுசுக்கு போய், நான் ஒரு நாலைஞ்சு நாள் தங்கிட்டு வரலாம்னு இருக்கேன்! இங்கே எல்லாத்தையும் நீங்க பாத்துக்கறீங்களா? ஏதாவது எமர்ஜென்சின்னா மட்டும் கால் பண்ணுங்க.. நான் இல்லாம



மேனேஜ் பண்ணிப்பீங்க இல்லை...?" யோசனையுடன் கேட்டான்.

"எல்லாம் நாங்க பாத்துக்கறோம் சார்... நீங்க போயிட்டு வாங்க... உங்களுக்கும் ரெஸ்ட்டுங்கிறதே இல்லாமப் போச்சு... ஒண்ணும் கவலைப்படாதீங்க சார்...! ரிலாக்ஸ்டா இருந்துட்டு வாங்க.. முக்கியமான தேவைன்னா, நாங்களே போன் பண்றோம்" சுகுமார் பவ்யமாகக் கூறினான்.

* * *

சனிக்கிழமையன்று மாலை, அங்கு சென்றவனுக்குள், நீறு பூத்த நெருப்பாய், ப்ரீத்தியின் ஞாபகங்கள்!

ஷீலாவின் பொய்களும், தன் மனம் கவர்ந்தவளின் அவநம்பிக்கையும் அந்தத் தீயை விசிறிவிட, பெண்களே புரிந்து கொள்ள முடியாத மாயக்காரிகளோவென்று தோன்றுவதாய்!

ஒரு விதை வீரியம் கொண்டு துளிர்க்கும் அந்த தேவகணம் அறியப்படாமலே போய் விடுவதுபோல், தன் மனதிற்குள் காதல் எப்போது வந்ததென்றே புரியாமல், சபித்தது மனது!

ஆழ்மனதில் அடித்துக் கொண்டிருந்த புயலும், பூகம்பமும், அதிர்வுடன் விழிகளில் மின்னலாய்த் தெறித்தன.

பெரும் அலைப்புறுதலுடன் அவன் படுக்கையில் புரண்ட போது, செல் ஒலிக்க ஆரம்பித்தது.

சலிப்புடன் எடுத்துப் பார்த்தால், சிக்கந்தர்தான் அழைத்திருந்தான்.





யோசனையுடன் அதை ஆன் செய்தபோது, "ஹாய் ஆகாஷ்... எப்படியிருக்கே? வீட்டுக்குப் போன் பண்ணினா, நீ கெஸ்ட் ஹவுசுக்குப் போயிருக்கறதா சொன்னாங்க.. என்ன விஷயம்?" இயல்பாக விசாரித்தான்.

"ஒண்ணுமில்லை சிக்கந்த்.. சும்மாதான்! திடீர்னு ரெஸ்ட் எடுக்கணும் போலத் தோணிச்சி..அதான்! ஹனிமூன் ட்ரிப் எப்படியிருந்தது. எப்போ வந்தே?"

"காலையில்தான் வந்தோம்! இரு.. தீபா உன்கிட்டே ஏதோ பேசணுமாம்!" என்று அவளிடம் கொடுத்தான்.

தீபாவின் குரல் தவிப்புடன் வந்தது... "ஆகாஷ்! ஒரு பர்சனல் கேள்வி... உங்களுக்கும் ப்ரீத்திக்கும் நடுவில ஏதாவது பிரச்சனையா?"

சிறிது நேரம், எதிர் முனையில் கனத்த மௌனம் நிலவியது.

"ஆகாஷ்... லைன்லே இருக்கீங்கதானே? ஆர் யூ ஆல்ரைட்?" பதட்டத்துடன் கேட்டாள் தீபா.

"நோ.. ஐ யம் நாட் ஆல்ரைட்... அல்மோஸ்ட் ஷட்டர்டு! எல்லாமே முடிஞ்சு போச்சு தீபா!" என்றபடி உடனே லைனைத் துண்டித்தான் அவன்.

மீண்டும் டயல் செய்தால் 'செல்' அணைக்கப்பட்டிருக்க, மனம் பதறி எழுந்தாள் அவள்.

"சிக்கந்த்.. நாம உடனே கிளம்பணும்... வாங்க.. ஆகாஷுக்கும், ப்ரீத்திக்கும் இடையிலே, என்னவோ பெரிய ப்ராப்ளம்னு நினைக்கிறேன்... எனக்கு ரொம்ப பயமாயிருக்கு.. ஆகாஷ் இவ்வளவு உடைஞ்சி பேசி நான்



கேட்டதேயில்லை... ப்ளீஸ்... என்னை உடனே அழைச்சிட்டுப் போங்க."

கவலை சுமந்த முகத்துடன் அவள் கேட்க, உடனே பதட்டத்துடன் அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான் சிக்கந்தர்.

* * *

இன்று மாலையில், தீபாவைப் பார்க்க வந்திருந்த முரளிதான், ப்ரீத்தி ராஜினாமா செய்துவிட்ட விஷயத்தையே அவளிடம் கூறினான்.

அவளுக்கும் பெரும் வியப்பு! தாங்கள் இருவரும் கோவாவிற்கு ஹனிமூன் சென்றிருந்த இந்த பத்து நாட்களில் என்ன நடந்திருக்குமென்ற கேள்வி, புதிராய்!

கடந்த பத்து நாட்களாக, ஆகாஷிடமும் ப்ரீத்தியிடமும் பேசவில்லையென்பதே அப்போதுதான் நினைவு வந்தது.

இன்று காலையில்தான், இருவருமே தேனிலவு முடிந்து திரும்பியிருந்தனர்.

கடவுளே! ஆகாஷையும் ப்ரீத்திகாவையும் எப்படியாவது இணைத்துவை யென்று அவள் இதயம் ப்ரார்த்தித்தது.

செல்லும் வழியிலேயே ப்ரீத்தியின் செல்லுக்கு அவள் போன் செய்த போது, அதுவும் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.

உடனே ஹாஸ்டலுக்குப் பேசினால், அவள் அறையைக் காலி செய்துவிட்டுப் போய் விட்டதாகக் கூறினர்.

சோர்வுடன் கண்மூடி சாய்ந்தவளின் மனதிற்குள், பெரும் தவிப்பு!

இருவரும் கெஸ்ட் ஹவுசை அடைந்தபோது, அதன் கேர் டேக்கர் ஜெகந்தான் அவர்களை வரவேற்றார்.

ஆகாஷ், மாடியிலிருக்கும் அவனுடைய அறையி லிருப்பதாகக் கூறி அங்கு அனுப்பினார்.

அந்த நிமிடம், ஆகாஷும் ப்ரீத்தியையே நினைத்தபடி படுத்திருந்தான்.

வித்தியாசமானவளாய்... நம்பிக்கையும், சாதிக்கும் உறுதியும் நிறைந்தவளாய்.. ரவிவர்மாவின் ஓவியப் பெண்ணாய்... அனாவசிய அலட்டலோ, வழிசலோ யின்றி ஒருவித கர்வமும் திமிர்வும் நிறைந்தவளாய், பாரதியின் புதுமைப்பெண்ணாய் அவளைக் கண்டபோது, படிப்படியாக அவளிடம் தன்னை இழந்ததும்... ஈர்க்கப் பட்டதும் ஞாபகம் வந்தன.

இன்று, அவளின் புறக்கணிப்பைப் பற்றி எண்ணும் போதே, எப்படியாவது ஜெயிக்கவேண்டும் என்ற வலிமையைத் தந்தது... காதல்!


ஆனால், தன்னை நம்பாத ஒருத்தியை.. தன் நடத் தையில் சந்தேகம் கொண்டவளை... தன்னை ஒரு பெண்பித்தனாய் வர்ணம் பூசியவளை... மன்னிக்கவும் முடியாமல், மறக்கவும் முடியாமல் ரௌத்ராமாகியிருந்தான் அவன்.

விழிகளில் ஒரு வித வெப்பம் பரவி சிவக்க வைக்க, தனக்குள் தானே உலர்ந்து போய் சருகாகியிருந்தான்.



பாரதியின் அக்னி குஞ்சைப் போல, துக்கத்திலும் பெரும் தூபம், சிறுதுயரம் என்றிருக்காதவெளைப் புரியாமல் தவித்தது மனது.

32



அப்போது அறைக்கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

சாப்பாடு கூட வேண்டாமென்று ஒரு டம்ளர் பாலை மட்டும் குடித்து விட்டுத்தானே வந்தோம் என்ற யோசனையுடன், இந்த நேரத்தில் யாராக இருக்கும் என் றெண்ணியபடி, மெல்ல எழுந்து கதவைத் திறந்தான்.

வெளியில், தீபாவும் சிக்கந்தரும் தவிப்புடன் நின் றிருந்தனர்.

பத்து நாட்களுக்குள் ஒருவன் இப்படி ஓய்ந்து தெரிய முடியுமாவென, உறைந்துபோனது, சிக்கந்தரின் இதயம்!

"என்னாச்சு ஆகாஷ்... ஏன் இப்படி இருக்கே?" கேட்டு விட்டு, அவனுடைய கைகளை ஆதரவாகப் பற்றியபடி உள்ளே வந்தான்.

"சிக்கந்த்... ரெண்டுபேரும் ஏன் இப்ப வந்தீங்க? எனக்குத்தான் அறிவில்லை... உளறிட்டேன்! புதுசா கல்யாணமானவங்க நீங்க.. ஏன் தீபா... உனக்குக் கூடவா புரியலை?"

"எல்லாம் புரியுது ஆகாஷ்.. நீ ரொம்ப வேதனையில இருக்கேன்னு தெரிஞ்சவுடனே, எப்படி எங்களாலே



அங்கே நிம்மதியா இருக்க முடியும்? உனக்கும் ப்ரீத் திக்கும் நடுவில என்ன ப்ரச்சனை... அத முதல்லே சொல்லு" ஆதங்கத்துடன் கேட்டான் சிக்கந்தர்.

"வேண்டாம் சிக்கந்த்! எனக்கு எதையுமே பேச விருப்பமில்லை... அவ என்னை நம்பலை! அது ஒரு முடிஞ்சு போன சேப்டர்! எல்லாம் என்னோடவே போகட் டும்.. ஆனா வாழ்க்கையில முதன் முதலா தோல்விங் கறதுக்கு அர்த்தம் என்னன்னு ஒரு பொண்ணு எனக்கு திருபிச்சிட்டா! இதிலே பெரிய துரதிஷ்டம் என்னன்னா, நான் உயிரா விரும்பினவளா அவ இருந்ததுதான்!" சலிப்பும், விரக்தியுமாகத் திரும்பிக் கொண்டான்.

நண்பனுடைய வேதனைபுரிந்து, அவனுடைய தோளைப் பற்றி ஆதரவாக அழுத்தியவன், "ஆகாஷ்.. உனக்கு எப்பவுமே நாங்க இருக்கோம்! முதல்லே மனசு விட்டுப் பேசு.. உங்க ப்ரச்சனையை சால்வ் பண்ண என்ன வழின்னு பார்க்கலாம்!" மெல்லிய குரலில் கேட் டான்.

தீபாவும் அவனருகில் வந்து அமர்ந்து, "ப்ளீஸ்... ஆகாஷ்" என்று கெஞ்ச, மெதுவாகக் கூற ஆரம்பித்தான் அவன்.

முதன்முதலில் அவளை சந்தித்ததிலிருந்து.. எதிரும் புதிருமாய் சண்டை போட்டது.. வேலையை விட்டு எடுத்தது.. பிறகு மெல்லிய புரிதல்... பேட்டியெடுக்க வரச் சொன்னது... வித்தியாசமான பெண்ணை சந்தித் ததில் ஈர்க்கப்பட்டது... அம்ரிதி காட்டில் காதலிக்க ஆரம் பித்தது... அவள்தான் வேண்டும் என்பதில் உறுதியாய் நின்றது.. அவளுடைய மறுப்பு.. தீபாவின் திருமண



விழாவுக்கத்தில் தன் காதலைப் பயன்படுத்திக் கொண்டது-- ப்ரீத்தியின் கோபம்... விலகல்... திருமணம் செய்யக் கேட்டபடியே அவளிடம் வெளிப்பட்ட வெறுப்பு, கீர்த்தி யின் விஷயத்தில் தோழியின் பொய்யை மட்டும் அவள் நம்பியது.. என்று போன வாரம் வரை நடந்த விஷயங் களை, உடைந்த குரலில் ஒருவித வேகத்துடன் பகிர்ந் தான் அவன்.

ஒரு இரும்பு மனிதனை... கம்பீரச் சிந்தனை யாளனை... தொழிலில் வெற்றிக்கொடி நாட்டிய ஒரு சாதனைச் சிற்பியை... காதல் இந்த அளவு தகர்க்குமென் பதை அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

வேதனையில் விழியோரங்கள் துளிர்க்க, அந்த நிமிடம் ப்ரீத்தியின் மீது அளவிட முடியாத கோபம் வந்தது.

"என்ன பெண் இவள்... காதலில் பரஸ்பர நம்பிக் கையும், புரிந்து கொள்ளுதலும் தானே முக்கியம்... வெளே ஒருத்தி கூறினாள் என்பதற்காக, ஆகாஷையா தவறாக நினைப்பது!" மனம் குமுறியது.

"நான் ப்ரீத்திக்கிட்டப் பேசறேன்... ஒரு அற்புதமான மனுஷரோட காதலைப் புரிஞ்சிக்காம சந்தேகப்பட்டு... என்ன ஒரு பொண்ணு இவ..." ஒரு வேகத்துடன் இரைந் தாள்.

உடனே அவளைத் தடுத்தான் ஆகாஷ்...

"வேண்டாம் தீபா! எனக்காக யாரும் அவகிட்ட பேச வேண்டாம்! ப்ளீஸ்... இதை இத்தோட விட்டுடுங்க! காதலும், நம்பிக்கையும் கேட்டு வாங்குற ஒரு விஷய மில்லை... தானா வரணும்! ஒருத்தரை ஃபோர்ஸ் பண்ணி

வேற ஏதாவது வாங்கலாம்.. ஆனா அன்பை யாசகம் பெற எனக்கு மனசில்லை! நீங்க ரெண்டு பேரும் முதல்லே கிளம்புங்க! ஆமாம்.. ஏதாவது சாப்பிட்டீங்களா?"

"ம்.. அதெல்லாம் விடுங்க ஆகாஷ்.. அந்த ஷீலா இப்ப ஸ்டேட்ஸிலே தானே இருக்கா! அவளோட ஹஸ்பெண்ட் அருந்ததி அக்காவுக்கு பேமிலி ஃப்ரெண்ட்தானே! நாங்க பாத்துக்கறோம்..." தீபா உறுதியான குரலில் கூறினாள்.

"நோ.. அக்காவுக்கு இந்த விஷயம் எதுவுமே தெரியக் கூடாதுன்னுதான் நான் சொல்லலை... அவங்க வேற பாவம், வருத்தப்படுவாங்க... ப்ளீஸ் தீபா.. எதுவுமே சொல்லவேண்டாம்..."

ஆகாஷ் ஆழ்ந்த குரலில் கோரியதும், "சரி! நாங்க எல்லாம் பாத்துக்கறோம்.. ஆனா, நீ எப்பவும் போல தைரியமானவனா.. கம்பீரமா இருக்கணும்..." என்றபடி விடைபெற்றுக் கிளம்பினான் சிக்கந்தர்.

பிறகு, இருவரும் வீட்டிற்குத் திரும்பியதும், தீபா உடனே அருந்ததிக்கு போன் செய்து எல்லா விபரங்களையும் கூறினாள்.

அதைக் கேட்ட அருந்திக்கோ, பெரும் அதிர்ச்சியாய்.. இதயம் ரத்தக் கண்ணீர் வடிக்க ஆரம்பித்தது!

தன்னுடைய தம்பி, துணையாக எவருமின்றி தனிமையில் எவ்வளவு துடித்திருப்பான் என்று நினைக்கும்போதே நெஞ்சம் உடைந்து போனது.

"நான் உடனே பிரபுகிட்டயும் ஷீலாகிட்டயும் பேசி எல்லா உண்மையையும் அந்தப் பொண்ணு ப்ரீத்திகாவே



உணர்ற மாதிரி செய்யறேன் தீபா.. நீயும் அவகிட்டே பேசிப் பாரேன்..." கனத்த மனதுடன் கேட்டாள்.

"அக்கா! நான் உடனே பேசறேன்..! அங்கே பிரபுக்கு இந்த விஷயம் தெரியுமோ தெரியாதோ.. பாத்து நேரடியா பண்ணுங்க!"

"சரி தீபா... அதுமாதிரி எதுவும் செஞ்சிட மாட்டேன்..! ஒரு பொண்ணோட வாழ்க்கை என்னால கெட்டுப் போக அனுமதிக்க மாட்டேன்... நான் பாத்துக்கறேன்..! ஏதாவது விஷயம்னா எனக்கு உடனே கால் பண்ணு.. ஆல் தி பெஸ்ட் பை!"

போனை வைத்த அருந்ததி, மறுகணமே மனோஜின் தோளில் சாய்ந்து அழ ஆரம்பிக்க, அவனுக்கோ ஒன்றுமே புரியவில்லை.

பிறகு அவளை சமாதானப்படுத்தி விபரமறிந்த மனோஜ், உடனே பிரபுவைத் தொடர்பு கொண்டான்.

* * *

சனிக்கிழமை இரவு!

ராமலிங்கத்தையும், கௌசல்யாவையும், அமெரிக்கா செல்வதற்காக ஏர்போர்ட்டில் "செண்ட் ஆஃப்" செய்து விட்டு டாக்சியில் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தாள் ப்ரீத்திகா.

ஒரு வாரத்தில், ஓய்ந்து போய் மெலிந்திருந்தாள்.

எங்கிருந்தோ வந்தாலும், வசந்தகாலம் முடிந்து செல்லும்போது, சிறகுகளை ஞாபகார்த்தமாய் விட்டுச் செல்



லும் பறவைகளைப் போல், ஆகாஷின் நினைவுகளே உள்ளமெங்கும் நிறைந்திருந்தன.

வெந்து தணிந்திருந்த மனக்காட்டில்... அக்னிக் குஞ்சாய் அவன்!

அவன் பிரிவு.. சிதைந்து போன சிற்பமாய் அவளை உருக்குலைத்திருக்க.. சோகத்தின் பாஷையாய் விழிகளில் கண்ணீர்!

திடீரென்று அவளுடைய செல் ஒலித்தது.

கண்களைத் துடைத்தபடி எடுத்துப் பார்த்தவள், அதில் தீபாவின் எண்ணைக் கண்டதும், பதறிப்போய் உடனே இணைப்பைத் துண்டித்தாள்.

அன்றிரவு... தனிமையின் இறுக்கமும், காதலின் தகிப்பும், அவளை உறங்கவிடாமல் செய்தன.

ஆனால், எந்தக் காலத்திலும் தன் மனம் ஒரு பெண்ணை ஏமாற்றியவனை, மன்னித்து ஏற்காதென்பது புரிவதாய்!

ஆனால், அது இந்தப் பாழாய்ப் போன காதலுக்குத் தெரியவில்லையே என்று இதயம் உருகித் துடித்தது.

விழிவாசலில் நீர்க்கோலங்கள் வரையப்பட, மெதுவாக உறங்க ஆரம்பித்தாள் அவள்.

* * *

அமெரிக்காவில், பிரபுவின் செல்லுக்குத் தொடர்பு கொண்டு மனோஜ் அழைத்தபோது, அவன் பெரும் பதட்டத்திலிருந்தான்.



"மனோஜ் அண்ணா! ஷீலாவுக்கு திடீர்னு 'பி.பி' அதிகமாகி மயக்கமாகிட்டா.. இப்பதான் ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணியிருக்கேன்... 'ருசிரு'விலதான் இருக்கா! அவங்கம்மா, அப்பா இன்னிக்குத்தான் இண்டியாவிலேருந்து கிளம்பி வராங்க.. எனக்கு பயமா இருக்குண்ணா... நானே உங்களுக்கு போன் பண்ணலாம்னு நினைச்சிட்டே இருந்தேன்..."

"சரி.. நீ பயப்படாதே.. நான் உடனே அருந்ததியை அழைச்சிட்டு வரேன்..." என்றபடி போனை வைத்தவன், அருந்ததியிடம் விபரத்தை கூறினான்.

தாங்கள் ஒன்று நினைக்க, நடப்பது வேறாக இருப்பது அருந்ததியைப் பெரிதும் பலமிழக்கச் செய்வதாய்!

இருவரும் உடனே மருத்துவமனைக்குக் கிளம்பினர்.

செல்லும் வழியில், "இந்த நேரம் பாத்து, இந்தப் பொண்ணு இப்படிப் படுத்திட்டாளே மனோஜ்.. ஆகாஷைப் பத்தின உண்மையை அவளை விட்டு அந்த ப்ரீத்திகாகிட்டே எப்படி பேசச் சொல்றது?" கவலையுடன் கேட்டாள் அருந்ததி.

"பொறுமையா இரு பாக்கலாம்! அவ கொஞ்சம் சரியாகட்டும்... அப்புறமா என்ன செய்யறதுன்னு முடிவு பண்ணலாம்." ஆறுதல் கூறினான் மனோஜ்.

மருத்துவமனைக்கு சென்ற போது, விசிட்டர்ஸ் லௌஞ்சில் தான் பிரபுவைப் பார்க்க முடிந்தது.

அவனுக்கு தைரியம் கூறிவிட்டு, எந்த நேரத்திலும் தயங்காமல் அழைக்கும்படி கேட்டுக் கொண்டு இருவரும் கிளம்பினர்.

அருந்ததிக்கோ, அந்த முகம் தெரியாப் பெண்ணின் மீது இனம் புரியாக் கோபம் வந்தது.

''மனோஜ்... எனக்கு உடனே ஆகாஷோட பேசணும் போலருக்கு அவன் எப்படி இருக்கானோ? யாராலயும் அசைக்க முடியாத என் தம்பியை ஒரு பொண்ணு இவ்வளவு அலைக்கழிச்சிருக்காளே...?''

இரு கைகளிலும் முகத்தைப் புதைத்து அழ ஆரம்பித்தவளை, சமாதானப்படுத்தினான் மனோஜ்.

''அருந்ததி... கண்ட்ரோல் யுவர் செல்ஃப்! இப்போ இண்டியாவிலே நைட் ஒரு மணி...அவன் நல்லாத் தூங்கிட்டிருப்பான்... விடிஞ்சப்புறம் பேசலாம்.. இது சரிசெய்ய முடியாத ப்ராப்ளமா எனக்குத் தோணலை.. ஷீலா கொஞ்சம் நல்லாகட்டும்... உடனே எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்... ஆனா பிரபுக்கு இது நிச்சயமாத் தெரியக்கூடாது! இதனால அவங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது ப்ரச்சனை வந்துடப் போகுது.. ஒரு ஜோடியை சேர்த்து வைக்கறதுக்காக, இன்னொரு தம்பதியைப் பிரிச்ச பாவம் நமக்கு வேணாம்!''

பெருந்தன்மையுடன், ப்ராக்டிகலாகப் பேசிய மனோஜின் உணர்வுகளைப் புரிந்து கொண்டாள் அவள்.

மனக்குமுறலுடன் வீடு வந்த இருவரும், அன்றிரவு ஆகாஷிடம் பேச முயற்சி செய்தால் செல் அணைக்கப்பட்டிருந்தது.

கெஸ்ட் ஹவுசிற்குப் போன் செய்த போதோ, அவர்களுடன் பேச அவன் மறுத்துவிட்டான்.



அருந்ததியின் இதயம் உடைந்து போனது.

* * *

மறுநாள் காலையிலேயே, அவள் காரை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றாள்.

அவளைக் கண்டதும், பிரபு ஓடி வந்து அவளுடைய கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டான்.

ஷீலாவிற்கு இப்போது, ரத்தக் கொதிப்பு நார்மலாகி விட்டதாக மகிழ்ச்சியுடன் கூறியபோது, 'அப்பாடா' என்றிருந்தது அருந்ததிக்கு!

ஷீலாவுடைய அம்மாவையும் அப்பாவையும் அழைத்து வருவதற்காக தன்னுடைய நண்பனும் அவன் மனைவியும் ஏர்போர்ட்டிற்கு சென்றிருப்பதாகக் கூறினான் பிரபு.

''ஷீலாவை எப்போ டிஸ்சார்ஜ் செய்யலாம்னு ஏதாவது சொன்னாங்களா?'' ஆவலுடன் வினவினாள் அவள்.


''இன்னிக்கு மதியமே டிஸ்சார்ஜ் செஞ்சிடலாம்னு சொல்லிட்டாங்கக்கா! அதனாலதான் நான் இருந்திட்டேன்... திடீர்னு பில் 'பே' பண்ணணும்.. ஏதாவது கையெழுத்து வேணும்னா நான் இங்கே இருக்கணுமே!''

இன்றே ஷீலா வீட்டிற்கு வந்து விடுவாளென்பதை அறிந்ததுமே, அவள் மனதில் பெரும் நிம்மதி!

இனி ஒரு நல்ல செய்தி சொல்வதற்குண்டான முயற்சி எடுத்தபிறகே, தான் ஆகாஷிடம் பேச வேண்டுமென்று உறுதி பூண்டது, மனது!



33



அன்று மாலையில், அருந்ததி பிரபுவின் வீட்டிற்கு சென்ற போது, ஷீலா ஓய்வாகப் படுத்திருந்தாள்.

அவளுடைய அம்மாவும், அப்பாவும் அவளை அன்புடன் வரவேற்றனர்.

முதலில் ஷீலாவிடம் நலம் விசாரித்த பிறகு, அவளை ஓய்வெடுக்கும்படி கூறிவிட்டு, அவளுடைய பெற்றோரிடம் வந்தாள் அருந்ததி.

அவர்களிடம் பொதுவான விஷயங்களைப் பேசிய பிறகு, ப்ரீத்தியைப் பற்றி மெல்ல விசாரித்தாள் அவள்.

''ப்ரீத்தியை உங்களுக்கு எப்படித் தெரியும்? ஓ.. ஷீலா சொல்லியிருப்பா.. ரெண்டு பேரும் உயிர்த் தோழிகள்! அவ என் நாத்தனார் பொண்ணுதான்... ஏன் கேக்கறீங்க?'' ஆர்வத்துடன் கேட்டார் கௌசல்யா.

''இல்லை.. இப்ப அவ எங்கே இருக்கான்னு தெரியுமா? தர்மசங்கடத்துடன் வினவினாள் அவள்.

''அவ நம்ம வீட்டிலதாம்மா இருக்கா... என்ன விஷயம்?''

''அவ.. ம்... என் தம்பி ஆகாஷும் அவளும் விரும்பறதா நான் கேள்விப்பட்டேன்... அதான்!''

அவர் முடிக்கும்போதே, பிரபுவின் முகத்தில் சட்டென்று ஒரு மாற்றம் தெரிவது போல்!

''அப்படியா? எங்களுக்கு எதுவும் தெரியாதே.. அவ இதைப் பத்தி எங்ககிட்டே சொல்லவேயில்லையே..



இதுவரைக்கும் என்கிட்டே அவ எதையுமே மறைச்சதில்லை... ஆனா ரொம்ப சந்தோஷம்மா! அவளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமையணும்னு நான் வேண்டிக்கிட்டே இருந்தேன்...'' திகைப்பும், நிம்மதியுமாகக் கூறினார் ராமலிங்கம்.

பிறகு, அருந்ததி அவர்களிடம் விடைபெற்றுக் கிளம்பும்போது, பிரபு அவளை நிறுத்தினான்.

''ஒரு நிமிஷம் அருந்ததிக்கா! நேத்து மனோஜ் அண்ணா எதுக்காக திடீர்னு போன் பண்ணினாங்கன்னு கேக்கவே மறந்திட்டேன்... நீங்களும் ரொம்ப டென்ஷனாத் தெரிஞ்சீங்க? என்ன விஷயம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஒண்ணுமில்லை பிரபு! அதை நான் பாத்துக்கறேன். ஷீலாவை கவனமாப் பாத்துக்க...''

அவள் முடிக்கும் முன்பே, ''ஷீலா மேட்டர்னாலே ஆகாஷுக்கும் ப்ரீத்திக்கும் நடுவிலே ஏதாவது ப்ராப்ளமா? அவங்க ஆகாஷைப் பத்தி தப்பாப் புரிஞ்சிக்கிட்டாங்களா?'' பிரபு கேட்டவுடன், ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் அருந்ததி.

அப்போதுதான், அவனுக்கும் எல்லா விஷயங்களும் தெரியுமோவென்ற சந்தேகம் வந்தது, அவளுக்கு!

பிறகு, அவள் எல்லா உண்மைகளையும் பற்றிக் கூறிவிட்டு, ஷீலாவின் தற்கொலை முயற்சியை மட்டும் மறைத்து, ஆகாஷ் ஒரு பெண் பித்தனோவென்ற சந்தேகத்தில் ப்ரீத்தி மறுப்பதாகவும் கூறும்போதே, பிரபு இடைமறித்தான்.

"அக்கா! இப்ப எனக்குப் புரியுது! ஷீலா சொன்னதை வச்சி ப்ரீத்தி ஆகாஷைப் பத்தி தப்பானவராக் கணிச்சிருந்திருக்கணும்... அதனாலதான் மறுத்திருப்பாங்க!"

அவன் நிறுத்தியதும், அதிர்ச்சியுடன் அவனையே நோக்கினாள் அவள்.

"பிரபு! உனக்குத் தெரியுமா?" திகைப்புடன் முணுமுணுத்தன இதழ்கள்!

"எனக்கு எல்லாமே தெரியும்க்கா...ஷீலா இங்கே வந்தவுடனே எல்லாமே சொல்லிட்டா! அவ ஆகாஷை விரும்பியிருக்கா! ஆனா அவர் அவளை விரும்பலை.. ப்ரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து ஏத்தி விட்டதிலே, அவ மனசுல அது ஆழமாப் பதிஞ்சிடுச்சி! அவரையே சுத்தி சுத்தி வந்தப்பவும் ஆகாஷ் அவளைப் பொருட்படுத்தலைன்னதும், அவளுக்கு அது பெரிய ஈகோ ப்ரச்சனையாயிடுச்சி!

"அப்புறம் நேராவே போய், அவ தன் காதலை சொல்லி தன்னைக் கல்யாணம் பண்ணிக்க சொல்லிக் கேட்டப்பதான், அவர் மறுத்து திட்டி அனுப்பி இருக்காரு! அந்த நேரத்துல அந்தத் தோல்வியை இவளாலே தாங்க முடியலை... அது இவளோட ஈகோவுக்கு விழுந்த பெரிய அடியாயிடுச்சி!

"அவ ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கேலி பண்ணுவாங்களோன்ற பயம் வேற! தன்னை ஒருத்தர் மறுத்தது, பெரிய அவமானமா இருந்திருக்கு.. எல்லாமா சேர்ந்து அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தி, தப்பான ஒரு முடிவுக்குப் போக வச்சிடுச்சி!



"ஆனா, தான் காப்பாத்தப் பட்டப்புறமாவது வீட்டுல உண்மையைச் சொல்லியிருக்கலாம்.. தான் ஒரு தலையாக் காதலிச்சவரு, தன்னை காதலிக்கலைன்னு சொல்ல அவளோட தன்மானம் இடம் குடுக்கலை... அதான் மனசில இருந்த வன்மத்தை எல்லாம் பழியா அவர் மேல போட்டு ஆகாஷ் தன்னை விரும்பி ஏமாத்திட்டதா ஒரு பெரிய பொய்யைச் சொல்லிட்டா...

"அதை எல்லாருமே... ப்ரீத்தி உட்பட அவ தோழிகளெல்லாம் நம்பிட்டாங்க! ஆனா, ப்ரீத்தி மனசுல மட்டும் அது ஆறாத ஒரு வடுவா மாறிடுச்சின்னு என்கிட்டே ஷீலாவே ஒரு தடவை சொன்னா...அதுக்கப்புறம் அதைப் பத்திப் பேசவும், தன்னையே தாழ்த்திக்கவும் மனசில்லாததாலே ப்ரீத்தி கிட்ட உண்மையைச் சொல்ல முடியலைன்னும் வருத்தப்பட்டா!

"அவ என்கிட்ட எதையுமே மறைச்சதில்லைக்கா! எனக்கு ஏதாவது தவறான தகவல் கிடைச்சு அது எங்க வாழ்க்கையைப் பாதிச்சிடுமோன்னு முன்னாடியே எல்லாத்தையும் சொல்லிட்டா! ஆகாஷ் வேற எனக்கு பேமிலி ஃப்ரெண்டுன்னு தெரிஞ்சப்புறம், அவளால சொல்லாம இருக்க முடியலை!"

"இங்கேயே பிறந்து வளர்ந்தவன்கிறதாலே, எனக்கும் இது ஒரு பெரிய விஷயமாத் தெரியலை... ஏன்னா, டீன் ஏஜிலே இது மாதிரி இன் ஃபாசகவேஷன் வர்றது சகஜம் தானே! ஆனா, அவ எனக்கு உண்மையா நடந்துகிட்டது எனக்கு ரொம்பப் பிடிச்சது!

"ரொம்ப தேங்க்ஸ்க்கா! அவ உடம்பு சரியில்லாம இருந்தப்ப இதைப் பத்தி கேக்காம இருந்தீங்களே!" நெகிழ்ச்சியுடன் கூறினான் பிரபு.





"எனக்கும் மனிதாபிமானம் இருக்கு பிரபு! ஷீலாவும் எனக்கு ஒரு சிஸ்டர் மாதிரிதானே! நீ இன்னொரு ஹெல்ப் பண்ணணும்... எனக்காக, அந்தப் பொண்ணு ப்ரீத்திகிட்டே நீ இந்த உண்மையைச் சொல்லணும்... ஷீலாவுக்கு இப்போ எதுவுமே தெரிய வேணாம்... டெலிவரிக்கு அப்புறமா சொல்லிக்கலாம்! ஆனா ப்ரீத்திக்கு உடனே இது தெரிஞ்சாகணும்..அவ ஆகாஷைப் புரிஞ்சிக்கணும்.. செய்வியா?"

"நிச்சயமாக்கா! ஷீலா வீட்டுலதானே ப்ரீத்தி இப்ப இருக்காங்க... கொஞ்ச நேரம் கழிச்சி நானே பேசிடறேன்..."

"ம்... இப்போதான் ஏழு மணியாயிடுச்சே! அங்கே விடிஞ்சிருக்கும் அந்த நம்பர் இருந்தாக் குடு.. என் செல்லில இருந்தே பேசிடலாம்... அப்படியே ஒரு வாக் போயிட்டே பேசலாமா? என் கூடக் கொஞ்சம் வர முடியுமா?" அவளிடம் பெரும் பரபரப்பு தெரிந்தது.

உடனே உள்ளே சென்று, ராமலிங்கத்திடம் வெளியில் போய் விட்டு சிறிது நேரத்தில் வருவதாகக் கூறினான் பிரபு.

கௌசல்யா, ஷீலாவுக்குத் துணையிருக்க, கிடைத்த தனிமையில் பரபரப்புடன் அவனிடம் வந்தார் ராமலிங்கம்.

"மாப்பிள்ளை! ப்ரீத்திக்கு இந்த இடம் முடிஞ்சா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்..அவளுக்கும் ஒரு நல்ல வரன் அமைஞ்சிட்டா, நிம்மதியா இருக்கும்...! நம்ம ப்ரீத்தியைப் பத்தி அருந்ததிகிட்டே நல்லவிதமா சொல்லுங்க..." தவிப்புடன் கோரினார்.



"சரி மாமா.. அதுக்காகத்தான் அருந்ததி அக்காவோடப் போறேன். எல்லாம் நான் பாத்துக்கறேன். கவலைப்படாம ரெஸ்ட் எடுங்க."

சிறுமுறுவலுடன் கூறிவிட்டு, வெளியே வந்து அருந்ததியுடன் இணைந்து நடக்க ஆரம்பித்தான் பிரபு.

* * *

அன்று காலையில், ப்ரீத்திக்கு சீக்கிரமே விழிப்பு வந்துவிட்டது.

இன்று மதியம் ஒரு இண்டர்வியூவிற்கு செல்ல வேண்டுமென்பது ஞாபகம் வருவதாய்!

மனதிற்குள்ளோ வேறு ஒரு ஞாபகம் விசுவரூப மெடுக்க, ஆகாஷின் நினைவுகள் அள்ள அள்ளக் குறையாத வற்றாத ஊற்றாய்ப் பெருகின.

தன் உயிர் உள்ளவரை, அவனைத் தன்னால் மறக்க முடியாதென்று தோன்றியது.

உயிரில் உருகும் சுவாசமாய்... உணர்வில் பெருகும் ஊற்றாய்... அவன் தனக்குள் இரண்டறக் கலந்திருப்பதை ஒருவித இயலாமையுடன் உணர்ந்தாள் அவள்.

தன் வேதனைகளையெல்லாம் மனதிற்குள்ளேயே போட்டுப் புதைத்துக் கொண்டாலும், அந்த சோகங்களை ஆறச்செய்யும் வித்தை, அவனுக்கு மட்டுமே தெரியு மென்பதும் புரிந்தது.

மெதுவாக எழுந்து பல் துலக்கி காபி போட்டு எடுத்துக் கொண்டு வாசல் கதவைத் திறந்தபோது, மெல்லிய மழையின் சாரல்!

சிறு துளிகளால் புன்னகைத்து, நீர்த்தாரைகளின் வழியே சிரித்துக் கொண்டிருந்தது, வானம்!

அந்தக் கார்கால விடியலில், மழை கழுவிய தார்ப் பாதையில் அவனுடைய விரல் பிடித்து நடந்து செல்ல ஆசை வந்தது.

தலையைக் குலுக்கி அதை விலக்கி நின்றவளின் மனதிலோ, பெரும் சோக மூட்டம் கனமாய் மையம் கொண்டிருந்தது.

வாசலில் வந்து நின்ற வசந்தத்தை, விரட்டித் தள்ளிய வலியும், விரக்தியும் அலையாய் நெஞ்சுக்குள் பரவின.

மெதுவாகக் காபியைப் பருகியபடி எதிர்வீட்டு அலங் கார ஓடுகளிலிருந்து வழிந்து, பூமியில் ஜலதரங்கம் வாசித்த மழையைச் சோர்வுடன் ரசிக்க ஆரம்பித்தாள் அவள்.

* * *

அப்போதுதான் போன் ஒலிக்க ஆரம்பித்தது.

ராமலிங்கம் மாமாவாகத்தான் இருக்கும்... ஷீலாவைப் பற்றிப் பேசுவாரென்ற ஆவலில் ஓடிச் சென்று எடுத்தாள்.

ஆனால் புதிதாய் ஒரு குரல், "ஹலோ.. மிஸ் ப்ரீத்திகா தானே? நான் அருந்ததி பேசறேன்.." என்றது.

அந்தப் பெயர் நினைவடுக்குகளைக் கலைக்க, "ஆமாம்... ப்ரீத்திகாதான் பேசறேன்.. நீங்க...?" மெல்லிய குரலில் கேட்டாள்.



"நான் 'யு.எஸ்'லிலேருந்து ஆகாஷோட சிஸ்டர் அருந்ததி பேசறேம்மா! ப்ளீஸ்... போனை டிஸ்கனெக்ட் பண்ணிடாதே! உன் கூட நானும் பிரபுவும் நிறையப் பேசணும்!" கம்பீரமாய் வந்தது அவள் குரல்!

சட்டென்று புலன்கள் விதிர்த்துவிட, அவளின் ஒவ்வொரு செல்லிலும், பெரும் எச்சரிக்கை உணர்வு கூத்திட்டு நின்றது.

எதிர்முனையில் எந்த சப்தமுமின்றிப் போனதும், "ப்ரீத்தி நீ லைன்லதானே இருக்கே? ஒரு நிமிஷம்.. பிரபு உன் கூடப் பேசணுமாம்..." என்று அவனிடம் போனைக் கொடுத்து விட்டாள்.

"ப்ரீத்தி.. எப்படி இருக்கீங்க?" ஒரு சகோதர வாஞ்சையுடன் கேட்டான் அவன்.

"நான் நல்லாருக்கேன்... ஷீலா எப்படி இருக்கா? 'பி.பி.' குறைஞ்சு நார்மலா இருக்காளா?" தவிப்புடன் விசாரித்தாள்.

"ம்.. அவ நல்லா இருக்கா.. ஆனா, தன்னை அறியாம அவ சொன்ன ஒரே ஒரு பொய்யால மத்தவங்கதான் நல்லா இல்லைன்னு தெரிஞ்சிக்கிட்டேன்... எனக்கு எல்லாமே தெரியும் ப்ரீத்தி! நான் சொல்லப் போறதைக் கேட்டப்புறம், நீ ஷீலாவை வெறுத்திடக் கூடாது. அந்த ஏஜிலே யாரா இருந்தாலும் அப்படித்தான் ரியாக்ட் பண்ணியிருப்பாங்க..." பெரும் பீடிகையுடன் ஆரம்பித்தான் அவன்.

ஷீலாவிற்கும், ஆகாஷிற்கும் இடையே நிகழ்ந்த காதல் போராட்டத்தையும், அதன் விளைவாக ஷீலா உணர்ச்சி



வசப்பட்டு எடுத்த முடிவையும், அருந்ததியிடம் விளக்கியது போல் அவன் கூறக் கூற, ப்ரீத்தியின் விழிகள் தெறித்து விடும்போல் விரிந்தன.

இந்த திடீர்த் திருப்பத்தை, அவள் சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

மனம், எரிமலையின் குமுறலுடன் புகைய ஆரம் பித்தது.


ஆகாஷைத் தவறாக நினைத்து..... கடவுளே நான் பெரிய தவறு செய்து விட்டேனோ என்று ஒரு மூலையில் மனதிற்குள் பலமாய் இடித்துரைத்தது.

தன் எண்ணங்களிலிருந்து கலைந்து, அவன் பேசுவதை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தாள் அவள்.

ஷீலாவின் காதல்... ஒரு தலைக் காதலாகவே ஆரம் பித்து முடிந்ததையும், ஆகாஷின் புறக்கணிப்பைப் பற்றியும் பிரபு கூறியதும், இதயம் பதறித் துடித்து வலிக்க ஆரம்பித்தது.

ஆகாஷையும், தன் தவறையும் எண்ணி விழிகள் கசிய ஊமையாக நின்றிருந்தாள் அவள்.

# 34



எல்லா விபரங்களையும் பொறுமையாக விளக்கி முடித்தவன், "ஷீலா மேலயும் நான் தப்பு சொல்ல மாட்டேன் ப்ரீத்தி! ஆகாஷைப் பத்தி உன்கிட்ட



சொன்னப்ப, எதிர்காலத்துல நீ அவனைத்தான் காதலிக்கப் போறேன்னு சத்தியமா அவளுக்குத் தெரியாது!

"அந்த நேரத்துல, தன்னோட தன்மானம், சுயகௌரவம் இதையெல்லாம் இழக்க அவ விரும்பலை! ஒரு பொண்ணால எப்படி வெளியே சொல்ல முடியும்.. தான் விரும்பினவன், தன்னை விரும்பலை.. மறுத்திட்டான்னு! அது அவளோட ஈகோவுக்கு விழுந்த பெரிய சவுக்கடியில்லையா? அதான் அந்தப் பொய்யை அவ சொல்லியிருக்கா!

"ஆகாஷோட கோணத்துல பாத்தா, அது ஒரு வகையில தப்பாத் தோணலாம்! ஆனா நீங்க மட்டும் ஆகாஷை விரும்பாம இருந்திருந்தா, அந்தப் பொய் யாரையுமே பாதிச்சிருக்காது!

"இதை விதின்னுதான் சொல்லணும்.. அவகிட்டே உங்க காதலை மறைக்காம நீங்க சொல்லியிருந்தா இந்த ப்ரச்சனையே வந்திருக்காது. அவளே உண்மையை சொல்லியிருப்பா... என்கிட்டயே சொன்னவ உங்ககிட்டே மறைப்பாளா...

"நீங்களும் எதுவும் சொல்லலை... ஆனா இதுதான் உண்மை! ஆகாஷ் ரொம்ப நல்லவர்... நான் சொல்றதை ஒரு வேளை நீங்க நம்பலைன்னா நான் எல்லா விஷயத்தையும் ஷீலாகிட்டே சொல்லி அவளையே உங்களோட பேசச்சொல்றேன்..." சோர்வுடன் முடித்தான்.

சட்டென்று அவனை இடைமறித்தது...ப்ரீத்தியின் குரல்!

"வேண்டாம்... அவளுக்கே உடம்பு சரியில்லை... இந்த மாதிரி நேரத்துல ரிஸ்க் எடுக்க வேண்டாம்... நான்

நம்பறேன்னா! இனிமே, அந்தக் கடவுளே வந்து ஆகாஷைப் பத்தி தப்பா சொன்னாக் கூட நான் நம்ப மாட்டேன்." குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

தன் உயிர் உருகும் ஓசை, அந்த நிமிடம் அவனுக்கே கேட்பது போல்!

உடனே, தர்மசங்கடத்துடன் போனை அருந்ததியிடம் கொடுத்து விட்டான் பிரபு.

"ப்ரீத்தி... அழக்கூடாதும்மா! இதுலே உன் தப்பு எதுவுமில்லையே! ஷீலா சொன்ன ஒரு பொய்யால, உனக்கு ஆகாஷைப் பத்தி தப்பான ஒரு அபிப்ராயம் வந்திருக்கு.. ஆனாலும், அதையும் மீறி, என் தம்பி உன்னை இம்ப்ரெஸ் பண்ணினது உண்மைதானே?" குறும்புடன் கேட்டாள்.

ஆனால், மறுமுனையிலிருந்து பதில் வராமல், விசும்பல்கள் மட்டுமே கேட்டன.

"ப்ரீத்தி... ப்ளீஸ் நான் சொல்றதைக் கேளு! ஒரு ஆண், 'விமனைசர்'னு தெரிஞ்சா, எந்தப் பொண்ணுமே அவனை விரும்ப ரொம்பவே யோசிப்பா! வேற எந்தக் குற்றத்தை வேணும்னாலும் மன்னிப்பா... இதை மட்டும் மன்னிக்கவே மாட்டா! நம்ம ஊர்ப் பெண்களே அப்படித்தான்... இங்கே 'யு.எஸ்'ஸிலே எங்க கல்ச்சரே வேற...

"கொஞ்சம் யோசிச்சிப் பாரு... அதையும் மீறி உன் மனசுலே, ஆழமா என் தம்பி பதிஞ்சிருக்கான்னா, உன் காதல் எவ்வளவு ஆழமானதா இருக்கணும்...

"அவன் ரொம்ப நல்லவன்மா... அவன் விரும்பின முதல் பெண் நீதான்! கல்யாணம்னு பேச்செடுத்தாலே,



எரிஞ்சு விழற அந்த ரிஷ்யசிருங்கரை மாத்தின அந்த தேவதையை நான் பாக்கணுமே! நாளைக்கே, கிடைக்கிற ஃப்ளைட்டிலக் கிளம்பி நான் அங்கே வரேன்னு ஆகாஷ் கிட்ட சொல்லு.. என்ன?"

அருந்ததி முடித்ததும் அப்படியே உறைந்து போனவள், "எனக்கு பயமா இருக்கு... ஆகாஷ் என்னை... மன்னிப்பாரா?" மீண்டும் அழத் துவங்கினாள்.

"நீ பெரிய ஜர்னலிஸ்ட்... ரொம்ப தைரியசாலின்னு தீபா சொன்னா! அழக்கூடாது... எதற்கான தீர்வும் அழுகையில கிடையாது... இந்த விஷயத்துல யாருமே தலையிட முடியாது...! நீதான் அவன்கிட்டே பேசணும்! நாங்கல்லாம் பேசிப் ப்ரயோசனமில்லை.

"உன்காதல் பலமானது! அது அவனை நிச்சயமா மாத்தும்.. ரொம்ப விரக்தியான ஒரு நிலையில இப்போ அவன் இருந்தாலும், உன்னை அவன் கட்டாயம் புரிஞ்சிப்பான்... உன்னைப் புரிஞ்சிக்கலைன்னா, வேற யாரை அவன் புரிஞ்சிக்கப் போறான்.. ஆல் தி பெஸ்ட் ப்ரீத்திம்மா! நான் நாளைக்கே கிளம்ப ட்ரை பண்றேன்... பை!"

அவள் போனை வைத்ததும், ப்ரீத்தியின் உலகமே சுற்றுவது போல்!

தான் செய்த தவறு, இமாலய உயரத்துக்கு எழுந்து நின்று அவளை வதைப்பதாய்!

கடவுளே! ஏன் எனக்கு மட்டும் இப்படி ஒரு அநீதியைச் செய்தாய்! என்று சுயபச்சாதாபத்தில் தவித்தது மனது.

ஆகாஷ் இப்போது எங்கிருக்கிறான்... அவனிடம் எப்படிப் பேசுவது என்று யோசித்தபடி, உறைந்து போய்



செயலற்று அமர்ந்திருக்கும் போதே, போன் மீண்டும் ஒலிக்க ஆரம்பித்தது.

* * *

ஆகாஷாக இருக்குமோவென்ற படபடப்பும் கலந்த எதிர்பார்ப்புடன் ஓடிச் சென்று எடுத்தால் தீபாதான் பேசினாள்.

"ப்ரீத்தி...நானும், சிக்கந்தரும் இப்ப உடனே கிளம்பி அங்கே வரோம்... அரைமணி நேரத்துக்குள்ளே நீ ரெடியா இருக்கணும்... உன்னை ஆகாஷ் இருக்கற இடத்துல சேத்துட்டு நாங்க கிளம்பிடுவோம்... அப்புறமா உன் பாடு... அவர் பாடு!" குறும்புடன் வந்தது தீபாவின் குரல்.

"தீபா... உங்களுக்கு நான் இங்கே இருக்கிறது எப்படித் தெரியும்?" தவிப்புடன் கேட்டாள்.

"ம்... பிரபுவும், அருந்ததி அக்காவும்தான் சொன்னாங்க... நீ என்ன அலிபாபா குகையிலயா ஒளிஞ்சிட்டிருக்கே...?"

"இல்லை... இந்த லேண்ட்லைன் நம்பர் தெரியாதேன்னு கேட்டேன்!"

"ஆமாம்! நேத்து உன்னைக் கண்டுபிடிக்க என்ன முயற்சி செஞ்சும் முடியலை... உன்னோட ஹாஸ்டல் வார்டன் ஊரில இல்லை. உன் ரூம் மேட் சுகன்யாவும் அஃபிஷியல் டூர் போயிருக்கறதா சொன்னாங்க... வேற யாருக்குமே நீ இப்ப இருக்கற அட்ரஸ் தெரியலை... இன்னிக்கு காலையில் வார்டன் வந்திடுவாங்கன்னு எதிர்பார்த்தோம்... அங்கே போகலாமின்னுதான் கிளம்பிட்டிருந்



தோம்.. நல்ல வேளை அருந்ததி அக்கா போன் பண்ணி எல்லாம் சொன்னாங்க..."

அப்போது, அவளை இடைமறித்தது சிக்கந்தரின் குரல்!

"போதும் தீபு... எல்லாம் நேரா பேசிக்கலாம்... கிளம்பு" என்றவுடன் இருவரும் உடனே கிளம்பி வருவதாகக் கூறி உடனே வைத்து விட்டாள் அவள்.

ப்ரீத்திக்குத்தான், உடலும், மனமும் பலமிழந்து சோர்ந்து போயிருந்தன.

தன்னை யாரோ கசக்கிப் பிழிந்து போட்டாற்போல ஓய்ந்து போயிருந்தவளுக்கு, சப்தமின்றி இதயம் ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

நெஞ்சக் கூட்டிற்குள், பல கேள்விகள்!

'நான் ஆகாஷின் அன்பிற்குத் தகுதியானவள் தானா? தன் காதலுக்கு சந்தேகம் என்ற அபஸ்வரம், மங்களம் பாடி விடும் போலிருக்கிறதே? ஆகாஷ் என்னை ஏற்றுக் கொள்வாரா?'

'அவர் விரும்பி வந்தபோது நான் வெறுப்புடன் நிராகரித்தது, வடுவாய் அவர் மனதில் பதிந்து அங்கிருந்த காதலை அழித்திருக்குமா? நான் என்ன சொல்லி, என்னை.. என் நேசத்தைப் புரிய வைப்பேன்?'

பல வினாக்கள் பெரும் கேள்விக்குறியாய் கண்முன் விசுவரூப மெடுக்க, பரிதவிப்புடன் முகத்தைப் பொத்தி அழ ஆரம்பித்தாள் அவள்.

வெகு நேரம் கழித்து, தன்னை அமைதிப்படுத்தி அவள் நிமிர்ந்த போது, அவன் ஞாபகங்கள் ஆழ்கடலாய்

புதைந்திருந்தாலும் ஒவ்வொரு முறை மூழ்கும் போதும், ஒரு வித சிலிர்ப்பையும், பரவசத்தையும் கொடுப்பது புரிந்தது.

அவனிடம் அன்பை யாசகம் செய்ய மனம் விழைந்தாலும் அதை அவன் ஏற்றுக் கொள்வானா என்ற பயம் பெரிதாய்!

ஆனால், "முயற்சி செய்து நீ ஒரு அடி எடுத்து வைத்தால், வெற்றி தேவதை உங்கள் பக்கம் பத்து அடி எடுத்து வைப்பாள்." என்று யாரோ எழுதிய வரிகள் நினைவு வர கண்களைத் துடைத்து ஒரு முடிவுடன் எழுந்தாள் அவள்.

35



அழைப்பு மணி, குயிலாய் அந்த நிமிடம் ஒலியெழுப்பி அழைக்க, அப்போதுதான், இன்னும் தான் தயாராகவில்லையென்பதே உரைத்தது.

வேகமாக ஓடிச் சென்று கதவைத் திறந்தால், தீபாவும், சிக்கந்தரும் புன்னகையுடன் நின்றிருந்தனர்.

அழுதழுது முகம் சிவந்திருக்க, நைட்டியுடன் நின்றிருந்த ப்ரீத்தியைக் கண்டதும், தீபா வேகமாக வந்து வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டாள்.

"என்ன ப்ரீத்தி.. இன்னும் கிளம்பலையா? சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்துல ஏன் அழறே? முதல்லே



இந்த அழுகையை நிறுத்திட்டுக் கிளம்பு!" உரிமையுடன் அதட்டினாள்.

தயக்கத்துடன் நிமிர்ந்தவள், "எனக்கு பயமாருக்கு தீபா! ஆகாஷ்... என்னை வெறுத்திடமாட்டாரே?" சஞ்சலத்துடன் கேட்டாள்.

"ம்.. தெரியலையே! எனக்கு என்னம்மா தெரியும் உன் ஹீரோவைப் பத்தி? அவர் ரொம்ப கோபப்படலாம்.. அடிக்கக் கூட செய்யலாம்...! அவருக்கு கோபம் அதிகமா வரும்னு எல்லாருமே சொல்லுவாங்க... இல்லை சிக்கந்த்?"

குறும்புடன் கேட்டுவிட்டு, உதடுகளை கழித்தபடி கிண்டல் செய்தாள் தீபா.

"ஏய்! அவங்களே மிரண்டு போயிருக்காங்க.. நீ வேற சும்மா பயமுறுத்திக்கிட்டு! அருந்ததி அக்கா, ஆகாஷ் கிட்டே எல்லாம் பேசிடறேன்னாங்க ப்ரீத்தி... அதனால பயப்பட வேண்டாம்! அவனே... நீங்க எப்படா வருவீங்கன்னு ஏங்கிட்டிருப்பான்... சங்ககாலத்துல ஏதோ சொல்வாங்களே... பசலை படர்ந்திருக்கும் அது இதுன்னு!

"அதெல்லாம் பெண்களுக்குதான் சொல்வாங்க.. ஆனா இந்த ஒரு வாரத்துல தலைவர்தான் அப்படி இருக்காரு! இப்ப நீங்க போய் அவன் எதிர்லே நின்னு தோப்புக்கரணம் போடுன்னு சொன்னா, உடனே எண்ணிக்கன்னு சொல்லி போட ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சிடுவான்... சொல்றதுக்கில்லை!" குறும்புடன் கூறினான் சிக்கந்தர்.

அவன் கிண்டல் செய்தாலும், ஆகாஷின் கோபமும், முரட்டுத்தனமும் அவளுக்குத் தெரியும் என்பதால், மனதிற்குள் பயச்சிறகுகள் படபடத்தபடியே இருந்தன.



உடனே உள்ளே சென்று அவசரமாகத் தயாராகி, தனக்கு பிடித்த இளம்பிங்க் நிற சுடிதாரணிந்து ஹாலுக்கு வந்தபோது, தீபாதான் கிண்டலடித்தாள்.

"என்ன.. ஒரே மேட்சா இருக்கு! முகம் அழுதழுது சிவந்து பிங்க் கலர்லே இருக்கு.. ட்ரெஸ்கும் அதே கலரா? ஆகாஷ் இன்னைக்கு என்னாகப் போறாரோ தெரியலை... பாவம்!"

"ப்ளீஸ்... தீபா.. ஹிம்..." இரு கன்னங்களிலும் ரோஜாக்கள் மலர, ப்ரீத்தி சலுகையாகச் சிணுங்கினாள்.

"சரிம்மா.. போதும்! இந்த வெட்கத்தையெல்லாம் ஸ்டாக் பண்ணி வச்சிக்கோ.. தீர்ந்துடப் போகுது! அங்கே ஒருத்தர், இதையெல்லாம் பாக்க, பார்த்த விழி பூத்தபடி தவமிருக்காரு... என்கிட்டே ப்ளீஸ் கேட்டுப் பிரயோஜனமில்லை.. ஆகாஷை 'ப்ளீஸ்' பண்ணு... அதான் எங்களுக்கு வேணும்!"

அவள் செல்லமாய் கண்சிமிட்டியபடி கூற, ஆகாஷை தான் எப்படி சமாதானப்படுத்தி புரியவைக்கப் போகிறோமென்ற பயமும், வேதனையும் அவளுக்குள் அதிகமாய்!

"ஒரு நிமிஷம் சும்மா இரு தீபா! அவங்க பயப்படறாங்க பாரு.. நான் ஆகாஷ்கிட்டே முதல்லே பேசிடறேன்" என்று செல்லில் அவனுடைய நம்பரை அழுத்தினான்.

மறுமுனையில் அவன் எடுத்தவுடனே, "ஆகாஷ்... நானும் தீபாவும், இப்போ ப்ரீத்தியை அழைச்சிட்டு அங்கே வரோம்...இப்ப சந்தோஷம் தானே?" உற்சாகக் குரலில் கேட்டான்.



"இல்லை...." உடனே வந்தது பதில்.

"என்னடா சொல்றே...?"

"அவளை யாரும் ஃபோர்ஸ் பண்ணி என்கிட்டே கொண்டு வந்து சேர்க்க வேணாம்... அதுக்கு பதிலா நான் இப்படியே இருந்திடுவேன்! போன வாரம் வரைக்கும் என்னை நம்பாதவ, இப்ப முழுசா நம்பி வராளாமா...?

"இந்த டிராமாவெல்லாம் வேண்டாம் சிக்கந்த்... இதை என்னை நம்பச் சொல்றியா? நேசம், காதல் இதெல்லாம் கட்டாயப்படுத்தி வரக்கூடாது... ஆழ்மனசலயிருந்து இயல்பா வரணும்!

"காதலிக்கிற பொண்ணு, கூட இருந்தா கோழையும் வீரனாயிடுவான்... ஆனா அதே வீரன் அவ பிரிவுலே.. புறக்கணிப்பால கோழையாயிடுவான்னு எங்கேயோ படிச்சிருக்கேன்...

"அந்த மாதிரி நான் உடைஞ்சு போயிருந்த நேரத்துல ஏதோ உளறிட்டேன்...நான் உங்ககிட்டே எதுவுமே சொல்லியிருக்கக் கூடாது... தப்பு பண்ணிட்டேன்... ப்ச்..."பெரும் சலிப்பும் விரக்தியுமாகக் கூறினான்.

"ஆகாஷ்... நீ முதல்லே ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்க... யாரும் யாரையும் ஃபோர்ஸ் பண்ணலை.. எல்லா உண்மைகளையும் தெரிஞ்சு அவங்களா விரும்பித்தான் வராங்க... ஷீலா சொன்ன பொய்யால, அவங்களுக்குள்ளே உன்னைப் பத்தி தவறான ஒரு இம்ப்ரெஷன் இருந்திருக்கு.. அது இப்ப சரியாயிடுச்சி... எல்லா உண்மையையும் உணர்ந்திட்டாங்க... நாங்க கிளம்பிட்டோம்!" என்று வைத்தான்.

* * *

ப்ரீத்தியின் விழிகளில், மிரட்சியும் திரசையும்...!

"அவர்... ரொம்பக் கோபமா இருக்காரா?" சிறு நடுக்கத்துடன் கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்னுமில்லை.. உங்களை எதுக்கும் கட்டாயப்படுத்த வேண்டாம்... சுயவிருப்பத்தோட வரதா இருந்தா வரட்டும்கிறான்..அதுவும் சரிதானே? அவன் காயப்பட்டவன்மா... உங்களை நேரிலே பாத்தா எல்லாம் சரியாயிடும்."

"நிச்சயமா சரியாயிடுமா தீபா?" சஞ்சலமும், பயமுமாய் கேட்டவளை தீபா ஆதரவுடன் தோளைப் பற்றி அணைத்துக் கொண்டாள்.

"வா.. முதல்லே கிளம்பலாம்! இந்த வீட்டைப் பாத்துக்கறதுக்கு கூட உடனே ஒரு செக்யூரிட்டிய ஏற்பாடு பண்ணிடுறோம்.. மனசிலே வேற எந்தக் கவலையும் டென்ஷனும் இல்லாம, நீ ஆகாஷோடப் பேசணும்... சரியா? எல்லாம் நல்லா முடியும்" என்றபடி காருக்கு அழைத்துச் சென்றாள்.

செல்கின்ற வழி முழுவதும், கண்களை இறுக மூடி சாய்ந்திருந்தவளைப் பார்த்தபோது, தீபாவுக்குத்தான் பரிதாபமாய்!

வெளிறிப் போயிருந்த முகமும், பயத்தில் இறுகிய கைகளின் இறுக்கமும், அவளுடைய அலைப்புறுதலையும் குற்றவுணர்ச்சியையும் வெகுவாய் பிரதிபலித்தன.

திடீரென்று அவளுடைய செல் ஒலித்தது... எடுத்தால் ஷீலாவின் குரல்!

தர்மசங்கடத்துடன் பேசியவள், "சாரிடி ப்ரீத்தி... லட்சம் சாரி! அந்த நேரத்துல என்னைத் தாழ்த்திக்க விரும்பாம..



நான் கேவலப்பட்டுடுவேனோன்ற பயத்துல... என் சுயகௌரவத்தை காப்பாத்திக்க.. ஒரு பொய்யைச் சொல்லிட்டேன்டி. சாரி!

"அது ஒரு இன்ஃபாச்சுவேஷன்தான்கிறதை நான் லேட்டாத் தான் புரிஞ்சிக்கிட்டேன்... காலையில, அருந்தி அக்கா என்னைப் பாக்க வந்திருந்தாங்க. அவங்க கூட எங்கிட்ட சொல்லலை... அவங்க போனப்புறம் அம்மாவும், அப்பாவும் தான், நீ ஆகாஷை விரும்பறேன்னு சந்தோஷமா வந்து சொன்னாங்க...

"உடனே எனக்கு அடிமனசுல பெரிய பயமும், கலக்கமும் வந்துடுச்சி... நல்லவேளை, நான் விரும்பினது யாரென்னு அவங்க ரெண்டு பேருக்கும் தெரியாது.. உன் மனசுல என்னையறியாம ஆகாஷைப் பத்தி தப்பான ஒரு அபிப்ராயத்தை ஏற்படுத்தினதுக்கு, என்னை மன்னிச்சிடுடி!

"இப்போ, பிரபு வந்து சொன்னப்புறம்தான் சந்தோஷமாயிருந்தது. நீ ஆகாஷைப் பத்தி நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன்னு தெரிஞ்சதும், மனசில இருந்த பெரிய பாரம் இறங்கின நிம்மதி...

"ஹி வாஸ் சிம்ப்ளி சூப்பர்ப்! நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்..சீக்கிரமே கல்யாணம் முடிஞ்சி ஹனிமூனுக்கு இங்கே வாங்க... ஓகேவா? அப்புறம்... என்னை வெறுத்துட மாட்டியே ப்ரீத்தி?" தொண்டை அடைக்கக் கேட்டாள் ஷீலா.

"ஏய்.. என்னால, எப்படி உன்னை வெறுக்க முடியும்? என்னோட 'கசின்'கிறதை விட, சின்ன வயசுலேருந்து உயிராப் பழகின ஒரு தோழி நீ! எனக்குப் புரியுது ஷீலா! பை.. டேக் கேர்!"என்றபடி போனை வைத்தாள் அவள்.





"ஷீலாவா...?" என்று விசாரித்தபடி தீபா அவள் கையைப் பிடித்து அழுத்தினாள்.

பிறகு, வழியில் ஒரு ஹோட்டலில் காரை நிறுத்திய சிக்கந்தர், உடனே மூன்று செட் டிபனை பார்சல் செய்து எடுத்து வந்தான்.

அங்கு காத்திருக்கும் ஒவ்வொரு நிமிடங்களும், ப்ரீத்திக்கு யுகங்களாகின. அந்த நிமிடமே, ஆகாஷைப் பார்க்க வேண்டும் போல...!

"எனக்கு ஒன்னும் வேண்டாம் தீபா... என்னால சாப்பிட முடியாது! ப்ளீஸ்..." என்று மறுத்தாள்.

"அதெல்லாம் முடியாது.. ரெண்டு இட்லியாவது சாப்பிட்டுத் தான் ஆகணும்... இல்லைன்னா, கார் இங்கேருந்து ஒரு அடி கூட நகராது.. முதல்லே சாப்பிடு!"

தீபா வற்புறுத்த, இரண்டு இட்லிகளை மட்டும் அவசரமாக சாப்பிட்டு முடித்தாள்.

பிறகு கண்ணீருடன் கண்மூடி சாய்ந்திருந்தவளை வெகு நேரத்திற்குப் பிறகு சிக்கந்தரின் குரல் கலைத்தது.

"ப்ரீத்தி... கெஸ்ட் ஹவுஸ் வந்தாச்சு.. இறங்குங்க...! நாங்க இப்படியே கிளம்பறோம்... ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசி கூடிய சீக்கிரமே வர்ற மாதிரி கல்யாணத் தேதியை முடிவு பண்ணுங்க... விட்டா தலைவர் இன்னிக்கே தாலி கட்ட ரெடிதான்!

"அப்புறம் ஒரு சின்ன ரிக்வெஸ்ட்! அவன் கொஞ்சம் டென்ஷனா இருப்பான். என்ன பேசினாலும், உடனே



கோபமா ரியாக்ட் பண்ணிடாம, பொறுமையாப் பேசுங்க... என்ன?" மெல்லிய குரலில் அறிவுறுத்தினான்.

மெதுவாகத் தலையசைத்தபடி, காரைவிட்டு இறங்கினாள் ப்ரீத்தி.

கால்கள் பலமாய் வேர்ப்பிடித்து நிற்க, இதயம் விண்டு விடும் போல் துடித்தது... முதன் முதலாய் யுத்த களத்திற்கு செல்லும் வீரனைப் போல், தடதடத்தது.

"பை ப்ரீத்தி... ஆல் தி பெஸ்ட்!" என்றபடி அவளுடைய கையைப் பிடித்து அழுத்தி விடைபெற்றாள் தீபா.

வாசலில் நின்றிருந்த வாட்ச்மேன், அவளை பவ்யமாக உள்ளே அழைத்துச் சென்றான்.

அந்த பிரம்மாண்டமான கெஸ்ட் ஹவுசின் வாசல் படியில் கால் வைக்கும்போது, பூகம்ப அதிர்வாய் அவளுடைய உடல் குலுங்கியது.

"கடவுளே! எனக்கு ஆகாஷை எதிர்கொள்ளும் தைரியத்தை மட்டும் தந்துவிடு" என்று இறைஞ்சியது அவள் இதயம்!

ஹாலில் இருந்த கேர் டேக்கர் ஜெகனிடம் அவளை ஒப்படைத்து விட்டு வாட்ச்மேன் வெளியில் செல்ல, மரியாதையுடன் அவளை வணங்கியவன், "வாங்க மேடம்.. ஏதாவது சாப்பிடுறீங்களா? ஜூஸ்.. இல்லை.. காபி?" பவ்யமாக வினவினான்.

"இல்லை... எனக்கு எதுவும் வேண்டாம்! நான் ஆகாஷை உடனே பார்க்கணும்! அவர் இங்கே இருக்காருதானே...?" மெலிந்த குரலில் கேட்டாள்.

"சார் இருக்காரும்மா... மாடியில அவரோட ரூமிலே தான் ரெஸ்ட் எடுத்திட்டிருக்காரு!"

"நான் வருவேன்னு..." அவள் முடிப்பதற்குள், "தெரியும்மா... நீங்க வருவீங்கன்னு சார் சொன்னாரு.. அருந்ததி அம்மாவும் போன் பண்ணியிருந்தாங்க... வாங்க!" என்றபடி அவர் முன்செல்ல, அவள் பின் தொடர்ந்தாள்.

மனதிற்குள், பெரும் எதிர்பார்ப்பும் ஏக்கமும்!

தான் வருகிறேனென்று தெரிந்தும், அவன் தன்னை எதிர்கொள்ள விருப்பமின்றி அறையிலேயே இருந்தது.. அவனுடைய வெறுப்பையும் கோபத்தையும் உணர்த்துவதாய்!

படிகளில் மெதுவாக ஏறியும், கால்கள் பின்னலிட்டன.

அந்த அறை வாசலில் சென்று நின்றதும், "இதுதான் மேடம் சாரோட ரூம்... நீங்க போய் அவரைப் பாருங்க" என்று கூறிவிட்டு, அவர் வேகமாக கீழே இறங்கிச் சென்று விட்டார்.


ஒரு கணம் தயங்கி நின்றவள், ஆழ்ந்த மூச்சுக்களை எடுத்து தன்னை சமன் செய்த பிறகு, மெதுவாக அந்த அறைக் கதவைத் தட்டினாள்.

"யெஸ்... கம்மின்..." ஆகாஷின் ஆழ்ந்த குரலில், சிறு பிசிறு தட்டுவது போல்!

இதயத்தில் சிலீரென்று ஒரு குளிர்ப்பரவியது.



36



அறைக் கதவை மெல்லத் திறந்து உள்ளே சென்றால், முதலில் அவனைப் பார்க்க முடியவில்லை.

அந்தப் பெரிய அறையின் கோடியிலிருந்த கம்ப்யூட்டர் டேபிளின் முன், இரு கைகளாலும் கன்னத்தைத் தாங்கியபடி, கண்மூடி அமர்ந்திருந்தான்.

ஆனால், அவள் உள்ளே வந்ததை உணர்ந்தும், அவளை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

கால்கள் புதைமணலில் புதைவது போன்ற உணர்வுடன் மெல்ல அவனருகில் சென்றவள், சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை.

அடர்த்தியான உறைபனியாய்.. கடும் நிசப்தம் மட்டுமே அங்கு நிறைந்திருந்தது.

அமைதியில் கனத்த அந்த நிமிடங்கள் அவளை பெரிதும் பலமிழக்கச் செய்ய, அதற்கு மேல் தாங்க முடியாமல், "ஆகாஷ்... ஐயம் சாரி..." என்றபோது, அவனிடம் எந்த அசைவும் இல்லை.

விழிகள் இறுக மூடியிருக்க, முகத்தில் கடும் இறுக்கத்துடனும், காயப்பட்ட வலியுடனும் சலனமின்றி அமர்ந்திருந்தான் அவன்.

இவனை எப்படி சமாதானப்படுத்தி, தன் பக்கத்து நியாயத்தைப் புரிய வைக்கப் போகிறோமென்ற தவிப்பு, அவளுக்குள் சிறு நடுக்கத்தை ஏற்படுத்தியது.



மெதுவாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தொண்டையைச் செருமியவள், "உங்களுக்கு கேட்க விருப்பமில்லைன்னாலும், என்னோட தன்னிலை விளக்கத்தை நான் சொல்லித்தான் ஆகணும்! ஷீலா, தற்கொலைக்கு முயற்சி பண்ணி ஹாஸ்பிடல்லே இருந்தப்ப, அவ உங்களைப் பத்தி சொன்ன ஒரு பொய்தான் என் மனசுல ஆழப்பதிஞ்சிடுச்சி.. நீங்க மணக்கக் கேட்டப்ப, நான் கோபமாப் பேசி மறுத்ததுக்கு அதுதான் காரணம்!"

"இன்னிக்கு காலையில வரைக்கும், அதுதான் உண்மைன்னும் நான் நினைச்சிட்டிருந்தேன்.. என்னா, மரண வாசலைத் தொட்டு மீண்டு வந்த ஒருத்தி பொய் சொல்லியிருப்பான்னு என்னால சத்தியமா நம்ப முடியலை... பிரபுவும் அருந்ததி அக்காவும் சொன்னப்புறம்தான் உண்மையே புரிஞ்சது.. இப்பதான் ஷீலாவும் பேசினா...

"அவளோட உணர்வுகள் புரிஞ்சாலும், அதனாலே நான் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கேன்.. என் மனசுல தேவையில்லாம மலையளவு வெறுப்பையும் கோபத்தையும் உங்க மேல வளர்த்திருந்திருக்கேனே?

"ஆனா, அதையும் மீறி என் மனசுலே வந்த நேசத்தை என்னால் எதுவுமே செய்ய முடியலை... என்னையே என்னால கண்ட்ரோல் பண்ணிக்க முடியலையேன்னு எத்தனையோ நான் என் மேலேயே நான் கோபப்பட்டிருக்கேன்... அவ சொன்ன ஒரு பொய்யால, எப்பவுமே உங்களைத் தப்பாவே, ஒரு கறுப்பு வர்ணம் பூசித்தான் நான் பாக்க ஆரம்பிச்சேன்...



"உங்களை ஒரு நடிகையோட சேர்த்து வந்த கிசுகிசுவும் என்னை ரொம்ப பாதிச்சது! முதன் முதலா எனக்கு பேட்டி தர மாட்டேன்னு சொல்லி நீங்க என்னை இன்சல்ட் பண்ணினதிலிருந்து, நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில ஒரு பனிப்போர் தொடர ஆரம்பிச்சது...

"தீபா உங்களை விரும்பறதா நினைச்சி அவங்களைக் கூட வார்ன் பண்ணா நினைச்சேன்...! உங்களைப் பத்தி... ஒரு விமனைசரா நான் கணிச்சிருந்த நேரம் அது.. சாரி! உங்க லிஸ்டுலே இருக்கற அடுத்த பொண்ணுன்னு தீபாவை நினைச்சேன்... ஆனா உங்களைப் பேட்டி எடுக்க வந்தப்ப தான், உங்களோட மறுபக்கத்தைப் பார்த்தேன்.. நானே எதிர்பார்க்காத, என்னைப் புரட்டிப் போட்ட மறுபக்கம் அது!

"அந்த மனிதநேயத்தையும், கடின உழைப்பையும், பிறருக்கு உதவற குணத்தையும், அட்மினிஸ்ட்ரேஷன் திறமையையும், நேர்மையையும் பார்த்து பிரமிச்ச போய் தான் நான் என்னை என் மனசை இழந்தேன்... அப்பவும், ஒவ்வொரு தடவையும் நான் உங்களை அட்மையர் பண்ணும்போதெல்லாம், ஷீலாவோட ஞாபகம்தான் என்னை முள்ளா உறுத்தும்...உடனே எனக்குள்ளே இறுகிடுவேன்!

"மறுபடி உங்களைப் பார்க்கும்போது, என்னையறியாம ஓடிப்போய் உங்ககிட்டே சரணடையத் துடிக்கிற இதயத்தை இழுத்து வைக்க, ரொம்பவே கஷ்டப்படுவேன்.. வலுக்கட்டாயமா ஷீலாவை நினைச்சி என்னையே நான் மாத்திப்பேன்... அப்பவும் என்னால உங்களை மறக்க முடியலை..."

சட்டென்று, முகத்தில் ஒரு வித மென்மையும், உடலில் நாணேற்றிய வில்லின் விறைத்த தன்மையும் ஒருங்கே தெரிந்தன, ஆகாஷிடம்!

ஒருகணம், அவள் இதயம் துடிக்க மறந்து மீண்டும் இயங்க, பழையபடியே கண்மூடி இறுக்கத்தைத் தத்தெடுத்திருந்தான் அவன்.

அவள் கனத்த இதயத்துடன், மீண்டும் தொடர்ந்தாள்.

"அப்பதான் நாம எல்லாரும் அம்ரித் ஃபாரெஸ்டுக்குப் போனோம்...அங்கே, உங்க உயிரைப் பத்திக்கூடக் கவலைப்படாம, நீங்க என்னை யானைகிட்டேயிருந்து காப்பாத்தினது, என் மனசில பெரிய பாதிப்பை ஏற்படுத்தி, என்னில் பாதியா உங்களை ஆக்கிடுச்சி! எனக்குப் பிடிச்ச ஆர்னிதலாஜியைப் பத்திப் பேசி, என் ரசனைகள்லேயும் ஒண்ணாக் கலந்திட்டீங்க...

"ஆனா.. அங்கிருந்து திரும்பி காரில் வரப்ப, நீங்களும் சிக்கந்தரும், பேசினது என் நம்பிக்கையை சிதறடிக்க, நீங்க விரும்பறதா சொன்ன அந்தப் பெண், மாடல் கவிதாவோன்னு சந்தேகப்பட்டேன்... அது நான்தான்னு என்னால சத்தியமா நினைச்சிக் கூடப் பாக்க முடியலை.. ஏன்னா, எனக்கு முன்னாடியே நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டீங்க!

"அப்புறம், தீபா சொன்ன பொய்க்காக, ஊரிலே எல்லாரும் தப்பாப் பேசுவாங்களோன்னு ப்ராயச்சித்தம் செய்யறதா நினைச்சி, உங்களோட முழு விருப்பமும் நேசமும் இல்லாம, வேண்டா வெறுப்பா ஒரு பந்தத்தை ஏற்படுத்திக்க நினைச்சி, என்னை மணக்கக் கேக்கறீங்களோன்னு தான் நான் உடனே மறுத்தேன்...



"அப்பவும் மனசுக்குள்ளே ஒரு சின்ன சலனம்! என்னைப் போலவே நீங்களும் காதல் வலையில சிக்கியிருப்பீங்களோன்னு! ஆனா, நீங்க அவ்வளவு சுலபத்துல ஒரு பெண் கிட்டே விழ்கிறவராத் தெரியலை.... அப்படியே விழுந்தாலும் அதிலிருந்து விடுபட்டு வழண்டுக்கத் தான் பாப்பீங்க, திருமண பந்தத்துல சிக்க மாட்டீங்கன்னு, ஷீலாவோட அனுபவத்தாலே தோணிச்சி!

"காதலை விட.. என் கண்ணை மறைக்க உங்களை எத்துக்க விடாம செஞ்சது எதுன்னா, நீங்க ஷீலாவுக்கு துரோகம் செஞ்சிட்டதா என் அடி மனசில நான் சேமிச்சி வச்சிருந்த வெறுப்பும், வன்மமும்தான்!

"ஒரு பொண்ணுக்கு பெரிய அநீதியை செஞ்சிட்டு, எந்தக் குற்றவுணர்ச்சியுமில்லாம எப்படி என்கிட்டே வந்து கல்யாணம் அது இதுன்னு பேச முடியுது அப்படின்னு வெறுப்பா இருந்தது... ரொம்பக் கோபமும் வந்தது! இதுவும் பொய்த்துப் போயிட்டா, என்ன செய்யறது? நீங்க பணக்காரராச்சே... உங்களுக்குதான் எல்லாம் சுலபமாச் சேன்ற பயம் வேற..."

அவனுடைய விழிகள் சட்டென்று திறக்க, அதில் காயப்பட்ட வலியும் கடும் வேதனையும் பிரதிபலிக்க, மேலே பேசமுடியாமல் உறைந்து போய் சிலையாக நின்று விட்டாள் ப்ரீத்தி.

உதடுகளில் ஜனித்த சிறு விரக்திப் புன்னகையுடன், மேலே சொல்லும்படி தலையசைத்து விட்டு, கண்மூடி சாய்ந்து கொண்டான் அவன்.

"ம்... ஆகாஷ்.. சத்தியமா சொல்றேன்.. வெளியே உங்களை வெறுக்கற மாதிரிக் காட்டிக்கிட்டாலும், மனசு



முழுக்க காத்துப் புகக் கூட இடமில்லாம, நீங்கதான் நிறைஞ்சிருந்தீங்க! என்னை நம்புவீங்களா... இது வரைக்கும் நான் பேசினதெல்லாம் சத்தியமான உண்மைகள்! என்னை வெறுத்திடமாட்டீங்களே... ப்ளீஸ்... என்கிட்டப் பேசுங்க ஆகாஷ்..! உங்க புறக்கணிப்பும் பாராமுகமும் என்னை உயிரோடக் கொன்னுடும் போலருக்கு..." கண்களில் வழிந்த கண்ணீருடன் ஏக்கமாக முடித்தாள் ப்ரீத்தி.

அவள் பேசப் பேச விழி மூடி இருந்த ஆகாஷின் முகத்தில், பல விதமான உணர்ச்சிகள் பிரதிபலித்தன.

வேதனையுடன் அவள் முடித்ததும் கண்களை மெதுவாகத் திறந்தவனது முகம், எந்தவித உணர்ச்சியுமின்றிப் பாறையாக இறுகியிருந்தது.

பார்வையோ, உயிர்ப்பின்றி ஒரு வித விலகல் தன்மையுடன் அவளை ஊடுருவியது.

மெதுவாக எழுந்து சென்று ஜன்னலருகில் நின்று வெளியே தன் பார்வையை செலுத்தினான் அவன்.

இதயம் புலம் பெயர்ந்து தொண்டைக்குள் வந்து துடித்தாலும், அவன் கூறப் போகும் காதல் தீர்ப்புக்காக உயிர் உருகக் காத்திருந்தாள் அவள்.

* * *

ஒரு கணம் பல யுகங்களாக, திடீரென்று அவள் புறம் திரும்பியவனின் விழிகள், சிவந்து இடுங்கியிருந்தன.

மறு கணமே, புலியாய் கர்ஜிக்க ஆரம்பித்தான் அவன்.



"அப்போ... என் மேல இருந்த காதலை விட... யாரோ ஒருத்தி சொன்ன பொய்க்குதான், பலமும், வீரியமும் அதிகமா இருந்திருக்கு! அதிலேயே தெரியுதே, உன்னோட காதல் எவ்வளவு பலவீனமா, ஆழமில்லாம இருந்திருக்குன்னு...! காதல்லே முக்கியமா இருக்க வேண்டியது புரிதலும், நம்பிக்கையும் தான்! அதுவே இல்லையே....

"நாளைக்கே வேற யாராவது வந்து சொல்லுவாங்க... நான் அவங்களையும் ஏமாத்திட்டேன்னு! அப்போ, நீ அதை நம்ப மாட்டே... என்னைத் தான் நம்புவேன்னு என்ன நிச்சயம்? ம்...?"

பக்கத்திலிருந்த மேஜையில் பலமாகக் குத்தியபடி, ஆக்ரோஷமாகக் கேட்டான் அவன்.

சட்டென்று, உடைந்து போய் முகம்மூடி அழ ஆரம்பித்தாள் அவள்.

சிறிது நேரம் அவளுடைய அழுகையையே மௌனமாக வெறித்திருந்தவனுக்குள், பெரும் தவிப்பு!

"போதும்... எனக்கு அழுகையே பிடிக்காது... அழுதழுது எல்லாத்தையும் சாதிச்சடலாமின்னு நினைக்கிறவங்க மேலே, வெறுப்புதான் அதிகமா வரும்!" சிறு சலிப்புடன் கூறினான்.

ஒருவித இயலாமையுடன் நிமிர்ந்தவளுக்கு, தன்னை, தன் நேசத்தை அவனிடம் எப்படிப் புரியவைப்பதென்று புரியாத பரிதவிப்பு!

"நான்... எப்படி.... என்ன சொல்றதுன்னு தெரியலை... இனிமே நான் யாரையும் நம்பமாட்டேன்... யார் சொல்றதையும் கேக்கவும் மாட்டேன்! உங்களைப் பத்தி முழுசாப்

புரிஞ்சிக்கிட்டேன்! இப்போ, என்னைவிட உங்களைத் தான், நான் நம்பறேன்...ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சிக்க மாட்டீங்களா?'' கண்களில் கெஞ்சலும் மிரட்சியுமாகக் கேட்டாள்.

ஆனால், அவன் முகத்தில் சிறிதும் இளக்கமில்லை!

ஒரு முடிவுடன் நிமிர்ந்தவன், ''ஹீம்... ஜீலியஸ் சீசர் வேணும்னா, தன் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளா இருக்கணும்னு கேட்டிருக்கலாம்! ஆனா, என்னைக் கேட்டா, என்ன சொல்லுவேன் தெரியுமா? என் மனைவி, என்னை சந்தேகப்படாதவளா இருக்கணும்னு தான்!

''சந்தேகம்கிறது ஒரு கொடிய வியாதி! பரஸ்பரம் ஒருத்தரை ஒருத்தர் நம்பாத, புரிதல் இல்லாத இல்லறம் ஆழ்நரகம்னு நினைக்கிறவன் நான்! எனக்கு நிறைய பிசினஸ்... அதிலே, தினம் பல பெண்களோட நான் பழக வேண்டியிருக்கும்!


''ஒவ்வொரு முறையும் சந்தேகப்பட்டு நீ என்னை உளவறிஞ்சு, பின்னாடி தெளிஞ்சு.. வேண்டாம்! மனசு முழுக்க சந்தேகமும், நஞ்சுமா இருக்கற ஒருத்தி, எனக்கு வேண்டாம். இப்படிப்பட்ட ஒருத்தியையா, நான் என் உயிராக் காதலிச்சேன்னு, இப்பல்லாம் என் மேலேயே எனக்கு வெறுப்பாக் கூட இருக்கு!''

ஆழ்ந்த குரலில் கூர்மையுடன் கூறிவிட்டு, ஒரு நெடு மூச்சுடன் திரும்பிக் கொண்டான்.

அந்த நொடி, அதைத் தாங்க முடியாமல் மௌனக் கதறலுடன் அழ ஆரம்பித்தது ப்ரீத்தியின் மனது.



37



ப்ரீத்திகா, அசைவின்றி ஒரு சிலையைப் போல் உறைந்து நின்றிருந்தாள்.

இதற்கு மேல் என்ன சொல்லி, என்ன செய்து, இவனிடம் தன்னை நிரூபிப்பதென்ற கலக்கம், அவளுள் விரவிப் பரவியது.

மெதுவாகத் தன்னை உயிர்ப்பித்தபடி, அவனருகே சென்று, ஆகாஷின் கையை சிறு நடுக்கத்துடன் பற்றினாள்.

''ஆகாஷ்... எனக்கு... எப்படி என்னை நிரூபிக்கிறதுன்னு புரியலை! இந்த நிமிஷமே செத்துடலாமான்னு இருக்கு.. ப்ளீஸ்... நான் உங்களை என் உயிருக்கு மேலா விரும்பறேன்...

''இப்பல்லாம், ஒவ்வொரு விடியல்லேயும் உங்க முகம் பார்த்துக் கண் விழிக்கணும்னு ஏக்கமா இருக்கு! உங்களோட சோக நிமிஷங்கள்லே, ஒரு தாயா மாறி அனுசரணையா இருக்கணும்னு ஆசைப்படறேன்...

''மொட்டைமாடி நிலவுச் சாரல்லே உங்க மடியில தலை சாய்ச்சுத் தூங்கணும்.. உங்களுக்குள்ளே ஊனா உயிரா உருகிக் கலக்கணும்னு தவிப்பு வருது!

''உங்களை அச்சு அசலா நினைவு படுத்தறமாதிரி நிறைய குழந்தைகளைப் பெத்துக்கணும்... வரப்போற நம்ம சந்ததிக்குள்ளே, ப்ரியம், மனிதாபிமானம், கருணை இது மாதிரி நல்லகுணங்களை ஊட்டி வளர்க்கணும்...''



''இந்த சமுதாயமே பார்த்து வியக்கிற அளவு அவங்களை உயர்த்தணும்! இப்படி நிறைய விருப்பங்கள் மனசுலே! ஆனா... எல்லாமே நிராசையா, நிறைவேறாக் கனவாப் போயிடும் போலருக்கு...'' கண்ணீருடன் முடித்துவிட்டு இயலாமையுடன் திரும்பிக் கொண்டாள் அவள்.

''இல்லை... இப்பக் கூட அதை நிஜமாக்கலாம்... நீ முயற்சி செஞ்சா!'' அவன் குரல் அழுத்தம் திருத்தமாக வந்தது.

ஆற்றில் மூழ்கித் தவிப்பவள், சிறு துரும்பையும் பற்றிக் கரையேற முயற்சி செய்வது போல், பதைப்புடன் திரும்பினாள் அவள்.

விழிகள், ஏக்கமும், எதிர்பார்ப்புமாய் கேள்வியுடன் அவனையே நோக்கின.

''ம்... கேட்க கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும்...என் மேல நீ நம்பிக்கை வெச்சிருக்கிறது உண்மைன்னா...எந்த வித நிபந்தனையும் இல்லாம, இந்த நிமிஷமே உன்னை எனக்குத் தரமுடியுமா?'' கண்ணோரங்கள் கூர்மையுடன் இடுங்க, ஆழமான குரலில் கேட்டான்.

ஒரு நொடி, தன்னைச் சுற்றி இயங்கிக் கொண்டிருந்த உலகமே, அசைவற்று நின்று விட்டதைப் போல் ஒரு உணர்வு, அவளுக்குள்!

மறுகணமே, சிலைக்கு உயிர் வந்தாற்போல் நிமிர்ந்தவள், ''ம்... நிச்சயமாத் தருவேன் ஆகாஷ்!'' என்றாள் ஆணித்தரமான குரலில்!



''ப்ராமிஸ்...!'' அவன் குரலில் புரியாத ஒரு செய்தி!

சட்டென்று முகம் இளகி, விழிகள் மின்னலாய் ஒளிர, உறுதியுடன் தலையசைத்தபடி, அவள் 'ப்ராமிஸ்!' என்ற போது, அவனுடைய முகம் மெல்ல மெல்லத் தெளிந்து இயல்பாகி, மென்மையைத் தத்தெடுத்தது.

அவனுடைய விறைத்த தன்மை அந்த நொடியே மாறிவிட, அவனுடைய கரங்கள் மெதுவாக விரிந்து அவள் புறம் நீண்டன... என்னிடம் வருவாயா என்ற அலைப்புறுதலும், பரிதவிப்புமாய்...!

எந்தவித உறுத்தலும், தயக்கமுமின்றி, உடனே ஓடிச் சென்று அந்தக் கரங்களுக்குள் சரண்புகுந்தாள் அவள்.

* * *

''ப்ரீத்தி... என் கண்மணி!'' மென்மையாக முணுமுணுத்தபடி அவளை அணைத்துக் கொண்ட ஆகாஷின் கரங்கள், வலிமையுடன் இறுகின.

முன்பு நெருங்கிச் சென்றாலே விலகி ஓடியவள், இன்று முரட்டுத் தனமாய் இழுத்து அணைத்தபோது, நாணத்தில் கண்மூடித் தன் நெஞ்சினில் சாய்ந்தது, பெரும் சிலிர்ப்பைத் தருவதாய்!

ஒரு மலர்ச் சோலையே சுகிதாரணிந்து வந்து, தன் மார்பிற்குள் அடங்கியதைப் போல் ஒரு உணர்வு!

ப்ரீத்திக்குள்...அவனுடைய வேகம், அச்சம் தந்தது... மோகம், வெட்கம் தந்தது! நெஞ்சத்தில் புதிதாய் பூத்த மலராய் மலர்ந்தன... நாணப்பூக்கள்!

அவனுடைய ஒற்றை வார்த்தை வேதமாகி விட முடியுமா... தெரியவில்லை! அவன் மனதிலிருந்த கோபத்தனைகள் தன்னையறியாமலே கழன்று கொண்டன.

தான் நேசிக்கப் பட்டிருக்கிறோம் என்ற உணர்வே அவளுக்குள்ளும் பெரும் பலம் தருவதாய்...!

முத்தம் என்று உச்சரிக்கும்போதே, முடிவினில் கிளர்ச்சியுடன் அழுத்தமாய் ஸ்பரிசிக்கும் உதடுகளைப் போல், அவனுடன் உடனே இணைய வேண்டுமென்ற வேகம் அவனுள் வந்தது.

அதே வேகத்துடன், அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி அழுத்தமாக முத்தமிட்டான் அவன்.

அப்போது, அவனுக்குள் காமம் தோன்றவில்லை... ஏனோ கவிதை தான் முதலில் ஜனித்தது... உயிர்க் காதலில் ஓர் கவிதை!

இதுவரை...
உன் பிரிவின் உயிர்வலியை...
வீர்யமாய் உணர்த்திய
இதயத்துடிப்பாய்!
சிற்றலைகள்
சிலுசிலுக்கும் கிணற்றுக்குள்...
சிறைப்பட்டிருக்கும்
முழுநிலவாய்!
நீர்த் தூரிகையால்
பூமியின் மேல்...



கார்மேகம் வரையும்
மழை ஓவியமாய்!
இரவு முழுவதும்...
கடல்கன்னியின் அணைப்பில்
சுகித்திருந்து..
வெட்கத்துடன் வெளிவரும்
சிவந்த ஆதவனாய்!
சில கணங்களே...
வானில் வரவேற்பு வளையமாய்
வந்து போகும்
வானவில்லின் வர்ண விரிப்பாய்!
முகம் காட்டாப் பாறைகளின்
ரகசிய இடுக்குகளில்
மெல்லக் கசிந்து...
பால்வண்ண நுரையுடன்
புன்னகைத்து சிதறும்
அருவிப் பாவையாய்!
இதயத்துடிப்பின் இன்னிசையோடும்...
முழுநிலவின் குளிர்ச்சியோடும்...
சாரல் மழையின் வருடலோடும்...
பகலவனின் ஒளிர்தலோடும்...
வானவில்லின் வர்ணஜாலங்களோடும்...





நயாகராவின் வேகத்தோடும்...
இந்த ஒற்றை ஈரமுத்தம்
ஆழமாய் உணர்த்துகிறது...
என் மீதான
உனது நேசத்தை!

* * *

ஆனால், அந்த நிமிடம் வேறு உலகில் சஞ்சரித்திருந் தான் ஆகாஷ்!

அந்த முதல் முத்தம்... மோகச் சாம்ராஜ்யத்தின் முதல் யுத்தமாய்!

இதழ்கள் இணையும் வரை, நினைவுகள் அவன் வச மிருந்தன. பிறகு பிரியும்போதுதான், அதுவரை தொலைந்து போன நினைவுகள் எங்கிருந்தோ ஓடிவந்து அவனிடம் ஒட்டிக் கொண்டன.

தன்னை வசமிழக்கச் செய்த இந்த இடைப்பட்ட தருணத்தில் என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்து ஞாபக விரல்களால் தீண்ட, அவனுள்ளே ஒரு கோடி நதிகள் பொங்கிப் பிரவகித்தன.

நான்கு இதழ்கள் சந்தித்ததில், அங்கு புது மொழி ஒன்று ஜனனமெடுக்க, வெட்கிச் சிவந்தது ப்ரீத்தியின் தேகம்!

ஒரு மின்மினியின் சிணுங்கலோடு அவனிடமிருந்து அவள் விலக, சலுகையுடன் அவளை இழுத்து மீண்டும் தன் கைப்பிடியிலேயே நிறுத்தினான் அவன்.



விழிகள் மட்டும், அவளுடைய கன்னக்குழியில் படிந்து தன்னை மறந்திருந்தன.

''ஏய்... எங்கே ஓடற? பெரிசா வாக்குக் குடுத்தே... இப்போ விலகிப்போறே?'' குறும்புடன் வந்தது அவன் குரல்!

அதற்கு என்ன பதில் கூறுவதென்று புரியாமல் தவித்துப் போய் நிமிர்ந்தாள் அவள்.

ஏதோ நினைவில், அவளுடைய இதழ்கள் மெல்ல மலர்ந்து விரிந்தன... குறுந்தொகையில் வருகின்ற சங்கப் பாடல் வரிகள், அந்த நொடி நிஜமாய்!

''பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன
நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவு அரிதாகிய தண்டாக் காமம்!''

என்ற சங்கப்பாடல் வரிகள் அவளுள் முகிழ்த்தன.

''நீரில் சேர்ந்தே போகும் அன்றில் பறவைகள் இணை பிரியாது போகும்! அவை, தாமரைப் பூ குறுக்கிட்ட ஒரு விநாடி பிரிந்து மீண்டும் இணையும்! ஆனால், அந்த ஒரு நொடியே, அவற்றுக்கு ஓராண்டு பிரிந்தது போல் தோன்று மாம்! அத்தகைய காதல் எங்களுடையது!'' என்கிறாள் தலைவி, தோழியிடம்!

அந்தப் பாடலின் நினைவில் பொங்கிய அவளின் குறுஞ்சிரிப்பு, அவனை ஈர்த்தது.

''ப்ரீத்தி டியர்...என்ன சிரிப்பு?'' என்றபடி அவளை நோக்கிக் குனிந்தவனிடம், அவள் தயங்கியபடி தான்

நயாகராவின் வேகத்தோடும்...

இந்த ஒற்றை சமுத்திரம்

ஆழமாய் உணர்த்துகிறது...

என் மீதான

உனது நேசத்தை!

* * *

ஆனால், அந்த நிமிடம் வேறு உலகில் சஞ்சரித்திருந்தான் ஆகாஷ்!

அந்த முதல் முத்தம்... மோகச் சாம்ராஜ்யத்தின் முதல் யுத்தமாய்!

இதழ்கள் இணையும் வரை, நினைவுகள் அவன் வசமிருந்தன. பிறகு பிரியும்போதுதான், அதுவரை தொலைந்து போன நினைவுகள் எங்கிருந்தோ ஓடிவந்து அவனிடம் ஒட்டிக் கொண்டன.

தன்னை வசமிழக்கச் செய்த இந்த இடைப்பட்ட தருணத்தில் என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்து ஞாபக விரல்களால் தீண்ட, அவனுள்ளே ஒரு கோடி நதிகள் பொங்கிப் பிரவகித்தன.

நான்கு இதழ்கள் சந்தித்ததில், அங்கு புது மொழி ஒன்று ஜனனமெடுக்க, வெட்கிச் சிவந்தது ப்ரீத்தியின் தேகம்!

ஒரு மின்மினியின் சிணுங்கலோடு அவனிடமிருந்து அவள் விலக, சலுகையுடன் அவளை இழுத்து மீண்டும் தன் கைப்பிடியிலேயே நிறுத்தினான் அவன்.



விழிகள் மட்டும், அவனுடைய கன்னக்குழியில் படிந்து தன்னை மறந்திருந்தன.

"ஏய்... எங்கே ஓடற? பெரிசா வாக்குக் குடுத்தே... இப்போ விலகிப்போறே?" குறும்புடன் வந்தது அவன் குரல்!

அதற்கு என்ன பதில் கூறுவதென்று புரியாமல் தவித்துப் போய் நிமிர்ந்தாள் அவள்.

ஏதோ நினைவில், அவளுடைய இதழ்கள் மெல்ல மலர்ந்து விரிந்தன.... குறுந்தொகையில் வருகின்ற சங்கப் பாடல் வரிகள், அந்த நொடி நிஜமாய்!

**"பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன**

**நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்**

**பிரிவு அரிதாகிய தண்டாக் காமம்!"**

என்ற சங்கப்பாடல் வரிகள் அவளுள் முகிழ்த்தன.

"நீரில் சேர்ந்தே போகும் அன்றில் பறவைகள் இணை பிரியாது போகும்! அவை, தாமரைப் பூ குறுக்கிட்ட ஒரு விநாடி பிரிந்து மீண்டும் இணையும்! ஆனால், அந்த ஒரு நொடியே, அவற்றுக்கு ஓராண்டு பிரிந்தது போல் தோன்றுமாம்! அத்தகைய காதல் எங்களுடையது!" என்கிறாள் தலைவி, தோழியிடம்!

அந்தப் பாடலின் நினைவில் பொங்கிய அவளின் குறுஞ்சிரிப்பு, அவனை ஈர்த்தது.

"ப்ரீத்தி டியர்...என்ன சிரிப்பு?" என்றபடி அவளை நோக்கிக் குனிந்தவனிடம், அவள் தயங்கியபடி தான்



நினைத்ததைக் கூற... காற்றைப்போல், கடவுளைப் போல்... அவன் உயிரினில் உணரப்பட்டது...அவளின் நேசம்!

ஆழ்ந்து அவளையே நோக்கியவன், "ஏய்... என்ன பயந்து போயிட்டியா? எனக்குத் தெரியும்... ஒரு பெண்ணுக்கு உயிரை விடக் கற்புதான் பெரிசுன்னு! அதையும் மீறி நீ சம்மதிச்சா.. நான் ஜெயிச்சிட்டதா அர்த்தம் அப்படின்னு முடிவு பண்ணினேன்...

"ஆனா, நான் உனக்கு வெச்ச காதல் பரீட்சையில, நானும் ஜெயிச்சி, அதேசமயம் நீயும் ஜெயிச்சிட்டே! எப்படி ப்ரீத்தி... உடனே தயங்காம சரின்னு சொல்ல, உன்னால எப்படி முடிஞ்சது?" ஆவலுடன் கேட்டான்.

உள்ளத்தில் ஒருவித உறுதியுடன் நிமிர்ந்தவள், "உங்களுக்காக நான் எதைவேணா இழக்கத் தயாரா இருந்தேன்... என் உயிரையே கொடுத்து என்னை மெய்ப்பிக்கலாமன்னு கூட ஒரு நிமிஷம் தோணுச்சி! ஆனா உயிரை விட மானம் பெரிசுன்னு எனக்கும் தெரியும்...

"ஆனா, இந்த நிமிஷம் உங்களை விட.... உங்க அன்புக்கு முன்னாடி... மத்ததெல்லாம் பெரிசாத் தோணலைங்க.. அதான்!" சிறு கூச்சப் புன்னகையுடன் முடித்தாள்.

"எல்லாம் புரிஞ்சுதான் பேசறியா?" சீண்டலாக வந்தது அவன் குரல்!

"ம்.. புரியாம கூடப் பேசுவாங்களா என்ன?" சிணுங்கலாகவே முடித்தாள் அவள்.

"தேங்க்யூ ப்ரீத்தி! எனக்கு கொஞ்சம் பயமாவே இருந்தது... என்னை எனக்காகவே நேசிச்சு.. முழுசா



நம்பறவதான், எனக்கு மனைவியா வரணும்கிறதிலே நான் உறுதியா இருந்தேன்... நீ இதிலே மறுத்து, நான் தோத்துடுவேனோன்னு ஒரு நெருடல்...

"நானும் இந்த மண்ணிலே பிறந்தவன்தான்! எனக்குள்ளேயும் சில கோட்பாடுகள்... நம்ம கலாச்சாரத்தை மதிக்கணும்கிற உணர்வுகள் எல்லாமே இருக்கு!

"கல்யாணத்துக்கு அப்புறம் நமக்குன்னு ஒரு பெரிய எதிர்காலம் காத்துக்கிட்டிருக்கு... நானும்...அதுவரைக்கும் உனக்காகக் காத்திட்டிருப்பேன்!" மென்மையான குரலில் திகதிப்பாகக் கூறினான் ஆகாஷ்.

38



ஆகாஷ் கூறியதைக் கேட்டதும், அவள் விழியோரங்கள் மெல்லக் கசிந்தன.

"தேங்க்யூ ஆகாஷ்!" உணர்ச்சிப் பெருக்குடன் கூறியபடி, சலுகையுடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் ப்ரீத்திகா.

'நீ ஆசையோடு அள்ளி வழங்கப் போகும் அன்பை அனுபவிக்க, இந்த ஒரு ஆயுட்காலம் எனக்குப் போதுமா' வென்று அவனிடம் கேட்கவேண்டும் போல்!

அவளைவிட உயர்ந்த பரிசை, இனி இறைவன் தனக்கு அளிக்கப் போவதில்லையென்ற புரிதலுடன், அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான் அவன்.

திகசென்று, நெஞ்சப் பரப்பிற்குள் குறுகுறுப்பாய் அவனுடைய இதழ்களின் மௌன உச்சரிப்பு!

மறுநிமிடமே முகம் நிமிர்த்தியவள், ''நான் என் மனசிலே இருந்ததையெல்லாம் கொட்டிட்டேன்... ஆனா நீங்க எப்போ என்னை முதன்முதலா விரும்ப ஆரம்பிச்சீங்கன்னு சொல்லவேயில்லை...'' சிணுங்கலுடன் கேட்டபடி அவனுடைய மார்பில் செல்லமாகக் குத்தினாள்.

''ம்... ம்...எனக்கே தெரியலையே! முதல்லே உன் மேலே கோபம் தான் அதிகமா இருந்தது! ஆபீசுக்கு வந்த தப்பு... ஷீலாவோட ரிசப்ஷன்லே பேசினதுலே... சவால் விட்டுப் போனப்பல்லாம் எரிச்சல்தான்!

''அப்புறம், எனக்குத் தெரியாம, ஆர்ட்டிகிள் எழுதி, அந்தக் குழந்தைக்கு வலுக்கட்டாயமா உதவி பண்ண வெச்சப்ப... என் ஈகோ உன்னால அடிபட்டுப் போயிட்டது குமுறினேன்! அதுக்காக, பழிவாங்கற மாதிரி வேலையை விட்டு உன்னை அனுப்பினதும் தான், ஒரு பெரிய நிம்மதி... ரொம்ப திருப்தியா ஃபீல் பண்ணினேன்!

''அப்பக் கூட ஏதோ ஒரு விதத்துல உன் நினைவுகள் உறுத்திட்டேதான் இருந்தது... அதை வெறுப்புன்னுதான் நான் நினைச்சேன்!''

''ஆனா, பணத்துக்காக என்னையே சுத்தி சுத்தி வந்த பெண்களுக்கு மத்தியிலே, நீ மட்டும் வித்தியாசமானவளா என்னை ஆக்ரமிக்க ஆரம்பிச்சேன்னு அப்ப எனக்குத் தெரியலை...

''உன்னோட திறமைகளைப் பத்தி கேள்விப்பட்டப்புறம்...உன் ஆர்ட்டிகிள்ஸ் சிலது படிச்சப்ப... என் மனசு



கொஞ்சம் மாறிச்சு! என்னைப் பத்தி நீ தவறாவே கணிச்சப்பல்லாம் அது எதனாலங்கற உண்மையான காரணம் புரியாம, உன்னையே பேட்டி எடுக்க வரவழைச்சேன்...

''ஷீலா ரிசப்ஷன்லே நீ பேசினதை வச்சு யோசிச்சுப் பாத்தா, எனக்கு எதுவுமே புரியலை... தன்னையே சுத்தி வந்த ஒரு பெண்ணை, மனசுக்கு பிடிச்சாதானே யாரா இருந்தாலும் ஏத்துக்க முடியும்...? நான் விரும்பாத ஒரு பெண்ணை நிராகரிச்சதிலே, உனக்கு ஏன் இவ்வளவு கோபம்னும் தெரியலை.

''என்னைப் பத்தி நீயே எல்லாம் புரிஞ்சுக்கிட்டு, நல்லவிதமா ஆர்ட்டிகிள் எழுதணும்னு நான் ஆசைப்பட்டேன்... அது நடந்தது! ஆனா அப்ப தான் எனக்குப் புரிஞ்சுது...என்னைப் பத்தி நீ தப்பா நினைக்கறதை, என்னால தாங்கிக்க முடியலைன்னு!

''அப்போதிலிருந்தே, உன் நினைவுகள் மனசுல ஆழமாப் பதிய ஆரம்பிச்சு, என்னையறியாமலே ஒரு ஈர்ப்பு நிலை வந்தது... உன் தொடரைப் படிச்சப்புறம், எனக்கு நிறையப் பேரும் புகழும் வர ஆரம்பிக்க, அதுக்குக் காரணமான உன்னை கௌரவிக்கணும்னு தோணிச்சு!

''ஆனா அதைவிட, உன் கூடப் பழகி உன்னை இன்னும் நல்லாப் புரிஞ்சிக்கணும்கிற வெறியிலதான், அம்ரிதி ஃபாரெஸ்டுக்கே அழைச்சிட்டுப் போனேன்.''

சட்டென்று அவன் பிடியிலிருந்து விலகி நிமிர்ந்து அவனுடைய முகம் பார்த்தவளின் பார்வையில், பெரும் வியப்பு!



''ஓ... அப்பவேவா...?'' விழித்தாமரை விரிய, சிறு குழந்தையாய் அவள் கேட்டபோது, அவனுக்குள் மெல்லிய குறுகுறுப்பு!

''ம்...'' என்றபடி அவளுடைய இதழ்களை, செல்லமாக ஒற்றை விரலால் வருடியவன், ''ப்ளீஸ் ப்ரீத்தி... என் கைக்குள்ளேயே சமர்த்தா கொஞ்சநேரம்... நான் சொல்லி முடிக்கிற வரைக்கும் இரேன்... ப்ப்போம்'' கண்கள் குறுகுறுக்கக் கெஞ்சினான்.

அவன் வார்த்தைகளும், முகத்தில் தெரிந்த குறும்பும், அவளுக்குள் இனிமையாய்ப் பரவி, பெரும் சிலிர்ப்பை ஏற்படுத்தின.

மறுகணமே, சிறு மாடத்திற்குள் அடைக்கலமாகும் மணிப்புறாவைப் போல், அவன் கைகளுக்குள் தஞ்சம் புகுந்தாள் அவள்.

ஆகாஷின் குரல் அவளை உசுப்பியது... ''எங்கே நிறுத்தினேன்...?'' ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

''ம்... அம்ரிதி பாரெஸ்டுலே..!'' சிறு ஊடலுடன் அவள் கூறியதும், அவனுக்குள் சந்தோஷக் குமிழ்கள் வெடித்தன.

''கரெக்ட்! அங்கே தான் நான் என்னையே... ஐயம் திரிபற உணர்ந்துக்கிட்டேன்! அந்த ஆபத்து நேரத்துலயும், என்னைக் காப்பாத்திக்கறதை விட,உன்னை எந்த சேதமும் இல்லாம பாதுகாக்கறதிலேதான் என் கவனமே இருந்தது... உனக்கு ஏதாவது ஆகிடுமோங்கிற பதட்டத்திலே என்னைப் பத்தி நான் கவலையே படலை...

''அந்த நிமிஷத்துலதான், என்னுள்ளே, உயிர் வரைக்கும் உணரப்பட்டது... காதல்! அப்புறமும், உனக்கு



என்னாச்சோ... சரிவுலத் தள்ளி விட்டுட்டு வந்துட்டமேன்னு நான் தவிக்க நினைப்ப, அந்த மலை கிராம மக்கள் முன்னாடியே... நீ ஓடி வந்து என்னை அணைச்சிட்டு... எனக்கு ஏதும் காயப்படலையேன்னு பாத்துப் பதறினியே... அப்பதான் என் மனசுக்குள்ளே ஒரு கேள்வி எழுந்தது...

''உன் மனசை... விழிகள்லேயுமா நீ வெச்சிருப்பேன்னு! அன்னிக்குப் புரிஞ்சிக்கிட்டேன், உன்னோட ஆழ்மனசிலே ஒளிஞ்சிட்டிருந்த அந்த அன்பை... நேசத்தை!

''என் மனசுல கடல் போல ஆர்ப்பரிச்சிருந்த அந்தக் காதல், உனக்குள்ளேயும் அலையாப் பொங்கிப் பிரவகிச்சிட்டு இருக்குன்ற நிஜத்தை, நான் உணர்ந்த நேரம் அதுதான்! ம்...அது இன்னும் உயரா நினைவாயிருக்கு, எனக்குள்ளே!

''அந்த நேசத்தை புதையலா நான் கண்டெடுத்த நிமிஷம்தான், நான் எனக்குள்ளேயே தொலைஞ்சேன்! நான் அதை உணர்ந்த மாதிரி, சிக்கத்தரும் என் மனசைப் புரிஞ்சிக்கிட்டான்... அதான், நாம அம்ரிதி பாரெஸ்டுலே இருந்து திரும்பி வரப்ப அதைப் பத்தி என்கிட்டக் கேட்டான்.

''நானும், நீ என்னை விரும்பறதை உணர்ந்துட்டதாகவும், மெதுவாதான் பேசணும்னும் சொன்னேன்... ஆனா அதையே, நீ தப்பாப் புரிஞ்சிக்கிட்டு நான் கனிதாவைத்தான் விரும்பறேன்னு நினைச்சது எனக்குத் தெரியாது...

அப்புறம், நீ சொன்ன பொய்யை பயன்படுத்தி, மெல்ல உன்கிட்டப் பேசி புரிய வைக்கணும்னு முடிவு பண்ணினேன்... அப்பதான் அவங்க கல்யாணமும் வந்தது... கல்யாண வீட்டிலே, உன்னோட வெட்கம், தவிப்பு, என்னைக் கொல்ற அந்தக் கொஞ்சல் பார்வைகள்... இதெல்லாம் என்னை அடியோட வீழ்த்திடுச்சு!

திருக்குறள்லே 'இன்பத்துப்பால்' பகுதியிலே 'காதல் குறிப்பு அறிவுறுத்தல்'லே ஒரு குறள் வரும்...

**கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்**

**உரைக்க லுறுவதொன்று உண்டு!**

"நீ என்னிடத்தில் சொல்லாது மறைத்த போதிலும், அம்மறைத்தலுக்கு உடன்படாமலே, உன்னையும் கடந்து... உன் மையுண்ட கண்கள் எனக்கு சொல்ல வருவதொரு காரியம் உண்டு... அதனை நீயே சொல்லுவாயாக!" அப்படின்ற குறள் வரிகள்,உன் விழிகளில் கசிந்த காதலை எனக்கு மெய்ப்படுத்துச்சி!

"அது தந்த தைரியம்தான்... நான் மனசைத் திறந்து உன்னோட பேசினேன்...! ஆனா, உன் பதில் என்னை சித்தம் கலங்க வச்ச, என் மேலயே வெறுப்பை வர வழைச்சது...

"நீ ஏன் மறுக்கறேங்கற காரணம் புரியாம நான் தவிச்சப்போ, நீ ஷீலாவைப் பத்தி சொன்னே! அந்த நிமிஷம் நான் உடைஞ்சு போயிட்டேன்... நாம உயிரா விரும்பினவ நம்மை நம்பலையேன்ற ஆதங்கத்துல...!

"என் மனசுலே ஒளிவீசிட்டிருந்த காதல் சூரியன், உன்னோட சந்தேகத்தாலே அஸ்தமிச்சிடுச்சோன்னு கூட



நான் நினைச்சேன்... என் மனசிலே இருந்த தைரியம், திமிர், நான் ஒரு ஆண்ங்கிற கர்வம், எல்லாத்தையும் ஒரு நொடியில சிதறடிச்சது.. உன் புறக்கணிப்பு!

"உடனே மிருகமா மாறினேன்... என் மனசுக்குள்ளே, கோபம் நீறு பூத்த நெருப்பாத் தகிச்சது... ரொம்பக் காயப்பட்டுப் போனேன்!

"அதனாலதான், நீ வந்தவுடனே என்னாலே இயல்பாவே இருக்க முடியலை... என்னை நம்பாத ஒருத்தி எனக்கு வேண்டாம்னு வீம்பா நினைச்சேன்! அப்புறமும், பிறரோட வற்புறுத்தலுக்காக இல்லாம, நீயாத்தான் வந்தியா...? உண்மையாவே என்னை நேசிக்கிறியா...? என் மேல முழு நம்பிக்கை வைப்பியா? இப்படி நிறையக் கேள்வி மனசுலே!

"ஆனா, நீ பேசி முடிச்சதும், நான் புரிஞ்சிக்கிட்டேன்.. உன் இடத்துல நான் இருந்திருந்தாலும், தெரியாத ஒருத்தரைப் பத்தி இப்படித்தான் முடிவெடுத்திருப்பேனோன்ற கேள்வி வந்தது!

"ம்... அப்புறம் ஏன் இப்பவே... எனக்கு நீ வேணும்னு பயமுறுத்தினீங்க?" செல்லமாக அவன் மார்பில் குத்திய படி கேட்டாள்.

"எனக்கு... நீ என்னை முழுசா நேசிக்கிறியான்னு ஐயம் திரிபற தெரிஞ்சுக்க வேண்டியிருந்தது... செகண்ட் ஒபினியனே இல்லாம, எனக்காக எதுவும் செய்வியான்னு சோதிச்சேன்..."

"பெரிய டெஸ்ட்தான்...!" உதடுகளைச் சுழித்தபடி கேலி செய்தாள் ப்ரீத்தி.



"ம்... ஆமாம்! அப்புறம், நாளைக்கு அக்கா கிளம்பி வரேன்னிருக்காங்க... இதுக்கெல்லாம் நீபாவும் சித்தரும்தான் காரணம்! நம்மை சேத்து வைக்க ரெண்டு பேரும் ரொம்பப் பாடுபட்டாங்க... அப்பா...! இப்பத்தான் மனசு தெளிவா இருக்கு.. இப்ப சந்தோஷம் தானே?

"உயிர் வாழ்கிற காலம் வரைக்கும், தன் இணையைக் காப்பதற்காகவே வாழணும்கிற உத்வேகமும், பிறகு வீழும்போது கூட உன்னை சேதப்படுத்தாமல் வீழ்வேன் என்கிற உன்னத உணர்வோடயும் வாழணும்கிறதுதான் என்னோட கோட்பாடு! அதுக்கு சரியான இணையா நீ மட்டுமே வரமுடியும்னு இப்ப என் மனசு உணர்ந்து சொல்லுது.. என் வாழ்க்கையை வசந்தமாக்க வருவியா ப்ரீத்தி?" ஆகாஷ் மென்குரலில் கேட்டான்.

அவள் மனதில், அந்த நிமிடமே அவனுடைய கோரிக்கை ஒரு கவிதையாய் மலர்ந்தது...

**பூக்கள் பேசும்**
**பாதையில்.....**
**பட்டாம்பூச்சிகள் உலவும்**
**பாதையில்......**
**குயில்கள் பாடும்**
**பாக்களில்....**
**மயில்கள் ஆடும்**
**அழகினில்......**
**அருவிப் பொழிதலின்**
**ரம்யத்தில்......**
**கவிதை நடையின்**



**கருப்பொருளில்.....**
**சித்திரமாக நடந்து வரும்**
**சலசலப்பில்......**
**தென்றல் தீண்டிய**
**பொழுதுகளில்....**
**நான்**
**காண்பதெல்லாம்..**
**என் தேவதையே...**
**உன் பிம்பம்தான்!**
**உன்**
**கவிதைப் பார்வையும்**
**நேசமும்தான்!**
**நீ படர...**
**நான் தேரானேன்!**
**நீ பேச...**
**நான் மொழியானேன்!**
**நீ பார்க்க....**
**நான் ஒளியானேன்!**
**நீ பறக்க.....**
**நான் சிறகானேன்!**
**இன்று...**
**நீயின்றி**
**நான்......**
**மூச்சுக்காற்றுக்குத்**
**தவிக்கிறேன்!**

என்
உயிராய் இருக்க
வருவாயா
அன்பே...?
உயிர்க் காதலில்
ஓர் கவிதை...
தருவாயா?

## 39



மனதிற்குள், தனக்காக அவன் தேக்கி வைத்துக் காத்திருந்த... என்றோ நடந்து முடிந்த... ஆனால் மறக்க முடியாத அந்த அற்புதத் தருணங்களை எல்லாம்... தன் மன நூலில் கோர்த்துப் பாது காத்து... இன்று சாத்திலிருந்து உதிர்கின்ற முத்தாய்... அவன் ஒவ்வொன்றாய் சிதறவிட்ட போது...அப்படியே நெக்குருகிப் போய் அவனைக் கட்டிக்கொண்டு, ஆனந்தக் கண்ணீர் விட ஆரம்பித்தாள் ப்ரீத்திகா!

''ஏய்... என்ன அழுகை? சந்தோஷமா...நான் கேட்ட கேள்விக்கு இது தான் பதிலா?'' குறும்புடன் கேட்டு விட்டு, செல்லமாக அவளுடைய நாசியைப் பிடித்து மெல்ல அசைத்தான் அவன்.

''ஹும்.. போங்க! உங்களுக்குத் தெரியாதா? என்னை விட.... என்னைப் பத்தி...என் உணர்வுகளை..நல்லாப் புரிஞ்சி வச்சிருக்கீங்க நீங்க...'' சிணுங்கலாகக் கூறிய வளின் கன்னங்கள் நாணச்சிரிப்பில் குழிந்தன.



''ம்... இந்தக் குழியிலேதான்... முதல்லே விழுந்தேன்... இப்போ நல்லா மாட்டிக்கிட்டேன்!'' செல்லமாக அவ ளுடைய கன்னக்குழியை வருடினான்.

''ப்ரீத்தி... நம்ம கல்யாணத்துக்கப்புறம், நீ விரும்பின மாதிரி ஆர்னிதாலஜி எடுத்துப் படிக்கலாம்... ஜர்னலிஸ்டாவும் தொடர்ந்து இருக்கலாம்! ஆனா, பார்ட்டைம் ஜாபா... 'பேர்ட் வாட்சிங்' மாதிரி என்னையும் அப்பப்ப கொஞ்சம் கவனிச்சிக்கணும்.. செய்வியா? நான் ஆஃபீஸ் போற நேரம் முழுக்க உன் இஷ்டம்! ஆனா, நான் வீட் டுக்கு வந்தவுடனே என் பக்கத்துல நீ இருந்தாகணும்... சரியா?''

அவளுடைய சிவந்த கன்னத்தில், தன் நாசியை செல்லமாக உரசியபடி கேட்டான்.

அவனுடைய உணர்வுகளுக்குப் பரிசாய் நேசத்திற்குப் பிரதிபலனாய்... தான் எதைத் தரமுடியுமென்ற ஏக்கம் பெரிதாக.. அந்த நேர அற்புதம் நெஞ்சில் ஊற ஊற... சட்டென்று முகம் நிமிர்த்தி அவன் உதடுகளில் தன் இதழ்களை ஆழப் பதித்தாள் அவள்!

அந்த இனிய ஸ்பரிசம் விதைத்த விதை விருட்சமாகி... கோடி மலர்களை ஒரே நேரத்தில் வெடித்து சுமந்து நந்த வனமாகியது... அவன் இதயம்!

**''காதலால் மட்டுமே புரிந்து கொள்ள முடிகிற... நேர்மையால் மட்டுமே தொட முடிகிற... வெளிப்படை யானவனாக... அதே நேரத்தில் ரகசியமானவனாகவும் விளங்குகிறவன் அவன்!''**



கவிஞர் கலீல் ஜீப்ரான், 'செல்மா'வைக் குறித்து எழுதிய வரிகள் ப்ரீத்திக்கும் பொருந்துமென்ற எண்ணம், ஊற்றாய்ப் பெருகியது ஆகாஷுக்குள்!

புல்லாங்குழலின், ஒவ்வொரு துளைகளுக்குள்ளும் நுழைந்து இசையை போதிக்கும் தென்றல் காற்றாய்... உயிர் அடுக்குகளை ஒவ்வொன்றாய் நீவி இருவருக்கும் இனிமையைப் பரிசளித்தது... காதல்!

வெளியே... சூரியனை மறையச் செய்கின்ற அற்புத மாய்.. கார்மேகங்களைத் திறக்கின்ற சாவியாய்... மெல்லிய நீர்த்தாரைகளை சிதறடித்து.. பூமியை சுகமாய் நனைக்க ஆரம்பித்தது... கோடை மழை!